

மக்கள் தலைவர்
தொண்டமான்
முத்துவிழா மலர்

1992

With Best Compliments



Taj Samudra
Colombo, Sri Lanka

TAJ GROUP OF HOTELS

மக்கள் தலைவர்

தொண்டமான்

SOVENIR COMMITTEE

Malar Editor & Publisher :
"Malar Mamani"
Pulavar P.A. Elanchezhian, M.A.,

Editorial Associates :
N.Ramakrishnan
A.P.Raman

Representatives, Sri Lanka
P.Thirunavukkarasu
R.Wijayabalan
R. Veerabhagu
A.S. Subbaiah

Representatives, India
S.Chadrasekar. B.Com., M.I.C.A., D.E.E.,
Mailai P.S.Srinivasan.

மலர்க்குழு

மலர் ஆசிரியரும், வெளியிடுபவரும் :
மலர்மாமணி
புலவர் பெ.அ.இளஞ்செழியன், எம்.ஏ.,

ஆசிரிய உதவியாளர்கள்:
ந.இராமகிருஷ்ணன்
ஏ.பி.இராமன்

இலங்கைத் தொடர்பாளர்கள்:
பா.திருநாவுக்கரசு
ஆர். விஜயபாலன்
ஆர். வீரபாகு
ஏ.எஸ். சுப்பையா

இந்தியத் தொடர்பாளர்கள்:
எஸ்.சந்திரசேகர், பி.காம்., எம்.ஐ.சி.ஏ., டி.இ.இ.
மயிலை பி.எஸ். சீனிவாசன்

முத்துவிழா மலர்

1992

மக்கள் தலைவர்

தொண்டமான் முத்துவிழா மலர்க்குழு

புரவலர்கள்
சிங்கப்பூர் திரு.பி.பி.காந்தம்
திரு.எம்.யூசுப்
திரு.சேது பாஸ்கரன்

கருத்துரைஞர்கள்
சிங்கப்பூர்
திரு.எம். இராஜாராம்
திரு. எம்.கே.ஏ.ஜப்பார்

இலங்கை
திரு.பா.திருநாவுக்கரசு
திரு.ஆர்.விஜயபாலன்
திரு.ஆர். வீரவாகு
திரு.ஏ.எஸ்.சுப்பையா

தலைவர்:
திரு. ந. இராமகிருஷ்ணன்,
சிங்கப்பூர்

துணைத்தலைவர்
திரு.கே.கோபால், சிங்கப்பூர்

செயலாளர்:
திரு.ஏ.பி.இராமன், சிங்கப்பூர்

துணைச் செயலாளர்:
திரு. எம்.தங்கராசன், சிங்கப்பூர்

பொருளாளர்:
திரு.எஸ்.வீரையா, சிங்கப்பூர்

உறுப்பினர்கள்:
சிங்கப்பூர்
திரு.வி.கணேசன்
திரு.ஆர்.பி.கண்ணு
திரு.கே.கோதண்டபாணி
திரு.எம்.ஏ.ரகீம்
திரு.ஆர்.ருத்திராபதி
திரு.அரசரத்தினம்

தமிழகம்
திரு.எஸ்.சந்திரசேகர் B.Com, M.I.C.A. D.E.E
மயிலை பி.எஸ்.சீனிவாசன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்
"மலர்மாமணி"
புலவர் இளஞ்செழியன் எம்.ஏ

தொண்டமான் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு தூண்...தொழிலாளர்களுக்கு ஒரு தோள் என்பது உலகறிந்த செய்தி! பாரதிதாசன் பாடல், அதை மீண்டும் நமக்கு நினைவுபடுத்துகிறது. இந்த வரிகள் நம் உள்ளத்தை உறுதிப்படுத்துகின்றன. தலைவர் தொண்டமான் அவர்களை உயர்த்துகின்றன.

பாடலின் முன்பகுதியைத்தான் காட்டினேன். பின்பகுதியையும் பாருங்கள்.

"கல்வியில் என்னை வெல்ல நினைப்பதும்

ஏன் ஏன் ஏன்"

"செல்வத்திலே என்னை வெல்ல நினைப்பவன்
யார் யார் யார்"

"புல்லர்கள் என்னை வெல்ல நினைப்பது
வீண் வீண் வீண்"

" வல்லவன் என்னை வெல்ல நினைப்பவன்
தூள் தூள் தூள்"

தமிழனுக்காக ஒரு தமிழன் வரைந்த வீர சாசனம்தான் இது.

தலைசிறந்த தமிழன் தொண்டமான் அவர்களோடு இந்த வரிகளை இணைத்துப் பாருங்கள், கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்!

தொண்டமான் அவர்களுக்காகவே , பாரதிதாசன் இப்படிப்பட்ட ப ல் வரிகளைப் படைத்தாரோ என்று எண்ணினால், அந்த எண்ணம் ஏற்புடையதே ஆகும்.

தலைவர் தொண்டமான் அவர்கள்- கல்லூரியிலே கற்ற கல்வி ஒன்றும் இல்லை! ஆனால், உலகம் என்கிற ஒப்பற்ற பாடசாலையில்-அவர் கற்றிருக்கும் கல்விக்கு ஒப்பாக வேறு யாரும் கற்கவில்லை! அவருடைய அனுபவம் -ஆழ்ந்த சிந்தனை-ஆய்வு-முடிவு-செயல்-வெற்றி என்பவை ஆழ்கடலா, நீள்வானமா, பரந்த பூமியா என்று வமிக்க முடியாதவை!

அப்படிப்பட்ட கல்வியில் மட்டுமல்ல- அவர் செல்வத்திலும் சிறப்பானவர். தனக்குச் சொந்தமான வெவண்டன் தோட்டத்து வெள்ளை மாளிகைக்குள் அவர் தந்தை அழைத்துச் செல்ல, விவரமான சிறுவனாக -தனது ஏழாவது வயதிலே அதிலே நுழைந்தவர் அவர். பிறக்கும்போதே செல்வத்தோடு பிறந்த பெருமைக்குரியவர் அவர்!

ஆகவே, புல்லர்களும் சரி-பொல்லாதவர்களும் சரி-அவரை வெல்ல நினைப்பது வீண்!

வல்லவன் அவரை வெல்ல நினைப்பவன் தூளாகிப் போவதும்-வார்த்தையல்ல,உண்மை!

எல்லாம்வல்லவராகப் போற்றப் படுகிற இறைவனைப் போன்று, இலங்கையிலே இருக்கிறவர் அவர்.

நாடுவிட்டு நாடு சென்று -சென்றடைந்த நாட்டுக்காகவே தம்மை ஒப்படைத்து, நாளெல்லாம் தமது மக்களுக்காகவே பாடுபட்டு--அதற்காகவே நாட்டின் பொது வாழ்விலே ஈடுபட்டு--தமது அரசியல் பாதைப் பயணத்திலே பல போராட்ட மலைகளைக் கடந்து, இதுவரை எவரும் அடையாத வெற்றி எல்லைகளைத் தொட்டிருக்கும் இலங்கை யின் மாவீரர் இவர்.

கலிங்கத்துப் பரணியோடு கருணாகரத் தொண்டமானின் வரலாறு கடைசியாகிவிடவில்லை!

இலங்கைப் பரணி ஒன்றும் எழுதப்பட வேண்டும் என்பதற்காக, அந்தக் கலிங்கப் போர்த் தளபதியின் வழித் தோன்றலாய் இந்தத் தொண்டமான் நமக்குக் கிடைத்திருக்கிறார்.

வழித் தோன்றல்கள் கூட அடிக்கடி தோன்றிவிடுவதில்லை. தோன்றுகிற வழித் தோன்றல்கள் எல்லாம், வரலாறுகளைத் தோற்றுவிப்பதும் இல்லை.

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் அறிஞர்களோ, அடலேறுகளோ, சாதனையாளர்களோ, சரித்திர மனிதர்களோ தோன்றுவார்கள் அப்படித் தோன்றியிருக்கிற அறிஞர்-அடலேறு சாதனையாளர்-சரித்திர மனிதர்தான் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள்.

குலோத்துங்கச் சோழனின் படைத்தளபதியான கருணாகரத் தொண்டமான், ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே யானைகளை மரக் கலங்களிலே ஏற்றி வருவதற்காக இலங்கை சென்றான் என்பது காதுவழிச் செய்தியல்ல-கல்வெட்டு வரலாறு!

அவர் இலங்கை சென்று, ஆயிரம் ஆண்டுகள் சென்றபிறகு-அவனது வாரிசாகவே இலங்கை சென்று -வாழ்ந்த இடத்து வளர்ச்சிக்காகக் கனவு பல கண்டு அதற்கான வாய்ப்பு உருவானபோது காலத்தின் கட்டளையை ஏற்றுக் களம்பல கண்டு வெற்றி பல கண்டவர் நம் தொண்டமான் அவர்கள்!

மலையகத் தோட்டத்து மாமன்னரான இவர், இலங்கை அரசிலே ஏற்றமிகு அமைச்சராகி, தம்முடைய மக்களுக்கு உயிரான உரிமைகளைப் பெற்றுத் தருகிற உத்தமக் காந்தியாகவும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறார்.

காந்தியாக இருக்கிற இருவருக்கு ஒரு காணிக்கையாக -உயர் எண்ணங்கள் மலர்ந்துள்ள சோலையான இந்த மலரை-உவந்து வழங்குகிறோம்.

இந்த எண்ணத்திற்கு விதையிட்டவர்-வேண்டிய உரமிட்டவர்- நெருங்கி நின்றவர்-நீரூற்றியவர் என் சிந்தை கவர் நண்பர் சிங்கப்பூர் இராமகிருஷ்ணன் அவர்கள்தான்.

"தலைவர் தொண்டமான்" என்கிற வரலாற்றுப் பெருநூலை அருவி நடையிலே வழங்கியிருக்கிற இலங்கை எழுத்துச் செம்மல் எஸ்.டி.சிவநாயகம் அவர்களும், இந்த மலர் எழிலோவியமாய் அச்சிடப்படுவதற்கு திரு.ப.திருநாவுக்கரசு அவர்களோடு சென்னை வந்து ஊக்கம் வழங்கினார். அவருக்கு எனது செந்தமிழ் வணக்கம்.

இனியவர் இராமகிருஷ்ணன் அவர்கள் எடுத்த பணி-எட்டி நடைபோட்டு வெற்றி படைக்க, ப.திரு நாவுக்கரசு, ஆர்.விஜயபாலன், ஏ.எஸ்.சுப்பையா, ஆர்.வீரவாகு-இவர்கள் அடிக்கடி சென்னை வந்து ஆற்றுப்படுத்தினர். கூற்று மொழிந்தனர். நாங்கள் கூடிப் பேசினோம். ஒடி உழைத்துக் கொண்டிருந்த எனக்கு, அவர்களின் சந்திப்பு உற்சாகத்தை அளித்தது. பாடிவரும் பைங்கிளியாக இந்த மலரைப் படைப்பதற்கு -எனக்குப் பலம் கிடைத்தது. இந்த நேரத்தில், அந்த இலங்கை யின் இனிய நண்பர்கள் அனைவருக்கும் எனது இதய நன்றியை மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

திரு.இராமகிருஷ்ணன் அவர்கள் சிங்கையில் இதுவரை எத்தனையோ இலக்கிய விழாக்களை எடுத்திருக்கிறார். பணிகளை நடத்தியிருக்கிறார். உழைப்புகளைக் கொடுத்திருக்கிறார். இருப்பினும்

மக்கள் தலைவர்-தொண்டமான் அவர்களுக்காக அவர் எடுத்த இந்த முத்துவிழா அவரின் எல்லா முயற்சிகளுக்கும் சூட்டும் முத்தார விழா! முதன்மை விழா! முடிசூட்டுவிழா! இது அவருடைய வாழ்விலே ஓர் எல்லைக்கல்! எழுச்சித்தூண்! இன்பத்தேர்!

"துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"
என்றார் திருவள்ளுவர்.

மலர்ப்பணி என்பது, துன்ப மலைப் பயணம்தான்! ஆனால், அந்த மலைப் பயணத்தை நடத்தி, மலரைப் பறித்த பிறகு ஏற்படுகிற இன்பம் இருக்கிறதே- அதுதான் என் மாத்தமிழ் இன்பம்! மங்கை தருசுகமும்-எந்தக் கங்கை தருசுகமும் அதற்குஈடில்லை. எனவே, நானும் இராமகிருஷ்ணன் அவர்களும், இதை எண்ணி எண்ணி மகிழலாம். இதற்குப் பாடுபட்ட உள்ளங்கள் அனைத்தும் அந்த மகிழ்ச்சியிலே பங்கு பெறலாம்.

தலைவர் தொண்டமான் அவர்களை நேரிலே சந்திக்காத சோழநாட்டுப் பிசிராந்தை நான்! அவருடைய வரலாற்று நூலைப் படித்த பிறகே அவரிடம் வசியமானேன். அந்த வசந்தத்திற்கு இந்த முத்துமண்டபத்தைக் கட்டி முடிக்கவும் வைராக்கியமானேன். இந்த வையத்துப் பெருந்தலைவருக்கு -இப்படி ஒரு பணியாற்றுவதற்கான வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி உவகை இமயத்தின் உச்சிக்கே செல்கிறேன். இதனை எனது வாழ்நாள் பேறாகவும் எண்ணுகிறேன்.

இந்த ஜூலை 15-"உலகின் தலைசிறந்த தமிழன்" விருது பெறுவதற்காக - தன்னேரில்லாத் தமிழர் தலைவர் தொண்டமான் அவர்கள் சென்னை வந்தார். அப்போதுதான் தூசு தொடாத அந்தத் தூய பசும்பொன் மனிதரை என் கண்களால் காணுகிற வாய்ப்பினைப் பெற்று-அதுமட்டுமல்ல-அவருடன் உரையாடுகிற வாய்ப்பையும் பெற்று, உண்மையிலேயே நிறைவுற்றேன்; நெகிழ்ந்து போனேன். வடக்கிருக்கத் தேவையில்லாத இந்தப் புதிய கோப்பெருஞ்சோழனை நேரிலே பார்த்த புதிய பிசிராந்தையாய் என்னை நான் நினைத்துக் கொண்டேன்.

"என்னைப் பாராட்டுவதோடு மட்டும் அமையாமல் இது ஒரு தமிழ்ப்பணியாகவும் சமூகப் பணியாகவும் இலக்கியப்பணியாகவும் வரலாற்றுப் பணியாகவும் வெற்றி பெற ஆசிக்கிறேன்"

என்று தலைவர் தொண்டமான் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்திலே குறிப்பிட்டிருந்த இந்தச் சொற்கள்தான்,-அவரைக் காந்தமாக்கி என்னை இரும்பாக்கிற்று.

குறுகிய காலத்திலே குலுங்கிவந்த கோல மலர்ப் பூந்தோட்டம் இது!

இந்தப் பூந்தோட்டப் படைப்பை நான் உருவாக்குகிற நேரத்தில் என்பக்க நிழல்களாக இருந்தவர்களை நான் மறந்துவிடக்கூடாது.

சித்திரக் கலைஞர்கள் ஓவியர் திலகம் கோபன், அவரின் அருமை மைந்தன் ஓவியர் கவிக்குமார் இவர்கள் என் நன்றிக்குரியவர்கள். இந்த மலருக்குள் இவர்கள் என்றைக்கும் இருப்பவர்கள்.-இவர்களை என் சிந்தை மறவாது.

சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர்கள் -கட்டுரை கவிதை காணிக்கையாக்கியோர் பாராட்டு வாழ்த்துச் செய்திகள் படைத்தோர் வணிக விளம்பரங்கள் வழங்கியோர்-துணைவந்தோர்-தொண்டுபுரிந்தோர் அனைவர்க்கும் எனது நெஞ்சின் நன்றிப் பூக்களை ஆரமாக்கி அணிகிறேன். வணக்கம்.

பெ. அ. இளங்கோ செழியன்
15.7.92

மலருக்கு வந்த மகுடம்!



S. Thondaman, M.P.

President, Ceylon Workers Congress

20.05.1992

பெறுநர் :

புலவர் மலர் மாமணி,

பெ.அ.இளஞ்செழியன் எம்.ஏ அவர்கள்,

முத்துவிழா மலர் ஆசிரியர்,

9, சிவராமன் தெரு, திருவல்லிக்கேணி,

சென்னை 600 005.

பேரன்புடையீர்,

என்னுடைய 80 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தாங்கள் முத்துவிழா மலர் ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை, தங்களுடைய 1.5.92 திகதித் திருமுடம் வாயிலாக அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்.

தாங்கள் அக்கடிதத்தோடு சேர்த்து அனுப்பியிருந்த தங்களுடைய கடந்தகால சாதனைப் பட்டியல் அடங்கிய சுய வாழ்க்கைக் குறிப்பினையும் கண்ணுற்றேன்.

இப்படியான ஒரு மலரை, சீரும் சிறப்பும் பொருந்த அமைத்து வெளிக் கொணர்வதற்கு, தங்களுக்குத் தக்க தகைமைகளும், கல்விப்பின்னணியும், முன் அனுபவமும் இருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவருடைய பொறுப்பில் இந்தப் பாரிய பணியினை ஒப்படைத்திருக்கிறார் எனது இனிய நண்பர் சிங்கை திரு.என்.இராமகிருஷ்ணன் என்றே எனக்குத் தோன்றுகிறது.

தங்கள் முயற்சி, என்னைப் பாராட்டுவதாக மட்டும் அமையாது, நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பயன் அளிக்கும் ஒரு சிறந்த சமூகப் பணியாகவும் இலக்கியப் பணியாகவும், தமிழ்ப் பணியாகவும், வரலாற்றுப் பணியாகவும் வெற்றிபெறவேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

இங்ஙனம்

எஸ்.தொண்டமான்

சுற்றுலாத்துறை, கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி

அமைச்சர்

19, St. Michaels Road, P.O. Box 1294, Colombo 3.
Telephone : 436341, 436332



உலகத் தமிழ் மக்களுக்கு ஒரு செய்தி!



இன்று தமிழ் பேசும் மக்கள் உலகெங்கணும் பரந்து வாழ்கிறார்கள். கடந்த நூற்றாண்டில் நிலைமை இப்படி இருந்ததில்லை. இந்த நூற்றாண்டில் தமிழ் மக்களின் வாழ்க்கை எவ்வளவோ மாற்றமும், ஏற்றமும் அடைந்திருக்கிறது. மிக விரைவில் நாம் இருபத்தோராவது நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கப்போகிறோம். அந்த நூற்றாண்டைத் துணிச்சலோடும், தன்னம்பிக்கையோடும் சந்திப்பதற்கு நாம் நம்மை எல்லா வகைகளிலும் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டை அவர்கள் சொந்த நாடாகக் கொள்ள வேண்டும். அந்த நாட்டை நேசிக்கவும், அதற்குப் பாடுபடவும் அந்த நாட்டு மக்களோடு சரிநிகர் சமானராகச் சேர்ந்து பழகவும் வாழவும் அந்த நாட்டின் நல்வாழ்வுக்காக உழைக்கவும் அவர்கள் மன உறுதி பூண வேண்டும். அதே வேளையில், தமிழ் மக்களின் தனித்துவத்தையும், பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும், பாரம்பரியத்தையும் பறிகொடுத்துவிடாமல் அவர்கள் பாதுகாத்து வரவேண்டும். தமிழ் மக்களின் மொழி, கலை, கலாசாரம், சமயம் போன்றவை மதிப்புக்குரிய பெரு நிதியங்களாகும். இவற்றை நாம் என்ன காரணங்கொண்டும் இழந்துவிட முடியாது.

எஸ். தொண்டமான்

பல நூற்றாண்டுகளாகச் செழித்து வளர்ந்த பழந்தமிழ் மொழியின் வாரிசுடன் நாம் என்ற இறுமாப்பு நமக்கு இருக்க வேண்டியது தான். அதே வேளையில் பிற மொழிகளையும் நாம் அலட்சியப்படுத்தாது, எதுவித காழ்ப்புமின்றிக் கற்று அவற்றிலும் நாம் பாண்டியத்துவம் பெற வேண்டும். அப்போதுதான் பிறநாட்டு நல்லறிஞர் கண்ட விஞ்ஞான மெய்ஞ்ஞான நுட்பங்கள் கொண்ட சாத்திரங்களை நம் மொழியில் பெயர்த்து, நமது மொழியை வளப்படுத்தி , புதுமைக் கவி பாரதி கண்ட கனவை நனவாக்க முடியும்.

இலங்கை போன்ற நாடுகளில் தமிழ்மக்கள் சிறுபான்மை இனமாக விளங்குகிறார்கள் என்பது உண்மையே. அதனால் அவர்கள் தாம் பலமற்றவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மைக்கோ, எம்மால் என்ன செய்யமுடியும் என்ற அதைரியத்துக்கோ ஆளாகக்கூடாது. இலங்கையைத் தனியாக எடுத்துக் கொண்டால் தான் தமிழ்மக்கள் சிறுபான்மை மக்கள். தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், பீஜி, தென் ஆப்பிரிக்கா என்று ஒரு பிராந்தியமாக எடுத்துக் கொண்டால் தமிழ் மக்கள் பெரும்பான்மை மக்கள் ஆகிவிடுகிறார்கள். தமிழ் நாட்டிலே ஐந்தரைக்கோடி தமிழ் மக்கள், தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் வாழுகிறார்கள். இது தவிர உலகம் முழுவதிலும் இன்னும் இரண்டரைக் கோடி தமிழ் பேசும் மக்கள் வாழுகிறார்கள்.

இந்த எட்டுக் கோடி தமிழ் பேசும் மக்களும் ஒரு பெரிய சமுதாயத்தினர் அல்லவா? இவர்கள் திரண்டால் அந்தப் பலம் இலேசுப்பட்டதல்ல. இவ்வளவு தமிழ் பேசும் மக்களிடமும் நாம் மொழி , கலை, கலாசார ரீதியில் கருத்தொற்றுமையை உருவாக்கமுடிந்தால் உலகில் நாம் இமய சாதனைகளைப் படைக்கலாம். இப்படியான ஒரு கருத்தொற்றுமையை ஏற்படுத்த வல்ல தலைமைத்துவத்தை நாம் தோற்றுவிக்க வேண்டும். தமிழகம் நினைத்திருந்தால் அது உலகுக்கு வழிகாட்டியிருக்கலாம். பல தடவைகள் சந்தர்ப்பம் கிடைத்தும் தவறிவிட்டதே என்று கவலைப்படுகிறேன்.

எந்த உரிமைகளையும், எந்தச் சலுகைகளையும் யாரும் எமக்கு இனாமாகத் தந்துவிட மாட்டார்கள். எதையும் நாம் இனாமாகப் பெறவும் விரும்பக்கூடாது. இனாம் பெறுவது இழிவான செயலாகும். எதையும் நாம் உழைத்துத்தான் பெற வேண்டும். அல்லது சளைக்காமல்

தொடர்ந்து போராடிப் பெற வேண்டும். போராடிப் பெறுவதற்கு நம்மிடையே தளராத மன உறுதியும் குலையாத ஒற்றுமையும் வேண்டும். தனி மனிதனால் சாதிக்க முடியாத காரியத்தை, ஒரு சமுதாயமாகத் திரண்டெழுந்து சாதிக்கலாம்.

போராட்டம் என்று வரும்போது, அது ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்த போராட்டமாகவும், அகிம்சை என்ற காந்திய தத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்த போராட்டமாகவும் அமைய வேண்டும். பலாத்காரமும், வன்செயலும் ஒரு போதும் நிரந்தரமான வெற்றியைத்தர மாட்டாது. எதிராளியின் மனத்தையும் இசைவுபடுத்திப் பெறும் வெற்றியே சாசுவதமானதாகும்.

எனது 80 ஆண்டுக் காலத்தில் 50 ஆண்டுக் காலம் நான் தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடி வந்திருக்கிறேன். காந்தி மகாத்மாவை நான் எனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டதன் காரணத்தால் என் போராட்டங்கள் எல்லாம் அகிம்சா வழியிலேயே நடத்தப்பட்டன. அத்தனை போராட்டங்களும் எனக்கு வெற்றியையே ஈட்டித் தந்துள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரசு என்ற ஸ்தாபனத்துக்குத் தலைமை வகித்து நடத்திய போராட்டங்களின்மூலம் இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினருக்கு, அவர்கள் 40 ஆண்டுக் காலமாக இழந்திருந்த பிரஜா உரிமை, வாக்குரிமை போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்திருக்கிறேன். இந்தப் போராட்டங்களின் போது நான் இம்சையையோ, பலாத்காரத்தையோ, வன் செயலையோ இம்மியும் பயன்படுத்தியதில்லை. தோட்டத் தொழிலாளரின் ஒற்றுமையைப் படைப்பலமாகவும், அகிம்சை ஒன்றையே ஆயுதமாகவும் பயன்படுத்தினேன்.

அகிம்சைத் தத்துவத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கும் நான், இன்னும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். அகிம்சை என்பது ஆற்றாமை ஆகிவிடக்கூடாது. அகிம்சை என்ற போர்வையில் வீரம் பறிபோய்விடக்கூடாது. நாம் எப்போதும் அகிம்சையையே கடைப்பிடிக்க வேண்டும். அதே வேளையில் அகிம்சையைக் கடைப்பிடிக்கும் எம்மைப் பலவீனர்கள் என்று யாராவது காடையர்கள் நினைத்து, நம்மைக் கோழைகள் என்று யாராவது குண்டர்கள் நினைத்து, நம்மீது நியாயமற்ற முறையில் பலாத்காரத்தை, வன்செயலைப் பிரயோகிக்க வந்தால், நாம்

விட்டுக் கொடுக்கக் கூடாது. பயந்து ஓடக்கூடாது. அந்த இடத்தில் நாம் எதிர்த்து நின்று நம் பலத்தைக் காட்டியே தீர வேண்டும்.

இறுதியாக நான் உலகத் தமிழ்மக்களுக்குக் கூற விரும்பும் செய்தி இதுதான். தமிழ் இனம் ஒரு தொன்மைச் சிறப்பு வாய்ந்த ஒரு பெரும் இனம். அந்த இனம் இன்று எட்டுக்கோடி மக்களைக் கொண்ட இனமாக விளங்கிய போதிலும், அந்த இனத்துக்கும் அதன் மொழிக்கும் உலக அரங்குகளில் குரல் உயர்த்தி ஒலிக்கும் பேறு இன்னும் கிடைக்கவில்லை. இதை ஒவ்வொரு தமிழ் மகனும் உணரவேண்டும். இதைச் சாதிப்பதற்கு வழி உண்டு. அதற்குத் தமிழ் மக்களுடைய வேகம் அதிகரித்தால் போதாது. விவேகம் அதிகரிக்க வேண்டும். சிந்தனையில் ஒரு ஒற்றுமை உதயமாக வேண்டும். இலட்சியம் இன்னது என்று தெரிந்து கொண்டு அதற்காக அனைவரும் கூட்டாகச் செயல்பட வேண்டும். எனது 80 ஆவது வயதில் இதைத்தான் நான் இதயபூர்வமாக நேசிக்கும் தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறுவேன். ஒற்றுமையில்தான் நமது பலமும் வெற்றியும் தங்கியிருக்கின்றன.



சௌமியமூர்த்தி தொண்டமான்

குலோத்துங்க சோழனின் குலம் உதித்த குணாளா!
குன்றம் சரியினும் குணம் சரியா மன்னவன் நீ!
தஞ்சைக் கோபுரம்போல் உன் புகழ் நிலைக்கும்!

H.K. CONTRACTOR
HIAP KEONG TRADING CO.

(INTERIOR DESIGN AND RENOVATION)
HDB LICENCE HR 0673

ALLAN LEOW
Pager : 7008 197

C.O. TEO
Tel: 3662877, 3664228

Showroom & Furniture Factory : Blk 1030, # 01-398, Woodland Industrial, Park D, S'pore 2572.

குன்றெழுந்து நடப்பதைப்போல்
குனியாத நடைகொண்ட கொள்கையாளன் நீ!
நின்றெழுந்து கைகுவித்தோம்!
நெடுங்காலம் வாழியவே!

EMIRATES TRADING CO. PTE. LTD.
34-B, NORTH CANAL ROAD, (ROOM 2), SINGAPORE - 0105
TEL.: 5343018, 5343025, 5343026
FAX : 5343050

தமிழினத்தின் காவலரே!
தலைசிறந்த நாவலரே!
எட்டுத்திக்கும் உங்கள்
எண் பதாண் டைப்
போற்றும்!

Veecums Enterprise
MAINTENANCE

S. Balakrisinan
Serice Beyond Contract
320 SERANGOON ROAD, # 04-34 SERANGOON PLAZA, SINGAPORE 0821
TEL.: 2912103 PAGER: 7091062

மலைநாட்டுத் தென்றலே!
மலைநாட்டுத் தமிழரின் மதுர கீதமே!
அலைபாடும் கடலாய்-உங்கள்
புகழ்பாடுவோம்!

Philkrisman
METAL WORK

Phillip Tan Hock Soo
MANAGING PARTNER
Block 1001 Woodlands Industrial Park D # 04-77, Singapore 2573.
Tel.: 3687890 (3 Lines) Fax : 3685051

தொண்டமான் முழக்கங்கள்



எழுந்து நில்லுங்கள்!
எதற்கும் தயங்காதீர்கள்!
ஒன்றே கொடி! ஒருவனே தலைவன்!
என்பதை உணர்த்துங்கள்!
நாமார்க்கும் குடியல்லோம்,
நமனை அஞ்சோம்!
உங்கள் பலம் உங்கள் கையிலே
என்பதை உணருங்கள்!
தன்மானமும் தன்னம்பிக்கையும்
தனித்துவமான இரண்டு
கண்களென்பதை மதியுங்கள்!

தாயைப் போலப் பிறந்த மண்ணை ச்
சதாகாலமும் பேணித் துதியுங்கள்!
ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு,
நம்மில் ஒற்றுமை நீங்கில்அனைவர்க்கும் தாழ்வு
பலமுடையராகுங்கள்
காந்தியைப்போல் போராடி வெல்லுங்கள்
தேனீக்களைப் பாருங்கள்
தீயவரை விரட்டுவதிலும் திரண்ட செல்வத்தினை ஈட்டிக் கொள்வதிலும் தேனீக்களின் இயல்பினை உள்ளத்திலே பதியுங்கள்!
அகிம்சை வழியே அறவழி என்பதை அறியுங்கள்
தேனீக்களைப் போலச் சேமியுங்கள்
திக்கெட்டும் ஒன்றே கொடி, ஒருவனே தலைவன் என்ற கட்டுக்கோப்பினை வாழ்வில் விதியுங்கள்
சிக்கனம், பெருந்தன்மை, கடும் உழைப்பு போன்ற காந்தியின் தத்துவங்களைக் கற்றுப் பழகுங்கள்
சிறு சிறு சேமிப்பின் மூலம் வாசக சாலைகளைத் திறவுங்கள்
நம்குழந்தைகளின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் எண்ணற்ற சக்திகளை வெளிக் கொணர வழி தேடுங்கள்
நமது சுதந்தரத்திற்காக நாம் குரல் கொடுக்க வேண்டும், அதே நேரத்தில் அடுத்தவன் சுதந்தரத்தையும் மதிக்க வேண்டும்.



15-7-92 அன்று சென்னை பார்க் ஷெராட்டன் ஹோட்டலில் நடந்த விருதளிப்பு விழாவிற்கு வாகனத்தில் வந்திறங்கியவுடன், வண்ணரோஜா மாலையிட்டு, யானை வரவேற்கும் வனப்புமிக்க தோற்றம்.

விழாமேடை நோக்கி, வெற்றியின் நாயகர் தொண்டமான் அவர்கள் வீறுடன் நடந்துவரும் காட்சி. உடன் வருபவர்கள் (இடமிருந்து வலம்) டாக்டர் மா.முத்துசாமி, பேராசிரியர் ஞான.அய்யாசாமி, தலைவர் தொண்டமான், இலங்கை ஏ.எஸ். சுப்பையா, புலவர் இளஞ்செழியன்



15.7.1992 அன்று சென்னையில் மக்கள் தலைவர் தொண்டமான் அவர்களுக்கு "உலகின் தலை சிறந்த தமிழன்" என்னும் விருதினை தமிழ்நாடு முதற்நாள் குழு வழங்கிய போது எடுத்த படங்கள்

மக்கள் தலைவர் தொண்டமான் அவர்கள்,
"உலகின் தலைசிறந்த தமிழன்" என்னும்
விளக்க மடலைப் பெற்றிடும்
ஒப்பற்ற காட்சி.





தமிழ்நாடு அரசு உள்துறைச் செயலர்
"உலகின் தலைசிறந்த தமிழன்" எனும்
தங்கப் பதக்கத்தை திரு. தொண்டமான்
அவர்களுக்கு அணிவிக்கிறார்.

இடமிருந்து வலம் – நீதியரசர் பி.வேணுகோபால்,
தலைவர் தொண்டமான், டாக்டர் மா.முத்துசாமி
திரு.கே.மலைச்சாமி ஐ.ஏ.எஸ்., திராவிடர் கழக
பொதுச்செயலாளர் மானமிகு கி.வீரமணி.



தலைவர் தொண்டமான் அவர்களுக்கு தளபதி வீரமணி அவர்கள் பொன்னாடை போர்த்தி, தந்தை பெரியாரின் நூல்களை வழங்கும் காட்சி.

மக்கள் தலைவரும், மலர் ஆசிரியர் இளந்செழியனும்

"உலகின் தலைசிறந்த தமிழன்" விருது பெற்ற தலைவர் தொண்டமான் அவர்கள் ஏற்புரை வழங்குகிறார். அருகில் இருப்பவர்கள் தமிழ்நாடு முதற்றோர் குழுச் செயலாளர் பேராசிரியர் நானை அய்யாசாமி, செல்வன் அருண் முத்துசாமி.







தலைவர் தொண்டமான் அவர்களுடன்
அவர்தம் இதயத்தில் இடம்பெற்ற எஸ்.டி.எஸ்.
புலவர் இளஞ்செழியன், பா.திருநாவுக்கரசு,
ஏ.எஸ்.சுப்பையா, ஆர்.விஜயபாலன்.



இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவும் இலங்கையின் ஜனநாயகச் சுடர் தொண்டமானும் கும்பிட்ட கரங்களுடன் தோன்றும் கோலமிகு காட்சி.



இலங்கை இந்தியச் சமுதாயப் பேரவை ஆட்சிக் குழு

A.S. Suppiah, K.A. Ganeshan, S. Anbalan, S. Ramaiya, T. Devaraj, R. Wijayapalan, B. Thiru navukarasu, R. Yogarajan, A.K. Suppiah, M. Manickavasagam, R. Rengaraaj, S. Muthusamy, K. Subash Chandrabose.

K. Nagalingam J.P., S. Sivananthan J.P., R. Veerabahu, P. Radhakrishnan, A. Kandappah, Hon. S. Thondaman M.P., M.S.Kandasamy J.P., D.Essuwaran, K.Aadhiyappan J.P. , R.Sivaraman, M. Radhakrishnan.

மலர்க்குழுவில் மணப்பவர்கள்



மலர்மாமணி புலவர் இளஞ்செழியன்

காகித மலர்களால் காவியங்கள் படைப்பவர். இதுவரை இருபது மலர்களின் ஆசிரியர். பூக்கவைக்கும் மலர்களில் புதுமை படைப்பவர். புதுமையில் புதுமை படைக்கும் இந்தப் புலவர், பிறருக்காகத் தாள் மலர்களைப் படைப்பதுடன், தனக்காக நூல் மலர்களையும் தந்திருப்பவர். எழுத்து, பேச்சு கவிதை, நாடகம்-எல்லாம் இவருக்குக் கை வந்தவை. கருவூலங்களாய் இருப்பவை. எதையும் திருத்தமாகவும் பொருத்தமாகவும் செய்பவர். சிறப்பைப் பெருக்க மலரின் செலவைப் பெருக்கும் இவரின் செயல்முறைகள் சிற்பங்களையே வெல்லும்! சிறந்த கல்வியும் சேமித்த புலமையும் கொண்ட இந்த இளஞ்செழியனைப் புரிந்து கொண்டவர்கள் பூரிப்பார்கள், புகழ்வார்கள். புரிந்து கொள்ளாதவர்களே பொறாமைப்படுவார்கள். தொண்டு தமிழுக்கென்றே அதிலே தோய்ந்து போனவர் இவர். மக்கள் தலைவர் தொண்டமான் அவர்களின் முத்துவிழா மலரை -மகத்தான ஒரு சாதனையாக எடுத்துக்கொண்டு, மல்லிகைக் கொல்லையாய் மலரவைத்திருப்பவர். 'பா' என்றால் வெண்பா, 'பூ' என்றால் தாமரை, 'மலர்' என்றால் இளஞ்செழியன். மலரால் முதன் முதலில் மலேசியாவில் புகழ் பெற்ற இவர், பின்னர் மொரீசியசிலும் புகழ் பெற்று, இப்போது சிங்கை, இலங்கை நாடுகளிலும் புகழைப் பொறிக்கிறார்.

திரு. ந. இராமகிருஷ்ணன்

மலர்க்குழுத் தலைவர்

திரு.இராமகிருஷ்ணன் அவர்கள் சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர்களில் சீர் வாய்ந்தவர். பேர் வளர்த்தவர். இவர் திருவாய் மலர்ந்தால் திருக்குறள் மணக்கும். சமயமறிந்து குறட்பாக்களைச் சாற்றுவதில் சண்டமாருதம். அமைச்சர் தொண்டமான் அவர்களின் அன்பிற்கு அணிகலம், நம்பிக்கைக்கு நட்சத்திரம். தஞ்சை தந்த தன்மானத் தமிழர் இவர். தமிழுக்குத் தொண்டர், தமிழ் ஏடுகளுக்குத் துணைவர், தமிழன்பர்களுக்கு இவர் தோழர். தூயர். இந்த முத்துவிழா மலருக்கு மூலமானவர், முதலானவர். காரணத்தோடு சினங்கொள்ளும் கருத்துநிறை மனிதர் இவர்.





ஏ.பி.இராமன்,

செயலாளர், மலர்க்குழு

சிங்கை எழுத்தாளர்களில் இவர் சிகரம் போன்றவர். கன்னித் தமிழ்வளர்த்த 'கலைமலர்' ஆசிரியர், தமிழகத்திற்கும் சிங்கைக்கும் இவர் ஒரு கலையுலகப் பாலம். வானொலி, தொலைக்காட்சிகளுக்கு வரம்பற்ற எழுத்துப் படையல்களை வாரி வழங்கியவர். அரசியல், கலை, இலக்கிய, வாணிகப் பெருமக்களுடன் அதிக அறிமுகம் பெற்றவர். இராமகிருஷ்ணனும் இவரும் இரட்டையர்கள். மக்கள் தலைவர் தொண்டமான் மலர் சிறக்க, தோன்றாத் துணையாய் நின்றவர். பழுத்த அறிவும், இனித்த பண்பும், நிறைந்த நெஞ்சும் கொண்டவர், நட்பிற் சிறந்தவர்.

திரு.பா.திருநாவுக்கரசு

(அமைச்சர் தொண்டமான் அவர்களின் அந்தரங்கச் செயலாளர்)



முந்தைய காலங்களில் மாமன்னர்களுடைய மாண்பையும் மகத்துவத்தையும், வல்லமையையும் போர்த் திறனையும், நல்லாட்சியையும் கொடைச் சிறப்பையும், இதர சாதனைகளையும் கல்வெட்டிலே பொறித்து வைத்தார்கள் நம் மூதாதையர்கள். சிலாசாசனம் செய்து பாதுகாத்தார்கள். இந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் திரு.சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் வாழ்வையும், வரலாற்றையும், புகழையும் , பெருமையையும் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று பெரிய நூல்களிலே பொறிக்க வைத்து வெளியிட்டதன் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும், ஏன் பாட்டுடைத் தலைவனுக்கும் கூட ஒரு சிறந்த பணியினை ஆற்றியிருக்கிறார் அமைச்சரின் அந்தரங்கச் செயலாளரான திரு.பா.திருநாவுக்கரசு அவர்கள். அமைச்சர் தொண்டமான் அவர்களின் செயற்கரிய செயல்களை எல்லாம் எடுத்துக்கூறும் "My Life and Times". தலைவர் தொண்டமான், "out of Bondage" என்ற மூன்று நூல்களும் வெளியாவதற்குத் திட்டமிட்டுப் பின்னணியில் நின்று உழைத்தவர் திரு.திருநாவுக்கரசு அவர்களேயாவார். ஐம்பது ஆண்டுக்காலம் தலைவர் தொண்டமான் சிறந்த தொழிற்சங்கவாதியாகவும், மதிநுட்பம் வாய்ந்த அரசியல் வாதியாகவும், புரட்சிகரமான சீர்திருத்தவா தியாகவும், இல்லார்க்கு உதவும் வள்ளலாகவும் விளங்கி வருகிறார். அவர் பற்றிய நூல்களையும், ஏடுகளையும் மலர்களையும் அவ்வப்போது வெளிக்கொணர்ந்ததன் மூலம் மக்கள் தலைவர் திரு.தொண்டமான் அவர்களை ஒரு வரலாற்று நாயகர் ஆக்கிவிட்டார் திரு.திருநாவுக்கரசு என்று கூறுவது மிகப் பொருத்தம் உடையதாகும். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்" என்னும் திருக்குறளுக்குத் திருவுருவமாய் இருப்பவர். ஆராய்ந்த சொல்லும் தேர்ந்த முடிவும் திட்பமும் நிறைந்தவர்.



திரு. ஆர்.விஜயபாலன்

இலங்கை இந்திய சமுதாயப் பேரவை ஆற்றும் பல்முகப் பணிகளில் மலையக மக்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதும் ஒன்றாகும். இந்தக் கல்விப் பணியை மலையகத்தின் ஆற்றல் மிகும் இளைஞர் திரு.ஆர்.விஜயபாலன் ஏற்றிருக்கிறார். கல்வி இல்லாதார் முகத்தில் இருப்பன இரண்டும் கண்கள் அல்ல, புண்கள் என்கிறார் வள்ளுவர். மலையக மக்களின் முகத்தில் இருக்கும் புண்களை மாற்றி அவற்றைக் கண்களாக்கும் மகத்தான பணிதான் திரு.விஜயபாலன் அவர்கள்பால் ஒப்படைக்கப் பட்டிருப்பது. இந்தப் பணியை அவர் தமது உழைப்பால் மட்டுமின்றி, உதாரண குணங்களினாலும் நிறைவேற்றி வருகிறார். செல்வத்திலே பிறந்த, சீர்திருத்தக் கருத்துக்களுடன் வளர்ந்த திரு. விஜயபாலன் இந்திய வம்சாவளி மக்களின் சந்ததியினரான மாணவ மணிகளின் உயர் கல்வி வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாகச் செயல்பட்டு வருகிறார். ஒரு சமுதாயத்தின் உயர்வுக்கு வழி கல்வி ஒன்றுதான், வேறு வழி கிடையாது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர் திரு.விஜயபாலன். அதனால் மலையகத்தின் கல்வி சிறக்க அயராது பாடுபட்டு வருகிறார். தலைவர் தொண்டமான் அவர்களின் தலைமைத்துவத்தில் தம் கடமைகளை நிறைவேற்றுவதில் பெருமைப்படுபவர். இன்சொல்லும் புன்முறுவலும் கொண்டு எல்லோரையும் கவர்ந்திழுக்கும் மலைநாட்டு மன்மதன் இவர்.

திரு. ஆர்.வீரவாகு



கொழும்பில் உள்ள பிரபல வர்த்தகர்களில் ஒருவராக விளங்கும் திரு.ஆர். வீரவாகு அவர்கள் இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் உப தலைவர்களில் ஒருவராவார். இறக்குமதி ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் இவர், மக்களுக்கு மலிவான செலவில் தொடர்மாடி வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் தொண்டிலும் சிறந்து விளங்குகிறார். மக்கள் தலைவர் திரு.தொண்டமான் அவர்களை திரு. வீரவாகு தமது தந்தைக்கும் மேலாக, தம்மை இடர்ப்பாடுகளிலிருந்து இரட்சிக்க வந்த ஒரு கண்கண்ட தெய்வமாக மதிக்கிறார். மக்கள் தலைவர் தொண்டமான் அவர்களின் கடைக்கண் கட்டளைகளைக்கூடச் சிரமேலேற்றுச் செம்மையுடன் நடத்தி முடிக்க என்றும் சித்தமாக இருப்பவர் திரு.வீரவாகு. செல்வச்செருக்கில்லாதவர். சிந்தனைத்திறன் கொண்டவர். நற்பணிகளுக்கு உதவும் நன்னெஞ்சு உடையவர். அஞ்சாத மனமும் ஆற்றலும் உடைய இவர், ஒரு சிறந்த சாதனையாளர்.

திரு.ஏ.எஸ்.சுப்பையா



ஒரு மாளிகை எவ்வளவு உயரமாகவும் விசாலமாகவும் அமைகிறதோ அதற்கு ஏற்றாற்போல் அதன் அத்திவாரம் ஆழமாகவும் அகலமாகவும் அமைந்திருக்கும். எனினும் அழகான கட்டடம் பார்ப்போர் கண்களில் படுமே தவிர அதன் உறுதியான அத்திவாரம் வெளியில் பகட்டாகத் தெரிவதில்லை. அதைப்போலவே இலங்கை இந்திய சமுதாயப்பேரவை என்ற அமைப்பு இன்று பலருடைய கவனத்தையும் ஈர்த்து வருகிறதென்றால், அதற்கு அத்திவாரம் இட்டுப் பின்னணியில் நின்று உழைத்தவர் திரு.ஏ.எஸ்.சுப்பையா அவர்களேயாவார். இலங்கை வாழ் இந்தியர்கள் அனைவரும் , குறிப்பாக வர்த்தக சமூகத்தினர் யாவரும், ஒன்று திரள வேண்டும் என்ற சிந்தனையின் வித்து பல ஆண்டுகளுக்கு முன்பு வெடித்து இரண்டோர் இலைகள் விட்டது உண்மைதான். ஆயினும் அப்போது தோன்றிய அமைப்பு நீண்ட நாள் உயிர்வாழவில்லை. மக்கள் தலைவர் தொண்டமான் இலங்கை அரசாங்கத்தில் ஓர் அமைச்சர் ஆனபின்னர் இலங்கைவாழ் இந்திய சமுதாயத்தினரிடையே ஒரு புதிய உணர்ச்சியும், புதிய உத்வேகமும் முகிழ்த்தன. இந்தியர்கள் பல குடைக்கீழ் கூடி நின்று பலமிழக்காமல் ஒரு குடைக்கீழ் ஒன்றுதிரண்டு நிற்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவதில் முன்நின்று உழைத்தவர் என்ற பெருமை திரு.ஏ.எஸ்.சுப்பையா அவர்களையே சார வேண்டும். பல்வேறு கோணங்களில் பிரிந்து நின்ற இலங்கை இந்திய சமுதாயத்தைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர்களைச் சந்தித்துத் தமது கனமான பேச்சினாலும், இதயபூர்வமான சேவையினாலும் கவர்ந்து இழுத்து, அமைச்சர் தொண்டமான் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் அவர்களை எல்லாம் ஒன்று திரட்டி இலங்கை இந்திய சமுதாயப் பேரவை என்ற அமைப்பை, புனருத்தாரணம் செய்தார் திரு.ஏ.எஸ். சுப்பையா. இன்று இலங்கை இந்திய சமுதாயப் பேரவை மகோன்னதமாக வளர்ந்து பெரும்பணியாற்றுகிற தென்றால் அதற்குப் பின்னணியில் நின்று உழைத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் இவர்.



திரு.எம்.கே.ஏ.ஜப்பார்

சிங்கப்பூர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு.எம்.கே.ஏ.ஜப்பார் அவர்கள், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத் தலைவர் மட்டுமல்ல, சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவருமாவார். சிதறிக் கிடக்கும் முஸ்லிம் சங்கங்களின் ஓர் இணைப்புப் பாலம்இவர். தமிழ் முஸ்லிம் கலை இலக்கியப் பண்பாட்டு மாநாட்டைச் சிங்கப்பூரில் முதன் முதலாக நடத்திய தனிச்சிறப்புக்குரியவர். நாடாளுமன்றத்தில் நல்ல தமிழிலேயே கடசி வரை பேசிய நற்றமிழ் ஆர்வலர் இவர். தொழிற் சங்கத்தலைவராக இருந்து, தொழிலாளர்களின் நலனுக்காகவும் உழைத்தவர் இவர். தொண்டமான் முத்துவிழா மலர்க்குழுவில் ஆலோசகராக இருந்து, பணி சிறக்கப் பாங்குடன் உதவியவர். பண்பிற் சிறந்த அன்பின் திலகம் இவர்.

திரு.எம்.ஏ.ரகீம்



சிங்கப்பூர்செராங்கூன் சாலையிலுள்ள அன்பு உணவக உரிமையாளர் இவர். எங்கும் நிறைந்த ஈகை வள்ளலாக இருப்பவர் இவர். கோயிற் பணிகள் குறைவின்றி நடக்கக் கொடை கொடுக்கும் திரு. ரகீம் அவர்கள், தான் பிறந்த தஞ்சை மாவட்டத்தின் பந்த நல்லூரிலும் ஆலயம் ஒன்றினை அருமையாகக் கட்டிக் கொண்டிருப்பவர். ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர். சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் சலியாது உழைப்பவர். தமிழ்த் தொண்டுக்குத் தலை வணங்கித் தாராளமாகத் தந்து வருபவர். மக்கள் தலைவர் தொண்டமான் முத்துவிழா மலர் சிறக்கத் தக்கபடி துணை நின்றவர்.

திரு.கே.கோபால், திரு.எஸ்.வீரையா, திரு.வி.கணேசன், திரு.ஆர்.ருத்திராபதி, திரு.அரசரத்தினம்

மக்கள் தலைவர் தொண்டமான் முத்துவிழா மலர்க்குழுவில் இடம்பெற்றுள்ள துணைத் தலைவர் திரு. கே.கோபால், பொருளாளர் திரு.எஸ்.வீரையா, உறுப்பினர்கள் திரு.வி.கணேசன், திரு.ருத்திராபதி, திரு. அரசரத்தினம் ஆகியோர், தங்கள் பங்களிப்பைத் தவறாமல் செய்தவர்கள், செய்யக்கூடியவர்கள். சிறந்த உள்ளங்களின் பிரதிநிதிகள். சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர் குழு சீரிய பணிகளை ஆற்றத் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் தரவல்லவர்கள். மாபெரும் பணியான இந்த மலர்ப்பணி முடிய வாழ்த்திக் கொண்டிருந்தவர்கள். உழைப்பை வழங்கிய உண்மைத் தொண்டர்கள்.



யூசுப்



கே.கோபால்



வி.கணேசன்

திரு.பி.பி.காந்தம், திரு.எம்.யூசுப், திரு.சேது பாஸ்கரன்

மலருக்குப் புரவலர்களாக இருக்கிற "அலைஓசை " ஆசிரியர் திரு.பி.பி.காந்தம், திரு.எம்.யூசுப், திரு.

சேதுபாஸ்கரன் ஆகியோர் மலர்க்குழுத் தலைவர் திரு.இராமகிருஷ்ணன் அவர்களின் பணிக்குப் பக்கம் நின்றவர்கள், பலம் சேர்த்தவர்கள். ஆனால், இவர்கள் தோன்றாத் துணைகள், தூய மனங்கொண்டு எங்கள் தொண்டுக்கு உரம் போட்டவர்கள். தலைவர் தொண்டமான் மீது தனியன்பு கொண்ட இவர்கள், முத்துவிழா மலர் தடையின்றி வரத் தவமிருந்தவர்கள். தமிழுக்குத் தொண்டு செய்வோரைத் தாங்குகிறவர்கள் இவர்கள். தங்கங்கள் வேறு -இவர்கள் வேறல்ல.

திரு.எம்.இராஜாராம்



மலர் ஆலோசகர்களில் இவரும் ஒருவர். இவர் ஒரு வழக்கறிஞர். நீதிமன்றத்தில் இவர் வழக்காடுவதுடன், சமுதாய நேர்மைக் காகவும் மக்கள் மன்றத்தில் வாதாடுபவர் இவர். எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று எப்போதும் முழங்குகிற இதயத்திற்குச் சொந்தக்காரர். இராமகிருஷ்ணனுக்கு இவர் உயிரெழுத்தைப் போன்றவர். எங்கள் மலர்ப்பணி மணக்க, மருக்கொழுந்தாய் உதவியவர்.



திரு.எஸ்.சந்திரசேகர், சென்னை சுப்பிரமணியத் தேவர், ஜெகதாம்பாள் பெற்றெடுத்த அருமைப் புதல்வர், சென்னை நகர மின்னணு வியாபாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பதவியை அலங்கரிப்பவர், 22 வருடங்களாக மின்னணுத் தொழிலில் உற்சாக உலா வருபவர். அறிவியல் துறையில் புதுமை நடவு செய்த ஜி.டி.நாயுடுவின் அகந்தோய்ந்த நன்மாணவர். மின்னணுப் பொறி வணிகர்களில் முதல் தமிழராய் மின்னுபவர். எப்போதும் உழைப்பையே எண்ணுபவர். தென்னிந்தியாவில் மின்னணுத்துறைப் பொறியாளர் பலரை முன்னேற்றப் படிகளில் ஏற்றி மகிழும் ஏணியும் இவர். அன்புத் தோணியும் இவரே. தஞ்சை மாவட்ட மன்னார்குடி வட்டத்திலுள்ள பரவாக்கோட்டையைச் சேர்ந்த இவர் ஊருக்குப் பெருமை சேர்க்கும் வீரர். இனிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் இன்று ஏறத்தாழ ஐம்பது பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கி அவர்கள் வாழ்வில் விளக்கேற்றி வைத்திருப்பவர். மக்கள் தலைவர் தொண்டமான் மலர் மணமலராய் மலர, மனங்கொண்டு உழைத்தவர். உண்மை, நேர்மை ஒழுக்கம் என்னும் உயர்பண்புகளின் உறைவிடம் இவர். திரு.இராமா அவர்களை 'மாமா' என்று இவர் அன்போடு அழைப்பது நம் மனத்தைக் கவரும். அன்பால் பிறர் மனங்களைக் கவரும் காந்தம் இவர்.

திரு.ஆர்.பி.கண்ணு



திரு.இராமகிருஷ்ணன் அவர்களுக்கு இந்தக் கண்ணு, கண்ணாகவும் கரமாகவும் இருப்பவர். ஒப்புக் கொண்ட செயல் வெற்றிகாண, ஓடி வந்து உழைத்தவர். தப்பாமல் உதவியவர். தலைவர் தொண்டமானிடம் தணியாத பற்று வைத்தவர். காலக் களஞ்சியமாய் நிலைத்து நிற்கப் போகிற இந்தக் காகித மலருக்குக் கை கொடுத்தவர்களில் கண்ணு மறக்க முடியாதவர். நல்லுள்ளம் கொண்ட இவரின் உள்ளம் ஒரு நற்றமிழ் உள்ளம், உடைப்பெடுத்த வெள்ளம். பெயரளவிலன்றிச் செயலளவில் செயல்பட்ட இவர் ஒரு செயல் சிங்கம்தான், சிறந்த தங்கம்தான்.

மயிலை பி.எஸ். சீனிவாசன்



மயிலை பி.எஸ். சீனிவாசன், சென்னை, இறைபணி மன்றத்தின் பொதுச் செயலாளர், தமிழ்ப்பற்றும், இறைப்பற்றும் இவரின் இரு கண்களாகும். சிங்கை இராமகிருஷ்ணன் அவர்களின் சென்னை நண்பர்களில் பழமையானவர்; பண்பும், பணிவும் நிறைந்தவர். நற்குடித் தோன்றல்; நன்னெறியாளர். மயிலை ஆஞ்சநேயர் ஆலய அறங்காவலர். சென்னை ஏகாம்பரேசுவரர் ஆலயத்தோடு இரண்டறக் கலந்தவர். எழுத்து வன்மையும், பேச்சுத் திறமும் கொண்டவர். விழாவும், மலரும் வெற்றியுடன் அமைய ஒத்துழைப்பு நல்கியவர். பழகுதற்கு இனிய பாங்காளர்.



கவிஞர் மு. தங்கராசன்

சிங்கைக் கவிஞர்களில் மோனை எதுகை முறியாமல் சிறப்பாக எழுதுகிறவர் இவர். ஆழ்கடல் முத்துக்களை அள்ளி வந்து, கவிதைக்குள் அடக்குபவர். திரு இராமகிருஷ்ணன் அவர்களோடு இணைந்து நின்று இலக்கியத் தொண்டு இழைப்பவர், உண்மையாக உழைப்பவர். மலர்க்குழுவில் துணைச் செயலாளராய் மணப்பவர். கருத்து மணக்கும் இவர் ஒரு கறுப்பு ரோஜா.

ஓவியர் கவிக்குமார்



ஓவியர் கவிக்குமார், ஓவியத்துறையில் காவியம் படைக்க எழுந்திருக்கும் ஓர் ஒப்பற்ற சாதனையாளர். கவிதை எழுதப் புறப்பட்ட இவர், தன் தந்தை கோபன் அவர்களின் காலடியிலேயே கால்பதித்தது தமிழகம் பெற்ற தவப்பயன் என்றே கூறுவேன். என்னை மிகவும் கவர்ந்த இவரின் கூர்ந்த மதிக்குள், ஓவியத்தின் அத்தனை கூறுபாடுகளும் அடக்கம்! "இவன் தந்தை எந்நோற்றான் கொல்" எனும் சொல்லுக்கோர் இலக்கியம் படைப்பவர் இவர். இந்த மலருக்குள் இவரது தூரிகையின் நர்த்தனம் அத்தனையும் ஏ-ஒன்! ஒளிமயமான எதிர்காலம் இவரது ஓவியத் தூரிகைக்கு நிச்சயம் உண்டு. புரிந்து கொண்டு செயல்படுவதிலும், நாம் எண்ணியதைப் புலப்படுத்துவதிலும் வல்லவர்.

ஓவியர் ஒளிச்சுடர் கோபன்



"ஓவியர் ஒளிச்சுடர்" கோபன் அவர்கள் தமிழகத்தின் மூத்த ஓவியர்களில் ஒருவர். அடக்கத்தின் சிகரமாய் அதேசமயம் ஆற்றலுக்கோர் எவரெஸ்டாய் **"தமிழரசு"** முதல் இதழிலிருந்து இன்று வரை 22 ஆண்டுகளாய்ப் பணியாற்றித் தன் ஓவிய முத்திரைகளை ஒவ்வொரு இதழிலும் பதித்துச் சரித்திரச் சாதனைகள் படைத்திருப்பவர், சாகாத ஓவியங்களைக் கொடுத்திருப்பவர். பொறுமையை அணிகலனாகப் பூண்ட இவரின் தூரிகையிலிருந்து பூத்திடும் ஓவியத்தை அருமை என்று பாராட்டாதவரே இல்லை. இந்த மலருக்குள் இவரின் கைவண்ணம் பல இடங்களில் ஒளிச்சிடுகின்றன. புதுமையையும், காலத்திற்கேற்ற புரட்சியையும் ஓவியங்களில் புகுத்தும் திரு.கோபன் அவர்கள் ஓவிய உலகிற்கு ஓர் ஒளிச்சுடரே ஆவார்.


வாழ்த்து
வரவேற்பு

தீர்வு காண்பதில் வல்லவர்

தொண்டமான்

உங்கள் தலைவர் திரு. தொண்டமான் இன, மத, மொழி பேதமற்றவர். அதனால் அவர் இந்த நாட்டில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மதிக்கப்படுகிறார். மரியாதையைப் பெற்றுக் கொள்கிறார், வெளிநாடுகளுக்குச் சென்றாலும் அப்படியே "இதற்குமேல் உயர்ந்த கௌரவம் எதுவும் இல்லை".

திரு.தொண்டமான் பொதுத் தொண்டில் ஈடுபட்டிருந்த தொடக்க நாட்களில் நான் ஒரு சிறுவன், பள்ளி மாணவன். அப்போதெல்லாம் அவர் ஆற்றிய பணிகளை நான் செய்தித்தாள்களில் படித்து வியந்திருக்கிறேன். அவர் பாராளு மன்றத்தில் ஒரு பிரதிநிதியாக அமர்ந்து பேசிய அரசியல் பேச்சுக்களை நான் பொதுமக்கள் காலரியில் அமர்ந்திருந்து கேட்டிருக்கிறேன். அன்றிலிருந்தே அவருடைய நிதானமான போக்கினையும் நெறிதவறாத அரசியல் வாழ்க்கை யையும் அவதானித்து வந்திருக்கிறேன்"

திரு.தொண்டமான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார், நல்லவர்போல் நடித்துக்கொண்டு சதி செய்யவும் மாட்டார். எதையும் நேருக்கு நேர் பேசும் துணிவு கொண்டவர் அவர். எந்தப் பிரச்சினையையும் நேர்மையாகவும் ஆழமாகவும் அணுகித் தீர்வு காண்பதில் வல்லவர் அவர். எல்லாவற்றிற்கும் மேலாக, பொதுமக்கள் தொண்டில் நாட்டம் கொண்டவர் அவர். இந்த மூன்று குணாதிசயங்களே அவருடைய வெற்றியின் இரகசியங்களாகும்".

திரு.தொண்டமான் பண வலிமையாலும் ஆயுத பலத்தாலும் தன் வெற்றிகளை ஈட்டவில்லை. அகிம்சை, தியாகம், உண்மை, நேர்மை ஆகிய நாற்படைகளைக் கொண்டே அவர் எல்லாப் போராட்டங்களையும் நடத்தி வெற்றிகளைக் குவித்துள்ளார். அவருக்குத் தமிழ் மக்கள் மட்டுமன்றி, சிங்கள மக்களும் மரியாதை செலுத்துவது வியப்பானதல்ல. எதிர்காலத்திலும் அவர் மிகமிக உயர்வாகவே மதிக்கப்படப்போகிறார்".

(ஏப்ரல், 1990 லண்டன் நகரில், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொன்விழாவில் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா பேசியது)

ஜனாதிபதி பிரேமதாசா



KEMENTERIAN TENAGA,
TELEKOM DAN POS,
TINGKAT 1, WISMA DAMANSARA,
50668 KUALA LUMPUR

MENTERI TENAGA, TELEKOM DAN POS, MALAYSIA
MINISTER OF ENERGY, TELECOMMUNICATIONS AND POSTS, MALAYSIA

மலேசிய இந்தியர் காங்கிரசின் தேசியத் தலைவரும், எரிபொருள், தொலைத் தொடர்பு மற்றும் அஞ்சல்துறை அமைச்சருமான மாண்புமிகு டத்தோஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி.

"சிங்கப்பூர் இலக்கிய வட்டம்" இலங்கை நாட்டின் மக்கள் தலைவர் தொண்டமான் அவர்களுக்கு முத்துவிழா எடுக்கவிருப்பதை எண்ணி மகிழ்வு கொள்ளும் அதேவேளையில், இந்நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதும் வாய்ப்பினை வழங்கிய மலர்க் குழுவினருக்கு எனது நன்றியைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்றார் வான்புகழ் வள்ளுவர்.

அப்பெருமகனார் சொல்லுக்கேற்ப, மக்கள் தலைவர் தொண்டமான் அவர்கள் தரணி போற்றும் அரசியல் ஞானி. இன, மத, மொழி, பேதமற்று தான் எதிர்கொண்ட பிரச்சினைகளைச் சரியான முறையில் அணுகித் தீர்த்து வைப்பதில் திறன் படைத்தவர். களம் பல கண்டாலும், அதில் வெற்றியையே கண்டார். அவர் ஆற்றிய பணிகளில் முத்தாய்ப்பு வாய்ந்த பணி என்னவெனில், இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை, காணிப் பங்கீடு, மலையக இளைஞர்களுக்குக் காவல்துறைப் பயிற்சி, ஆசிரியர் நியமனம் ஆகிய ஐந்து கொள்கைகளின் வெற்றிக்கே தமது வாழ்வை அர்ப்பணம் செய்ததேயாகும்.

அன்னவருக்கு முத்துவிழா எடுக்கும் சிங்கை முன்னோடி இலக்கியவாதிகளை மனதாரப் பாராட்டுகிறேன் – வாழ்த்துகின்றேன். வாழ்கின்ற வரை நம்மால் நமது சமுதாயம் வாழவேண்டும் என்ற எண்ணத்தை மனத்தில் உறுதியாகப் பிடித்துநிற்கும் தொண்டமான் அவர்களின் சேவைகள் – பணிகள் மேலும் சிறக்க – பீடுநடை போட எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டத்தோஸ்ரீ ச. சாமிவேலு, SPMJ, DPMS. AMN. PCM.



கி.ஆ.பெ.விசுவநாதம்

திருச்சிராப்பள்ளி

10.5.92.

சிங்கப்பூர் இலக்கிய அன்பர்கள் ஒன்றுகூடி இலங்கை அரசின் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் எண்பதாம் ஆண்டு முத்துவிழாவை அண்மையில் கொண்டாடவிருக்கின்றனர் என்ற செய்தியும் அதன் நினைவாக மலர் ஒன்றை வெளியிட இருக்கின்றனர் என்ற செய்தியும் என்னை மகிழ்விக்கின்றன. உயர்திரு தொண்டமான் அவர்கள் குலோத்துங்க சோழ மன்னனின் படைத்தலைவனா யிருந்து வெற்றி பல கண்ட கருணாகர தொண்ட மானின் மரபில் தோன்றியவர். அன்பும் பண்பும் நிறைந்த ஒரு மாமனிதர்.

இலங்கை அரசியல் துறையில் மக்களின் தலைவராக விளங்கியவர்கள் மூவர். ஒருவர் வி.ஜி. பொன்னம்பலம். அடுத்தவர் தந்தை செல்வநாயகம். இன்னும் ஒருவர் தொண்டமான். இவர்கள் மூவரும் ஒன்றுபட்டிருந்தால் இந்தியாவில் பாகிஸ்தான் பிரிந்தபொழுதே இலங்கையில் தமிழ் ஈழம் பிரிந்திருக்கும்.

இன்று வி.ஜி. பொன்னம்பலமுமில்லை. தந்தை செல்வாவுமில்லை. இன்றுள்ள ஒரே தலைவர் தொண்டமான் அவர்கள்தான்.

இவர் எல்லா இன மக்களாலும் எல்லாச் சமய மக்களாலும் எல்லா மொழியினரா லும் எல்லாத்துறை யினராலும் போற்றப்படுபவர். ஆழ்ந்த அறிவாளி, உயர்ந்த பேச்சாளி. நிறைந்த செயலாளி. மிகுந்த உழைப்பாளி மட்டுமல்ல, சிறந்த கொடையாளியுமாவார்.

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களாகிய பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் தந்தையாகவும், தலைவராகவும் இருந்து உழைத்து வருபவர். இவரது அருஞ்செயல்களுக்குக் குடியுரிமை, வாக்குரிமை, காணிப்பங்கீடு, மலையக இளைஞர் காவல்பயிற்சி, ஆசிரியர் நியமனம் என்பன போன்ற பல வெற்றிகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இலங்கை அரசில் திரு. தொண்டமான் அவர்களின் சொல்லுக்கு நல்ல எடையும், மதிப்பும் உண்டு. அவர் முயன்றால் இலங்கையில் இன்று உள்ள ஈழநாட்டுப் பிரச்சினை, போராட்டம், உயிர்க்கொலை முதலியனவற்றைத் தடுத்து நிறுத்தி இயல்பான நிலையை உண்டாக்க முடியும். இலங்கை அரசு இக்கடமையைச் செய்ய இவரைப் பயன்படுத்திக்கொள்வது நல்லது.

இலங்கையில் இன்றுள்ள போரில் பங்குபெறாத தமிழப்பெருமக்கள் பல இலட்சம் பேர்கள். அவர்களில் சிலர் சிங்கள மக்கள் சிலரால் கொல்லப்படுகின்றனர். சிலர் விடுதலைப்புலி இயக்கத்தில் சேர மறுப்பதால் கொல்லப்படுகின்றனர். இவ்விரண்டிற்கும் தப்பி உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இந்தியாவிற்குக் கள்ளப்படகுகளின் மூலம் ஓடி வருகிறவர்கள் இந்தியக் கரையோரக் காவல்படகுக்காரர்களால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

இக்காரணங்களால் இலங்கையில் வாழ்கின்ற தமிழ்ப்பொதுமக்கள் எந்த வகையிலாவது ஒரு வகையில் சாக வேண்டியவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த தொண்டமான் ஒருவராலேயே முடியும். தந்தை செல்வா அவர்கள் போரிட்டுக்காண முடியாத வெற்றிகள் பலவற்றைத் தன் எளிய செயல்களாலேயே செய்து முடித்திருக்கிற திரு. தொண்டமான் அவர்களால் இக்காரியத்தையும் எளிதாகச் செய்து முடித்துவிட முடியும் என நம்புகிறேன். செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். செய்வார்களென்றும் நம்புகிறேன்.

உயர்திரு தொண்டமான் அவர்களின் ஆயிரம் பிறைகண்ட எண்பதாம் ஆண்டு முத்துவிழா இனிது நடைபெற வேண்டுமெனவும் மலர் நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து நாடு முழுதும் நன்மணம் வீசவேண்டுமெனவும் உயர்திருவாளர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் நல்ல உடல் நலத்துடனிருந்து நாட்டுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் நற்றொண்டுகள் பல புரிந்து நல்வாழ்வு வாழ வேண்டுமெனவும் முழு மனத்துடன் வாழ்த்துகிறேன்.

❑❑❑

கி.ஆ.பெ. விசுவநாதம்

சிலம்புச் செல்வர்
டாக்டர். ம.பொ.சிவஞானம்



திரு.எஸ் தொண்டமான் அவர்களின் 80வது பிறந்த நாள் விழாவையொட்டிச் சிறப்பு மலர் வெளியிடுவதறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அமைச்சர் தொண்டமான் அவர்களை 40 ஆண்டுகளுக்குமேலாக நான் நன்கு அறிவேன். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மாநாடுகளுக்கு அவரால் அழைக்கப்பட்டு அவற்றில்பேசியும்பெருமையடைந்திருக்கிறேன். ஈழத்தமிழர் பிரச்னைக்கும் அங்குவாழும் இந்திய தமிழர் பிரச்சினைக்கும் நேரடி தொடர்பு எதுவும் இல்லையென்றாலும், துரதிர்ஷ்டவசமாகச் சில சமயங்களில் இரண்டுக்கும் பிணைப்பு ஏற்பட்டு விடுகிறது. சிங்கள சகோதரர்கள் இலங்கையில் வாழ்வுக்கும் வளத்துக்கும் பாடுபட்டு வரும் இந்தியத் தமிழர்களையும்சந்தேகிக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில்தான் தொண்டமான் தொழிலாளர் காங்கிரசில் தலைவராக இருந்து தொண்டாற்றி வருகிறார்.

இலங்கையின் பழங்குடி மக்கள், குடியேறியவர்கள் ஆகிய இருதரப்பாருடைய நம்பிக்கையையும் பெற்று நாட்டையாள்வதிலே பங்கு பெற்றும் வருகிறார். பல நேரங்களில் இலங்கை அரசியலில் சூறைக் காற்று சுழற்றி அடிக்கின்றபோது, கொஞ்சங்கூட நிதானம் தவறாமல், நடுநிலை பிறழாமல் நாட்டுக்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் திரு.எஸ்.தொண்டமான் பணியாற்றி வருவது கண்டு நான் வியந்ததுண்டு.

தொழிற்சங்கத்தில் ஏற்பட்ட போட்டிகளையும் அவர் தம் சகிப்புத்தன்மையால்சமாளித்து வெற்றிநடைபோட்டதுண்டு. 80வது ஆண்டைத் தொடும் அமைச்சர் எஸ்.தொண்டமானுக்கு என்மனமுவந்த வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பெரியவர் ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

ம.பொ.சிவஞானம்

உ

சிவ சிவ

தன் கடன் அடியேனையும் தாங்குதல்

என் கடன் பணிசெய்து கிடப்பதே.



தவத்திரு.
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி-623 206
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
தொலைபேசி - குன்றக்குடி-327
நாள் : 22-5-92.

~~வாழ்த்துரை~~

நமது இனிய அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மாண்புமிகு அமைச்சர், மக்கள் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுக்கு 80-ஆம் ஆண்டு விழாக் கொண்டாட இருக்கும் செய்தி மகிழ்வைத் தருகிறது. மனநிறைவைத் தருகிறது.

மாண்புமிகு தொண்டமான் அவர்கள் ஒரு பிறவித்தலைவர்.

"புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள
சிரவன் மாக்களின் பணிமொழி பயிற்றி"

என்ற அகநானூற்று அடிகள் நமது மக்கள் தலைவருக்காகவே பாடியதுபோலத் தெரிகிறது. நல்ல சதுரப்பாடு மிகுதியும் உடைய அரசியல் தலைவர். இலங்கை நாட்டளவிலும் சர்வதேச அளவிலும் தொழிலாளர் நலங் காக்கும் பணியில் ஈடுபட்டு எண்ணிய நலன்களைச் செய்தவர். இலங்கையில் வாழ்ந்த-வாழ்கின்ற இந்தியத் தமிழர்கள் வாழ்க்கையில் ஒரு நிலைப்பாட்டைக் கண்டவர். ஆற்றல் மிக்க தலைவர், அரசியல் மேதை தொண்டமானுக்கு எடுக்கும் விழா இனிதே நிறைவெய்துவதாக!

மாண்பமைந்த சௌமியமூர்த்தி தொண்டமான் இன்னும் பலநூறு பிறைகள் கண்டு வாழ்க! வளர்க! ❑

இன்ப அன்பு



ஜி.கே.மூப்பனார்

வாழ்த்துச் செய்தி

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பழம் பெருந்தலைவரும், இலங்கையின் இன்றைய தேசியத் தலைவர்களில் மூத்தவரும் இலங்கை அரசின் சுற்றுலா, கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான மாண்புமிகு எஸ்.தொண்டமான் அவர்கள் 1992 ஆகஸ்டு 30இல், தம் எண்பதாம் அகவையில் அடியெடுத்து வைக்கிறார் என்ற செய்தியும், அதன் நினைவாக, சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர்கள் முத்துவிழா மலர் ஒன்றினை வெளியிடுகிறார்கள் என்ற அறிவிப்பும், அதற்கான விழா வருகிற ஜூலை 26ஆம் தேதி சிங்கப்பூரில் நடைபெறுகிறது என்பதையும் கேள்வியுற்று, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு.தொண்டமான் அவர்களின் அயராத தொண்டினையும் இலங்கை இந்திய வம்சா வழியினரின் உரிமைகளுக்காக அவர் அவ்வப்போது நடத்திய அமைதி வழிப் போராட்டங்களையும், அப்போராட்டங்களில் அவர் பெற்ற வெற்றிகளையும் நான் அறிந்து மகிழ்ந்து மனத்திற்குள் அவரைப் பாராட்டிக் கொள்வது உண்டு.

நம்மவர்களிலே ஒருவர்–சிறு வயதிலேயே இலங்கை சென்று –தேயிலைத் தோட்டத்தில் தொழிலாளர்கள் மத்தியில் வசித்து, அவர்களின் துயரங்களைக் கண்டு துள்ளி எழுந்து அந்த மக்களுக்குப் பாடுபடும் தலைவராகி இன்று உலகம் போற்றும் தொழிலாளர் திலகமாக விளங்குவது என்பது அத்தனை எளிதான செயலன்று. ஆனால் மக்கள் தலைவர் தொண்டமான் அவர்கள் செயற்கரிய செய்த பெரியாராக இலங்கை வரலாற்றில் இன்று போற்றப்படுகிறார். இலங்கையில் ஓர் அமைதியான வாழ்வை மக்களுக்குத் தரவேண்டும் என்பதில் அளவில்லா ஆர்வம் கொண்டவர் அவர் நினைத்ததை முடிக்கும் நெஞ்சுரமும் அவருக்குண்டு. எந்தப் பிரச்சினையிலும் ஈடுபட்டுத் தீர்வு காணக்கூடிய அரசுடன் ஒத்துழைத்துத் தீர்த்து வைக்கிற நிலையில் இருக்கிற தலைமைத்துவமும் திரு.தொண்டமான் அவர்களுக்கு உண்டு என்பது எனது நம்பிக்கையாகும்.

25/6/92



இராம.வீரப்பன்
சட்டமன்ற உறுப்பினர்
காங்கேயம் தொகுதி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமக் கைத்தொழில் வளர்ச்சி அமைச்சருமான மாண்புமிகு தொண்டமான் அவர்களின் 80-வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும் வகையில் "சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர் குழு" முத்துவிழா மலர் வெளியிடுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கையில் வாழும் இலட்சக்கணக்கான இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை, காணிப்பங்கீடு, கல்விமேம்பாடு முதலிய அடிப்படை உரிமைகளுக்காகவும், இந்திய, ஈழத்தமிழர்களின் இன ஒற்றுமைக்காகவும் ஜனநாயக நெறிமுறை வழி நின்று இவர் ஆற்றி முடித்த அரும்பணிகளும், ஆற்றிவரும் அரும்பணிகளும் வரலாற்று ஏடுகளில் என்றும் நின்று நிலைபெறத் தக்கனவாகும்.

மத, இன பேதமின்றி தமிழ் மக்களின் இணையற்ற முன்னேற்றத்திற்கு மாண்புமிகு தொண்டமான் அவர்கள் மகத்தான பணிகளை நாளும் ஆற்றி வருகிறார்கள்.

இலங்கைவாழ் தமிழ் மக்கட்கும், ஈழத்தமிழ் மக்கட்கும் மாபெரும் சோதனை ஏற்பட்டுள்ள இச்சமயத்தில், மாண்புமிகு தொண்டமான் போன்ற தலைவர்களின் சேவையும், வழிகாட்டுதலும் மிகமிக அவசியமாகும்.

அல்லற்படும் தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாகவும், ஆற்றல்மிக்க தலைவராகவும் திகழும் மாண்புமிகு தொண்டமான் நீடூழிக்காலம் வாழ என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தொலைபேசி : 58 65 55
திராவிடர் கழகம்
பெரியார் திடல்
சென்னை - 600 007.
(தலைமை நிலையம்)
பொதுச் செயலாளர்
கி. வீரமணி, எம்.ஏ., பி.எல்.,

நாள் : 19-5-1992

பெறுவோர்,
மானமிகு புலவர். இளஞ்செழியன் எம்.ஏ.,
"மலர் மாமணி"
9, சிவராமன் தெரு,
சென்னை - 600 005.

பேரன்புடையீர்,

வணக்கம், இலங்கை அமைச்சர் மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் 80-வது ஆண்டு பிறந்த நாளையொட்டி "முத்துவிழா மலர்" ஒன்று வெளியாகும் முயற்சியில் தாங்கள் பொருத்தமாக ஈடுபட்டு இருப்பது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

80 ஆண்டு அகவையில் 50 ஆண்டுப் பொது வாழ்வுக்குச் சொந்தமான தொண்டமான் அவர்கள் இலங்கையில் 10 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களின் தோன்றாத் தலைவர் ஆவார். பல இலங்கைத் தோழர்களைக் குடியுரிமை பெற்றவராக ஆக்கினார்.

அரசியலில் கடல்போல் பரந்து விரிந்த அனுபவமும், தமக்கென்று தனித்தன்மையான கருத்துக்களும், அணுகும் முறையும் கொண்டவராவர்.

பழகுவதற்கு இனியவர், நல்ல பண்பாளர், இலங்கை அரசியலில் தனிச் சக்தியாகத் திகழக் கூடியவர். அடிக்கடி பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்படுபவர். சில கருத்துக்களில் அவரிடமிருந்து நாம் மாறுபாடு அடையக்கூடும். அந்த மாறுபாடு கடந்து மதிக்கப்படும் அளவுக்கு நல்ல கூறுபாடுகளைக் கொண்டவர் அவர்.

அன்புள்ள,

(கி. வீரமணி)

Phone : 865189
"VIJAYAM"
No. 4, Kuppusamy Road,
Chetpet, MADRAS - 600 031.



Justice P. Venugopal (Refa)
President Tamil Nadu Intellectuals Forum
President of citizens Association of rights and duties.
President of citizens Committee
President of Indian Health Mission
President of Tamilnadu Foundation
President of Dravidian Benfit Fund Ltd.

MESSAGE

Thiru Sowmya Moorthi Thondaman popularly known as Thondaman to his innumerable friends and followers is a born leader, the Chief architect of Srilanka workers Congress, an epic leader of dynamic and zealous action for the welfare of the common man with sympathy in the suffering of others and courage in the sufferings of his own, an a stute politician of great vision and foresight, meeting abuses and criticism with forebearance and magnanimity a dedicate versatile statesman with an undying quest for answers and solutions to intricate problems personification of probity in administration, an embodiment of administrative efficiency influencing events and persons in the last 50 years and thus creating and recreating history in Sri Lanka.

Sri Lanka's economy is mainly based on the Tea export trade. The workers in the Tea plantations are controlled by Sri Lanka Worker's Congress headed by Thondaman. Sri Lanka Indian Congress inaugurated by Jawaharlal Nehru in 1939 to forge unity among Indians in Sri Lanka was later transformed by Thondaman as Sri Lanka Workers Congress. His epic struggle to better the economic and Social Status of the plantation workers has now become part of history of that country.

It is privilege that causes evil in the world not wickedness and not men. The other workers in Sri Lanka were in a privileged position getting higher wages while the plantation workers were discriminated by

payment of low wages. Thondaman fought against this unjust discrimination. He was instrumental in removing the disparity in wages between the plantation workers and other workers in Sri Lanka. His public declaration that only a worker should lead a worker's organisation reveals that **Thondaman is a born democrat. His Charisma among the plantation workers is legendary and unparalelled in the history of Sri Lanka.**

Even at the time when he was a nominated member of Sri Lanka parliament, he did not meekly to the line of Government. He led many agitations for the welfare of the plantation workers, who were mostly of Tamil origin. **He never lost his individuality or freedom of thought even while functioning as Minister in Sri Lanka Government.**

A leader among leaders and commener among plantation workers has now become a world leader transcending all the barriers of nationality religion and culture, Thiru Thondaman is a great political leader of foresight and vision. He declared in Sri Lanka Parliament as early as 1964 that he stood for integration to make a united Sri Lanka not by assimilation of the Tamil community by the majority Sinhalese, but on the basis of recognising the seperate identity of Tamils on the ground of their language, religion and culture and thus recognise the multi ethinicity of Sri Lanka. He stood for integration and not for assimilation of Tamils by Sinhalese.

The Struggle for freedom is as old as man. It never ends, because it is part of man's struggle. Thiru Thondaman's Struggle for freedom culminated in the amendment Sri Lankan's Constitution in the year 1979 by which Tamil was given the status of Official Language in the North East provinces of Sri Lanka and restoring citizenship to the persons of Indian origin living in Sri Lanka.

Thiru Thondaman has trancended all geographical boundaries. His field of operation extends to all countries where Tamils are domiciled. When political leaders are busy building barriers around them, this leader is building bridges to remove the gulf between him and others. Thiru. Thondaman, though a sensitive man with a soft heart, is a stubborn fighter with an iron will. I along with his innumerable wellwishers join in wishing him long healthy and happy life to serve the cause of Tamil scattered all over the world.

SIVA SIVA

ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான்,
காறுபாறு
ஸ்ரீகாசிமடம்,
திருப்பனந்தாள் – 612 504.
தமிழ்நாடு.
19-5-1992





வாழ்த்துச்செய்தி

"மக்கள் தலைவர் மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் முத்துவிழாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாட முன்வந்து ஆர்வமுடன் ஈடுற்றுச் செயலாற்றும் திரு.எம்.கே.ஏ. ஜப்பார், ரமா என்கிற திரு.என்.இராம கிருஷ்ணன், திரு.எம்.ஏ.ரஹீம், மலர் ஆசிரியர் புலவர் இளஞ்செழியன் ஆகிய அன்பர்களுக்கு செந்தமிழ்ச் சொக்கநாத பெருமானின் அருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களுடைய நல்லாசியும் கிடைக்கப் பிரார்த்தித்து முத்துவிழா மலருக்கு வாழ்த்துக்கவியை இத்துடன் அனுப்பியிருக்கிறது.

நினக்கெவரும் நிகரில்லை

செந்தமிழர் நலங்காத்துச் சேய தூரம்
சீர்நிறுத்திப் பேர்படைத்த தரணி வேந்தன்!
வெந்திறலின் வீரத்தால் மாற்றார் வென்று
வேறொருவர் இணையின்றி நின்ற செம்மல்!
இந்துநிகர் தண்ணளியோன் சோழ நம்பி!
இராசேந்திர மாமன்னன் வெற்றிக் கெல்லாம்
முந்திடுமோர் காரணமாம் மாவீ ரன்சீர்
கருணாக ரத்தொண்டை மான்வழி வந்தோய்!

வந்துதித்துப் பெற்றோரும் மற்றோர் கூட
வியந்திடவே கல்விகலை நலங்கள் வாய்த்து,
சிந்தையிலே தொழிலாளர் நலமே எண்ணி
சந்ததமும் மக்கட்குத் தொண்டு ஆற்றி
விந்தைமிகும் அரசியலில் நிலைத்து என்றும்
வெற்றிபல குவித்துவரும் செம்மால் நீயும்
இந்தபுவி வாழ்த்திடவே முத்து விழாவை
இனிதுறவே கண்டிட்டாய் வாழி! வாழி!

தனக்கெனவே வாழாது பிறர்க்காய் வாழ்ந்து
தாரணியில் தொண்டொன்றே மந்திர மாய்க்கொள்
மனக்குரியோய்! மாநிலத்தில் தூங்கும் போதும்
மக்கள்நலம் கருதிட்ட தோன்றால்! நீவிர்
தனக்குவமை இல்லாத பெருமான் காக்க
தண்காசி மடத்ததிபர் அருளும் காக்க
நினக்கெவரும் நிகரில்லை என்று வாழ்த்த
நீடூழி வாழியவே! வாழி! வாழி!



வாழ்த்துச் செய்தி

உயர்திரு தொண்டமான் அவர்களும் நானும் இலங்கையில் ஒரே பள்ளி மாணவர்கள். எனக்குப் பத்து வருடங்களுக்கு முன்பே அந்தப் பள்ளியில் அவர் சேர்ந்து இருந்தார். நான் அந்தப் பள்ளியில் சேரும்போது அவர்தம் படிப்பை முடித்துக் கொண்டார். இது மட்டுமல்ல, அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் என்னுடன் படித்த மாணவர்கள் ஆவார்கள். இவர்கள் குடும்பத்துக்கும் எங்கள் குடும்பத்துக்கும் சுமார் 60 வருடங்களாகத் தொடர்பு இருந்து வருகிறது. திரு. தொண்டமான் அவர்களின் தகப்பனாருக்கும் எங்கள் தகப்பனாருக்கும் சிநேகிதம் இருந்தது என்பது எனக்குத் தெரியும். இந்த வழியில் எங்கள் குடும்பத்துக்கும் திரு. தொண்டமான் அவர்களின் குடும்பத்துக்கும் சிநேகிதம் நீடித்து வருகிறது. திரு. தொண்டமான் அவர்களின் பேத்தியின் கணவர் டாக்டர் சாந்தி மோகனும் என்னுடைய இளைய மருமகன் டாக்டர் செந்தில்நாதனும் மருத்துவக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். இப்படியாக எங்களுக் கிடையில் ஒரு நல்ல சிநேகிதம் இருந்து வருகின்றது.

இலங்கை தேசீயத் தலைவர்களில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டு இருப்பவர். இனம், மதம், மொழி ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு நல்ல புகழும் திறமையும் மிக்க தலைவராக விளங்கி வருகின்றார். இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை, காணிப் பங்கீடு, மலையக மக்களுக்குக் காவல் துறை பயிற்சி, ஆசிரியர் நியமனம் என்னும் ஐந்து கொள்கைகளுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இலங்கையின் முதல் சத்தியாக்கிரகி என்று இவர் புகழை நாளெல்லாம் சொல்லிக் கொண்டே இருக்கலாம். இவரது புகழுக்கு வானமே எல்லையாகும்.

இவ்வளவு அரும்பெரும் புகழுக்கு நிலைக்களமான திரு. தொண்டமான் அவர்கள் 80-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு 26-07-1992 அன்று சிங்கப்பூரில், சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர் குழுவின் சார்பில் முத்துவிழா மலர் வெளியிட இருப்பதறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். குணநிதியெனத் திகழும் திரு. தொண்டமான் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து மக்கள் துயர்போக்கும் மாமருந்தாக இருந்துகொண்டு இருக்க வேண்டும் என்று மனமார விரும்புவது மட்டும் அல்லாமல் முத்துவிழா மலர் முத்துப்போல் பிரகாசித்து மணம் பரப்ப வேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழ்க மாமனிதர் திரு. தொண்டமான் அவர்கள்!

வளர்க அவர்தம் மக்கள் தொண்டு!

இங்ஙனம்
அன்புடன்

(P. Maruthai Pillai)

S. K. T. Ramachandran
MEMBER OF PARLIAMENT
(RAJYA SABHA)
24, WESTERN COURT,
NEW DELHI-110 001.
PHONE : 3712560

H 56/6-HIG Flats, 3rd Main Road,
Kamaraj Nagar, Thiruvanmiyur,
Madras-600 041.
Phone : 416041
Madathur, Gunaramanallur Post,
Kizhapuliyoor Via, Tenkasi T K-627814
Phone : 2455
STD : 04633

வாழ்த்து

நேர்மையுடன் செயலாற்ற,

நெஞ்சுறுதி படைத்த தொண்டமான் வாழ்க!

எச்செயலைச் செய்து முடிக்க எண்ணினாலும் வன்முறை,

அன்புமுறை என இருவழிகள் தோன்றும். வள்ளுவர் அறத்துக்கும், மறத்துக்கும்
அன்பே துணை என்கிறார்.

"அறத்துக்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்துக்கும் அஃதே துணை," -என்பது குறள்.

அடைய வேண்டிய குறிக்கோள் சிறந்ததாயினும் அதனை அடையப் பின்பற்றும்
வழியும் சிறந்ததாய் அமைதல் வேண்டும் என்னும் கொள்கை உடையவர்
தொண்டமான். தமிழர் பிரச்சினையில் காந்திய வழி நின்று, பிறர்க்குத் துன்பம்
வராதவாறு, அதே சமயம் குறிக்கோளை அடைவதில் உறுதியாக நிற்கும் திரு.
சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் முத்துவிழா காணும் செய்தியறிந்து
மகிழ்கிறேன்.

இலங்கை அரசின் அமைச்சராகப் பல ஆண்டுகள் பணியாற்றும் திரு.
தொண்டமான் பல லட்சம் இந்திய வழித்தோன்றல் தமிழர்களின் தலைவராக
இமயமாய் வானுற ஓங்கி வளர்ந்து நிற்கின்றார். முழுமையான தமிழ்
உணர்வோடு பணியாற்றும் அவர், இன, மொழி வெறிக்கு இரையாவதில்லை.

அறம், நன்னெறி, நற்பண்புகளின் "திலகம்" தொண்டமான் நீடுபுகழ் எய்தி,
நெடு நாள் வாழி! வாழி! யெனவாழ்த்துகிறேன்.



SRI LANKA INDIAN COMMUNITY COUNCIL

SECRETARY GENERAL
A. KANDAPPAH
Tel: 437865/28963

PRESIDENT
HON. S. THONDAMAN, M.P.

HONY. TREASURER
R. SIVARAMAN
Tel: 449501

Message from Secretary-General
Sri Lanka Indian Community Council

History of man records instances where able and dedicated men of vision have doggedly fought against heavy odds for the legitimate rights of their oppressed people, opposing powerful and numerically strong societies- the latter often deeply immersed in prejudice. Over a period of time, these men of courage turned sneer to cheer, bigotry and hatred to tolerance and love. Characteristically, and above all, they secured dignity and justice for their people from societies that not long ago shunned them. The United States of America produced Rev. (Dr) Martin Luther king (jr), Who was so despised and subject to vilification and hatred by white America in the 1960 s . Yet today, Rev.king has carved a nice for himself in the history of his great and powerful country so much that Jan 20- his Birthday- is declared a National US holiday in his honour. Nelson Mandela was incarcerated in jail for decades and subject to extreme mental and physical torture only for seeking justice in the form of majarity rule in South Africa for his people. Justice eventually triumphed in South Africa and today the whole world pays respectful homage of Mandela. Your own country - the small but great Island -Republic of Singapore -with hardly any natural resources - was turned into a prosperous country by the vision and exemplary leadership of men of the calibre of Dr.Lee Kuan Yew - a great and dedicated Asian leader- only in a matter of about 25 years. History has many examples of great leaders winning for their people their rightful place in the societies in which they live and of which they are a lawful and integral part.

Little Sri Lanka has reason to stake a claim in this regard in the form of veteran Trade Union leaderturned-Cabinet Minister the Hon'ble S.Thondaman (80) , Born of parents of South Indian Origin engaged in the economic life-giving Tea Industry in Sri Lanka (until 1973 known as Ceylon) Mr.Thondaman struggled for the social, political and trade -union rights of the plantation workers for the past 50 years. Although these workers produced the bulk of the wealth of Sri Lanka -yet they were condemned to a life a squalor and penury. Basic human requirements such as decent Housing, sanitation, Education etc., were almost denied to them-often by design. Through his then toddler Trade Union-now grown to over a Million in a country of a work -force of about 10 million- agitated for years wiith different Governments following different socio-politico philosophies and gradually obtained progressively better conditions for

these toiling masses. political rights enjoyed by these workers from mid-20th Century was abruptly denied to them in 1952, and, almost overnight, more than a million people were de-franchised and became-in the words of a popular song-"Nobody's child". Through perseverence, patience and political acumen Minister Thondaman succeeded in the mid-1980's to restore the lost citizenship rights of over a million workers - by a Government that, ironically, denied these very same rights to these people nearly 40 years ago- justifying Rev.Martin Luther king's immortal words "we shall overcome". and, he achieved this remarkable feat through entirely peaceful and non-violent political agitation only. it is no surprise, therefore, that millions of people in SriLanka - of all communities-salute this great leader as a man of peace and goodwill among the different communities. It is also no surprise that Minister Thondaman is held in high esteem both by successive political leaders in New Delhi, and, the Indian people -notably in the deep South. Almost all Indian Prime Ministers- beginning from pandit Nehru-had a close personal rapport with Mr.Thondaman. The present Prime Minister shri P.V. Narasimha Rao is also a personal friend, who regularly writes to Mr.Thondaman. The late shri Rajiv Gandhi - when he was Prime Minister in 1987, during the coming into being of the Indo-Sri Lanka accord, which addressed itself effectively to many of the troubled Island's serious problems-depended on Mr.Thondaman's advises considerably. The present president of India has been a close friend of many decades of Mr.Thondaman. Both the Governments of Sri Lanka and India un-equivocally accept Shri Thondaman as a sincere friend of both countries and as a man who yearns for peace in his own sri Lanka.

The descendents of the plantation workers- whose rights Minister Thondaman helped regain - today present a different picture. Today this society can boast of very successful businessmen, Industrialists, political Leaders, Doctors, Engineers, Architects, Accountants etc., among their ranks. All due to the foresight and vision of a humble Trade Unionist wedded to the peaceful ideals of the Mahatma.

It is fitting , therefore, that the singapore Indian community, which has within her populace many distinguished men and women of Indian -extraction ably gracing many fields of economic , political and social activity in this beautiful City-State-have decided to honour Minister Thondaman through the aegis of your Association. The SLICC, of which I have the privilege of being Secretary - General to our president Hon'ble S.Thondaman - is pleased to associate our Council with this function/ SLICC wishes all our brethern in singapore a great future of peace, prosperity and happiness.



S.KANDAPPAH
Secretary-General
SRI LANKA INDIAN COMMUNITY COUNCIL



GOPESHWAR
General Secretary
SOUTH ASIAN REGIONAL TRADE UNION COUNCIL

MESSAGE

The life of Brother Savumiamoorthy Thondaman is synonymous with the trials of tribulations of the Sri Lankan Tamils of Indian Origin. His association with the struggles for uplifting these descendants of workers migrated from India one hundred years ago started immediately after the formation of the Ceylon Indian Congress in 1939 in the presence of Pandit Jawaharlal Nehru.

Spanning over a period of five decades, Thondaman led the Tamils of Indian origin like a legendary hero. A staunch follower of Mahtma Gandhi, he had unflinching faith in non-violence and the Gandhian techniques of peaceful trade unionism. But this belief in non-violent means for achieving goals has in no way diluted the efficacy of many a long -drawn hard struggle he fought for the betterment of the working class. This was epitomised when he led a satyagraha even while being in the Cabinet which resulted in Government conceding the workers' demands.

Plantation workers used to be one of the most exploited section of working class in Sri Lanka. Coming as indentured labour from India, suffering the ordeal of stateless persons, these people had to wage a long and arduous struggle for tolerable living and working conditions and to acquire status of equal citizens. And whatever they have achieved is a testimony to the

dedication, commitment and skills of organisation and negotiation of Bro.Thondaman. The crowning glory of his leadership was the acceptance of the Sri Lankan government to grant citizenship to the stateless Tamils of Indian origin a few years back.

With his single minded commitment to the cause of his community, Bro.Thondaman joined the Sri Lankan Cabinet in 1978, and used to full advantage his position for betterment of the Tamils of Indian origin. It was because of his charisma, hardwork and political acumen that he could assimilate his small minority community with the mainstream of Sri Lanka and made the Ceylon Workers Congress a formidable force to be reckoned with. He could bring about remarkable improvements in the working and living conditions of the plantation labour.

Bro.Thondaman's contributions to the cause of the working class is not confined to the shores of Sri Lanka alone. He is one of the most respected trade union leaders in Asian free trade union scene. He has been a source of inspiration to many a budding trade unionist throughout the continent.

Bro.Thondaman was the moving spirit behind the formation of the South Asian Regional Trade Union Council (SARTUC), as umbrella organisation of democratic national trade union centres in the SAARC region. As its founding president he has guided the SARTUC which is developing into an undisputed spokesman of the organised labour in the region.

I pray to Almighty that Bro.Thondaman lives for many more years to guide the destinies of the Sri Lankan workers and also the working community of the region.

Gopeswar

General Secretary.

KOPERASI KREDIT PEKERJA-PEKERJA BERHAD.
தொழிலாளர் கூட்டுறவு நாணய சங்கம் லிமிடெட்

மாந்தனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மாந்த இனத்திற்குத் தம்மாலான எல்லா உதவிகளையும் புரிய வேண்டும். அதுதான் தம் இனத்திற்கு வழங்கும் சிறப்பும்-பொறுப்பும் -மதிப்பும் ஆகும். இந்நிலையை நன்கு புரிந்து செயல்பட்டு வருகின்றவர் மக்கள் தலைவர் தொண்டமான் அவர்கள்தாம்.

இன்றைய இருபதாம் நூற்றாண்டில் இலங்கையின் மூத்த அமைச்சர்களில் ஒருவராகத் திகழும் மக்கள் தலைவர் தொண்டமான் அவர்களைத் தெரியாதவர்கள் யாரும் இலர் எனலாம். அப்படியே இருப்பினும் அவர்கள் ஒரிருவராகத்தான் இருக்க இயலும்.

தற்போது தம்முடைய நாட்டின் வளர்ச்சிக்குத் தம்மையே ஈகம் செய்து கொண்டிருக்கும் மக்கள் தலைவர் தொண்டமான் அவர்களை அந்நாட்டு மக்கள் தான் புரிந்தும் அறிந்தும் வைத்துள்ளார்கள் என்பதைவிட மற்ற நாட்டவர்களும் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கின்றனர் எனலாம்.

ஏனென்றால் அவர் வியப்பூட்டும் வகையில் ஓர் அனுக்கமான முறையில் ஆக்ககரமான உறவினை எல்லாரிடமும் வைத்துக் கொண்டவர். இன்னும் சிறப்பாகக் கூறுவோமானால் தலைவர் தொண்டமான் அவர்கள் பன்னாட்டு மக்கள் நெஞ்சங்களில் மணம் வீசும் மல்லிகை மலராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

எதையுமே நிதானத்துடன் ஆராய்ந்து முடிவுக்கு வரும் தெளிவான சிந்தனையாளர். ஏற்றத் தாழ்வுகளுக்கு இடம் கொடாமல் எழுச்சியூட்டும் புதுமைக் கருத்துகளுக்கு இடமளிப்பவர். நேர்மைத் திறனும் தூர நோக்குச் சிந்தனையும் கொண்ட இவரிடம் அன்பெனும் அறிவுநீர் கரைபுரண்டு ஓடுகிறது.

தமக்காகவும் தம் குடும்பத்திற்காகவும் அல்லாமல் தம் சமுதாய மேம்பாட்டிற்கு அவ்வப்போது ஆக்கப்பூர்வமான செறிவான கருத்துக்களை வழங்கிவரும் இவர் இந்தியத் தோட்டத் தொழிலாளர் பால் அதிக அக்கறை கொண்டவர் கள். அதை நினைவுறுத்தும் வகையில் தலைவர் தொண்டமான் அவர்கள் தொண்டமான் அறநிதியம்" என்ற இயக்கத்தையும் நிறுவி மிக வெற்றிகரமாக நடத்தி வருகின்றார். மேலும் பழுத்த அரசியல் பட்டறிவைப் பெற்ற இவர், பல இயக்கங்களுக்கும் அமைப்புகளுக்கும் முன்னோடியாகவும் வழிகாட்டுநராகவும் இருந்து செயல்பட்டு வரும் இவருக்கு இந்திய வரலாற்றுப்பெட்டகத்தில் ஓர் இடம் உண்டு என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

இப்பொழுது அன்னாருக்கு எழுபத் தொன்பது (79) அகவை முடிந்து எண்பதாவது அகவையில் அடியெடுத்து வைக்கும் இவருக்கு வாழ்த்துரை வழங்குவதைப் பெருமையாகக் கருதுகின்றேன்.

சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர் குழு இலங்கை அமைச்சர் மாண்புமிகு எஸ் தொண்டமான் அவர்களுக்கு முத்துவிழா நடத்துவதை அறிந்து மகிழ்ச்சியும் எழுச்சியும் பெறுகிறேன். தக்கவருக்குத் தகுந்த கால கட்டத்தில் தக்காரைக் கொண்டு சிறப்புச் செய்வதைத் தக்க நிலையாகவே கொள்கின்றேன்.

எப்பணி பெறினும் அதை ஏற்றமுற முடிப்பதில் வல்லவரான இந்த நல்லவருக்குத் தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் சார்பில் வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்வடை கின்றேன்.

நன்றி.

மு.லெட்சுமணன்
தலைவர்
தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம், மலேசியா

Dr. S.V. CHITTIBABU, M.A., B.T., D.Litt.,
Former. VICE-CHANCELLOR
MADURAI KAMARAJ UNIVERSITY & ANNAMALAI UNIVERSITY
DIRECTOR OF COLLEGIATE EDUCATION (Retd.)

அன்புடையீர்

இலங்கை அமைச்சர் மாண்புமிகு எஸ்.தொண்டமான் அவர்களின் 80-வது பிறந்த நாளினைக் கொண்டாடும் வகையில் முத்து விழா மலர் ஒன்றினை வெளிக் கொணர்வது மிகவும் போற்றிப் பாராட்டப்பட வேண்டிய ஒரு சீரிய முயற்சியாகும். இப்பெரியவரை நான் பத்து ஆண்டுகளுக்கு முன் கொழும்பிலே அவரது அமைச்சரகத்திலேயே சந்தித்துப் பேசக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அன்றே அவரது தோற்றமும் நாவீறும் என்னை மிகவும் கவர்ந்தது.

"சென்ற இடத்தால் செலவிடா தீ தொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

எனும் குறட்பாவிற்கு ஏற்பத் தன் சிந்தனைத் திறனையும் வினைத் திட்பத்தையும் தன் குறிக்கோள்களின் வெற்றிக்குப் பயன்படுத்துபவர் நம் தொண்டமான் பெருந்தகை அவர்கள். நம் தாயகத்தில் பிறந்து இலங்கையையே தம் தன்னலங்கருதாத நற்றொண்டின் நிலைக்களனாக ஆக்கிக் கொண்டு இன்று அங்கு வாழும் இந்தியத் தோட்டத் தொழிலாளர் 10 லட்சம் பேர்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக, அசைக்க முடியாத அரணாக அஞ்சா நெஞ்சம் படைத்த தங்கத் தலைவனாகத் திகழ்ந்து வருவது சரித்திரச் சிறப்பு வாய்ந்ததாகும். இலங்கையின் தொழிலாளர் காங்கிரசுத் தலைவராக இருந்துகொண்டு ஏழை எளியவர்களின் நாடித் துடிப்பாக விளங்கி, காந்திய வழியிலே பல கடினமான பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் சமர்த்தர் என்ற புகழ்மையைப் பெற்றுப் பாரோரின் கவனத்தை ஈர்த்து வருபவர்.

இலங்கையில் தமிழுக்கும் தேசியத் தகுநிலையைப் பெற்றுத் தந்து அங்குள்ள இந்திய வழி மரபினர் வாழ்வு மலர்ந்து மிளிர எல்லாவகைகளிலும் அயராது இன்றும் உழைத்துவரும் ஏழை பங்காளரை வியந்து பாராட்டாதவர் எவர் உளர்?

பெரியாரைக் காணுதல் நன்றே; அவர்தம் சொல்லையும் செயலையும் பாராட்டுதலும் நன்றே. வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் இம் முடிசூடா மன்னனுக்கு இலட்சோப லட்ச மக்களின் இதயமே அரியாசனமாகும்.

80-ஆம் அகவையில் அடி எடுத்து வைக்கும் இம் மாண்புமிகு சீலர் "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு" வாழ இறையருளை வேண்டுகிறேன். தங்களின் பெரு முயற்சி முத்துவிழா மலரின் மூலம் வெற்றிக் கொடி நாட்டுவதாக!

வணக்கம்.

தங்கள் அன்பன்

சை.வே.சிட்டிபாபு

உ

SIVA SIVA

5533
His Holiness Sri-La-Sri
Kasivasi Muthukumaraswami
Tambiran Swamigal, Avl.

Mahanthji
Sri Kumaraswami Mutt,
Sri Kadareeswarar Temple

Head of Sri Kasi Mutt
Tirupanandal-612 504
Tamil Nadu Phone 21
Kedar Ghat
Varanasi-221 001
Uttar Pradesh



Dated : 19-5-1992.

வாழ்த்துரை

'மக்கள் தலைவர்' மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் எண்பான் அகவை நிறைவெய்தி உற்றாரும் மற்றோரும் போற்றிப் பாராட்டும் வகையில் முத்துவிழாக் காண்பதும்; விழாச் சார்பாகச் சிறப்பு மலரொன்று வெளியிடப் பெறுவதும் அறிந்து மகிழ்கின்றோம்.

நுட்பமான அறிவு மிக்கவர்; தேர்ந்த அரசியல் ஞானி; தொழிலாளர் நலனுக்காக அல்லும் பகலும் பாடுபடும் நல்லவர்; பலமுறை மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பல்லாற்றானும் ஈடிணையற்ற தொண்டுகளையாற்றியவர் என்று இலங்கைவாழ் இந்திய மக்களாலும் மற்றோராலும் வாஞ்சையுடன் தழீஇக் கொள்ளப்பெறும் பெருமகனாராம் மாண்புமிகு தொண்டமான் அவர்கள், பொதுநோக்காது வரிசையா நோக்கிப் பாராட்டப்பட வேண்டியவர் என்பது ஒருதலை. வரலாற்றில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது திகழ்ந்த சோழப் பேரரசன் இராஜேந்திரசோழ தேவரின் நிரலான வெற்றிக் கனிகளை முன்னின்று நடத்திக் குவித்துத் தந்த கருணாகரத் தொண்டமான் என்னும் மாபெரும் வீரனின் குடிவழியில் தோன்றியவர் இப்பெருமகனார் என்னும் செய்தி உண்மையிலேயே இனிப்பும் ஏற்றமும் தருவதேயாகும்.

இப்பெருமகனாரின் முத்துவிழா மாநிலம் போற்றிடத்தக்க வகையில் இனிதே நிகழவும், விழாமலரில் அன்னவர்தம் பணி, மேன்மைகள் பரிமளித்துப் பார்உளார் அறியும் வகையில் 'மலர்' ஒளிவீசி மலரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
முனைவர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
துணைவேந்தர்
தஞ்சாவூர்.

நாள் : 15-5-92

வாழ்த்துச் செய்தி

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற பொய்யாமொழியின் வாக்கிற்கிணங்க அரும்பெரும் தமிழ்த்தொண்டாற்றி வருபவரும், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் இயக்கத் தலைவருமான பெரியவர் மதிப்பிற்குரிய தொண்டமான் அவர்களின் முத்துவிழாவின்போது முத்துவிழா மலர் மணம்பரப்ப விருப்பதறிந்து மகிழ்கின்றேன்.

தொழிலாளர் நலனுக்காக, குறிப்பாக, தோட்டத்தொழிலாளர் நலனுக்காக நாளும் அரும்பாடுபட்டு உழைத்துவருகின்ற மக்கள் தலைவர் தொண்டமான் அவர்கள் பன்னெடுங்காலம் வாழ்வாங்கு வாழ வேண்டுமென நெஞ்சார வாழ்த்துகின்றேன். இவ் வினிய வேளையில் 'தொண்டமான் முத்துவிழா மலர்' பல்லாற்றானும் சிறக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

சி. பாலசுப்பிரமணியன்
15.5.92



(சி. பாலசுப்பிரமணியன்)



ச. முத்துக்குமரன்
துணை வேந்தர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர் - திருச்சிராப்பள்ளி 620 024.

27 . 5 . 1992
வைகாசி 14, ஆங்கிரஸ,
திருவள்ளுவராண்டு 2023

வாழ்த்துச்செய்தி

இலங்கை அமைச்சர் மாண்புமிகு எஸ். தொண்டமான் அவர்கள் 79 வயது நிறைவுற்று 80-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் மகிழ்ச்சிமிக்க செய்தியை அறிந்து மிக்க உவகையுற்றேன். இலங்கை அரசியலில் பல பதவிகளை வகித்து இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் கலங்கரை விளக்காய் விளங்கி அவர்களின் நலனுக்காகவும் மேம்பாட்டிற்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பாடுபட்டுவரும் மாண்புமிகு தொண்டமான் அவர்களின் பணி மிகவும் போற்றத்தக்கது. மாண்புமிகு தொண்டமான் ஒரு தலை சிறந்த மனிதர் என்பதை, தமிழுலகம் மட்டுமல்ல, இவ்வையகமே நன்கு அறியும். இன, மத, மொழி பேதமின்றிச் செயலாற்றிவரும் இம்மாமனிதர் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக ஆற்றிவரும் அரிய தொண்டு தொடரும் வகையில் இவர் மேலும் பல்லாண்டு நலமுடன் வாழ இறைவனை உளமார வேண்டுகிறேன். முத்துவிழா மலர் வெற்றியாய் அமையவும் வாழ்த்துகிறேன்.

ச. முத்துக்குமரன்

டாக்டர் ஆ.ஞானம்
துணை வேந்தர்
புதுவைப் பல்கலைக்கழகம்.

அன்புடையீர்,

வணக்கம்.

மாண்புமிகு இலங்கை அமைச்சர் திரு.எஸ்.தொண்டமான் அவர்களின் 80-ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் முத்துவிழா மலர் மலர்வது கண்டு மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்.

அன்னார் இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினருக்கு ஆற்றும் தொண்டு அளவிட முடியாத ஒன்றாகும்.

1939-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரசில் சேர்ந்து பின்னர் 1951-ஆம் ஆண்டு அதனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என மறு பெயரிட்டுச் சீரிய முறையில் அதனை வழி நடத்திச் செல்கின்ற பாங்கு யாவரும் அறிந்ததே. கடந்த 40 ஆண்டுகட்குமேல்ாக அன்னார் பொது வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டு செய்து வருவதும் அறிந்த ஒன்றே. அத்தொண்டு பன்னெடுங்காலம் தொடர ஆண்டவனை வேண்டுகிறேன்.

அன்புடன்,

ஆ.ஞானம்

MADURAI KAMARAJ UNIVERSITY

டாக்டர் எம்.டி.கே.குத்தாலிங்கம்,
துணை வேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்
கழகம்

பேரன்புடையீர்,

இலங்கை அமைச்சர் மாண்புமிகு தொண்டமான் அவர்களின் 80-வது ஆண்டு நிறைவு முத்துவிழா அண்மையில் நடைபெறவிருப்பதையும் அவ்வமயம் சிறப்பு மலர் ஒன்று மொட்டவிழ்ந்து மலரவிருப்பதையுமறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

முத்துவிழா மலர், அமைச்சர் பெருமானின் அருங்குணங்களையும் அவர் தமிழுக்கும் தமிழருக்கும் ஆற்றிவரும் தொண்டினையும் நல்லமுறையில் எடுத்துக் காட்டும் நல்ல பல கருத்துக்கள், கவிதைகள் அடங்கிய அரிய பெட்டகமெனத் திகழும் என நம்புகிறேன்.

முத்துவிழா சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள,

மே.தா.கு. குத்தாலிங்கம்

Dr. P. Pandian, I.A.S., (Retd.)
M.A., B.T., D.LITT., F.I.P.A., (U.S.A).,
(Kavi Yogii Bacon)
Poet, Author and Playwright)

2/5, Bhaskara Street,
R.R. Puram,
Madras - 600 024.
Phone : 425634

A LETTER OF FELICITATION

My Dear Rama,

I am happy to learn that you and your associates are bringing out a souvenir on the 80th birth day of Thiru Thondaman Honourable Minister the Government of Sri Lanka.

It is indeed a great pleasure for me to recollect my association with him well over thirty years.

Hailing from the erstwhile Ramanathapuram District, it is but natural for my native spirit to soar high and wish Godspeed for the star rising in its horizon. Even in the earlier part of the fifties, when I was engaged in rural reconstruction, the people of Ramanathapuram District considered Thiru Thondman with a charisma.

I was serving in Trichy District in the early seventies. I had to preside over a function organised by the Repatriate's Welfare Association, got up to felicitate Honourable Thondaman. It was a grand function with all glitter but it was marred by a stir by a rival Association.

Till then I too was unaware of the relative strength of these organisations. I presumed – of course incorrectly – that there could be only one organisation to look after the welfare of the Ceylon Repatriates. The rival group Questioned the numerical strength of the organiser's Association. I was feeling uneasy and had half a mind to abruptly wind up the meeting. But then came out to play promptly, the Quick witted statesmanship quality of Thiru Thondaman. Stoodup he like a towering Himalayas. Nehruian elegance came over him. Spoke he in clear ringing voice of conviction; "Look here gentlemen, you are also interested in the welfare of the Repatriates. The organisers of this function too are surely so interested. It is not the forum to test the relative numerical

strength of the associations. We are here to serve each and every repatriate. You organise a function next time, we will come there. Now you attend this function with comradeship. They also will come to your function, if your extend invitation." The words had immediate effect. They calmed down; came to the stage with garlands and profusely garlanded all on the stage.

I saw how Cardinal Newman was perfectly correct in describing a gentleman, "The true gentleman carefully avoids whatever may cause a jar or a jolt in the maids of those with whom he is cast".

While I was serving as the District Collector in Chengai Anna District during the late Dr. M. G. R's regime, I had many occasions to extend courtesies and facilities to Hon'ble Thondaman. Then I had a close up view of this great personality.

He is very soft spoken but not weak. He is very firm in his views but not cruel to his enemies. What attracted me much was his concern to the lot of the Sri Lankan Tamils. His heart is full of love for their cause. True to the party he belongs to, he has unshakeable faith in the peaceful method to solve the issues. When he came to know that I too was a political sufferer, and was the secretary of the Student's wing of the Ramanathapuram District, his love for me strengthened.

I had the unique opportunity of being present when Dr. M. G. R. and Thiru Thondaman conferred. They moved as if brothers.

I am fully convinced that Hon'ble Thondaman as a great statesman will do his best to solve the ethnic crisis in the island by using his good office with the Hon'ble Sri Lankan President. An earliest amicable solution is the need of the hour in the interest of world peace.

Hon'ble Thondaman has royal blood in his veins. His individualistic approach befitting a man of royal descent, should sure deliver the goods.

I wish Rama and his friends to celebrate with zeal Thiru Thondaman's centenary in future.

Let me conclude with a couple of verses

1) His heart is full of the milk
of human kindness sure
Manners pleasing and soft as silk
An empodiment of the traits pure.

2) With the Himalayan height
Truly a fine gentleman
People's welfare his might
He is Hon'ble Thondaman.

Wish the function every success.

MADRAS
23.06.92

Sd/-
DR. P. PANDIAN

ICFTU-APRO

40 Years in Service

THONDAMAN- A VERSATILE GENIUS

It is not always easy to write about a legendary figure when you cannnot adequately express the many splendoured characteristics of a towering personality like Brother S.Thondaman. A veteran in the trade union movement, a shrewd political tactician, a revered community leader, a patriarch in the extended family of plantation workers- you would have still left out many qualities of the octogenarian leader.

In the 50 and odd years of the struggle and growth of the Ceylon Workers congress (cwc), a loyal affiliate of the ICFTU and its Asian and Pacific Regional Organisation, for over 40 Years Brother Thondaman has provided leadership and has secured for the plantation workers commendable and significant improvements in the wages and living conditions. His masterly moves in obtaining citizenship rights for thousands of people who for long lived with the stigma of being called stateless persons have earned for Brother Thondaman universal recognition as a shrewd politician and an elder statesman.

The felicitation function for Brother Thondaman being organized in singapore in July this year is a testimony of the respect and affection people beyond Sri Lanka have for the world-renowned personality. Brother Thondaman is indeed a sage and an institution in himself.

On behalf of over 32 million workers from 26 countries of Asia and the Pacific when my organisation represents, I wish Brother Thondaman, whose 80th Birthday will be celebrated in August this year, many more years of healthy, successful and happy life.



TAKASHI IZUMI
General Secretary
ICFTU Asian and Pacific regional organisation



Hearty Felicitations

to Brother S.Thondaman

by T. Pathma

It gives me great pleasure and honour to write this message. As the Director of Women & Youth Department of the International confederation of Free Trade Unions-Asian and Pacific Regional Organisation (ICFTU-APRO, my first opportunity to meet him personally for discussions was in early 1990 during my mission to Sri Lanka. It was a treat meeting an experienced and matured trade union leader who was both refreshingly honest, and open to frank discussions.

I remember vividly , the first occasion when I confronted him with an incorrect information given by his organisation. He could have very easily maintained that it was correct; however , he called in his staff and had open and frank discussions and collectively rectified the error. I was truely impressed.

During my subsequent visits to Sri Lanka; I have found my work with him and his team to be challenging and fruitful. What impresses me most in his feel and touch with the grassroot membership of plantation workers, in particular the women workers.

I wish Brother Thondaman continued success and sincerely hope that the tradition and culture he cherishes will spur him on to recognise the strength, commitment and loyality of women workers to the Movement, and to encourage, train and promote, women to positions of responsibility and stature both in the trade union and the political arenas.

I look forward to my continuing association with Brother Thondaman and pray that I too will have the same courage and stamina that he personifies.

MESSAGE

MALAYSIAN TRADES UNION CONGRESS

It gives me great pleasure to pen this short message of felicitation in commoration of the Eighteith Birtday Celebrations of the Honourable Mr. S. Thondaman, Minister of Tourism and Rural Industrial Development of the Government of Sri Lanka.

As president of the Ceylon workers Congress, Mr. Thondaman holds the Key to workers unity and solidarity within the context of employer-worker relations in Sri Lanka. He has done yeoman's service for the cause of the workers, and has brought to fruition the avowed goals of the labour fraternity. There can be no gainsaying that any aspiring individual who desires to ascend the leadership ladders of Sri Lankan politics and unionism will have to earn Mr. Thondaman's acknowledgement and support. This only adds testimony to the fact that the people of Sri Lanka have always held him in very high esteem in public office.

The Indians in Sri Lanka will respect him forever for his laudable contributions towards their upliftment and rightful citizens of the country. He made it possible for them to live and prosper as free citizens within the socio-economic context of sri Lanka. No other leader has done so much in so short a time for the all round progress of an entire community.

Mr. Thondaman has also contributed significantly towards the promotion of the Tamil Language and Literature. He has put his best foot forward in nurturing the cultural , literary and linguistic progress of his people, and this makes him stand out as an unparalleled leader in the arnals of Sri Lankan development.

I have personally had the memorable opportunity of knowing him and witnessing his charismatic role in the affairs of labour and politics. He gave full effect to the popular belief that "Trade Unionism and politics are twin carburettors of the engine of society."

It is heartning to learn that Mr. Thondaman is being felicitated on the occasion of his Eightieth Birthday. There cannot be a more befitting opportunity to pay tribute to a social helmsman who has made his indeliable work on the scoreboard of labour leadership and political momentum of Sri Lanka.

Wishing the celebrations every success.

Dr. V.David

Secretary General

MTUC



கலைமாமணி எழிலிசைமன்னர்
டாக்டர் T.M. சவுந்தரராஜன்

வாழ்த்து

அன்புடையீர்,

வணக்கம், தங்களது 18-5-92ஆம் நாள் மடலில் மக்கள் தலைவர் மரியாதைக்குரிய பெரியவர் ஐயா தொண்டமான் அவர்களைப்பற்றி 26-7-92-ல், அன்னாரின் 80-வது பிறந்த நாளை ஒட்டி சிறப்பு மலர் தயாரிக்க, அதில் எனது சிறப்புச் செய்தியும் வேண்டுமெனக், கேட்டுள்ளதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்திரு தொண்டமான் ஐயா அவர்கள் இலங்கைத் தேசியத் தலைவர்கள் வரிசையிலே முதலிடம் பெற்றவர். தமிழ்மொழி மீதும், கலாச்சார வகையிலும், தமிழ் இசை வல்லுநர்களிடமும் பெருமதிப்பை வைத்திருப்பவரா கும். 1991-ஆம் ஆண்டு ஆகஸ்டு 30-ஆம் நாள் ஐயா அவர்களின் 79-வது பிறந்த நாள் வைபவத்தில் கொழும்பு பண்டாரவளையில் நானும் கலந்து கொண்டு பாராட்டி அன்று மாலை பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் மத்தியில் தொண்டமான் ஐயா அவர்கள் அமர்ந்திருந்து எனது இன்னிசையைக் கேட்டு மகிழ்ந்ததல்லாமல் எனக்குப் பொன்னாடையும் போர்த்தி "இசை வல்லுநர்" என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கினார்கள். மேலும் இலங்கைவாழ் தமிழ் மக்கள் தமிழ் இசை மீது கொண்டுள்ள பக்தியைக் கண்டு மிகவும் பாராட்டிப் பேசியதல்லாமல், தமிழ் மக்கள் ஒற்றுமையையும் தன்மதிப்பையும் காப் பாற்றக் கேட்டுக் கொண்டார்கள். மற்றொரு விசேஷம் அன்று மேக மூட்டம் திரண்டு மழைவந்து கூட்டத்தைக் கலைத்திடுமோவென்று அஞ்சிய வேளையில் மக்கள் வெள்ளம் கூடியிருந்து ஐயாவின் புகழைப் பாடுவதற்குப் பெரும் ஆரவாரத்துடன் தலைவனின் பெயரைக் கூறி, கரகோஷம் புரிந்தனர். அடியேனும், "ஓடும் மேகங்களே ஒரு சொல் கேளீரோ, தலைவனைப் புகழும் நேரம், மழை பொழியாமல் விலகுங்களேன்" என்று பாட ஒரு சொட்டு மழை யின்றி வானம் தூய்மையாக மாறி, ஐயாவை வாழ்த்தியது. மக்கள் ஒருமுகமாய் என்னைப் பாராட்டிக் கௌரவித்தனர். நீர் கொழும்பு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், தமிழ் மக்கள் ஏகோபித்த மனதுடன் ஐயாவின் தலைமையில் வாழவே விரும்பு கின்றனர். அவரின் பெரும் மதிப்பை அப்பொழுது நேரடியா கக் காணும் பேறு பெற்றேன். தற்பொழுது சிங்கையிலே நடத்த விருக்கும் தொண்டமான் ஐயா அவர்களின் 80-வது பிறந்த நாள் விழா சீரும் சிறப்புமாக நடைபெறவும், நோய் நொடியின்றி நீண்ட ஆயுளுடன் தமிழ் மக்களின் தலை வராக வாழவேண்டுமெனவும் என் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

T.M. Soundararajan



NATIONAL UNION OF PLANTATION WORKERS

அன்பென்ற சொல்லுக்கு அர்த்தம் சொல்லி ஆர்ப்பாட்டம்-ஆரவாரம் செய்வோருக்கும் உவமைகள் சொல்லி, செயல்படுகின்ற மனித நேயங்களுக்கெல்லாம் ஊக்கத்தைக் கொடுத்து, ஒரு தொழிற்சங்கவாதி, எப்படியொரு பொது மனிதராக வாழ முடியுமோ அந்தளவுக்கு வாழ்ந்து வருபவர்-மக்களுக்காக நல்வழி காட்டியும் வருபவர் திருமிகு.தொண்டமான் அவர்கள்.

இலங்கையில் செயலாக்க முறை , உலக நடப்புக் கேற்றவாறு இயக்கம் பெறவேண்டும்-மக்கள் என்றும் சுபிட்சமாக வாழவேண்டும் தொழிலாளி-முதலாளி உறவு வளரவேண்டுமென்ற வேட்கையுடையவர்.

இந்தியாவா, இலங்கையா? எந்த நாட்டுக்குப் போவது என்றெல்லாம் சாவா-வாழ்வா போராட்டத்தில் வாழ்ந்து வந்த இலட்சக்கணக்கான பாட்டாளிகளுக்குக் குடியுரிமை பெற்றுத் தந்த பெருமைக்குரிய மாபெரும் தொண்டினைச் செய்தவர் திருமிகு.தொண்டமான் அவர்கள்.

ஒரு தேசிய தொழிற்சங்கவாதியாகவும், உலகத் தொழிற்சங்கத்தின் மதிப்பாளராகவும் சேவையாற்றுவதில் நேர்மையாளராக -சமுதாய நலன் கருதி மனித சக்திக்கு-உரிமைக்குக் குரல்கொடுத்த மக்களின் தோழர் அவர்.

ஆர்ப்பாட்டத்தின் வழி சாதிக்க முடியாத காரியங்களைச் சாதித்த காந்தி மகானின் காந்திய வாதத்தின் நம்பகமான ஒரு மாமனிதர்அவர். அவர் தன் சுயநலத்தை நினைத்திருந்தால், அவர் உல்லாசபுரியில், சுகபோகத்தோடு இன்றுவரை வாழ்ந்திருக்கமுடியும். தன்னையே தொண்டூழி யத்திற்காக முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.

தன்னுடைய வாழ்நாளில் தனது சீரிய திட்டங்கள் மூலம் சிறப்பான பணிகள் மூலம் மக்கள் மனங் களில் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவராக வாழ்ந்து வருவதை -ஒரு தொழிற்சங்கவாதியாக வாழ்வதையெண்ணிப் பெருமைப்படுகிறேன்.

முத்துவிழாவுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துதல்களை இதன்மூலம் புலப்படுத்திக் கொள்கிறேன். வாழ்க மக்கள் தொண்டர் திருமிகு.தொண்டமான் அவர்கள். வளரட்டும் அவரின் நற்சேவைகள். உயரட்டும் அவரின் தொண்டு மனப்பான்மை.

டாக்டர் பி.பி.நாராயணன்

The High Commissioner

Democratic Socialist Republic of Sri Lanka

I Consider it an honour and a privilege to have been requested to provide a message on the occasion of the celebration of the 80th Birthday of an illustrious son of Sri Lanka.

Hon.Savumiamoorthy Thondaman who is presently the Minister of Tourism and Rural Industrial Development of Sri Lanka has a distinguished track record of a political and a trade union activist. His leadership in these fields and many other areas has contributed in no small measure to the prosperity and welfare of the people of Sri Lanka and in particular the community which he represents.

A search for the establishment of peace and harmony amongst different races of Sri Lanka is one of the arduous and noblest task that has been undertaken by the Honourable Minister in the recent years. On many occasions Honourable Minister has proved his capabilities in steering his way through difficult paths and achieving praise worthy results. His ability to work amidst diversity and division, reservoir of experience, foresight and practical minedness has won respect and admiration both at home and abroad.

On this important landmark of his life let us wish that we will continue to have the good fortune of benefitting for many more years from this rare specimen of a leader.

திருவள்ளுவர் பார்வையில் மக்கள் தலைவர் தொண்டமான்



'நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்

பண்புபடா ராட்டும் உலகு"

உலகப் பொதுமறை தந்த பேராசிரியர் பொய்யாமொழி திருவள்ளுவனார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்ற முழு மனிதனுடைய பெருஞ்சிறப்பினை வானளாவர் புகழ்ந்து பேசுகின்றார். கல்வி அறிவு பெற்றிருந்தும், ஆற்றல் நிறைந்திருந்தும் மக்களுக்குப் பயன்படுகின்ற வாழ்க்கை வாழாமல் இருப்பவர்கள் பல பேர் உண்டு. ஆதலால்தான் ஆசிரியர் திருவள்ளுவனார் "பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு" என்று குறிப்பிட்டார். நிறைந்த அறிவு பெற்றிருந்தும் மக்களுக்குப் பயன்படாமல் வாழ்கின்றவர்களைப் பார்த்து "அறிவினால் ஆகுவது உண்டோ" என்று ஆசிரியர் திருவள்ளுவனார் சுட்டிக்காட்டுகின்றார்.

மக்கள் தலைவர் தொண்டமான் அவர்கள் தங்களுடைய செல்வச் செழிப்பினையும் பதவிப்பெருமையினையும் கருதிப்பெருமையடையாமல் மக்கள் தொண்டுதான் வாழ்நாள் தொண்டாக இருக்கவேண்டும் என்று கருதி சான்றாண்மையுடன் வாழ்கின்றார்கள்.

சான்றோர்கள் நல்ல காரியங்களை எல்லாம் தங்களுடைய இன்றியமையாத கடமையாகக் கருதி வாழ்வார்கள் என்பது திருவள்ளுவரின் பொன்னுரையாகும்.

"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து

சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

தலைவர்தொண்டமான் அவர்களின் பெருஞ்சிறப்பினைப் பேசுவதற்கு ஆசிரியர் வள்ளுவனாரின் குறள் மணிகளே மிகவும் பொருத்தமானவைகளாகும்.

திருக்குறளார் வீ.முனிசாமி

Wishing the Function Every Success

MK SECURITY & INVESTIGATION SERVICES

Pager 7878062 Fax 2946090
320 Serangoon Road, #04-52A Serangoon Plaza
Singapore 0821. Tel.: 2917035 / 2940300
Control Room Tel.: 2657104

✪ ☆ ✪

For Professional Service And A Truly Personal Attention

Specialised
Private Investigation

✪ ★ ✪

போராட வந்தவரே!–மக்களுக்குப்
புதுவாழ்வு தந்தவரே!
உங்கள் புகழ்பாடுவது எங்கள் கடமை!
வாழ்க பல்லாண்டு!

TRADE = FINANCE = TOURS



K.C. Desilva
(Marketing Consultant)



SUITE 5079, ASIAN TOWER
SUKHUMVIT SOI 71, BANGKOK, THAILAND
FAX : (66-2) 381-2358, TLX : 81118 WWC TH
TEL : 390-2935/390-2945
390-2647/390-2960
390-2966 EXT : 5079

சான்றாண்மை நிறைந்த தலைவர் தொண்டமான் அவர்களின் பெருமையினைச் சிறப்பித்துக்கூறப் பல குறட்பாக்கள் எடுத்துக்காட்டாகப் பொருந்தியுள்ளன.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்"

பெற்றெடுத்த தாய் தன்னுடைய மகனின் கல்வி, அறிவுடைமை, ஆற்றலுடைமை, இன்ன பிற குணங்களை எல்லாம் தான் மகிழ்ச்சியடைவதற்கு முதன்மையான காரணங்களாகக் கூறாமல், சான்றாண்மையினைச் சிறப்பித்துக் கூறுகிறார் என்றால் அத்தகைய சால்பு நிறைந்த மக்கள் தலைவர் தொண்டமான் அவர்களை உலகம் பாராட்டுவது இயல்புதானே!

"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

தலைவர் தொண்டமான் அவர்கள் மிகப்பெரிய பாரம்பரியத்தில் வந்த தலைவர் ஆவார்கள். அந்தப் பாரம்பரியப் பண்புகள் நமது தலைவரிடத்தில் இயல்பாகவே அமைந்திருப்பனவாகும்.

ஆசிரியர் திருவள்ளுவர் உயர்ந்த குடியில் பிறந்த பெருந்தகையாளர்களின் பண்புகளைக் 'குடிமை" என்ற அதிகாரத்தில் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். அத்தகைய உயர்ந்த பண்புகள் அனைத்தும் தலைவர் தொண்டமான் அவர்களிடத்தில் இயல்பாகவே காணப்படுவனவாகும் என்று கூறுவது மிகையாகிவிடாது. சில குறட்பாக்களைக் குறிப்பிட்டு மகிழ்வோமாக.

"ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்"
"நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு"

மதிநுட்பம் நிறைந்த சிறந்த அமைச்சராக தலைவர் தொண்டமான் அவர்கள் மக்களுக்குத் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். தொழிலாளர்களின் தலைவராக வியக்கத்தக்க செயல்களை உழைப்பாளிகளுக்குத் தலைவர் தொண்டமான் ஆற்றியிருக்கிறார்.

திருக்குறளில் அமைச்சு என்ற அதிகாரத்தில் காணப்படும் ஒரு குறட்பாவினைக் குறிப்பிட்டுத் தலைவர் தொண்டமான் அவர்களின் பெருஞ்சிறப்பினைப் பேசவேண்டும.

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை"

தில்லி நாடாளுமன்றத்தில் (லோக்சபா) உறுப்பினனாக இருந்த காலத்தில் தலைவர் தொண்டமான் அவர்களைச் சந்தித்து மகிழ்ந்தேன்.

மனிதப் பண்பு வாழ வளர



வாழும் ஆண்டுகளுக்கே உயிரூட்டம் தேவை

ஒருவன் உலகில் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதைவிட, எப்படி வாழந்தான் என்பதுதான், கூர்ந்து நோக்கத்தக்க ஒன்றாகும்.

தங்களுடைய உயிர்வாழ்க்கைக்கு ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டு போகிறவர்கள், உலகில் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால், தாம் வாழும் ஆண்டுகளுக்கு உயிரோட்டத்தை ஊட்டுபவர்கள், உலகில் ஒரு சிலரே இருக்கிறார்கள்.

உயிர் வாழ்க்கைக்கு, ஆண்டுகளைக் கூட்டுபவர்கள், விலங்கினத்தைச் சார்ந்தவராவர். ஆண்டுகளுக்கு உயிரோட்டத்தை ஊட்டுபவர்கள், மனித இனத்தைச் சேர்ந்தவராவர்.

சிந்தனையாற்றல் மனிதனுக்கே உண்டு.

விலங்குக்கும் மனிதனுக்கும் பொதுவாகப் பசியாறுதல், தூக்கம் பெறுதல், இணைவிழைச்சுக் கொள்ளுதல், ஓடியாடி விளையாடியிருத்தல், அணைத்துக்கொள்ளுதல், சினமுறுதல், சண்டையிடுதல் போன்றவற்றில் வேறுபாடுகள் இல்லை. ஆனால், பிறர் துன்பம் நீக்குதல்.நலம்பயத்தல் போன்றவற்றை நிறைவேற்ற, அன்புள்ளம் அருளுள்ளம்-அறவுள்ளம்-இரக்கவுள்ளம்-ஈகையுள்ளம்- பண்புள்ளம் -பாங்குள்ளம் தொண்டுள்ளம்-சிந்தனையுள்ளம் ஆகியவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல், மனிதனுக்கு மட்டுமே இருக்கக்காண்கிறோம். இதைத்தான்,மனிதத்தன்மை அல்லது மனிதப் பண்பு என்று குறிப்பிடுகிறோம். இத்தகைய பண்பை, விலங்கு போன்ற ஏனைய உயிரினங்களிடத்தில் எதிர்பார்க்க முடியாது.

மனிதனின் இன்றியமையாக் கடமைகள்

சமூகத்தால் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சீர்திருத்தப்பட்ட மனிதன், எல்லாவித விலங்குகளைக் காட்டிலும், மிகச் சிறந்தவனாகத் திகழ்கிறான். அவன் ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் வகுக்கப்பட்ட அன்புநெறி, அறிவுநெறி, சட்டம், ஒழுங்கு போன்றவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவனாகவும் ஆகிறான்.

மனித வாழ்க்கையில் மிகப் பெரிய வெற்றி, அவன் எப்பொழுதும் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையையும் மனநிலையையும், அவற்றின் பயனாக அமையும் இன்பத்தையும் பெறுவதிலேதான், அடங்கியிருக்கிறது. மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை உருவாக்கக் கற்றுக் கொள்வதும், அத்தகைய சூழ்நிலையிலேயே எப்பொழுதும் இருப்பதும், அதற்கேற்றவாறு

டாக்டர் நாவலர்

மனத்தைப் பயன்படுத்திக் கொள்ளுவதும் மனிதனின் இன்றியமையாக் கடமைகளாகும்.

நுகர்வதைப் பொறுத்தே இன்பம்

ஒருவனுடைய வாழ்க்கையில், எப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன என்பதை விட, அவைகளை, அவன் எப்படி ஏற்றுக் கொள்ளுகிறான் என்பதைப் பொறுத்துத்தான் அவன் பெறும் இன்பம் அமைகிறது.

ஒருவனுக்கு எப்படிப்பட்ட மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகள் அமைந்திருக்கின்றன என்பதைப் பொறுத்தல்லாமல், அவன் அந்தச் சூழ்நிலைகளை எப்படி நுகர்கிறான் என்பதைப் பொறுத்தே, அவன் பெறும் இன்பத்தின் அளவும் இருக்கும்.

ஒருவன் நியாயமான விருப்பங்களைக் கொண்டிருந்து, அவற்றை அறமுறைப்படி நிறை வேற்ற முயன்றால்தான், அவன் உண்மையான இன்பத்தைப்பெற முடியும்.

கணக்கீடும் வாழும் முறையும்

வாழ்க்கையை ஒவ்வொருவரும் களிப்பால் கணக்கிட்டுப் பார்க்க வேண்டுமேயல்லாமல், கண்ணீரால் கணக்கிடக்கூடாது. ஒருவன் சிரித்து வாழ வேண்டும். பிறரைச் சிரிக்க வைத்தும் வாழ வேண்டும், ஆனால் பிறர் பார்த்துச் சிரிக்கும்படி வாழக்கூடாது.

உலகில் மனிதன் மகிழ்ச்சியோடு இருக்க ஆசைப்படலாம். ஆனால் பேராசைப்படக்கூடாது. ஆசைக்கு எப்பொழுதும் ஒரு அளவு உண்டு, ஆனால் பேராசைக்கு ஒரு அளவே இல்லை.

செய்து முடித்ததையே சிந்திக்க வேண்டும்

ஒருவன் வாழ்க்கையில் என்ன என்ன வெற்றிகரமான செயல்களைச் செய்து முடித்தோம் என்பதை எண்ணி மகிழ்ச்சியடைய வேண்டும். ஆனால் எந்தெந்தச் செயல்களில் தோல்வியுற்றோம் என்பதை எண்ணி வருந்திக் கொண்டிருக்கக்கூடாது,

நல்ல மனிதனின் வாழ்க்கையில் , அவனுக்கு மகிழ்ச்சிதரும் சிறந்த பகுதி எதுவென்றால் அவன் எவ்வெப்போது அன்புடன் சிறுசிறு செயல்களை யாவது செய்கிறானோ அதுவேயாகும்.

சமூகத்தின் பிணைப்புச் சங்கிலி

மக்கள் சமூகத்தை ஒன்றாகக் கட்டிச் சேர்த்து வைத்திருக்கும் பிணைப்புச் சங்கிலி எதுவென்றால், அன்புள்ளந்தான்.

அன்புள்ளத்தோடு செய்யப்படும் எந்தவொரு சாதாரண செயலும், பெருமைக்குரியதாகவே காணப்படும்.

அன்பு என்ற மொழியை ஊமையர்களும் புரிந்து கொள்வார்கள், குருடர்களும் தெரிந்து கொள்ளுவார்கள், செவிடர்களும் அறிந்து கொளவார்கள்.

ஒருவன் தன் செயல்மூலம் காட்டும் அன்புதான் நன்மையாக மலருகிறது.

அன்புநெறி, அறிவு நெறி ஆகியவற்றின் அடிப்படையில் அறநெறி முகிழ்க்கிறது. அறம் எனப்படுவது ஒருவன் தனக்கும், தன்னுடன் வாழும் மக்களுக்கும் அவர்களுடன் கொண்டுள்ள உறவுகளுக்கும் ஏற்றபடி தன் கடமையைச் செய்வதாகும். அத்தகைய கடமைகள் பழக்க வழக்கத்தைக் கொண்டும், பகுத்தறிவைக் கொண்டும் ஆன்றோராலும், சான்றோராலும் அறிவுறுத்தப்படுகின்றன.

மற்றொருவனுக்கு நன்மை செய்வதில் , ஒருவன் தனக்கும் நன்மை செய்து கொள்கிறான். நன்மை முற்றுப் பெறும் நிலையில் ஏற்படும் பயனில் மட்டுமல்லாமல், அந்தச் செயலைச் செய்யும்போதே, நன்மையைச் செய்கிறோம் என்ற எண்ணம் தனி இன்பத்தைப் பயக்கும்.

அறிவு ஒன்றே தெவிட்டாத பொருள்

ஒருவனுக்கு இயற்கையில் மற்ற எல்லாப் பொருள்களையும்விட, மிகவான இன்பத்தையும், பெருமகிழ்ச்சியையும் அளிக்கவல்லது அறிவுடைமையேயாகும். மற்ற இன்பங்களிலெல்லாம் தெவிட்டுதல் ஏற்படும். அறிவுடைமையால் தெவிட்டுதல் என்றும் ஏற்படாது. இன்பம் மேலும் மேலும் சுரந்து கொண்டே இருக்கும்.

உலகின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து வைப்பது அறிவுடைய மனிதனின் வேலையல்ல. தான் செய்ய வேண்டியது என்ன என்பதை அவன் கண்டுகொள்ள வேண்டும். தன்னுடைய அறிவு ஆற்றலுக்கு முடிந்ததைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள

வேண்டும். தனக்குக் கிடைக்கும் வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு தன்னால் இயன்றதைச் செய்து முடிக்க வேண்டும்.

அகவிளக்குகளை ஏற்றும் அறிவுச்சுடர்

ஒரு எரிகின்ற மெழுகுவர்த்தி. ஆயிரம் மெழுகு வர்த்திகளை ஏற்றி வைத்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும். அதுபோல, ஒருவன் தன்னுடைய அறிவுச் சுடரில் மற்றவர்களும் தங்கள் அக விளக்குகளை ஏற்றிக் கொள்ள வாய்ப்பு அளித்துவிட்டு, தானும் அறிவொளி வீசிக் கொண்டிருக்க வேண்டும்.

பெருமையும் புகழும்

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் பெருமையோடும், புகழோடும் திகழ வேண்டும். பெருமை என்பது ஒரு பெரிய உள்ளத்தின் பயனைக் குறிப்பதாகும். புகழ் என்பது ஒரு அரிய செயலின் பயனைக் குறிப்பதாகும்.

சிலர் இயல்பாகவே புகழோடு வாழ்கின்றனர், சிலர் புகழை முயன்று அடைகின்றனர். சிலர் புகழைத் தேடி அலைகின்றனர். சிலர் மீது புகழ் திணிக்கப் படுகிறது.

மக்கள் வாழ்க்கையில் குறிக்கோளே இன்பந்தான்.

மகிழ்ச்சியைச் சுமந்துகொண்டே இருந்தால், எந்த ஒரு சுமையும் எடை குறைவாகத்தான் இருக்கும்.

மூன்று வகையான மக்கள்

உலகில் பொதுவாக மூன்று வகையான மக்கள் இருக்கிறார்கள். "எதையும் செய்ய முடியும்" என்னும் ஒரு சாரார், "எதையும் செய்யமாட்டோம்" என்னும் மற்றொரு சாரார், எதையும் செய்ய இயலாது" என்னும் இன்னொரு சாரார். முதல் தரத்தினர் எல்லாவற்றையும் செய்து முடிக்கின்றனர். இரண்டாம் தரத்தினர் எல்லாவற்றையும் எதிர்க்கின்றனர், மூன்றாம் தரத்தினர் எல்லாவற்றிலும் தோல்வியுறுகின்றனர்.

சில உள்ளங்கள் உயருகின்றன. சில உருப்பெறுகின்றன. சில உடைபடுகின்றன, சில உருக்குலைகின்றன. சில துருப்பிடிக்கின்றன.

உள்ளமே வல்லரசு

ஒவ்வொருவரும் தனது உள்ளம்தான் தனக்குரிய வல்லரசாகும் என்று எண்ண வேண்டும். தனக்கு வேண்டியதை, தான் விரும்பியதைச் சாதிக்கும் வல்லமை அதற்கு உண்டு என்று கருத வேண்டும். உள்ளத்தைப்போல் மிகமிகச் சுருங்கச் கூடிய பொருளும் உலகில் இல்லை. மிக மிக விரிவடையக்கூடிய பொளும் உலகில் இல்லை. வாழ்க்கையில் மனிதன் எவ்வளவு காலம் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்துகிறானோ, அவ்வளவு காலம் வரையிலும் அவன் இளைஞனாகவே கருதப்படுவான்.

மனிதப் பண்புக்கு வேண்டுவன

பொதுவாக மனிதப் பண்பு வளர வேண்டுமாயின் (1) தோற்றத்தில் அடக்கம் வேண்டும் (2) செல்வத்தில எளிமை வேண்டும் (3) வறுமையில் வாய்மை வேண்டும், (4) சினத்தில் பொறுமை வேண்டும் (5) தொழிலில் நேர்மை வேண்டும் (6) கடமையில் நாணயம் வேண்டும் (7) வாழ்க்கையில் கட்டுப்பாடு வேண்டும் (8) பழகுவதில் கண்ணியம் வேண்டும் (9) வாக்கில் உண்மை வேண்டும் (10) சிந்தனையில் தெளிவு வேண்டும் (11) செயலில் மனிதத்தன்மை வேண்டும் (12) முயற்சியில் தூய்மை வேண்டும் (13) வெற்றியில் பணிவு வேண்டும்.

தமிழக மக்களிடையே மனிதப் பண்பு வாழவும் வளரவும் வேண்டுமாயின், மனிதப் பண்புகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் தமிழ் இலக்கியங்களானதிருக்குறள் – நாலடியார் – அறநெறிச் சாரம் – நீதிநெறி விளக்கம்–நான்மணிக்கடிகை–சிறுபஞ்சமூலம்–ஏலாதி, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, பழமொழி நானூறு, ஆசாரக் கோவை, திரிகடுகம், ஆத்திசூடி,–கொன்றைவேந்தன்–வெற்றி வேற்கை–உலகநீதி–போன்றவைகளை எல்லாத் தமிழ் மக்களும் பயிலும்படிச் செய்ய வேண்டும். இந்த இலக்கியங்களில் பொதிந்துகிடக்கும் அறநெறிக் கருத்துக்கள் பள்ளிகளில் பரவிட வேண்டும். இந்த இலக்கியங்கள் பள்ளிப் பாட நூல்களில் இடம்பெற்று, இவற்றில் எடுத்துரைக்கப்படும் மனிதப் பண்புக் கருத்துக் களிடத்தில் மாணவ மாணவியர்க்கு நம்பிக்கையும், நன்மதிப்பும் ஏற்படச் செய்ய வேண்டும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு" ❑❑❑



மூனாபுதூரில் தொண்டமான் பிறந்த வானளாவிய வசந்த மாளிகை.



பட்டமங்கலத்தில் தொண்டமான் மாளிகை. மாளிகையின் முன்னால் ஊர்மக்கள் கூடும் சமூக நிலையம்.



இலங்கை வெவண்டன் தோட்டத்தில் விளங்கும் தோட்டமாளிகை.

இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் தொண்டமான், தொண்டமான் பேரன் ஆறுமுகத் தொண்டமான், அவரின் மனைவி இராஜலட்சுமி முதலானோர்.





மகன் இராமநாதத் தொண்டமான், பேரன் ஆறுமுகத் தொண்டமான், இவர்களிடையில் மாலையுடனும், மகிழ்வுடனும் தோன்றும் சௌமியமூர்த்தி தொண்டமான்.

Printed at Indra Offset, Madras-600 005. Ph : 848106



இலங்கை அமெரிக்க தூதரோடு தொண்டமான்.



ஜப்பான் பயணத்தின் போது தலைவர் தொண்டமான்.



நுவரேலியாவில் நடந்த தேசியக் கல்விக் கருத்தரங்கில் தலைவர் தொண்டமான் உரையாற்றுகிறார்.



தொண்டமான் எழுதிய "MYLIFE AND TIMES" எனும் நூலை வெளியிட திரு. ஆர்.பிரேம தாசா வருகைதந்த போது, அமைச்சர் தொண்டமானின் இணைப்புச் செயலாளர் மாலைகள் அணிவிக்கிறார்.



"தலைவர் தொண்டமான்" நூல் வெளியீட்டின் போது முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் –தலைவர் தொண்டமா னுக்குப் பொன்னாடை போர்த்தும் பொலிவுமிக்க காட்சி. .



மேல்நாட்டு விருந்தினர் பெருமக்களுடன் உவப்பத் தலைக்கூடி மகிழும் தொண்டமான்.



இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனுடன் தலைவர் தொண்டமான்.



77வது பிறந்தநாள் விழாவில் பெருந்தலைவர் தொண்டமானுக்குப் பேரன் 'கேக்' ஊட்டுகிறார்.



அட்டனில் நடந்த இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொன்விழா மாநாட்டிற்கு வருகைதந்த பெருமக்களுடன் தொண்டமான்.



அட்டன் டன்பா பெருந்திடலில் தலைவர்களின் பேச்சைக் கேட்கக் கடலெனத் திரண்டி ருக்கும் தொழிலாளர்கள்.



தலைவர் தொண்டமான் சுற்றுலா, கிராமக் கைத்தொ ழில் வளர்ச்சி அமைச்சராகப் பதவியேற்றபோது, தம் நண்பர்களின் மாலை மரியாதைகளை ஏற்கிறார்.



இலங்கை தொழிலாளர் காங்கிரசின் 50வது பொன்விழாக் கொண்டாட்டங்கள் அட்டன் நகரில் நடந்தபோது மலர்முடி சூட்டிய மன்னராக தொண்டமான்.



"அடிமைத் தளையிலிருந்து விடுதலை" எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழாவில் இலங்கை இந்தியச் சமுதாயப் பேரவையின் தலைவர் எம். எஸ். கந்தசாமி, திரு. மல் கோத்ரா ஆகியோருடன் தொண்டமான்.



தொல்புகழ்த் தொண்டமான் குடும்பம் – ஒரு பல்கலைக் கழகமெனத் தோன்றிடும் காட்சி.

மகன் இராமநாதன், பேத்தி அனுராதா, பேரன் மனைவி இராஜலட்சுமி, மற்றும் கொள்ளுப் பேரக் குழந்தைகளோடு குதூகலம் அடையும் தொண்டமான்





ஒரு தோட்டத்து வரவேற்பில் திருக்கோஷ்டியூர் கோயில் குருக்கள் திரு.எஸ். வெங்கடேசபட்டாச்சாரியார் கருப்பையா பிள்ளையின் வரலாறு கூறுகிறார்.

தன்னேரில்லா தலைவர்



மதி கலங்கா மந்திரியே !
மாசுபடாத் தந்திரியே !

கதி கலங்கா யாழிசையே !
சுவை குறையாச் சொல்அமுதே !

நிதி மயக்கா மனநிறைவே !
நிலை கலங்கா நீர்மையனே !

கதி கலங்காச் சாரதியே !
காத்தருளும் சௌமியனே !

அன்பொழுகும் திருவுருவே !
அருள் அமரும் ஆசனமே !

துன்பமுற்றோர் துணைக்கரமே !
துயர் நீக்கும் தூதுவனே !

இன்பமெல்லாம் பிறர்க்குதவி
இன்னலெல்லாம் தாங்கிநிற்கும்

மென்மனத்துப் பெருந்தகையே !
மேன்மையுற வாழ்த்துகிறேன் !

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை

விழாமலர் வெற்றிமலராய் வெளிவரட்டும்!
விழிக்காத தமிழர்க்கு அது ஒளிதரட்டும்!

BOBBY MUSIC CENTRE
30, Upper Dickson Road,
Singapore - 0820
Tel. : 2911780

Wholesalers / Retailers
Recorded Cassettes, Cartridges
Reel, Video Sales Tapes,
Tamil, Hindi, English Cassettes.

முத்துவிழா மாமனிதர் தொண்டமான் முத்தமிழாய் வாழியவே !

கவிஞர் முத்துமாணிக்கம் குடும்பத்தினர்
Block 143, Potong Pasir
#10-14, Singapore - 1375.

'ஒரு வாழும் வரலாறு' எனும் தொண்டமான்
வையத்துக்கு ஒரு புதுமை ! வாழ்க எந்நாளும் !

G.G.S. PUBLICATION
BOOKS & STATIONERY
26, Upper Dickson Road,
singapore - 0820.
Tel.: 2969640
V. RAMASAMY

கொம்புக்கு ஒரு கலைமான் ! தொண்டுக்கு ஒரு தொண்டமான் !
குற்றால அருவிபோல் வாழ்நாள் பெருகி வாழ்க !

NATHAN VIDEO RECORDING & PHOTO SERVICE

S.V. Nathan
320, Serangoon Road, # 04-34, Serangoon Plaza,
Singapore 0821. Tel.: 2967493 Res. : 2587920
Pager : 5028052 Bus. Hrs : 10.00 a.m. to 7.00 p.m.

எல்லாம் நிறைந்தவர் எங்கள் தொண்டமான்



இலங்கைத் தமிழர்
இன்முகத் தோழர்
இலங்கைத் தொழிலாளர்
இயக்கத் தலைவர் !
இலங்கும் நேர்மை
இணையிலாப் பண்பு
எல்லாம் நிறைந்தவர்
எங்கள் தொண்டமான் !

காஞ்சியி லிருந்து
கலிங்கம் குலைத்த
வண்டையர் கோமான்
தொண்ட மானுக்கும்
இலங்கையி லிருந்து
இன்தமிழ் ஆளும்
தொண்ட மானுக்கும்
தொடர்புகள் உண்டு !

எல்லாம் நிறைந்தவர்
எங்கள் தொண்டமான்

அன்றோர் நாள் அவர்
அகத்தினி லேநான்
அருந்திய விருந்தும்
அன்பும் இந்த
கடல்சூழ் உலகில்
காணற் கரியது.

கூட இருந்து
கொடுப்பன கொடுத்து
உண்ணப் பார்த்து
உறங்கவும் வைத்து
கண்ணை இமைபோல்
காத்தவர் அன்றோ ?
எந்நாளும் அவர்
எழிலுற வாழ்க !

கவிஞர் கண்ணதாசன்

மாத ஏடு ! மகிழ்வின் வீடு!

சிங்கப்பூர், மலேசியா, கிழக்காசிய நாடுகளில்
மணக்குமொரு பூக்காடு !

அலை ஓசை
ALAI OSAI

- ❒ தமிழ் - ஆங்கிலம் இருமொழியிலும்
- ❒ கலைஞர்களின் கட்டுரைகள்
- ❒ கவர்ச்சியான பேட்டிகள்
- ❒ கண்ணைக் கவரும் வண்ணப்படங்கள்
- ❒ சிந்தைக் கினிக்கும் சிறுகதைகள்
- ❒ தொட்டிழுக்கும் தொடர்கதைகள்
- ❒ இத்தனையும் நிறைந்த தித்திப்புச் சோலை !
- ❒ இதுவும் ஒரு புத்தக சாலை !
- ❒ படிக்கத் தவறாதீர்கள் ! சுவைக்கத் தயங்காதீர்கள் !
- ❒ ஒருமுறை - "அலை ஓசை"மேல் ஆசைவைப்பீர் !
- ❒ மறுமுறை நீங்கள் ஆசைமேல் ஆசைவைப்பீர் !

ஆசிரியர்
உரிமையாளர் } பி.பி. காந்தம்



"அலை ஓசை"
#05-24 Bukit Timah Shopping Centre
170 Upper Bukit Timah Road, Singapore - 2158
Tel : 4698996 Fax : 4670747

கருணை பொழி பண்பின் ஏந்தல்



ஆறுலட்சம் தொழிலாளர் தோட்டக் காட்டில்
அனுபவித்த துயருக்கோ அளவே இல்லை !
கூறுகூறாய்ப் பிரிந்தவர்கள் தனித்து நின்று
குமைந்ததல்லால் சாதித்த தெதுவு மில்லை !
வீறுகொண்ட புலியைப்போல் அந்த வேளை
விளங்கியநம் ஜவகர்லால் இலங்கை வந்து
தேறுமதி கூறியொரு இயக்கம் தன்னைத்
தோற்றுவித்தார் அதன்தலைவர் தொண்ட மானே!

தோன்றியஅவ் இயக்கம்தான் இலங்கை நாட்டின்
தொழிலாளர் காங்கிரசாய் மலர்ந்து இன்று
மூன்றுலட்சம் உறுப்பினரும் மற்றும் பல்லோர்
மூலவராய் நின்றுழைக்கச் சங்க மாகி,
வானுயர்ந்து வளர்ந்தோங்கித் தென்கி ழக்கு
ஆசியாவின் மிகப்பெரிய தொழில்அ மைப்பாய்
மேன்மையுற்று விளங்கிடற்குப் பாடு பட்ட
மேதையவர் யாரென்றால் தொண்ட மானே !

தொண்டமான் தொட்டதெல்லாம்பொன்னே யாகும்!
தொழிலாளர் எல்லாரும் மன்னரானார் !
வண்டாடும் மலர்குவிந்த மலைநாட் டின்கண்
வனிதையரும் வீரத்தில் மறப்பெண் ஆனார் !

திண்டாட்டம் இல்லாமல் வாரம் ஆறு
தினம் உழைத்து வாழ்வதற்கு வழிபெற் றார்கள் !
கொண்டாட்டம் அவர்வாழ்வில் கொழிப்ப தற்கே
கொடியுயர்த்தி வைத்தவர்யார் ? தொண்ட மானே!

ஆண்டவர்க்கு எண்பதாகும் என்று சொன்னால்
ஆம்என்று எவருமிங்கே ஒப்ப மாட்டார் !
தூண்டுகோல் தேவையில்லா விளக்கைப் போலச்
சுடர்விட்டு ஜொலிக்கிறது அவரின் தொண்டு !
ஆண்சிங்கம் போன்றதவர் விறல்சேர் தோற்றம் !
யாருக்கும் அஞ்சாத நெஞ்சுக் காரர் !
காண்டற்கு எளியர் அவர் ! கருத்து வேறு
பட்டார்க்கும் கருணைபொழி பண்பின் ஏந்தல் !

தம்சொத்து தம்வீடு தமது தோட்டம்
தமதென்று எண்ணாமல் உழைக்கும் மக்கள்
தம்சொத்துப் போல்எண்ணிச் செலவு செய்து
தொழிலாளர் நலம்காத்த பாரி வள்ளல் !
தம்மக்கள் தோட்டத்தில் துயரும் றக்கால்
தமதுடலின் நலன்கூட நாடா ராக —
எம்மட்டில் என்றாலும் அங்கே பாய்ந்து
எதுவேனும் செய்தவரைக் காக்கும் வேந்தர் !

எஸ்.டி.சிவநாயகம் இலங்கை

With best compliments from :



Ramiah Yogarajan B.Sc. (Engg)

MANAGING DIRECTOR
Spencers Limited
Spencers Industries (Pvt.) Ltd.,
Stitchwell Clothing (Pvt.) Ltd.,

DIRECTOR
Deepa Export Garments Ltd.,
Deepa Textile Industries (Pvt) Ltd.

No. 323, 1/1, Dam Street, Colombo 12, Sri Lanka
Phone : 23495. Res.: 697744 Fax : 697744





மறத்தமிழர் குலவிளக்கு

தென்னர்தமிழ் நாடளித்த சேயே ! பண்பின்
சிகரமெனத் திகழ்கின்ற ஒளியே ! தொண்டால்
மின்கமழும் வான்மழையே ! மிகுபண் பாலே
வீசுமிளந் தென்காற்றே ! அன்பின் ஊற்றே !
கன்னலெனத் தன்னலத்தைக் கருதாத்
தொண்டால்
கமழ்சுடரே ! கலைநலந்தேர் மதியே ! வாழ்வை
மன்னுயிர்க்குச் சாசனம்செய் திலங்கும்
அண்ணாவே!
மறத்தமிழர் குலவிளக்கே ! வாழ்நா ளெல்லாம்

தென்னிலங்கை செழித்துயர அமைச்சுப் பூண்டு
சீர்த்திமிகு பணிபுரியும் செம்மால் ! நாளும்
பன்னரிய பயன்விளைத்துப் பாடு பெற்றாய் !
பகைப்புலமும் பாராட்டும் தகவு கற்றாய் !
துன்னியபல் லிடர்களைந்து துணிவோ டுழைத்
தோட்டத்துத் தொழிலாளர்க் குயர்வு சேர்த்தாய்!
இன்னுமிகப் பற்பல்லாண் டுழை மக்கள்
ஏற்றமுறப் பணியாற்ற வாழ்த்து கின்றோம் !

அரசியலாம் பெருங்கடலின் ஆழங் கண்டாய்
அறிஞரெலாம் போற்றுபெரு தகவு பெற்றாய் !
பரசுமொரு வள்ளலெனும் பான்மை யுற்றாய் !
பகைவரையும் நட்பாக்கும் பண்பு கற்றாய் !
விரசமிலாப் பேச்சாலும் எழுத்தி னாலும்
வீறுமிக மானுடத்தின் வாழ்வை ஓம்பி
முரசமின்றி வெற்றிஎட்டுத் திசைமு ழங்க
மூதறிஞ னாய்த் திகழ்வாய் ஊழி வாழி !

துகளறுசெள மியமூர்த்தி தொண்ட மானே !
சொல்லரிய தொண்டுகளால் துலங்கும்
கோனே !
முகிழும்நான் கிருபதுசேர் அகவை முற்றி
முத்துவிழாக் காட்சிதரும் பாண்டி முத்தே !
திகழுநறும் புகழாலே திக்கீ ரெட்டும்
சிந்தைகனிந் தேத்தப்பல் லாண்டு வாழ்க !
புகழொடுபல் வளமோங்கிக் குலந்த ழைத்துப்
பொலிகபொலி கென்றுவந்து வாழ்த்து
கின்றோம் !

பாவலரேறு **ச.பாலசுந்தரனார்**

With best compliments from :



Ram Developers Pvt. Ltd.,

117, 119, Sea Street

Colombo - 11, Sri Lanka.

Tel. : 449501

எண்டிசை போற்றும் தொண்டமான்



தொண்டமான் எனும்பெயரைக் கேட்கும் போதே
துள்ளிவரும் சிந்தனைகள் நூறு ! நூறு !
எண்டிசையும் புகழ்பூத்த மலரே ஆவான்!
இலங்கையினில் தேசீயத் தலைவ னாகிப்
பண்பாட்டு நல்லமைச்சாய் மக்கட் காகப்
பயன்விளைக்கும் ஆலமர மாகி நின்றான்
எண்ணமெலாம் இனிக்கின்ற கடமை வீரன்
எண்பதிலே முத்துவிழா காணு கின்றான்!

குடியுரிமை, வாக்குரிமை, காணிப் பங்கு,
குலவுமலை யகஇளைஞர் நலத்தை எண்ணித்
துடிப்புடைய காவல்துறை பயிற்சி மற்றும்
தூயவராம் ஆசிரியர் நியம னத்தில்
படிந்திடுநற் கொள்கையினன் ; பண்புக் குன்றம்!
பாமரரின் விடிவெள்ளி தொண்ட மானே !
அடிஎடுத்து வைக்கின்ற இடங்க ளெல்லாம்
அமைதிப்பூங் காவாக விளங்கு மன்றோ ?

சோர்வில்லா வாழ்க்கையிலே எறும்பு! தோட்டத்
தொழிலாளர் நலங்காக்கும் ஒளிவிளக்கு!
பார்வந்து நின்றாலும் நேர்மை காக்க
அஞ்சாமல் போராடும் அரிமா ஆவான்.

சீர்மிக்க தொண்டமான் பெண்ணி னத்தின்
திறமான முன்னேற்றம் காணும் அண்ணல்!
பேர்பெற்ற அரசியலில் ஞானி யாவான்!
பிறர்நலமே தன்னலமாய்ப் பேணும் அன்பன்!

மனிதகுல மாணிக்கம் நேரு கண்ட
மாஇலங்கை இந்தியகாங் கிரஸ்மா நாட்டை
இனிமைபெற முதன்முதலில் நடத்தி வைத்தான்!
எதிரிகளும் பாராட்டும் ஏற்றம் பெற்றான்!
பனி,மழையைப் புயல்,வெயிலைப் பாராட் டாமல்
பாமரரைக் கரையேற்றும் கப்ப லானான்!
நனிசிறந்த உலகவர லாற்று ஏட்டின்
நாயகனாய்த் தொண்டமான் விளங்கு கின்றான்!

தித்திக்கும் மதுமலரில் மொய்க்கும் வண்டும்
தேனீயும் தொண்டமான் புகழைப் பாட,
எத்திக்கும் வாழ்கின்ற தமிழ ரெல்லாம்
எம்தலைவா ! வாழ்க! என வாழ்த்துக் கூற,
முத்துவிழாக் காண்கின்ற பெரும ! இன்னும்
முந்நூறு ஆண்டுகள்நீ வாழ்க ! வாழ்க !
உத்தமனே ! வாழ்வினிலே அமைதி இன்பம்
ஒருங்கிணைந்து வளமுடனே நலமாய் வாழ்க !

புலவர் தணிகை உலகநாதன்

With best compliments from :

"நிலையில் தமிழரை உயர்த்தவும், நீங்கா
மாசு நீக்கவும் வந்த பெரியார் – தொண்டமான்!"
நெடுநாள் வாழியவே!

AMBIGA JEWELLERS

77, Sea Street, Colombo - 11.
Phone : 422839 – 434954

கள்ளமில் நெஞ்சுறு வள்ளல் ஏறு!



உலக முதன்மொழி உயர்தனிச் செம்மொழி
நலந்தரு தமிழின் தலைசால் மைந்த !
கலிங்கம் அந்நாள் வென்ற தளபதி!
இலிங்கம் போற்றுறும் கருணாகரனின்
வழிவழிவந்த பழியிலாப் பெரும!
அழிவுறும் தமிழரைக் காக்குறும் காவல!
இந்திய இலங்கை அரசுகள் நாளும்
வந்திக்கும் பந்தமிகு சந்தத் தமிழா!
கள்ளமில் நெஞ்சுறு வள்ளல் ஏறே!
உள்ளுந் தோறும் உவப்பளி ஆளியே!
யாதும் ஊரே யாவரும் கேளிரென
ஒதுவ தன்றிச் செயலுறும் செம்மால்!
களம்பல கண்ட வாகை வீர!
அளப்பறு நூறு நூறாயிரத் தமிழர்கள்
இன்னல் இன்றி இலங்கை நாட்டில்
கன்னல் சுவையென நல்வாழ்வு நடத்த
முடிசூடா மன்னனாய் ஆளும் வேந்தே!
தம்வாழ் வென்றே செம்மாந்து நின்று
மம்மர் அறுக்கும் மருந்தாயத் திகழும்

அமிழ்த மொழிகூர் அமிழ்தத் தலைவ!
காட்சிக் கெளியராய்க் கடுஞ்சொற் கூறா
மாட்சி மிக்க ஆட்சிசெய் அமைச்ச!
மயக்கும் மொழிகூர் வஞ்சகர் வலையில்
தயக்கம் கொண்டே மயங்கி வீழா
இராச தந்திரி உம்போல் உளரோ?
இராச தந்திரி கட்கெலாம் தலைவ!
எழுத்தில் பேச்சில் ஆட்சியில் அமைப்பில்
வழுத்தும் புகழுறு அன்பமை அண்ணால்
சித்தம்மை சிந்தை குளிரச் சேர்ந்த
பத்திக் குமாரவேலெனும் கண்ணிய
கருப்பையாப் பிள்ளை அருத்தியாய்ப் பெற்ற
செளமிய மூர்த்தித் தொண்டமானே!
பெளவஞ் சூழுலகு நுந்தம் தொண்டினைச்
சொல்லுதல் எளிதோ! சொல்லுதல் எளிதோ!
இலங்கைப் பாராள் மன்றம் சென்றிடில்
சுவரெலாம்ஒலிக்கும் சோர்விலா நுந்தொண்டை
தவத்தோர் வாழ்த்தொடு தொடங்கும் உயரிய
அவனி போற்றும் நுந்தம் முத்துவிழாக்
காணும் கண்களே கண்கள் கேட்கும்

மாண்புறு செவிகளே செவிகள்! பண்புறு
தொண்ட மானே அண்டம் போற்ற
இனிய சுற்றம் இனிய நண்பரொடு
இன்னும் ஒரு நூற்றாண்டு வாழ்கெனப்
பன்னிப் பன்னிக் கூறுமிவ் வுலகே!

பெரும்புலவர் **இர.திருஞானசம்பந்தர்**

With best wishes and greetings from



ROYAL AGENCY (PTE.) LTD.

158, New Chetty Street,
Colombo – 13
Sri Lanka.

Tel : 447162
438375

Tlx : 22813 ROYAL CE
Fax : 422795

- **Manpower Suppliers**
- **Shipping Agents & Shipping crew Suppliers**
- **Exporters**



தொட்டிற் குழந்தையும் துள்ளி எழும்!

தோட்டத் தொழிலாளர் பொன்னன், பொன்னி பாட்டு)

பொன்னன்: தோட்டத்தில் என்னடி தேரோட்டமா? அங்கு
தோன்றுவ தென்னடி போராட்டமா?
ஆட்டத்தி லென்னடி கோலாட்டமா? -அன்றி
அங்கென்ன பொன்னி! சொல் மாறாட்டமா?

பொன்னி: போராட்டத் தாலேநம் வாழ்வையெல் லாம்-பெருந்
தேரோட்ட மாக்கிய தொண்டமானார்
சீராட்டும் எண்பதாம் ஆண்டினிலே-இவர்
சீரெல்லாம் பாடுவார், சேர்ந்திடுவோம்!

பொன்னன்: கருப்பையா சித்தம்மா பெற்ற பூமான்-பெயர்
கண்டசௌமிய மூர்த்திச் சீமான்
விருப்புடன் இலங்கைதான் கொண்ட கோமான்-பல
வெற்றியளித்திடும் நம்தொண்டமான்.

பொன்னி: தொண்ட மானார்பெயர் சொல்லி விட்டால் -இங்கு
தொட்டிற் குழந்தையும் துள்ளியெழும்!
முண்டுமு டிச்சென நாம் கிடந்தோம்! இவர்
முல்லைக்கா டாய்மணம் ஏற்றிவைத்தார்.

பொன்னன்: தேயத்தே யுடல் நாமுழைத் தோம்-நம்மைத்
தேயவைத் தஇலை தேயிலையாம்!
தேயநின் றநிலை தேயவைத்தே -நம்மைத்
தேய்விலை யாக்கினார் தொண்டமானார்.

பொன்னி: வாழும் உரிமையும், வாக்கின் உரிமையும்-நல்ல
காணிப்பங் கீட்டையும் காணவைத்தார்
ஆளும் இலங்கையர் நம்மை மதித்திட-உயர்
வாக்கிவைத் தார்மேலே தூக்கி வைத்தார்

பொன்னன்: தோட்டத் தொழிலாளர் தோன்றுந் துணை-நம்
தொண்டமானார் நம்மின் வெற்றிமுனை
ஆட்டபாட்ட மில்லா அமைதிச்சுனை-செயல்
ஆற்றலி லும்அவர்க் கில்லை இணை!

பொன்னி: ஆட்சிக்கொ லுவினில் பிரேமதாசா-இவர்
ஆற்றும் உரையினைக் கேட்டிருப்பார்.
தோட்டத் தரையினில் தொண்டமானார்-நம்மின்
தோள்தட்டித் தோழராய் வீற்றிருப்பார்.

பொன்னன்: தக்கஅ மைச்சராம் மாண்பு டையார்-அன்பைத்
தாங்கிடும் பண்பிலும் மாண்புடையார்,
மக்கள் தலையராய் மாண்புடையார்-அதில்
மாற்றுக் குறையாத தொண்டமானார்.

பொன்னி: தக்கையாய்த் திக்கின்றி நாம் கிடந்தோம்-நம்மை
மக்களாய்த் தக்கோராய் ஆக்கிவைத்தார்,
பொக்கையாய்ப் பூச்சியாய் நாம்கிடந்தோம்-நமைப்
பொன்னியாய்ப் பொன்னாய்ப் பொலிய வைத்தார்.

பொன்னன்: பாட்டாளி மக்களின் பாங் கறிந்தார்-ஆளும்
பங்குடை யார்களின் பங்கறிந்தார்,
தேட்டமெல்லாம் தொழில் மக்களுக்கே-இவர்
தேடிவைத் தார்துயர் சாடி வைத்தார்.

பொன்னி: இன்றிவர் எண்பதாம் முத்தல்லவோ!-இவர்க்
கேற்றதும் நன்றியாம் வாழ்த்தல்லவோ!
என்றும் இவர்துணை நம்பிடுவோம்-இவர்
ஏற்றத்தைப் பாடிநாம் கும்பிடுவோம்.

கவிஞர் கோவை. இளஞ்சேரன்

BE RIGHT WITH

RIKEN

TYRES & TUBES

Defend Your Car
With
Riken Tyre



EMOTIONAL
RUBBER TECHNOLOGY
FROM
JAPAN

SOLE AGENTS

Jailaxmi Stores

91A, Maliban Street, Colombo 11. Tel: 26149

Branch Office: 153, Union Place, Colombo -2.
Cables: "Jayaexport" Telex: 22744 JLS CE
Tel: 448547 – 447741 – 541329

இதயத்தை வென்ற இலங்கைத் தொண்டமான்



திக்கெலாம் சோழர் பெரும்புகழ் நாட்டிய
அக்கா லத்தில், கலிங்கம் கடாரம்
நக்க வாரத் தீவையும் வென்றவன்
கருணாகரத் தொண்டை மான் எனும் வீரன்!

இக்கா லத்தில் ஈழத் தமிழர்
இதயத்தை வென்றவர் இலங்கைத் தொண்டமான்.

மலைத்தோட்ட டத்தமிழ் மக்கள் நெஞ்சில்
அலைபாய் கின்ற இதயத் துடிப்பு!
தென்தமிழ் நாட்டுத் திலகம்! இலங்கையில்
ஆட்சிகள் மாறி னாலும், என்றும்
வீழ்ச்சி யடையாத வெற்றி வீரர்!

பொங்கும் ஈழப் போராளி களையும்
சிங்களத் தாரையும் சேர்க்கின்ற பாலம்!

எட்டுப்பத் தாண்டுகள் ஆயினும் பிறரிடம்
குட்டுப் படாத கொள்கை வாதி!

வாழ்க தொண்டைமான்! என்றும்
சூழ்க பெரும்புகழ்! சுடர்க வாழ்வே!

கவிஞர். முருகுசுந்தரம்

With best compliments from :



"நிலம் பெயரினும்
நின்சொல் பெயரல்!"
எனும் புறநானூற்றுப் பொன்வரி நீ!
புகழ்வரி நீ! வாழ்க பல்லாண்டு!

BRITISH LANKA TRADING (PVT.) LTD.

142/10, Galle Road,
Colombo - 3.
Sri Lanka

Tel. : 547715/28963/437865
Telex : 22590 PROSPA CE
Fax : 547715 GOWRI



வள்ளுவர் செய்யும் சாகசங்கள்

மனிதன் மனிதனாகப் பிறந்தும் பறவையைப் போல ஆகாயத்தில் பறக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான்.

மனிதன் மனிதனாகப் பிறந்தும் மீனைப் போலத் தண்ணீரில் நீந்தக் கற்றுக் கொண்டிருக்கிறான்.

மனிதன் மனிதனாகப் பிறந்தும் மனிதனைப் போலத் தரையில் நடக்க கற்றுக் கொள்ளவில்லை.

அதைக் கற்றுக் கொடுப்பது திருக்குறள் என்பது நல்லறிஞர்களின் முடிவு.

மக்களாகப் பிறந்தவர்கள் எல்லாம் மக்களாகவே வாழ வேண்டுமென்பதுதான் வள்ளுவருடைய மிகப்பெரிய ஆசை. அதன் விளைவு தான் திருக்குறள்.



முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்



காலத்தை வென்றிடும் கவிதையைப் போல
தேயிலை தேசம் தேடிய செல்வமே!
நீயிலை என்றால் நீர் சூழ் இலங்கையின்
பாட்டாளி வயிற்றில் பால்வார்ப் பேது?
கூட்டாளி உன்போல் குலமகன் உண்டோ?
மாடாய் உழைக்குமுன் மக்கட்கெல்லாம்
மேடாய் இருக்கும் மேன்மகன் நீதான்!
உரிமை யிழந்த உன்னவர்க் கெல்லாம்
உரிமை வந்ததும், ஒட்டு வந்ததும்
பெருமை வந்ததும், பிழைப்பு வந்ததும்
அருமைத் தலைவரே! உங்களால் அன்றோ?
தொழிலாளர் மாந்தரின் எழிலார் தீபமே!
பொழிலார் இலங்கையின் பொன்மனச் செம்மலே!
காலத்தை வென்றிடும் கவிதையைப் போல,
ஞாலத்தைப் புகழால் வென்று வாழ்கவே!

✪ ☆ ✪

என்.பி.கே.இராஜமாணிக்கம்
141, சிலோன் ரோடு,
(KATONG)
சிங்கப்பூர்-1542
தொலைபேசி 34414118

நம்மில் சிலர் தோற்றத்தைக் கண்டும் உருவத்தைக் கண்டும் இடத்தைக் கண்டும் மயங்கி ஏமாந்து விடுகின்றனர். அத்தகைய ஏமாற்றம் வாழ்வைப் பாழ்படுத்திவிடும் என்று எச்சரிக்கிறார்.

1. தோற்றத்தைக் கண்டு மயங்காதே

அழகாக இருக்கிறது, சிவப்பாக இருக்கிறது, நேராக இருக்கிறது, ஒழுங்காக இருக்கிறது, என்று விரும்பி நெஞ்சில் வைத்து விடாதே அம்பை! அது உன்னைக் கொன்றுவிடும் என எச்சரிக்கிறார்.

வள்ளுவர் இதோடு விட்டுவிடவில்லை. கருப்பாக இருக்கிறது, கோணலாக இருக்கிறது, வளைவாக இருக்கிறது, நாரும் நரம்புமாக இருக்கிறது என்று வெறுத்துவிடாதே வீணையை! அதன் இன்பத்தை இழந்துவிடுவாய் என்றும் எச்சரிக்கை செய்கிறார்.

கனை கொடிது யாழ்கோடு செவ்விதாங்கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

2. உருவத்தைக் கண்டு மயங்காதே

யானை மிகப்பெரிய உருவம். அதன் தந்தமும் நீண்டது. கூர்மையும் வலிமையும் உள்ளது. புலி மிகவும் சிறியது. அதன் நகமும் குறுகியது. வலுவற்றது. எனினும் புலி தாக்கும்போது யானை கதிகலங்கி ஓடுகிறது. ஆகவே உருவத்தைக் கொண்டு எதையும் உயர்வாகவோ தாழ்வாகவோ கருதிவிடாதே! ஏமாற்றமடைவாய்! என்று எச்சரிக்கிறார்.

பரியது கூர்ங்கோட்டதாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

3. இடத்தைக் கண்டு மயங்காதே!

மேலே உயரமான இடத்திலும் சிலர் இருப்பர். கீழே தாழ்வான இடத்திலும் சிலர் இருப்பர்.

உயரமான இடத்தில் இருப்பவர்களெல்லாம் உயர்ந்தவர்கள் என்றும் கீழே இருப்பவர்களெல்லாம் தாழ்ந்தவர்கள் என்றும் எண்ணிவிடாதே! ஏமாற்றமடைவாய். அறிவு குறைந்த மக்களிற் சிலர் மேலே இருக்கவும், அறிவு நிரம்பிய மக்களிற் சிலர் கீழே இருக்கவுங் கூடும். ஆகவே இருக்கும் இடத்தைக் கொண்டு எவரையும் மதிப்பிட்டு விடாதே! ஏமாற்றம் அடைவாய்! என்றும் எச்சரிக்கிறார்.

பலசரக்குக் கடைக்காரன் இடதுபுறத்தட்டில் சிறிது பருப்பை அள்ளிக்கொண்டு தன் கையில் தராசைத் தூக்குகிறான். இடது புறத்தட்டு தாழ்ந்தும் வலதுபுறத்தட்டு உயர்ந்தும் இருக்கிறது. வலது புறத்தட்டு ஏன் உயரத்தில் இருக்கிறது? அதில் ஒன்றுமே இல்லை. அதனால் உயரத்தில் இருக்கிறது. இடதுபுறத்தட்டு ஏன் தாழ்ந்து இருக்கிறது? அதில் ஏதோ சரக்கு இருக்கிறது; அதனால் தாழ்ந்திருக்கிறது.

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்

எப்படி வள்ளுவர் கூறியுள்ள எச்சரிக்கை?

இம்மூன்று குறள்களும், தோற்றத்தைக் கண்டும் மயங்காதே! உருவத்தைக் கண்டும் மயங்காதே! இடத்தைக் கண்டும் மயங்காதே! என நம்மை எச்சரிக்கை செய்கின்றன. எதுவாயினும் அதன் விளைவை, செயலைக் கொண்டே முடிவு செய்ய வேண்டும் என்பது கருத்து.

படியுங்கள்! மறுபடியும் இம்மூன்று குறள்களையும் சிந்தியுங்கள்! அவற்றின் கருத்துக்களை அந்த அளவோடு விட்டுவிடாதீர்கள். செயலிலும் செய்துகாட்டிச் சிறப்பெய்தி வாழுங்கள்.

வாழ்க குறள் நெறி!
வளர்க தமிழகம்!

With best compliments from:



Pathma Trade Centre

Manufacturers of Importers

111 A, Bankshall Street, Colombo - 11, Sri Lanka.

Phone : 27137 – 449740
Res.: 584564
Telex : 21754 FAYAZ CE
Fax : 548636 – 422110
Attn : (PTC)



தமிழினம் பெற்றெடுத்த தலைசிறந்த இராசதந்திரி!



இந்த ஆண்டு சூலைத்திங்கள் இருபத்தாறாம் நாள், நல்ல நாளாகப் பிறக்கப் போகிறது! ஆம் இலங்கை வாழ் உழைக்கும் வர்க்கத்திற்குக் கடந்த அறுபது ஆண்டுக் காலமாக நல்வாழ்வளித்து வரும், மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள், தனது எண்பதாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் நன்னாளாகும்.

நான் சட்டக் கல்லூரியில் மாணவனாகச் சிறிது காலம் பயின்றேன். அப்பொழுது தந்தை பெரியாரின் தொண்டன். காலை நேரம் சட்டக்கல்லூரியிலும், மாலை தந்தை பெரியார் பாசறையிலும் பயின்று கொண்டு வந்த நேரம்!

பிராட்வேயில் உள்ள சட்டக் கல்லூரி உணவு விடுதியில் தங்கியிருந்தேன். சட்டக் கல்லூரி மாணவர்கள் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செல்லலாமே என என்னிடம் கருத்துத் தெரிவித்தனர். நீதிக்கட்சியின் தலைவர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை, நமது நாட்டுக்கு வழங்கிய பெருமகன் திரு எஸ்

க.இராசாராம்

முத்தையாமுதலியாரின், தவப்புதல்வன் திரு. மு.சொக்கலிங்கம் அவர்கள்தான் எங்களுக்கு ஆசிரியர். என்னிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். அவரிடத்தில், மாணவர்களது விருப்பத்தைத் தெரிவித்தவுடன், ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பை என்னிடமே தந்தார்கள். அப்பொழுது, நீதிக் கட்சியின் தலைவர் சர்.பி.டி.இராசன் அவர்கள், சென்னையில் காஸ்மாபாலிடன் கிளப்பில் இருந்தார்கள். எனது தந்தையார், திரு கஸ்தூரியும், அவரும் மிகச் சிறந்த நண்பர்கள். அவரிடம் சென்று இலங்கையில் உள்ளவர்கள் யாருக்காவது அறிமுகக்கடிதம் வேண்டும் என்றேன்.

நாங்களோ மாணவர்கள். அதிகம் செலவழிக்க முடியாது. எனவே சர்.பி.டி இராசன் அவர்கள், எங்களுக்கு உணவு வசதி, தங்கும் வசதி முதலியவற்றைச் செய்து தரும் வகையில், இரண்டு கடிதங்களை என்னிடம் தந்தார்கள். ஒன்று, அன்றைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு நிறுவனத் தலைவர், திரு. எஸ். தொண்டமான் அவர்கட்கும், பல தோட்டங்களின் உரிமையாள ரான, திரு. பட்டிகாமம் நடேசன் அவர் களுக்குமாகும். நாங்கள் இலங்கைக்குப் பயணம் சென்ற ஆண்டு 1951. சென்ற மாணவர்களின் எண்ணிக்கையோ ஐம்பத்தைந்துபேர். எங்களுடன் ஆசிரியர் திரு. மு.சொக்கலிங்கமும் வந்திருந்தார். நாங்கள் இரண்டு பஸ்களில், இலங்கை முழுவதும் சுற்றினோம். திரு.நடேசன் அவர்களும், அவர் தம் துணைவியாரும் எங்களை, பட்டிகாமம், அப்புத்தளை, என்கிற தேயிலைத் தோட்டப்பகுதிகளில் எல்லா ஏற்பாடுகளும் செய்து உபசரித்தார். திரு.எஸ்.தொண்டமான் அவர்கள், அன்றே நாடாளுமன்ற உறுப்பினர். அனைவராலும் மதிக்கப்படத்தகுந்த தமிழர்களின் தலைவர். அவர் மாணவர்கள் அனைவரையும், தனது தொழிலாளர் காங்கிரசு அலுவலகத்திற்கு அழைத்து, தனது இயக்கத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் தனக்கே உரித்தான நடையில் அழகுத் தமிழில் எடுத்து விளக்கினார்கள். எங்களுக்கு ஒரு நல்விருந்தும் அளித்து எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்கள்.

அவர் தன்னலமற்று தொழிலாளர்களுக்கு உழைக்கும் பாங்கினை அறிந்த நான் அன்றிலிருந்தே அவருடன் நெருங்கிப் பழகும் நல்வாய்ப்பினைப் பெற்றேன். அன்று இளமைத்துடிப்புடன் சந்தித்த நான், தனது எண்பதாவது அகவையில் அடியெடுத்து வைக்கும், இன்று, அவரை என்றும் மாறாத இளமை உள்ளத்துடன் தொடர்ந்து சந்தித்து வருகிறேன். மாண்புமிகு தொண்டமான் அவர்கள், தனது ஏழாவது வயதிலேயே, தந்தையாருடன் இலங்கைக்குச் சென்றவர்! இலங்கையை வளப்படுத்த, தேயிலைத் தோட்டங்களில், அட்டைக்கடிக்கும், அரணைக்கடிக்கும் ஆளாகி, அல்லலுற்றுக் கிடந்த தமிழ்த் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கென ஒரு இயக்கத்தைக் கண்டவர்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழர்கள், இந்தத் தேயிலைத்தோட்டத் தமிழர்களை, தங்களுக்குச் சமமாக ஏற்றுக்கொள்ளாத காலம். தோட்டங்கள் வெள்ளையர் வசம். குடியுரிமையோ கிடையாது. கூலியோ மிகவும் குறைவு. அவர்களை வழிநடத்திச் செல்ல ஒருவரும் இல்லை. இங்கிருந்து பஞ்சம் அவர்களை விரட்டியது. போன இடத்தில் கடுமையான உழைப்பு. முதலாளிகட்கு முன்பு இவர்களை ஒன்று சோப்பது எவராலும் இயலாது. அதிலும் முதலாளிகளில் பெரும்பாலோர், வெள்ளையர்கள். அப்படிப்பட்ட நாட்களில், முகிலைக்கிழித்து

வெளிக்கிளம்பிய முழுமதிபோல், தோன்றியவர்தான் நமது தமிழினம் பெற்றெடுத்த தூய தலைவர் திரு.எஸ். தொண்டமான். பழைய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மூனாபுதூர், எனும் ஊரில், 1913ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள், 30ம் நாள் திரு.குமாரவேல், எனும் கருப்பையா பிள்ளைக்கும், திருமதி.சித்தம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.

அன்று இலங்கை இந்தியாவுடன் ஒன்றியிருந்தது. இலங்கையில், 'தொழிலாளர் காங்கிரஸ்", என்ற நிறுவனத்தை நிறுவி, இந்தியத் தலைவர்களான, மகாத்மாகாந்தி, பண்டித நேரு முதலியவர்களுடன், நல்ல தொடர்பு கொண்டார். அந்தக் காலத்தில் ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது அவ்வளவு சுலபமல்ல! இன்று என்பதில் அடியெடுத்து வைக்கும் திரு.எஸ். தொண்டமான் அவர்கள் அன்றே சிங்கம்போல் வீறு கொண்டு, காந்தியார் பாதையில் நடந்த இலங்கையின் முதல் சத்தியாகிரகி மறவர் குல மாணிக்கம், பயமென்பது அறியாத ஒப்பற்ற தலைவர்!

பண்டித நேருவை அழைத்து,தான் நிறுவிய 'இலங்கை இந்தியர் காங்கிரசின்" முதல் மாநாட்டை நடத்தி, இலங்கையில் மட்டுமல்லாமல், அகில இந்தியாவின் முழுக்கவனத்தையும் தன்பால் அன்றே ஈர்த்தவர்.

கடந்த நாற்பதாண்டுகளாக, நான் அவரது அரசியலைக் கூர்ந்து கவனித்து வருகிறேன். இலங்கையில், எத்தனையோ ஆட்சிகள் வந்தன. போயின. ஆனால் ஒவ்வொரு ஆட்சியையும் பயன்படுத்தித் தோட்டத் தொழிலாளர்கட்குப் பல உரிமைகளைப் பெற்றுத் தந்தவர் இவரே!

இலங்கை நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் கவனித்தவர்கட்கும், இவர் அங்குத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போராடிய, வாதாடிய பாங்கினையும் அறிந்தவர்கள், இவரது வீரத்தினைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

நமது தமிழர்கள் உழைத்தார்கள், இலங்கையை வளப்படுத்தினார்கள். அவர்களுக்குக் குடியுரிமை கிடையாது. இதுபோதாமல், சிரிமாவோ பண்டாரநாயகா-சாஸ்திரி ஒப்பந்தம், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் பெரும் சோதனையை உருவாக்கியது. அந்த ஒப்பந்தத்தின் படி, இலங்கையை வளப்படுத்தித் தமிழர்கள், சிறிது சிறிதாகத் தாய்நாடு திரும்பவேண்டும். அதுவும் நடக்கத் தொடங்கியது. 1978ல் திரு தொண்டமானை அமைச்சர் பொறுப்பை ஏற்க அழைத்தார்கள், அவரும் அதனை ஏற்றார். உள்ளிருந்தே போராடத் தொடங்கினார் என்றால் அது மிகையாகாது. இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள், இன்னும் சிறிது காலம் தங்கினால்தான், தங்கள் தோட்டங்கள் வாழும் என்ற நிலை தோன்றியதும், திரு.தொண்டமான் அவர்கள் பெரிய இராஜதந்திரத்துடன், தொழிலாளர்களுக்கு, "குடியுரிமையும், வாக்குரிமையும் வேண்டும், இல்லாவிடில் அவர்கள் ஒப்பந்தப்படி தாய்நாடு திரும்புவார்கள்," என்றார்.

ஜனாதிபதி பிரேமதாசாவும், முன்னாள் ஜனாதிபதி.ஜெயவர்த்தனாவும், இவரது கொள்கையை ஏற்று, தொழிலாளர்கட்குக் குடியுரிமையும் , வாக்குரிமை யும் அளித்து, பத்துலட்சம் தொழிலாளர் குடும்பங்களில் விளக்கேற்றி வைத்தார்கள். இந்த ஒரு செயல், அந்த இலங்கை மண் உள்ளவரை இவரை வாழ்த்திக் கொண்டே இருக்கும்.

இவரை ஓர் வீரமிக்க தலைவராகவே நான் என்றும் கருதுகிறேன். காரணம், இலங்கையில், தமிழ் ஈழம் கேட்டுப் போராட்டம் தொடங்கியது.

With best compliments from :

Chemical Agencies (pvt.) Limited

414/3, Bloemendhal Road, Colombo - 13.

Telephone : 69622/422545

Fax : 94-1-692007



தமிழினத் தலைவர்களுக்குப் பாதுகாப்பு அற்றநிலை. மறைந்த திரு. அமிர்தலிங்கம் போன்றவர்கட்குக் கொழும்பில் எவரின் ஆதரவும் அற்ற நிலை. துணிச்சலாக அவர்கட்குப் பாதுகாப்பு அளித்தவரும் திரு. தொண்டமான் அவர்களே.

இன்று இலங்கைவாழ், தமிழர்களுக்கு ஒரு பாதுகாவலராகவே அவரை உலகம் எண்ணுகிறது.

திரு.தொண்டமான் அவர்கள், ஜெனிவாவில் நடைபெறும் "உலகத் தொழிலாளர்கள் நிறுவனத்தில், " எவ்வளவோ சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள்.

இன்று இலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள், ஆசிரியர் நியமனம், காணிப்பங்கீடு, இளைஞர்களுக்குக் காவல் துறைப் பயிற்சி போன்ற பல சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், அது மாண்புமிகு தொண்டமான் அவர்களின் உழைப்பேயாகும்.

நான் சேலத்தை அடுத்த உத்தமசோழபுரம் எனும் திருக்கோயிலுக்கு, காஞ்சிமாமுனிவரின் எண்ணப்படி, ஒரு ராஜ கோபுரம் கட்டும் திருப்பணியைச் செய்து முடித்தேன். அந்தக் கோயிலுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

தமிழ் வளர்த்த மூதாட்டி ஔவை, வள்ளல் பாரியின் மகளிரான அங்கவை, சங்கவை இருவருக்கும், சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்கள் முன்னிலையிலும் திருமணத்தைச் சீருடனும், சிறப்புடனும் நடத்திய இடம். அத் திருக்கோயிலின் முன், ஔவை மூதாட்டிக்கு ஒரு மண்டபம் கட்டிச் சிலைவைத்தேன். அதனைத் திறந்து வைக்கும்படி, நம் தமிழினத்தலைவர் திரு. தொண்டமானைக் கேட்டுக்கொண்டேன். மிகவும் அன்புடன் எனது அழைப்பை ஏற்று, சேலத்திற்கு வந்து. ஔவைப் பிராட்டியின் சிலையினைத் திறந்து வைத்து அற்புதமான சொற்பொழிவையும் ஆற்றினார்கள்.

தமிழினத்திற்கு அவர் செய்த தொண்டினைப் பாராட்டும் வகையில் , சிங்கப்பூரில் வாழும் தமிழர்கள், ஒரு விழாவினை எடுப்பதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

உலகத் தலைவர்கள் பலருக்குத் திரு. தொண்டமான் அவர்களைத் தெரியும். தமிழினத்திற்குத் தொல்லைகள் வரும்போதெல்லாம் இனப்பாதுகாவலராகத் திகழும் அவரை, உலகெங்கும் வாழும் தமிழர்கள், என்றும் மறக்கமாட்டார்கள். அவர் சிறந்த சிந்தனையாளர். ஓயாத உழைப்பாளி. அமைச்சர் பதவியே பறிபோனாலும் பரவாயில்லை. தன்னை நம்பிய, தமிழ்த் தொழிலாளிகளைக் காத்தே தீருவேன் என வாழ்ந்துகாட்டும் ஒப்பற்ற தலைவர்.

அவருக்கு எண்பது என்று கூறுகிறார்கள். சென்னைக் கடற்கரையில் அவர் நடக்கும்போது பலமுறை பார்த்திருக்கிறேன். என்னால், திரு. இளஞ்செழியன் கூறும் வயதை நம்பவே முடியவில்லை!

தான் பிறந்த மூனாப்புதூரில், ஒரு கோயிலை அந்த மக்களுக்கெனக் கட்டித் தந்துள்ளார். நான் அப்போது சட்டமன்றப் பேரவைத் தலைவர். என் தலைமையில், மிகச்சிறப்பாகக் குடமுழுக்கை நடத்தினார். தான் பிறந்த மண்ணில் கோயில்கட்டி, ஏழைகளுக்கு வழங்கிய அந்த வள்ளல் வாழ்வாங்கு வாழ்வார்!

தமிழகம் அவரை என்றென்றும் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறது.

நான் அவரது பிறந்த இந்த நன்னாளில், உளமார, வாயார வாழ்த்துகிறேன்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டென வாழும் தொண்டமான் அவர்கள் பார்புகழ், என்றென்றும் வாழ்க!வாழ்க!வாழ்க! ❑❑❑

முத்துவிழாக் காணும் மலைநாட்டின் முடிசூடாமன்னர்
இதுபோல் இன்னும்
பத்துவிழாக் காணட்டும் !

எம். மாங்குடி

சிங்கப்பூர்

தொலைபேசி : 3689307

திருமணங்கள், பிறந்தநாள் விழாக்கள், மற்றும் வைபவங்கள் அனைத்திற்கும் விருந்து ஏற்பாடு செய்கின்றோம்.

"நல்லுடல் நல்லுயிர் செந்தமிழ் மூன்றும் நான் நான் நான்" என்று
சொல்லாமல் சொல்லுபவர் சௌமியமூர்த்தி தொண்டமான் !
அவர் நூற்றாண்டு விழாக் காண வாழ்த்துகிறோம்.

யோக சுந்தரம் குடும்பத்தினர்

[யோகாசனப் பயிற்சி ஆசிரியர்]

BLOCK 262, TAMPINES STREET 21,
#09-274, SINGAPORE - 1852

"தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!"
என்ற பாரதிதாசனின் பாட்டுவரியாய் நிற்கும் குன்றத்தோள் மறவரே!
எங்கள் தொண்டமானே ! நீ என்றும் வாழி !

சிங்கை தமிழ்மறையான் குடும்பத்தினர்

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரே !
கலங்காத கடலே ! கருணைக் கொண்டலே !
தொண்டமானே ! தொண்டுமலையே ! தொடர்க நும் பயணம் !

ஆசிரியர் **ப. இலக்குமணசுவாமி** (ஓய்வுபெற்ற தமிழாசிரியர்)

சிங்கப்பூர்

இறையருள் திருமுறை பணியாளன், முன்னாள் தலைவர், தமிழாசிரியர் சங்கம்
சமூக சமயத்தொண்டர்.

Block 35, Marsiling Drive, # 13-399, Singapore 2573, Contact No. : Tel. : 2919627



காஞ்சித் தலைவனின் கற்கண்டுச் சிந்தனைகள் 80

(மக்கள் தலைவர் மாண்புமிகு எஸ். தொண்டமான் அவர்களின் எண்பதாம் ஆண்டு முத்துவிழாவை முன்னிட்டுப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெறற்கரிய சிந்தனை முத்துக்கள் எண்பதினை அவரின் பல்வேறு நூல்களிலிருந்து தொகுத்து இங்கு வெளியிடுகிறோம்.)

1

நான் வீணுக்குக் கூறுவதில்லை, நான் கூறுவது வீண் போவதுமில்லை, வீணரன்றி மற்றையோர் கவனித்தே பார்ப்பர் என் சொல்லை.

2

தம் வாழ்நாளிலே, பிறந்த இடத்தின் பொருள் வளத்தைப் பெருக்கி அதன் பயனாக மக்களின் வாழ்க்கை வளத்தையே வளர்த்தோம் என்ற திருப்தி, சொந்தத்திலே சொகுசான வாழ்வை அனுபவிக்க மட்டுமே பயன்படும் பணக்குவியலை விட இன்பம் தர வல்லது.

3

வேடமிடாத புராணிகன், மோடி செய்யாமாது, ஜோடியில்லா மாடப்புறா, சேடியில்லா இராஜகுமாரி இருப்பதில்லை.

4

அறிவுக்குச் சிறை, ஆண்மைக்கு நரை, பாதகத்துக்குப் பீடம், பார்ப்பனீயத்துக்குச் சூடம்-இங்கேதான் இருந்திடக் காண்கிறோம்.

5

இழுக்குள்ள இசையைக் கேட்பது, அழுக்குள்ள உணவைப்புசிப்பது, சறுக்குள்ள வழியிலே நடப்பது -வேதனை தருவனவேயாகும்.

6

மந்தை மனப்பான்மை வயிறு நிரப்பும். புதுவழிகாண அது போதாது. அலங்கார நடை புகழுரை வாங்கித்தரும், ஆனால், அந்த வானவில் அதிக நேரம் இராது. நடையைவிட நினைப்பு, நோக்கம், முக்கியம். இலட்சியமில்லா எழுத்து, மண ல்லா மலர்.

7

பதவிக்கு உருவமில்லை. ஆனால் அது ஊட்டிவிடும் பாசம், பல கிளியோ பாட்ராக்களின் சாகசங்களை ஒன்று கூட்டினால் உண்டாகக்கூடிய சக்திக்குச் சமம்.

புலவர் இளஞ்செழியன்

8

குமுறும் நெஞ்சம் , ஆயுதத்தை விடக் கொடியது.

9

பாசிபடர்ந்த மனத்தினரிடம் நான் பரிசுத்தத்தை எதிர்பார்ப்பதில்லை.

10

பெரிய மனிதர்களின் சில சிறிய செயல்கள், அவர்கள் மேற்கொண்டுள்ள பெரிய வேலையைக் கூடப்பாதிக்கும்.

11

கற்றோர், காட்சியுடன் கருத்தினைப் பிணைப்பர். மற்றையோர் காண்பர், களிப்பர், மறப்பர்.

12

இயற்கை லோபித்தனமுடைய தன்று.

13

மனமாற்றம் ஏற்படாதவரை மதமாற்றம் இருந்தே தீரும். மலேரியாக் கிருமி இரத்தத்திலே இருக்கும்வரை, காய்ச்சல் இருந்தே தீரும்.

14

ஒநாயின் ஓலத்திற்காக ஆட்டுக்குட்டிகளைப் பலியிடுபவன், அறிவுள்ளவனாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டான்.

15

வாழ்ந்து கெட்ட வல்லரசு மொகல் அரசு. வளைந்து கெட்டது திராவிட அரசு.

16

வீரரின் உழைப்பு வெற்றி எனும் விளைவு தந்தே தீரும்.

17

திருந்தாத வயலும் தீங்கனி தராத மரமும் மணலாறும் இருந்து பயனில்லை.

18

கூழும் களியும் கிடைத்தாலே பாலும் பழமும் போலக் கருதுபவர்கள் இருக்கிறார்கள்.

19

உலோபியைக் கொடை வள்ளல் என்று கொண்டாடுவது, இல்லாமையால் ஏற்பட்ட இருதய நோய்.

20

மந்திக்குணம் சிந்துக்குரியதல்ல.

21

கலம் பழுதானால், கடலிலே வீழ்ந்து சுறாவுக்கு இரையாக நேரிடும்.

22

சதி செய்து நிதிபெறும் சழக்கரை சாமர்த்தியசாலி என்று யாரும் கூறார்.

23

நரிவாலைக்கொண்டு அரிமாவை அடக்க முடியாது.

24

வர்க்கப் போராட்டத்தை வசநதவாசகளை வதைத்து விட முடியாது.

25

பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. துணிச்சல், கடைசிவரை காப்பளிக்கும் ஆயுதமாகாது.

26

களை எடாமுன், கழனி பலன் தராது.

27

புயலின் முழுவேகமும் தோன்றுமுன்னர் விவேகிகள் வாடையைக் கண்டே தெரிந்து கொள்வர்.

28

களத்தின் அமைப்புக்கேற்பவே போரும் இருக்க முடியும். கருத்தின் தன்மைக் கேற்பவே வெற்றி கிடைத்திட முடியும்.

29

பதவியிலே ஒரு பசை இருக்கிறது. அது 'பல தேவர்' என்று பெயர் இருப்பினும், 'வீரசிங்கம்' என்று விருது

இருப்பினும் அமர்ந்தவரை அழுத்திப் பிடித்துக் கொள்கிறது.

31

குறைமதியால் வரும் தொல்லை பலப்பல. மதியிருந்தும் அதனைச் செலுத்தும் மார்க்கம் அறிவது தனியானதோர் திறமை. அதனை அறியாதவர் எதற்கும் உதவாதார் என்போம்.

32

காலத்தை உற்றுநோக்கு, கண்திற, புதுவழியில் நட!

33

சுதந்தரம், சீமையிலே தயாரிக்கப்படும் சரக்கல்ல, சன்மானமாகப் பெற! அது நாட்டு மக்களின் நாடி முறுக்கினால் விளையக் கூடிய நிலை!

34

நாயாளும் நாட்டிலே குலைப்புத் தான் சட்டமாக இருக்கும். கடிப்பதுதான் பரிசாகக் கிடைக்கும்.

35

சட்டங்கள் பொது அறிவுவளர வளர மாறும். மாற்றப்படும். மாற்ற வேண்டுமென்ற கிளர்ச்சியும் மதிக்கப்படும். அனுமதிக்கப்படும்.

36

ஒரு நாட்டை மற்றோர் நாடு ஆள்வது அரசியல் விபச்சாரித்தனம் என்று அறிஞர் புகல்வர்.

37

நறுமலர்க் கூடையிலே நச்சரவு இருந்திடின் மலர்தேடும் கையிலே விஷப்பல்லன்றோ, தீண்டும்.

38

பல இனக் கதம்பம் பலனளிக்காது.

39

சமூகத்தை மீறி எழுந்தவனே கலைஞன் ஆவான் என்பது அறிஞர் கருத்து.

40

மனிதவர்க்கம் நிமிடத்திற்கு நிமிடம் தன்னையறியாது பிழைபல செய்து கொண்டே இருப்பது இயல்பு.

41

பணமும் பதவியும் குறிக்கோளாகக் கொண்டுவிட்டால், பணிபுரியும் பண்பு பிறக்காது.

42

இலட்சியத்திற்காகப் பாடுபடுவோருக்குக் கஷ்டநஷ்டத்தைத்தான் உலகு காணிக்கையாகத் தருவது வாடிக்கை.

43

பழமை எனும் புழுநெளியும் பழமாக இருக்கிறது புராணங்கள்.

44

புராணங்களின் மூலம், புல்லறிவே பரவுகிறது என்று நான் கூறுவது, காரணத்தோடு, கோபத்தோடு அல்ல.

45

சீறுவது பலன் தராது. சிந்தனைக்கு வேலை தர வேண்டும்.

46

மலர்விற்றுப் பிழைத்து வந்தவன் மலம் கூட்டும் வேலைக்குச் செல்ல நேரிடுவது, மச்சு வீட்டிலே வாழ்ந்தவன் பிச்சைக்காரனாவது, அவனவன் வாழ்க்கையிலே ஏற்பட்ட வழுக்கலால்.

47

புரட்சி வருமுன், புல்லர்கள் இறுமாந்துகிடப்பர். புரட்சியோ, தன் எதிர் தோன்றும் எந்தத் தடையையும் தகர்த்தெறிந்து விடும்.

48

பாதுஷா பக்கிரியானால் குலாமும் குனிந்து சலாம் போடமாட்டான்.

49

சிறுத்தையின் புள்ளி மாறினாலும், சிலரின் வாழ்வுப்பற்று மாறாது. பாம்பு சீறிட மறந்தாலும், சிலர் தங்கள் பண்பை மறவார்.

50

வழியிலே குழியிருப்பது தெரிந்தும், அவ்வழி நடப்பவனை, விழியற்றவன் என்றுரைப்பர்.

51

கடல்நீரிலே கன்னல் சுவையைக் காண முடியாது. காட்டுக் கூச்சலிலே கல்யாணி ராக ஆலாபனத்தைக் கேட்க முடியாது.

52

நெஞ்சிலே வலுவிருப்பின் வெற்றி தஞ்சமென்றுரைத்து வந்து நம்மிடம் கொஞ்சிடுவது உறுதி.

53

அநீதியைக் கண்டால் ஆத்திரம் பொங்கட்டும். கொடுமை கண்டால் கோபம் பொங்கட்டும்.

54

மௌனமாக இருப்பவனை ஊமை என்று கருதுவதும் சண்டையில் ஒருவன் சேராததாலேயே அவனுக்குச் சக்தி இல்லை என்று எண்ணுவதும் முட்டாள்தனமாகும்.

55

உபகண்டத்தை இயற்கையான இன வட்டாரங்களாகப் பிரித்து, ஒரு வட்டாரத்தை மற்றோர் வட்டாரம் சுரண்ட முடியாத நிலையில் அமைப்புகள் ஏற்படுத்தினாலன்றி, என்றென்றும் தென்னாடு வட நாட்டின் மார்க்கட்டாய் பனியாக்களின் பண்ணையாய் இருக்கும்.

56

மக்களின் மன அரணே, மண்ணை ஆள அமைக்கப்படும் அரசுக்கும் அரண்.

57

பலாவோ முடபோர்வை, உள்ளேயோ உன்னதமான ருசி, ஆனால் சுளையை எடுக்கும் பக்குவம் தெரியாவிட்டாலோ, கைகளிலே பிசின் ஒட்டும். அது போலத்தான் விஷய விளக்கத்துக்கான விவாதமும், தொட்டால் துவளுவதோ, துடி துடிப்பதோ கூடாது. ஆர அமர யோசிக்க வேண்டும்.

58

பாட்டின் எடுப்பிலே தவறு ஏற்பட்டால் முடிவு வரை தவறு ஏற்படும்.

59

இனமறியாது இடர்ப்படும் இழிகுல மக்களல்ல நாம்! பண்டைப் பெருமையும் பண்பும் செறிந்த மக்கள் வளமும் வசீகரமும் மிளிரும் நாட்டுக்குடையோர் நாம்!

60

பரிசோதனை பல புரிய, காதல் ஒரு வீண் விளையாட்டல்ல.

61

கட்சிப்பணியும் களத்துப் பணிபோன்றே வீரருக்கு ஏற்றதேயன்றி, விலாவிலே விரக்திப்புழு நடமாடுவோருக்கோ மனத்திலே சுயநலமெனும் குளவி கொட்டிடுவோருக்கோ ஏற்றதன்று.

62

பழங்கால முதலை மனப்பான்மை நமக்கு இருக்கக்கூடாது. பழங்கால முதலை மனப்பான்மை இருந்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்காது.

63

ஒழுக்கம் ஒரு பொது நீதி, ஆனால் அது இடத்துக்கு இடம் ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றது. எல்லா மக்களுக்கும் ஒழுக்கம் ஒரேபடித்தாயில்லை. பெண்ணுக்கு ஓர் ஒழுக்கம் சொல்கிறோம். ஆண் அதைக் கடைப்பிடிப்பதில்லை. ஏழைக்கு ஓர் ஒழுக்கம் சொல்கிறோம். பணக்காரன் அதைக் கடைப்பிடிப்பதில்லை.

64

மாணவர் கழகம் என்ற தோட்டமும் அதன் இலட்சியங்கள் என்ற மணமலர்ச் செடிகளும் செயல்வீரர்களின் கண்ணியம் என்ற தண்ணீரில் தொண்டு என்ற எருவால் வளரவிட வேண்டும்.

65

ஏடுகளிலே மதம் அங்கும், இங்கும், எங்கும், என்றும் அனுதினமும் காட்சியளிக்கின்றது. இந்நிலை மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும். மாற்றித்தான் தீர வேண்டும்.

66

மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத்

தூவுவது, பழைய கருத்துகளை மாற்றுவது-பண்பு தருவது, செயல்புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை, ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன் நமது மனத்தை உருவாக்க உதவுகின்றன.

67

மன்னன் ஆளப்பிறந்தான் என்ற எண்ணம் மக்கள் மனதிலே ஆழப்பதிந்திருக்கும வரையிலேதான் மன்னன் மணிமுடி தரித்து வாழமுடியும். கோபமோ, குழ்றலோ கொப்பளித்தால் கோல் உடையும்.

68

பேச்சு, கருத்தின் தொகுப்பு. ஆகையால், பேச்சு,, பயனும்சுவையும் தருவதாக இருக்க, கருத்துகளைக் கவனித்தாக வேண்டும். கருத்து சிந்தனையின் விளைவு. சிந்தனை, காண்பன , கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம். ஒரே பொருள் காண்போருக்கு வெவ்வேறு சிந்தனையைக் கிளறி வெவ்வேறு கருத்தைத் தூண்டி ,அதற்கேற்ற முறையிலே பேச்சு பிறக்கச் செய்யும். வேப்பிலை வைத்தியர், பூசாரி எனும் இருவருக்கும் வேறு வேறான எண்ணம் தருவதுபோல.

69

மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், கைத்திறன் முழுவதும் காட்டி, காகிதப் பூமாலை தொடுத்தால், பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அது போலப் பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனுமுள்ள கருத்துகள்.

70

மேடைப்பேச்சு காலட்சேபமல்ல, லிவாதத்துக்குரிய உயிர்ப் பிரச்சினைகளைப் பற்றிய கருத்துகளை வெளியிடுவது. இனிமை எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யும் நாவாணிபம் அல்ல, மேடைப்பேச்சு. வாய் பொத்தி, கைகட்டிக் கேட்கும் மக்கள் எதிரே நடத்தும் உபதேசமல்ல, அருள் வாக்கல்ல, பேசுபவர், கேட்பவர்களைவிட மேதை என்று ஏற்றுக் கொள்ளப் பட்ட நிலையுமல்ல. கேட்பவர்கள் இன்ன பொருள்பற்றிப் பேசிடுக என்று பணித்திட , பேசுபவன் அதுபோலவே நடத்தும் வசன சங்கீதமுமல்ல. வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட பிரச்சினைகளைப்பற்றி, மக்கள் குழப்பமான் கருத்து கொண்டிருந்தால் தெளிவு அளிப்பது. மக்கள் மருண்டிருந்தால் மருட்சியை நீக்குவது. மக்கள் கவலையற்று இருந்தால் பிரச்சினையின் பொறுப்பை உணரச் செய்வது போன்ற காரியம்.

71

கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திட மனம் இல்லையென்றால், கடமையை நிறைவேற்ற முடியாது.

72

உலகம் மாயம் இல்லை, உழைப்பவன் வாழ்வும் மாயம் இல்லை. ஆனால், உழைக்காதவன் உல்லாசத்தில்தான் மாயம் இருக்கிறது.

73

சகல சக்தியும் கிளப்பும் ஊற்று- ஜனசக்தி!.

74

மனத்திலே உள்ள தளைகள் அறுபட்டால்தான் சமதர்மத்திற்குள்ள தடைகள் ஒழிக்கப்படும்.

77

தரிசாகக் கிடந்த இடத்தை விளைநில மாக்கிடவியர்வை சிந்துவோர், மக்கள் வசதிக்காகப் பாடுபடுவோர், உற்பத்தி, விநியோகம் இவற்றை நேர்மையாகச் செய்வோர் என் நண்பர்கள்—வணக்கத்திற்குரியவர்கள்.

78

ஜனநாயக வாதி சிறிதளவுகூடச் சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அவனுடைய கருத்தும் கனவும் ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

79

காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டுதான் இருக்கும், காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்து விடும்.

80

மனிதனின் எல்லா உலகங்களையும் விடப் பெரியது மனம். அது பண்புக்கேற்றபடி பெரிதாகத்தக்கது. நினைப்புக் கேற்றபடி குறுகத்தக்கது. ஆகவே அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும். ❑❑❑

அண்டங்கள் அனைத்தி லும்ஓர்

அதிசய மனித ராக,

கண்டங்கள் கண்டி டாத

கர்மத்தின் வீர ராக,

கண்டியின் தலைவ ராக,

கண்ணான தமிழ ராக,

தொண்டமான் விளங்கு கின்றார்!

தொல்காப்பியம் போல் வாழ்க!

Tajima Metalwork (Singapore) Pte Ltd.

Architectural Metals
65, Chulia Street #39-30/04
OCBC Centre Singapore 0104

M. YUSOPE Dip. Mech. Eng., BSc., MBA.,
S/o. AHMEDMEERAN
General Manager.

Tel.: 5333300

Fax.: 5353287



நடுநிலை முழுஞானி



இருளினை ஓட்டு கின்ற
இரவியின் ஒளியைப் போலும்
பொருளினைக் கண்டே ஓடும்
பொல்லாத வறுமை போலும்
அருளினால் அறியா மைதான்
அஞ்சியே அகலல் போலும்
தெருளுடை யார்கள் தம்மின்
திறமையால் பூமி ஓங்கும்!

அடித்தளத் திருந்து, நல்ல
அயல்நாடு குடிபு குந்து
கடும்உழைப் பாளர் தம்முள்
கடியநல் உழைப்பால் வென்று
குடிகமழ் பெருமை தாங்கிக்
குவலயம் போற்று மாறு
விடிவினைக் கண்ட தொண்டின்
வேந்தரே தொண்ட மானாம்!

எழில்நலம் சூழும் குன்றம்
இயற்கைத்தாய் அரசி யாகிக்
கொழிமுடி சூடும் நாடு
குறைவிலா வளம்சூழ் பூமி!
விழிநுழை பாவை யைப்போல்
வீணையின் இசையி னைப்போல்
பொழில்நலம் பாடும் நாடு
பூமியில் இலங்கை அன்றோ?

வளமெலாம் இருந்த போதும்
மலடியாய்த் திகழ்ந்த நாட்டைக்
களம்பல கண்டு நின்று
கரைகாணாப் போராட் டத்தால்
அளவிலாப் பாடு பட்டு
அரும்பயன் விளைக்கச் செய்த
உளம்மகிழ் தமிழர் தம்மின்
உயரிய தலைவர் வாழி!

பிறந்தநன் னாட்டின் ஒப்பில்
பீடுறு தன்மை காத்து
சிறந்ததன் நாட்டின் வீறு
சிறந்திடத் தலைமை யேற்று
துறந்தவர் போன்று தீய
சுயநலம் துறந்து, விஞ்சும்
அறம்தரு தொண்ட் மான்போல்
ஆற்றல்சேர் தலைவர் யாரே!

நடுநிலை பிறழா ஞானி
நஞ்சையும் அமுத மாக்கும்
கெடுநிலை போக்கும் மானி!
கேண்மைசேர் நட்புச் செம்மல்!
கடுமையாய் ஒச்சி மெல்லக்
கருத்துகள் உணர்த்த மைச்சு!
இடும்பையின் எதிர்நீச் சல் நம்
இணையிலாத் தலைவர் வாழ்க!

‘பெருங்கவிக்கோ’ வா.மு.சேதுராமன்

பாட்டாளியின் கூட்டாளி

பல்லாண்டு வாழ்க!

துள்ளும் மான்
பலவுண்டு-இவரோ,
தொண்டமான்!
மலையகத் தமிழ் மக்களின்
தொண்டுமான்!

ஆண்டிருந்த தமிழ் மன்னர்
மரபில் வந்த
அறிஞர் இவர்!
இன்று சிங்களத்தையும்
ஆண்டுவரும் அமைச்சர்!
தாண்டி வரும் பகைகளையும்
தவிடு பொடியாக்கிவிடும்
தமிழ் மறவன்!

மரகதப் பச்சையாடை
மலை மகள் அணிந்துள்ளாள்!
தேயிலை-ரப்பர் என அவள்
தேகமெங்கும் செழித்திருக்க
அயர்விலா உழைப்பால்
வியர்வையும் ரத்தமும் அங்கே
விதைத்தவர் தமிழர்!

கொட்டும் பனிக்கும்
கொத்தவரும் பாம்புக்கும்
ரத்தம் உறிஞ்சும்
அட்டைக்கும் அஞ்சாது
நித்தம் உழைத்து
நெடுந் தோட்டம் வளர்க்கும்
பாட்டாளியின் கூட்டாளி
பல்லாண்டுக் காலம் வாழ்க!



கவியரசு இ.முத்துராமலிங்கம்



முத்துவிழா வரும்போதே சிறப்பு மிக்க
முகவரியைக் காட்டுகின்ற தலைவா ! நாங்கள்
சித்துவிழா கண்டதில்லை ! தேவ லோகத்
திருவிழாக்கள் கண்டதில்லை ! தமிழர் வாழ்வில்
சத்துவிழா வண்ணம்நீர் காத்தீர் என்றே
சாதனைகள் குவித்துவைத்த செம்ம லுக்குப்
பத்துவிழா எடுக்கவந்தோம் ! உம்மேல் வைத்த
பற்றுவிழாக் காரணத்தால் பாட வந்தோம் !

உள்ளிவிழா பழந்தமிழர் கண்டார் ! இந்நாள்
உம்விழாவைத் தமிழர்கள் கண்டார் ! அன்று
கிள்ளிவிழா பூம்புகாரில் நடந்தி டாமல்
கிழிந்தவிழா ஆயிற்று ! வாழும் போதே
நள்ளி.விழா நடத்துவதில் வள்ளல் ஆனான் !
நல்லவிழா நல்லவர்க்கே விழா ! இம் மண்ணில்
உள்ளவிழா அத்தனையும் ஆய்ந்து பார்த்தால்
உயர்ந்தவிழா உங்கள்விழா ஒன்றே யாகும் !

பேருக்கு நடத்துகின்ற விழாவும் இல்லை ;
பெருமைக்கு நடத்துகின்ற விழாவும் இல்லை !
யாருக்கும் நடக்கின்ற விழாவும் இல்லை ;
யாவர்க்கும் மகிழ்ச்சிவிழா இதுபோல் இல்லை !
வேருக்கு நடக்கின்ற விழாவா ? இல்லை
விண்ணுக்கு நடக்கின்ற விழாவா ? என்பார் !
நாருக்கு மணம்தந்த நல்ல வர்க்கு
நடக்கின்ற நன்றிவிழா வாழ்க நன்றே !

ஈழத்தில் இருக்கின்ற ஏழை மக்கள்
இதயத்தில் இருக்கின்றீர் ! அதனால் நெஞ்சின்
ஆழத்தில் தமிழரெல்லாம் வணங்கு கின்றார்
அன்புருவே ! நல்லுணர்வே ! தொண்ட மானே !
வேழத்தின் தந்தம்போல், நீங்கள் பெற்ற
வெற்றிக்குச் சிந்தனையே மூலம் ! மாற்றார்
வாழத்தன் வாழ்க்கையினைத் தேய்க்கும் வீர
வள்ளலுனை வாழ்த்துகின்றோம் !

வணங்குகின்றோம் .

ஆலந்தூர் கோ.மோகனரங்கன்

With best compliments from :

Phone : 636818
Fax : 589610

தொண்டு செய்து பழுத்த பழம்!
மண்டைச் சுரப்பை
உலகு தொழும்!" எனும்
தொண்டமான் சிறப்பை நாம் தொழுவோம்!

McSons Industrial Products Pvt. Ltd.
McSons Chemicals
Prabha Trading Co. (Mfg. Imp. Exp.)
McSons Export

Manufacturers of

- Synthetic Camphor Powder
- Camphor Tablets
- Napthalene Balls
- Polythyene
- Polypropylane and
- Flexo/Roto Printers

672/3 Galle Road
Off Mayura Mawatha
Ratmalana

தொழிலாளர் தோழர் காணும் வெண்முத்து



எண்பதா வயதிவர்க்கு?
எண்ணினால் பெருவியப்பு!
கண்படாக் கலைகள் எல்லாம்
கைப்படும் மெய் உழைப்பு!
பண்படா மனங்கள் கூடப்!
பயன்படும் செயல்விதைப்பு!
தொண்டமான் தமிழ்ப்பதிப்பு!
தொண்டுவான் புகழ்ப்பதிப்பு!

நரைதிரை விழுந்தபோதும்
நரைவிழா மக்கள் தொண்டில்
அரை நூற்றாண்டுக் காலம்
அயர்விலா தியங்கி வாழ்வில்
துறைதோறும் வென்று நிற்கும்
தொண்டமான் என்னும் இந்த
நிறைமாந்தன் பெருமை பாடும்
நெஞ்செலாம் களிப்பில் ஆடும்!

தோட்டத்து மக்கள் வாழ்வில்
சூடேற்றி உரிமை காத்து
வாட்டத்தைப் போக்கி வெற்றி
வரலாறு கண்ட செம்மல்
ஈட்டியே எதிர்வந்தாலும்
இமைக்காத துணிச்சல்காரர்
வேட்டிலே உடன்பாடில்லா
விடிவெள்ளி அறப்போர் வீரர்!

இனம் மதம் மொழிகடந்து
எவருக்கும் அன்பு காட்டும்
மனம்பெற்றார் மதிப்புப் பெற்றார்!
மலைநாட்டின் தலைமை பெற்றார்!
இணையிலா அமைச்சர் என்று
இலங்கைபேர் வழங்கப் பெற்றார்!
குணம்என்னும் குன்றில் ஏறிக்
கொண்டாடப் பெற்றார் யாண்டும்!

இலங்கையின் ஆட்சி மன்றில்
இழந்த, தாய் மொழியை மீட்டார்
விளங்குபெண் மக்கள் வாழ்வில்
விடுதலைத் திலகம் இட்டார்
உளங்குலைந்து உதடுமாறா
உறுதிக்கு வாழ்க்கைப் பட்டார்
துலங்குவெண் முத்துப் போல்வார்
தொண்டமான் வாழ்க நீடு!

மலேசியக்கவிவாணர் **ஐ.உலகநாதன்**

மூனாபுதூர் பெற்றெடுத்த முத்தே ! உங்கள்
முத்துவிழா சிறக்க வாழ்த்துகிறோம்

INTERNATIONAL INDENTING HOUSE

TRAVEL AGENT

No.2 Finlayson Green, #11-12 Asia Insurance Building, Singapore- 0104
Tel.: 220-2477 (4 Lines) Aft. Off.: 742-7920, 459-6281 Fax : (65) 225-3306

விமானப் பயணங்களுக்கு வசதியான கட்டணங்களில் டிக்கெட்டுகள்

பயணிகளுக்கு வசதிமிக்க கட்டணங்களில் டிக்கெட்டுகளை வழங்குவதில் வரலாறு படைக்கிறோம். தமிழ்நாடு உள்ளிட்ட ஏனைய நாடுகளுக்கு விமானப் பயணங்களுக்குரிய டிக்கெட்டுகளை வழங்கி நல் ஆலோசனைகளையும் கூறுகிறோம்.

நயம்-நியாயம்-நாணயம் நிறைந்த ராசியான பயணத்துறை நிறுவனம்

சென்னையில் உள்ளூர்ப் பயணங்களுக்குரிய வசதிகளைச் செய்து தருகிறோம்.
உங்களின் மனநிறைவு எங்களின் மகிழ்ச்சி !

Wishing the Funtion Every Success

மலையக மக்களின் மாமன்னர் தொண்டமான் வாழ்க !
என்பதாம் ஆண்டு இளைஞர் ஏறு-இன்றுபோல் வாழ்க !
பொன்விழா - மணிவிழாக் கண்ட எங்கள் பூமகன் வாழ்க !

RAKAMALL SECURITY SERVICES PVT. LTD.

189, Selegie Road
b1-13, Selegie CTR
Singapore - 0718.



வரலாற்றின் பொன்னேடு

செந்தமிழர் உழைப்பாலே இன்பம் பொங்கும்
தேசங்கள் பல உண்டு, அவர்கள் நாளும்
சிந்தியநல் வியர்வையெல்லாம் ஆறாய் மாறிச்
செழிப்படையச் செய்ததுண்டு! உலகம் போற்றும்
விந்தைகளைப் புரிந்தாலும், தமிழர் வாழ்வோ
விடியாத இரவுகளே! அதனை மாற்ற
வந்தசுடர்த் தீபங்கள் உண்டு. அந்த
வரலாற்றின் பொன்னேடே தொண்ட மானாம்!

தேயிலையைப் பயிராக்கி வளர்த்தும் கூடத்
தேனீரைத் தாருங்கள் என்று கேட்க
வாயிலையே எனத்துடித்த தமிழர்க் கெல்லாம்
வாழ்வளித்த வள்ளல்தான் தொண்ட மானாம்!
நாயினிலும் கீழாக இலங்கை மண்ணில்
நைந்ததமிழ் மக்களெல்லாம் உயர்வு காணத்
தாயினைப்போல் தொண்டாற்றி, தொழிலாளர்தம்
தரம்உயர உழைத்தவர்தான் தொண்ட மானாம்!

தொழிலாளர் காங்கிரசாம் விளக்கை ஏற்றித்
துயரடைந்தோர் வாழ்வினுக்கு வெளிச்சம் தந்தார்!
எழில்நாடாய் இலங்கையினை மாற்று தற்கு
எண்ணில்லாப் பணிசெய்தார் அமைச்ச ராகி!
அழுகுரலுக் கிடையினிலும் அமைதிப் பாட்டை
ஆவலுடன் கேட்கின்ற இலங்கை மக்கள்
தொழுகின்ற பெருந்தலைவர் எதிர்கா லத்தைத்
துலங்கவைக்கும் தனித்தலைவர் தொண்டமானே!

அரைநாறு ஆண்டுகளாய் ஓய்வில் லாமல்
அரும்பணிகள் புரிந்திட்ட ஆற்றல் மிக்கார்,
அரசியலை ஆன்மீக வேள்வி யாக்கி
அறப்பயிரை வளர்த்ததமிழ் மேக மாவார்!
அரியதமிழ் வளர்வதற்கும், தமிழர் வாழ்வின்
அல்லல்களைப் போக்குவதற்கும், இலங்கை மண்ணில்
உரிமையொளி பரவுவதற்கும் உழைக்கும் எங்கள்
ஒப்பில்லாத் தலைவரவர் தொண்ட மானாம்!

இலங்கையுடன் பாரதத்தை இணைப்ப தற்கு
இதயத்தால் நட்புறவுப் பால மிட்ட
தலைவரவர், சாதனையின் சிகர மாகச்
சரித்திரத்தை அலங்கரிக்கும் தொண்ட மானின்
இலங்குபுகழ் முத்துவிழா, எண்ணும் போதே
இதயத்தில் இன்பஉலா, அன்னார் என்றும்
நலமுடனே புகழ்பெற்று வாழ்க! வாழ்க!
நற்றமிழர் உயர்வுபெற என்றும் வாழ்க!

பேராசிரியர் கரு.நாகராஜன்

"தமிழுக்கு மகன்நான் —ஒரு
தாழ்வையும் அறியேன்!"
பாவேந்தர் பாரதிதாசனின் இந்தப் பாட்டுவரிகளுக்கு ஒரு
காவியம் எனும் தொண்டமான் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!

SUBAS TRANSPORTATION & TRADING

189, SELEGIE ROAD
#B1 - 13, SELEGIE CTR
SINGAPORE 0718.

தொண்டின் சிகரம் தொண்டமான் முத்துவிழா
எண்டிசையும் புகழ்கொழிக்க
வண்டமிழால் வாழ்த்துகிறோம்

ஆயிரக்கணக்கான ரகங்களில் சேலைகளை
என்றென்றும் வாங்கிட சிங்கையில் சிறப்பான ஜவுளி நிறுவனம்

ராயல் சாரி பேலஸ்
ROYAL SAREE PALACE

IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER IN
GENERAL TEXTILES & EXCLUSIVE IN SAREES

132, Dunlop Street, Singapore 0820
Cable : Jaibalaji Tel. : 3367885 & 3369495.

தொண்டமான்



தொழிலாளர் கொண்டமான்

வீரம் புடைத்த விருதுபல ! வெற்றியுலா !
ஆரம் பசும்பொன் அரசவேள்– மாறன்வழித்
தொண்டமான் ஈழத் தொழிலாளர் கொண்டமான்
கண்டவர்க் கெல்லாம் களிப்பு.

பெற்ற விடுதலை பேணப் படுவதில்
உற்றார் இணைப்பே ஒருங்கிணைப்பு - மற்றவரைத்
தன்னைப்போல் எண்ணும் தகையாளர் தொண்டமான்
விண்ணைப்போல் நீண்ட வெளி.

தேசிய நோக்கு; செயல்வீரர்! ஒற்றுமையில்
ஆசியத் தலைவர் ! அழுக்குடையார்– நேசிக்கும்
சாதி மதம்தழுவாச் சான்றாண்மை தொண்டமான்
நீதி வழுவா நெறி.

தக்க தொழில்வளர்ச்சி சார்ந்த உழைக்குமின
மக்கள் தலைவர் மறத்தமிழர் –பக்குவமாய்க்
கொண்ட அரசியலில் கொள்கைப் பிடிப்புடையார்
தொண்டமான் தென்னிலங்கைத் தூண்.

ஈழத் தமிழ்ப்பாணர் இன்னிசையும் சொற்பொழிவும்
சூழ மொழியுரிமை தோற்றுவித்த - வேழம்நிகர்
தொண்டமான் உன்பெருமை சொல்லாத நாவுண்டோ?
வண்டமிழ் வெண்பாவில் வாழ்த்து.

முனைவா புரட்சிதாசன்

With best compliments from :

தமிழுக்குப் பிள்ளை – நீ
தளை நீக்கும் மறவன்!
நினதன்பு நாட்டை – என்றும்
நீ காக்கக் கடவாய்!

MHC

MODERN HARDWARE CENTRE

DEALERS AND STOCKIST OF IRON AND STEEL

43, Abdul Jabbar Mawatha,
Colombo - 12, Sri Lanka.

Telephone : 435468, 28614, 436537
Fax : 0094 1 431890

தொண்டினால் உயர்ந்த தூயவர்

தொண்டினால் உயர்ந்த
தூயவர்! இனிக்கும்கற்
கண்டெனும் மொழியினர்
காட்சிக்கும் எளியவர்!
தொண்டமான் எங்களின்
தொன்மைத் தமிழ்க்குடி
கண்டதோர் மன்னவர்!
கற்புடை நெஞ்சினர்!



உண்பதும் உடுப்பதும்
உறவுடன் களிப்பதும்
கண்ணயர்ந் துறங்கியே
காலையில் விழிப்பதும்
மண்ணுறை உயிர்களின்
வழக்கமே; விலக்கென
மண்ணலம் பேணலே
மானுடக்கடமையாம்!

தொண்டராய் நின்றவர்
தூய நற்பணிகளால்
கண்டவர் போற்றிடும்
காரியச் செம்மலாய்
மன்பதை எழுந்தவர்!
இலங்கையில் வாழ்ந்திடும்
இந்திய மரபினர்
எழுச்சிக் குழைப்பவர்!

கலிங்கம் வென்றவன்
களப்புயலானவன்
கலங்கா நெஞ்சினன்
கருணாகரனவன்
துலங்கும் மரபிலே
தோன்றியே வந்தவர்
இலங்கைத் தமிழரின்
இதயமே யானவர்!

மக்களுக் குழைப்பதே
மகேசன் தொண்டெனத்
தெக்கணக் காந்தியெம்
அண்ணா சொன்னதைப்
பக்குவச் செயலினால்
பாரினுக்குணர்த்திய
மக்களின் தலைவனே!
மாணிக்க மனிதனே!

சொத்தாய் நமக்கு
வாய்த்த சீலரின்
முத்து விழா இது!
முத்தமிழ்க் கவியினால்
உத்தமச் செல்வரை
உழைப்பின் மேருவை
வித்தக ஞானியை
வாழ்த்தியே வணங்குவம்!

வாழி பல்லாண்டுகள்
வண்ணத் தமிழென!
வாழி நூறாண்டுகள்
வளமெலாம் எய்தியே!
வாழி நீ வாழியே
வான்கதிர் போலவே!
வாழி நீ வாழியே
வள்ளலே வாழியே!

கவிஞர் மணிமொழியன்

With Best Compliments From

மலைநாட்டுத் தென்றலே!
மலைநாட்டுத் தமிழரின் மதுர கீதமே!
அலைபாடும் கடலாய்-உங்கள்
புகழ்பாடுவோம்!

NG ENG TEONG

DA ZHONG SCRAP

Dealer

27, Jalan Lam Sam
Singapore - 2469
Tele.: 7607213 / 5054333

உலகத் தலைவர்கள் நடுவில் ஓர்
ஒளிவிளக்கே! வாராது வந்த மாமணியே!
ஒங்கி உலகளந்த பெருமாளாய் வாழியவே!

தொண்டமான் விழாச்சிறக்க வாழ்த்துகிறோம்

VASU BANGLES STORE

Dealers In
Stainless Steel, Brass & Aluminium Utensils Plastic & Glass Bangles
● Imitation Jewelleries Electrical Appliances ● Hair & Hair Wigs
● Footwears Toys, Cosmetics ● Radio & Cassettes
● Deepavali Cards.

138-Dunlop Street,
Ph : 3379566
62-Serangoon Road
Ph : 3382550

CABLE : "VASUBANGLE"

SINGAPORE 0821



சாமர்த்தியம் தெரிந்த சாதனையாளர்

"ஒருவனின் சாதனைகளை அவன் கண்ட வெற்றிகளின் எண்ணிக்கையை வைத்துப் பார்ப்பதைவிட, அவ்வெற்றிகளின் பயன்பாடு களைக் கொண்டு கணக்கிடுவதே சிறந்தது" என் றொரு மேனாட்டறிஞர் கூறியிருந்தார். இக் கருத்துக்கு அடையாளமாக வாழ்ந்த ஒரு சில ஆதார புருஷர்களில் நம் காலத்திய உதாரண உத்தமராக விளங்குபவர்தான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெருந்தலைவரும், சுற்றுலா-கிராமிய தொழில் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் தலைவருமான மாண்புமிகு எஸ்.தொண்டமான் அவர்கள்,

வியாபாரத்தில் பேரம் பேசுவது வியாபார உத்தி. அவ்வாறே அரசியல் துறையில், தான் நீட்டும் உதவிக் கரத்திற்குப் பகரமாக, தன்னிடம் உதவி பெறுவோர் தரும் கைம்மாறு எத்தகையது என 'நாடிப்பிடித்துப்பார்த்து, தன் சமுதாய மக்களுக்கு உரிமைகளையும், உடைமைகளையும் பெற்றுத் தருவது, நடைமுறை சாத்தியமான அணுகுமுறையை கையாண்டு வெற்றி பெறுபவர் நம் பெருந்தலைவர் தொண்டமானே.

இந்த உதாரண புருஷர், இதுவரை சாதித்து வரிசைப்படுத்தியுள்ள சாதனைகள், எந்த அளவு அவரை நம்பியுள்ள இந்திய வம்சாவளி மக்களுக்கும், பொதுவாக இந்நாட்டு அனைத்துப் பிரஜைகளுக்கும் பயன் தரும் விதமாக அமைந்தன என்பதைச் சற்றே அசை போடுவது பொருத்தமுடையதே.

திரு.சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் ஒரு தொழிற்சங்க வாதியாக- அரசியல் தலைவராக இந்நாட்டில் மலையகம் உட்பட, ஏனைய பகுதிகளிலும் பாந்து வாழும் இந்திய வம்சாவளி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகக் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக அறப்பணியாற்றி வருகின்றார். இந்த நாற்பதாண்டுக் காலப் பொதுவாழ்வில், தலைவர் தொண்டமான் எதிர் நோக்கிய பிரச்சினைகளும்-போராட்டங்களும்-சாதனைகளும் ஒரு வரலாறாக விரிந்து புகழ் மணம் கமழ்கின்றது.

அவர் தன் பொதுவாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் கண்ட வெற்றிகள் எல்லாமே, மக்களின் நடைமுறை வாழ்வுக்கு நற்பயன் அளிப்பனவாக இருந்

தமையாலே அவரது வெற்றிகள் சாதனைகளாக வரலாற்று மணம் வீசி நிற்கின்றன எனலாம். அது எப்படி?

மலையகம்-இந்நாட்டின் பொருளாதார வளத்திற்கு உரம் சேர்க்கும் ஒரு புண்ணிய பூமி. இந்தப் புண்ணியப்பூமியின் கண்மணிகளான மலையகத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளியினர் கண்ணியவான்களாகக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். ஏனெனில்-அவாகள்தாம் குளிரும் பனியிலும், கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெய்யிலிலும் மலை மீதேறி, தேயிலைக் கொழுந்து பறித்து, இந்நாட்டுக்கான அந்நிய செலாவணியைப் பெற்றுத் தருபவர்கள். அத்தகைய சத்திய புருஷர்கள் சந்தனக் குழம்பாகக் கருதப்படுவதற்கு மாறாக, சாக்கடைச் சேறாக எண்ணி ஒதுக்கப்பட்டனர்.

ஆரம்பத்தில் காலனித்துவ காலத்தில் வெள்ளைக் கார அதிகார வர்க்கமும் சரி, சுதந்தரம் கிடைத்த பின்னர் உள்ளூர் அரசியல் தலைவர்களும் சரி, இந்த மக்களை வெறும் "கூலி"கள் என்றே குறுகிய மனப்பான்மையுடன் நடத்தினர். 20 ஆம் நூற்றாண்டின் அடிமைகள் எனச் சொல்லும் விதமாக, உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில், பல்வேறு சமுதாயக் கொடுமைகளுக்கு மலையக மைந்தர்கள் ஆளாக்கப்பட்டனர். குறைந்த கூலி, லைனிலே வாழ்க்கை-ஏனைய வாழ்வியல் வசதிகள் இல்லாமை-படிப்பு வாசனையே மலையகப் பக்கம் படரவிடப்படாத கும்மிருட்டு, இந்த இழிநிலையைப் போக்குவது எப்படி?

இந்நாட்டின் கண்ணியத்துக்குரிய புண்ணியவான்களாகக் கருதப்பட வேண்டிய மலையக மைந்தர்களுக்கு, சமுதாய அந்தஸ்தைப் பெற்றுக் கொடுப்பதில் தலைவர் தொண்டமான் முதலில் பாடுபடலானார். அவர்களின் உழைப்பின் மகிமையை-தேவையை, பாசாங்கு பண்ணும் பம்மாத்துக்காரர்கள் அறியும் விதமாக எடுத்துரைத்தார். எத்தனையோ வேலை நிறுத்தங்களையும், மறியல்களையும் பேச்சு வார்த்தைகளையும் நடத்தினார். படிப்படியாக இந்த மலையக மைந்தர்களின் மகிமையையும், மகோன்னத சிறப்பையும் புரிய வைத்தார். தேர்தல் காலங்களில் இவர்களின் பிரச்சினையைப் பிரசாரப் பொருளாக்கிப் பேரம் பேசலானார்.

"குன்றா உழைப்பும் குறையா முயற்சியும் என்றும் சாதிக்கும்" என்பது அனுபவம் பிழிந்த சாறல்லவா? அதன்படி தலைவர் தொண்டமானின் முயற்சிகள் வெற்றி பெறும் வேளை மலர்ந்தது. அரசியல் காற்று மாறி வீசலாயிற்று. ஜே.ஆர்.என்ற அரசியல் தலைவரின் தேர்தல் வெற்றி இதர சூழ்நிலைகளின் தொண்டமானின் தேவை மாறிவரும் உலக அரசியல் சிந்தனைப் போக்கின் தாக்கம் என்பன, இரும்பு இதயம் கொண்டோரின் இறுக்கத்தை இளக வைத்தன. இறுதியாக தலைவர் தொண்டமான் மேற் கொண்ட பிரார்த்தனை இயக்கம் நீண்டகால முயற்சித் தொடர்களுக்குப் பயன்தரும் வாசலைத் திறந்து விட்டது.

எந்த யு.என்.பி. அரசு, மலையக மைந்தர்களின் ஜீவாதார உரிமைகளான பிரஜாவுரிமை-வாக்குரிமை என்பனவற்றை பறித்ததோ, அதே யு.என்.பி.அரசே , மீண்டும் பறித்த உரிமைகளைப் பரிசாகத் தர வேண்டிய காலம் கனிந்தது. 1988 நவம்பர் மாதத்தில் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளிமக்கள் அனைவருமே இந்நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்படும் பிரஜாவுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து வாக்குரிமை உட்பட, இந்நாட்டின் ஏனைய சமூகத்தவர்களுக்குக் கிட்டும் அத்தனை உரிமைகளும் இந்திய வம்சாவளியினருக்கும் கிடைக்க வழி பிறந்தது.

இன்று மலையக மைந்தர்களும், ஏனைய பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளியினரும் தேசிய அந்தஸ்து பெற்று விட்டனர். சகல அரசு தரப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டும், பங்கேற்றும், பங்களிப்புச் செய்தும், பயன்பெற்றும் வாழும் தகுதியை அம்மக்கள் பெற்று விட்டனர். இது வெறும் அரசியல் பிரசாரத்திற்கான காகித வெற்றியல்ல. சட்ட வரிகளில் மட்டும் சாசுவதமாக வாழும் சாதாரண வெற்றியல்ல. நடைமுறை வாழ்வில்

"நாடற்றவர்"களாக நலிந்து போன ஒரு சமுதாயம் பெற்ற நிதர்சன வசந்த வாழ்வாகும். இதன் மூலம் இனி வரப்போகும் காலங்களிலும் அந்த மலையக மைந்தர்களின் வாரிசுகள் எவ்விதப் பேதப் பிரிவினைகளும் இன்றி வாழப் போகின்றனர்.

நீண்ட கால பயன் தரவல்ல இந்தச் சாதனையே, தலைவர் தொண்டமானின் வெற்றிகளில் எல்லாம் இமய சாதனையாக உயர்ந்து நிற்கிறது.

மலையக மக்களை ஒற்றுமைப்படுத்தி, ஓரணியில் ஒருமுகப்படுத்தப்பட்ட சக்தியாக உருவாக்கி சம சம்பளம், சம்பள உயர்வு, இதர தொழிலாளர்கள் பெரும் ஏனைய கொடுப்பனவுகள் என்று பல விஷயங்களில் பேச்சு வார்த்தை மூலம் வெற்றியை ஏற்கனவே சம்பாதித்துக் கொடுத்துள்ளார் நம் தலைவர் தொண்டமான்.

இப்போது பிரஜாவுரிமையும் -வாக்குரிமையும் பெற்றுவிட்ட தேசிய பிரஜைகளாக இந்திய வம்சாவளியினர் மாறிவிட்டனர். இனி இறைவன் விட்ட வழி என்று, நம் தலைவர் தொண்டமான் ஒதுங்கவில்லை, இங்குதான் தலைவரின் சாணக்கியம் -அரசியல் சாதுரியம், அவரது அனுபவ பக்குவம்-நிதானம் தழுவிய நேர்மை நெஞ்சம் என்பன புது உருவம் பெற்றுப் பொலிவடைகின்றன.

தேசிய பிரஜைகளாக மாறிவிட்ட தன் சமூகத்திற்கு , அந்த சந்தோஷ உரிமை வாழ்வை எப்படி அனுபவிப்பது, எப்படிப்பேணிக்காப்பது, எப்படிக் காத்த வாழ்வைத் தொடர்வது என்ற விஷயத்தை அறிமுகஞ் செய்வதில் தலைவர் தொண்டமான் அடுத்தடுத்து அடியெடுத்து வைக்கின்றார். ஆசிரியர் தொழில், படைப்பிரிவில் நியமனம், கிராம சேவகர் பதவிகள் என்று அரசு மட்டத் தொழில் பிரிவுகளில் உரிமையோடு விண்ணப்பிக்கும் வாய்ப்பை ஏற்படுத்து கின்றார். அரசு மட்டத்தில் தனது அமைச்சர் தகுதியைப் பயன்படுத்தி என்னென்ன செய்யலாமோ, அவை அனைத்தையும் செய்கின்றார்.

இதற்கெல்லாம் கல்வித் தகைமை அவசியம் தேவையல்லவா? கடந்த காலங்களில் கல்வி வாசனையே மலையகப் பகுதிகளில் படரவிடாமல் மூடி வைத்த அமாவாசை இதயங்களின் அரண்களை உடைத்தெறிகிறார். அரசு மட்டத்தில் மட்டுமன்றி, வெளிநாட்டு உதவிகளையும் பெற்று, மலையகமெங்கும் கல்விச் சாலைகளைக் கட்டுகின்றார், நம் தலைவர் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளை மலையகமைந்தர்களின் காலடிக்கே கொண்டு சென்று கொட்டுகின்றார். பல்வேறு புலமைப் பரிசில்களை வழங்கி, புத்தூக்கம் தருகின்றார். இன்று அறிவுப்படையொன்று மலையத்திலே அணி திரண்டு கொண்டிருக்கிறது.

அரசியல் துறையில் செய்ய வேண்டியவை களைத் தாமும், தன் தலைமையில் இயங்கும் இ.தொ.கா. வும் முறையுடன் செய்யும் கல்வி, கலாசாரம், கலை, சமயம், தொழில் என்று இதர துறைகளிலும் இவர்களைக் "கரைசேர்க்க" இன்னொரு துணைக்கரம் இருந்தால் நல்லதென்று எண்ணி, இலங்கை இந்திய சமுதாயப் பேரவையை அமைத்து, அதற்கும் தாமே தலைவராக அமர்ந்து, இதர வகைகளில் அவர்களின் வாழ்வுப்பாதை எங்கும் வெளிச்சமிட்டு வருகின்றார்.

இப்போது இந்நாட்டுக்கே அவசியம் தேவைப்படும் சமாதானத்தைக் கொண்டுவரும் அசாதாரண முயற்சியில் பல்வேறு காழ்ப்புணர்ச்சி எதிர்ப்புகளுக்கிடையே செயல்பட்டு வருகின்றார். இந்தச் சாணக்கிய வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படை இரகசியம் என்ன?

பிரச்சினையைச் சரியாக இனம் காண்பது-உரியவர்களை உரிய வேளையில் உரிய முறையில் அணுகுவது-தம் மக்களை ஒற்றுமை குலையாமல் காப்பது, இவையே சாதனையாளரின் வெற்றியின் இரகசியம். ❑❑❑

With best compliments from :

தொழிலாளர் காங்கிரசின் துரையே!
– உன்னைத்
தூக்கி மெச்சும்இந்தத் தரையே!



Eswaran Brothers

Exporters, Importers & Manufacturers

267, Sea Street, Colombo – 11,
Sri Lanka.

Telephone : 421015, 432599
Telex : 21275 21866AB.ESWARAN CE

Fax No. : 448720
Cable : TEDESIPRO



தோட்டத் தென்றலே வாழ்க! வாழ்வில்
தொடர்ந்து இன்பமே சூழ்க!



தொண்டுத் தந்தை தொண்டமானைத் தந்த
தோட்டத்தந்தை குமாரவேல் என்ற கருப்பையா பிள்ளை.



செந்தமிழ்த் தொண்டமானின் சிந்தை கவர்
அன்னை சித்தம்மையார்.



தாஜ்மகால் முன்பு
நாட்டின் தலைவர் தொண்டமானுடன் அவர் தம்
வீட்டின் தலைவி கோதை தொண்டமான்



இனிய தலைவர் தொண்டமானின்
இல்வாழ்க்கைத் துணை
அப்பத்தா என்னும் அன்பு நிறை தாய்
கோதை தொண்டமான்



மழலைபேசும் மகரந்தப்பேத்தியுடன் மகிழ்வு கொள்கிறார் தொண்டமான்





பேத்தியிடம் பிறந்த நாள் 'கேக்' உண்ணும் பிரியமிகு தாத்தா தொண்டமான்.

இளைய நிலா ராஜீவுடன் இலட்சிய நிலா தொண்டமான்





பெரியவர் தொண்டமான் பிறந்தநாள் 'கேக்' வெட்டுகிறார்



கொள்ளுப்பேத்திக்கு-குதூகலம் எல்லை கடக்க-'கேக்' ஊட்டுகிறார் கொள்கைக் கோமகன்.



ஜப்பானில் ஒரு அடுக்குமாளிகை முற்றத்தில்-தமிழரின் உயர்வுக்குத் திட்டமிடும் தலைவர் தொண்டமான்.



தொண்டமானின் ஒருங்கிணைப்புச் செயலாளர் பா.திருநாவுக்கரசும், அவரின் உடன்பிறவாச் சகோதரர் சிங்கை இராமகிருஷ்ணனும்.

மகன், மருமகள், பேரன், கொள்ளுப்பேத்தி
இவர்களுடன் தொண்டமான்



மருமகள் கொள்ளுப்பேத்தியுடன் ஜப்பான் வீதியிலே
நடைபோடும் தொண்டமான்





ஜப்பானில் தன் கொள்ளுப்பேத்தியுடன்
தொண்டமான்



ஜப்பானில் சிந்தை மகிழ்வோடு சிறகடிக்கும்
வானம்பாடியாய் நம் தலைவர்



முத்தனைய நண்பர்களோடு முழுமதியாய்
நம் தொண்டமான்



சிங்கை இராமகிருஷ்ணன், இலங்கை விஜயபாலன் இவர்களுடன் தலைவர்
தொண்டமான்



தலைவர் தொண்டமான் வீட்டு விருந்தில் -சிங்கை இராமகிருஷ்ணனும் செயலாளர்
பா.திருநாவுக்கரசும்.



1987-இல் கோலாலம்பூரில் நடந்த ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, உணவகத்தில் தொண்டமான் அவர்களுடன் சிங்கை எம்.யூசுப், ந.இராமகிருஷ்ணன்.



தம் அன்புத் தலைவர் தொண்டமான் அவர்களுக்கு ஆடையும் மாலையும் சாத்தி அகமகிழ்கிறார் மலர்க்குழுத் தலைவர் இராமகிருஷ்ணன்.



தென்னிந்திய வர்த்தகக் குழுவினருடன் தொண்டமான்.



பத்துமலை (மலேசியா) முருகன் கோயிலில் பற்றுதலைத் தம்மீது கொண்டவர்களுடன் தொண்டமான்



நம் திரைப்படப் பின்னணி இசை வாணர்களுடன் தொண்டமான்



மறைந்த உத்தமர் சிங்கை ஏ.விக்டர், பி.பி.காந்தம் ஆகியோருடன் அளவளாவும் மாணிக்கத் தலைவர் தொண்டமான்.

துல்லியமாய் விடையளிப்பதில் தொண்டமான் ஒரு தோட்டா

தலைவர் தொண்டமான், எந்தக் கருத்தையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற தன்மையில் வெளியிடக் கூடிய வித்தகர். ஒரு கருத்தை மழுப்புவதோ, குழப்புவதோ அவருடைய இயல்பு இல்லை.

ஒருமுறை மலைநாட்டில் ஓர் இடத்தில் ஒரு கோயிலில் திருவிழா நடைபெற்றது. ஏதோ ஒரு பழைய கோபத்தை மனத்தில் வைத்துக் கொண்டு சிங்களக் காடையர்கள் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களைத் தாக்கிவிட்டார்கள். தோட்டத் தொழிலாளர்கள் எதிர்த் தாக்குதல் செய்து அவர்கள் ஓட ஓடத் துரத்தி அடித்தார்கள். வன்செயல்கள் பெருமளவில் நடந்தேறி விட்டன.

இதுபற்றி ஒரு பத்திரிகை நிருபர், "இப்படியும் செய்யலாமா?" என்று கேட்டார். தலைவர் தொண்டமான் அதற்கு அளித்த பதில் என்ன தெரியுமா?

"தாக்குபவர்களைத் திருப்பித் தாக்குவதுதான் தற்காப்புகளில் எல்லாம் சிறந்த தற்காப்பு"

இதுதான் அவருடைய பதில்,

மற்றொரு சமயம் வேறொரு பத்திரிகை நிருபர், "நீங்கள் அகிம்சாவாதி ஆயிற்றே! சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கை உள்ளவர் ஆயிற்றே! அப்படிப்பட்ட நீங்கள்," தாக்குபவர்களைத் திருப்பித் தாக்குவதுதான் தற்காப்புகளில் சிறந்த தற்காப்பு" என்று சொல்லியிருக்கிறீர்களே, இது சரியாகுமா" என்று தொண்டமானிடம் கேட்டார்.

அதற்குத் தொண்டமான் மிகச் சாமர்த்திய மாக விடையளித்தார்" காந்தி மகாத்மா ஒரு சிறந்த அகிம்சாவாதி; உயர்ந்த சத்தியாக்கிரகி; ஆனால் அவர் பாராயணம் செய்தது பகவத் கீதை. நீங்கள் பகவத் கீதை படித்திருந்தால் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்க மாட்டீர்கள்!" என்றார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், சத்தியாக்கிரகி கோழையல்ல; அவன் ஒரு கோட்பாட்டுக்காக அகிம்சையைக் கடைப்பிடிப்பவன். அதனால் அகிம்சாவாதியை எவர் வேண்டுமானாலும் அடித்து நொறுக்கிவிடலாம் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. பசுவை இந்துக்கள் தெய்வமாக மதித்துப் பூஜை செய்வார்கள். ஆனால் அதே இந்து மக்களிடையே "தன்னைக் கொல்லவரும் பசுவைக் கொல்லு" என்று ஒரு வாக்கியமும் உண்டு. இந்த வாக்கியத்தையே நானும் திருப்பிச் சொன்னேன்!" என்றார் தொண்டமான்.

மலேசியாவில் நடைபெற்ற ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு அவர் விருந்தினராகச் சென்றிருந்த சமயம் ஒரு பத்திரிகையாளர், "உங்கள் நாட்டில் உள்ள தீவிரவாதிகளான புலிகளைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

இந்தக் கேள்வியை வேறு யாராவது ஒரு தமிழ் அரசியல்வாதியிடம் கேட்டிருந்தால் பதில் சொல்வதற்கு அவர் தயங்கிப் போவார். தொண்டமான் பளிச்சென்று பதில் சொன்னார். "வீரம் இருக்கும் அளவிற்கு அவர்களிடம் விவேகம் போதவில்லை என்று கவலைப்படுகிறேன். அவர்களுடைய வீரத்தை மதிக்கிறேன். அவர்களுக்கு விவேகமும் அதிகரிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்!" என்பதே அவருடைய பதிலாகும்.

இப்படி எந்தக் கேள்வி தொடுக்கப்பட்டாலும் துல்லியமாய் விடையளிப்பதில் தொண்டமான் ஒரு தோட்டா. ❑❑❑



வாசன் வெளியீடுகள்

திருக்குறள் எளிய உரை-	ரூ.12
நாலடியார் நல்லுரை	ரூ.10
உயர்தர தமிழ்க்கையகராதி	ரூ.15
ஆட்சிச்சொல் அகராதி	ரூ.27
விஞ்ஞானிகள் வாழ்விலே (பி.வி.கிரி)	ரூ.12
Teacher and Learners (Prof.S.Santhanam)	ரூ.60
Educational Ideas (Prof.v.Perumal)	ரூ.50

வசந்தா ஏஜென்சீஸ்

5, ஸ்ரீபுரம் 2 ஆம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
தொலைபேசி : 865618, 866018

ஆர்.ராஜ்மோகன் எம்.ஏ.எம்.எட்.,
நிர்வாக இயக்குநர்

A CHARISMATIC LEADER



--- S.Thondaman
--- G.R.Mehta
--- S.M.Subbiah
--- C.V.Velu pillai
--- K.Rajalingam
--- K.Kumaravelu
--- T.Ramanujam

----The above stalwarts were elected as Sri Lankan M.P.s at the first election held during 1947. All of them could be successful in the election because of the support of the upcountry Tamils of Sri Lanka, the plantation workers of the East.

Not only this, even some of the leftist candidates were able to win that election becuase of the support given by the plantation workers.

So, this became a clear proof of the fact that the upcountry Tamils had developed into a formidable force to reckon with.

M.S.VENKATACHALAM M.A.B.L.,

காடு கமிழும் கற்பூரச் சொற்கோ!
நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா!
அறம்பாட வந்த அறிஞன்! புதிய
திறம்பாட வந்த மறவன்!
தொண்டமான் வாழ்க!

U.JAIN

AMIT TRONICS

Specialists in Audio & Video Accessories
Dealers In
U.M.S. Booster & Antennas

20/1, Narasingapuram St., Mount Road,
Madras - 600 002.
Phone : 841432, 834829

"கண்ணும் ஒளியும் போலே-எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ?"
எனப் பாடும் பாவேந்தர் வாரிசாய்
வாழும் தொண்டமான் வாழ்க பல்லாண்டு!

OMEGA electronics

Dealers In : V.C.P., V.C.R., B/W, C.T.V., Audio & Computer Spares & Critical Components.

Cable : Ghouseepak
Tel Per :835494
B.O. : 835593
H.O. : 834746
Fax : 91-044-831424

Head Office :
1-A, Narasingapuram St.,
Anjuman Buildings,
Mount Road,
Madras - 600 002.
Branch Office :
2-D, Wallers Road,
Anjuman Buildings,
Mount Road,
Madras - 600 002.
India

Lion Hameed. A.S.
Proprietor

The united National party under the leadership of D.S.Senanayaka had to face a crushing defeat in that election.

This historic election, which created jealousy, apathy and apprehension in the minds of the Sinhalese leaders, became a turning point in the annals of the upcountry Tamils. The Sinhalese leaders decided to crush the political force of the Tamils, by hook or nook. As a result, the notorious **CITIZENSHIP ACT OF 1948** was passed and this Act forfeited the citizenship rights of the plantation workers. So, about 10 lakhs of Tamils lost their citizenship rights in one stroke. Quick at the heels of this dastardly Act. **THE ELECTION AMENDMENT ACT OF 1949** was enacted forfeiting the voting rights of the plantation workers, on the basis of their "statelessness".

Thus the upcountry Tamils of the Eastern Sri Lanka lost all their basic rights. Even the far-sighted leaders like Selvanayagam, who originally supported the cause of this "suppressed class", subsequently yielded to the mounting pressure of the sinhalese leaders, and when these people were left in the lurch, Mr.S.Thondaman sincerely championed their cause and slowly emerged as their unquestioned leader. He virtually became their beacon light.

Being a descendant of the historic warrior Thondaman, who led the army of Kulothunga Chozhan in a number of battles, the warrior of our century also had seen a number of political battles and agitations.

It is one thing to fight for the cause of those who could vote at the next election and it is entirely different to champion the cause of the hapless people who have got no such rights. To fight for them really needs a selfless bent of mind. Mr.Thondaman exhibited that sort of sincerety and selflessness in his crusade.

Acting under directions of pandit Jawaharlal Nehru, Mr.Thondaman had the honour of conducting the First conference of Ceylon Indian Congress. This brought him to limelight and from that time onwards, he has been shining in the political firmament of Sri Lanka.

His tireless toil for the cause of the plantation workers (Upcountry Tamils of the East) has been continuing for the past half-a-Century, whether he was an M.P., or whether he was a Minister in the Cabinet power to him was simply an instrument to achieve the goal of ameliorating the conditions of his people.

He is an undaunted leader of our times. Though not acclaimed as a Revolutionary, his service to the Tamil Community in Sri Lanka cannot be under-estimated even by his adversaries.

It is heartening to note that Mr. Thondaman has now emerged as a cementing force who could make the various warring factions of the Tamils to bury their hatchet and realise the need for getting united.

Such a charismatic leader, Mr.Thondaman is setting foot at the 80th milestone in his life. We wish him many more happy returns and also hope that he would make many more strides in his life. ❑

With best compliments from :

"செல்வத்துப் பயனே ஈதல்"
என்ற சொல்போற்றி நடக்கும்
நல்தவத்து நாயகரே! வாழி பல்லாண்டு!



V.T.V. Building,
88 G intupitiya Street,
Colombo -13, Sri Lanka.
Tel. : 24042, 541007. Res.: 36840
Cable : BLOOM

V. Srikanth
Managing Director

தொண்டமானின் முதல் சிண்டமாருதம்





[1939-ஆம் ஆண்டில் நேருவால் இலங்கையில் நிறுவப்பட்ட இலங்கை இந்தியக் காங்கிரசின் முதல் மாநாடு, 1940 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் நாள் கண்டியின் அருகிலுள்ள கம்பளை நகரில் நடைபெற்றது. இந்தியாவிலிருந்து அந்த மாநாட்டிற்கு வி.வி. கிரி, எஸ். சத்தியமூர்த்தி ஆகிய இருவரும் சென்றிருந்தனர். "வெள்ளம்போல் தமிழர் கூட்டம்-வீரங்கொள் கூட்டம்" எனும் பாவேந்தரின் வரிகளுக்கிணங்க, மக்கள் திரண்டிருந்தனர். எழுச்சிமிகு இளைஞராக விளங்கிய திரு.எஸ். தொண்டமான் அவர்கள்தான் அந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர். மாநாட்டின் வரவேற்புரையை அவர்தான் ஆற்ற வேண்டும். அதற்குரிய ஆற்றல் அவரிடம் அமைந்திருந்தும், மிகுந்த தயக்கத்திற்கிடையில், மிகப்பலரின் வேண்டுகோளுக்கிணங்க, மாநாட்டில் திரு. தொண்டமான் அவர்கள் தம் கன்னிப்பேச்சை வழங்கினார். அவர் ஆற்றிய அந்த உரை– அவரது ஆழ்ந்த சிந்தனை, தூரநோக்கு, ஆராய்ந்த மனப்போக்கு அத்தனைக்கும் சிறந்த சான்றாக விளங்குகிறது. அன்று பேசிய அந்தப் பேச்சு, இன்றும், என்றும் செவிமடுக்கத்தக்க வரலாற்றுச்

கம்பளை மாநாட்டுப் பேச்சு

With best compliments from :

"செயற்கருஞ் செயல் செய்தல் வேண்டும்!
பெறற்கரும் புகழ் பெறுதல் வேண்டும்"
என்னும்
வழிநடக்கும் தொண்டமான் – நூறு
வயதையும் கடந்து வாழ்வார் இனிதே!

Rathilanka Garments

Importers, Exporters & Manufacturers of Readymade Garments

No. 307/2, Second Floor, Oldmoor Street,
Colombo - 12. Sri Lanka.
Telephone : 448227/447115

சிறப்புமிக்கதாய் அமைந்துள்ளது. **சொல்லுக சொல்லிற்பயனுடைய** என்னும் குறள்நெறிக்கிணங்க அவருடைய சொற்கள் அமைந்துள்ளன என்பதைக் கீழ்க்கண்ட அவரது உரையினால் அறியலாம்.]

தொண்டமான் வரவேற்புரை

மாநாட்டுப் பொறுப்பு மகத்தானது. இம்மாநாட்டை நடாத்தும் பொறுப்பு மகத்தானது என்பதை யாமறிந்திருந்தும், அதனை உவகையுடன் ஏற்றுக்கொண்டதற்குக் காரணம் உண்டு. காங்கிரசு மகாசபை அமைப்பைத் தயாரித்து 1939 செப்டம்பர் மாதத்திற்குள்ளாக அங்குரார்ப்பண மகாநாட்டை நடத்த வரையறுக்கப்பட்டிருந்தும் முடிவில்லாமல் தவணை போட்டுக்கொண்டே கொழும்பில் நிறுவிய கமிட்டியினர் சென்று கொண்டிருந்தது எமக்குப் பெருங்கவலை அளித்துக் கொண்டிருந்தது.

காலதாமதம் விரும்பத்தகாதது

காங்கிரசு மகாசபை பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சபையாக இருக்க வேண்டுமாயின், அந்த அமைப்பின் நிருவாகம் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டே நிருவகிக்கப்பட்டு வரவேண்டும். அவ்விதமான நிலை ஏற்படுவதற்கு அங்குரார்ப்பண மகாநாட்டை ஒரு நிமிட நேரமாவது தாமதிப்பது விரும்பத் தகுந்ததல்ல என்பது வெள்ளிடைமலை.

இந்திய-இலங்கை உறவு

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஏற்பட்ட தொடர்பு இன்று நேற்றையதல்ல. இது சரித்திர காலத்திற்கு முந்தியது. அரசியல், பொருளாதாரம், கலை இவற்றால் ஏற்பட்ட தொடர்பு மட்டுமல்ல-நம்மவர்களின் இரத்தமும் தோலும் சதையும் இலங்கையர்களின் இரத்தமும் தோலும் சதையும் பிரிக்க முடியாத ஒன்றேயாகும் எனப் பண்டித ஜவஹர்லால் நேரு கூறியது உண்மையிலும் உண்மையாகும்.

இலங்கையர்களுக்கும் இந்தியர்களுக்கு மிடையில் அண்மைக் காலம்வரை அந்நியோன்னிய மான தொடர்பும், நல்லெண்ணமும், மற்றும் விரும்பத்தகுந்த பல அம்சங்களும் நிலைத்திருந் தன. நெடுக மிக அந்நியோன்னியமாக இலங்கையர் களும் இந்தியர்களும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இன்னும் பல இந்தியக் குடும்பங்கள் சிங்களக் குடும்பங்களோடு ஒன்றி வாழ்ந்து வருதல் கண்கூடு, இது வாழையடி வாழையாக வந்த தொடர்பு.

இலங்கை இந்தியக் காங்கிரசு ஏன்?

இத்தகைய நெருங்கிய தொடர்பின் காரணத்தால் இந்தியர்கள் தனித்துத் தமது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பது அண்மைக் காலம்வரை சிந்திக்கவுமில்லை; உண்மையைக் கூறுமிடத்து, அண்மைக் காலம்வரை அது தேவைப்படவும் இல்லை. பெருந்தொகையான அங்கத்தினர்களைக் கொண்ட அல்லது இந்தியப் பெருமக்களின் ஆதரவைக் கொண்ட பொது அமைப்பு இதுவரை ஏற்படாததற்குக் காரணம் இதுவேயாகும். இன்னும் கூறப்புகின் அண்மைக் காலம்வரை அநேக இந்தியர்கள் இலங்கைத் தேசியக் காங்கிரசில் சாதாரண அங்கம் வகித்தது ஒருபுறமிருக்க அதன் நிருவாகச் சபையிலும் அங்கம் வகித்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் இந்தியர் சங்கங்கள் இலங்கைத் தேசியக் காங்கிரசு மாநாடுகளுக்குப் பேராளர்களும் (DELEGATES) அனுப்பி வந்ததுண்டு. உண்மையில் இந்தியர்கள் தம்மை இலங்கையர்களாகவே கருதி வந்துள்ளனர். தம்மை அவ்வாறே நடத்துவார்கள் எனவும் எதிர்பார்த்திருந்தனர்.

தவறான பிரச்சாரம்

டொனமூர் கமிஷனர்கள் அனைத்து மக்கள் (சர்வஜன) வாக்குரிமை அளித்ததன் காரணமாக மக்கள் சமுதாயத்தினிடையே அரசியல் எழுச்சி ஏற்பட்டது. ஆனால் மக்கள் சமுதாயத்தின் தலைவர்கள் அதனைச் சரியான வழியில் செலுத்தத்

தவறிவிட்டார்கள். இப்புதிய உத்வேகத்தை உருப்படியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளுவதற்குப் பதிலாக, வகுப்புத் துவேஷத்தை மூட்டும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டனர். அவர்களுக்கு இது மிகவும் சுலபமாக இருந்தது.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் வருடத்தில் பாதிக்காலம் வேலையில்லாமல் இருப்பதற்குக் காரணம்- இந்தியர்களே எனப் பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டனர். ஆனால், இந்தியர்கள் செய்யக் கூடிய வேலைகளைச் செய்ய, தகுந்த இலங்கைத் தொழிலாளர்கள் அகப்படாத நிலைமையைத் தெளிவு படுத்தாது விட்டனர். போலிக் கல்வி பெற்றதன் காரணமாக உடலை வளைத்து உழைப்பது கௌரவக் குறைவு என்னும் மனப்பான்மை ஏற்பட்டிருந்ததன் பயனாக வேலை யற்றிருந்தோரை, நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் இந்தியனைக் கண்டு பொறாமையும் மாச்சரியமும் கொள்ளத் தூண்டினார்கள்.

இந்நாட்டின் நிலப்பரப்பில் ஐந்தில் மூன்று பாகமே இதுவரை பண்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் ஐந்தில் இரண்டு பகுதியைப் பயன்படுத்தும் முறையில் கவனத்தைச் செலுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழித்துவிடலாம். தினமும் நசிந்து கொண்டு வரும் குடிசைத் தொழிலையேனும் புனருத்தாரணம் செய்ய முயன்றார்களில்லை. பிரசங்க மேடைகளில் ஏறி, சாங்கோபாங்கமாக இலங்கையின் சாபத்தீடு களுக்கெல்லாம் இந்தியனே காரணமெனக் கூறுவதே இலேசான உபாயமாகக் கொண்டார்கள்.

பாகுபாடு நிறைந்த சட்டங்கள்

சென்ற பத்தாண்டுகளுக்குள்ளாக வகுப்புப் பாகுபாட்டை வலியுறுத்தும் அநேகச் சட்டங்களை இந்தியர்களுக்கு விரோதமாக ஒன்றன்பின் ஒன்றாய்ச் சரமாரியாகத் தொடுத்துவிட்டார்கள். இப்பாகுபாடு நிறைந்த சட்டங்கள் சட்டப் புத்தகங்களிலே நுழையத் தலைப்பட்டது வருந்தத்தக்கதாகும்.

இதனால் ஏற்பட்ட பலன்தான் என்ன? இவ்வித துவேஷ பிரச்சாரத்திற்குக் காரணஸ்தர்களாயிருந்தவர்களுக்கு நிறைந்த விளம்பரம் கிடைத்தது. பிரிக்கமுடியாதபடி இணைக்கப்பட்டிருந்த இருநாடுகளுக்கிடையே பெருத்த மனக்கசப்பை ஏற்படுத்தி அத்தியந்த நட்பைப் பாதித்ததே கண்ட பலன்.

இந்தியத் தேசியக் காங்கிரசிடம் நம் முறையீடு

இந்தியத் துவேஷத்தினால் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்துக் கையாளப்பட்ட முறைகள் இந்தியச் சமுதாயத்தினிடையே அச்சத்தை ஏற்படுத்தின. சீமைச் சாமிகளுக்கும் மேன்மை தங்கிய கவர்னருக்கும் இம்முறைகளைப் பற்றிச் செய்த முறையீடுகளெல்லாம் அவலக்குரலாயின. இம்முறைகளை வளரவிடாமல் தடுப்பதை விடுத்து, அம் முறைகளுக்குத் தங்களது ஆசியைக் கொடுப்பதுபோல் தம் அங்கீகாரத்தை அரசாங்கத் தினர் அளித்தார்கள். இந்திய அரசாங்கமும் தம் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை நீக்கச் சிரத்தை காண்பிக்கவில்லை. அத்தருவாயில் இலங்கைவாழ் இந்தியச் சமூகம் உருவற்றுச் சின்னாபின்னப்பட்டுக் கிடந்தது. ஆனால் இந்திய தேசிய காங்கிரசு மகாசபையின் முன் எவ்வளவோ அபாரமான உள்நாட்டு விஷயங்கள் தீர்த்து வைப்பதற்குக் காத்துக் கிடந்த போதிலும், இவ்விதமான சந்தர்ப்பத்தில் இலங்கைவாழ் இந்தியர்களைப்பற்றி இந்தியத் தேசிய காங்கிரசு மட்டுமே கவனம் செலுத்தியது.

இந்தியர்கள் எடுத்ததற்கெல்லாம் இந்திய அரசாங்கத்தையும் இந்திய ஸ்தாபனங்களையும் நாடுகிறார்கள் என்று குறைகூறப்படுகிறது. உண்மையில் இலங்கையின் நலத்தில்

அக்கறையுள்ளவர்கள் அவ்வாறு செய்தல் கூடாதெனவும் கூறப்படுகிறது.

அநீதிக்குமேல் அநீதி தொடர்ந்து இழைக்கப்படுகையில் ஒரு சிறுபான்மை சமூகம் நீதியையும் நிவாரணத்தையும் தேடிக்கொள்ள சாத்தியப்பட்ட வழிகளிலெல்லாம் கடைசி பட்சமாகவேனும் முறையீடு செய்யாமல் இருக்க முடியுமா? எவ்விடத்தில் முறையிட்டாலும் இலங்கை அரசாங்கத்தினிடத்தில் நீதிபெற முயற்சிக்குமாறே வேண்டப்படுகிறது. அம்முறை பலனளிக்காவிட்டால் தனது மக்களை மதியாமல் நடத்தும் ஒரு தேசத்திற்கு மேன்மேலும் தனது மக்களை அனுப்ப வேண்டாமென்றே கோருகிறோம். கடைசியாகப் பொருளாதாரத் துறையில் ஒத்துழைக்க மறுக்கும் படிக் கோருகிறோம்.

இந்நாட்டில் சிறுபான்மையினரைவிடப் பெரும்பான்மைச் சமூகம்வகுப்புவாதத்தில் மூழ்கிக் கிடக்கிறது. ஆனால் இந்தியாவின் தொடர்பு அவ்வித இருளை அகற்றி ஒளியைக் கொடுத்து வருகின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

இந்தியத் தேசியக் காங்கிரசினிடத்தில் முறையிட்டதன் பயனாக, பண்டித ஜவஹர்லால் நேரு இலங்கைக்கு வருகை தந்தார். இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் பரஸ்பர நல்லெண்ணத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே அன்னார் வருகையின் முக்கிய நோக்கம். அவரது பரிசீலனையில் இந்நாட்டில் வாழும் இந்திய சமுதாயம் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இன்றியும் ஒரு பொது ஸ்தாபனம் இன்றியும் இருந்துவரும் நிலைமையானது அன்னாரது மனத்தைப் புண்படுத்தியது. எனவே, இலங்கையை விட்டுத் திரும்புமுன்னர், இலங்கை இந்தியர் காங்கிரசு என்ற மத்திய ஸ்தாபனத்தை நிறுவுவதற்காக ஒரு குழுவை நிறுவிச் சென்றார். இந்த அமைப்பு இதுவரை ஒரு இலட்சத்திற்கு அதிகமான அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கிறது.

ஒருசில மாதங்களுக்குள்ளாக இலட்சக் கணக்கான அங்கத்தினர்கள் சேர்ந்து ஆதரவு பெற்றுவரும் இந்த ஸ்தாபனம்-குறிப்பாக நமது சமுதாயத்திற்குப் பெரும் பணியாற்றவும் இத்தேசத்தின் விமோசனத்திற்குப் பாடுபடவும் முற்படுமெனப் பரிபூரணமாக நம்புவோமாக. இந்த நிறுவனம் வகுப்பு நிறுவனமாகத் தோன்றினும் அப்பெயர் நம் நற்பாதுகாப்பை முன்னிட்டு அளிக்கப்பட வேண்டியதாயிற்று. எனினும், இலட்சியம் உன்னதமானது. எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

இலங்கை-இந்தியக் காங்கிரசின் முதற்கடமை

இந்நாட்டின் இந்தியர்கள் தொகை ஏறத்தாழ எட்டரை இலட்சம். அதிலே ஏறத்தாழ ஆறரை இலட்சம் பேர்கள் தோட்டத் தொழிலாளர்கள். இதனைத் தவிர நகராட்சி (முனிசிபாலிடி) போன்ற உள்ளாட்சி மன்றங்களிலே (ஸ்தல ஸ்தாபனங்கள்) ஏராளமான இந்தியத் தொழிலாளர்கள் உழைத்து வருகின்றனர். எனவே இந்தியச் சமுதாயத்திற்காகப் பொதுவாகப் பாடுபட வேண்டியது இந்த அமைப்பின் கடமையாக இருப்பினும், குறிப்பாகத் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடுவது இந்த அமைப்பின் முதற் கடனாக இருத்தல் அவசியமாகும்.

சில சுயநலமிகள் காங்கிரசு நிறுவனம் முதலாளி இனத்தின் கோட்டையென்றும், முதலாளி இனத்தைப் பாதிக்கும் இலங்கை-இந்திய வாணிகப் பேச்சு முதலியவற்றில் தொழிலாளர்களின் உரிமைகளை விட்டுக்கொடுத்துப் பேரம்பேசித் தமது சுயநலத்தை நிறைவேற்றிக் கொள்ளச் சூழ்ச்சி செய்கிறார்கள் என்றும் விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். இவ்விதப் பொய்ப்

பிரச்சாரங்களினால் ஒருசில காலத்திற்குத் தொழிலாளர்களின் மனத்தில் தப்பெண்ணத்தைப் புகட்ட முடியலாம். ஆனால், எத்தனை நாள்தான் அப்படிச் செய்ய முடியும்?

அமைப்பு யாருக்கும் கைப்பொம்மை அல்ல

இலங்கை இந்திய காங்கிரசு ஒரு சனநாயக நிறுவனம். அதன் உறுப்பினர்கள் பணக்காரர்கள் ஆயினும், ஏழைகள் ஆயினும் இருதிறத்தாருக்கும் அதிலே சம உரிமையுண்டு. எவ்வளவு செல்வாக்கும் பணமும் படைத்தவர் ஆயினும் தனிப்பட்ட எந்தக் கூட்டத்தினரும் (கோஷ்டியினரும்) தம் விருப்பப்படி தங்கள் கைப்பொம்மையாக இந்த அமைப்பை ஆட்டி வைக்க முடியாது. மற்றும் இலங்கையிலுள்ள பணக்கார இந்தியர் ஈவு, இரக்கம், பச்சாதாபம் அற்றவர்களல்லர். அவர்களிடம் நீதியும், நேர்மையும் சூனியம் ஆகிவிடவில்லை. அவர்களும் மற்றத் திறத்திலுள்ள இந்தியர்கள் போல் தொழிலாளிகளாயினும் சகோதர இந்தியனின் நலவுரிமையில் அக்கறையோடுதான் இருக்கிறார்கள். ஏனெனில் அன்னவர்களின் சுயநலத்தைக் கருதியேனும் தொழிலாளி இந்தியனின் நலவுரிமையைக் கருதவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமையில் இருக்கிறார்கள். பணக்கார இந்தியனும் சுய மதிப்போடு இந்நாட்டில் வாழவேண்டுமானால், அந்நிலையைத் தொழிலாள இந்தியனால்தான் பெற்றுத்தர முடியும்.

கங்காணிகள் திருந்த வேண்டும்

கங்காணி முறையைப் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. தோட்டத் தொழிலாளர்கள் கங்காணிகளின் உதவியையும் ஆதரவையும் எதிர்பார்த்த காலமுண்டு. அந்தக் காலத்தில் தொழிலாளிகளைக் கங்காணிகள் தங்களுடைய குழந்தைகள்போல் நடத்தி வந்தார்கள். ஆகையால் எப்பொழுதும் அவனுக்கு உதவி செய்வதற்கு ஆவலுடன் இருப்பார்கள்.

கங்காணிமார்களின் மனப்பான்மை முன்னை நாட்களில் விரும்பத்தக்கதாக இருந்தது. அக்காலத்தில் கங்காணிமார்கள் தொழிலாளர்களைத் தங்கள் குழந்தைகளைப்போல நடத்தி வந்தார்கள். மற்றும் பல வழிகளிலும் உதவியும் அளித்து வந்தனர்.

தொழிலாளர்களுக்கு ஏற்படும் மான அவமானங்களைத் தமக்கே ஏற்பட்டதாக அக்காலத்தில் கங்காணிமார்கள் கருதி வந்தார்கள். ஏதேனும் அவமானம் ஏற்படினும் தொழிலாளர்களின் சார்பிலே கங்காணிமார்கள் போராடியும் வந்தார்கள்.

ஆனால் கங்காணிமார்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே இருந்த அத்தியந்த நட்புமாறி ஒருவரை ஒருவர் ஐயத்துடன் நோக்கத் தலைப்பட்டு விட்டனர். சொந்தச் சம்பாத்தியமே பெரிதெனக் கருதிக் கங்காணிமார்களில் பலர் தொழிலாளர்களுக்குப் பாதகமாகவும் முதலாளிகளுக்குச் சாதகமாகவும் தங்கள் போக்கை மாற்றத் தலைப்பட்டு விட்டார்கள்.

இக்காரணத்தால் கங்காணி முறையைப் பற்றியே பெருந்துவேஷம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்நிலையிலேனும் கங்காணிமார்கள் தங்கள் போக்கைத் திருத்திக் கொண்டு தொழிலாளிகளுடன் ஒன்றுசேர்ந்து, தங்கள் நிலையைக் காலதேச வர்த்தமானத்திற்கேற்ப மாற்றிக் கொள்வது அவசியம் என்பதை உணர வேண்டும்.

தோட்ட முதலாளிகளைக் காலம் மாற்றும்

தோட்டக்காரர்கள் சொற்பக் காலத்திற்கிடையில் தங்கள் போக்கைக் காலதேச வர்த்தமானத்திற்கேற்றவாறு திருத்தி அமைத்துக் கொண்டு விட்டார்கள். இன்றைய இராமசாமி விழித்துக் கொண்டிருக்கிறான் என்பதையும், தன் உரிமையை அடைவதற்கு அவன் துணிந்து விட்டால்,

அதனைச் சாதிக்கும் சக்தி அவனிடம் இருக்கிறது என்பதையும், பொருள் திரட்டும் இயந்திரமாக இனி அவனைப் பயன்படுத்த முடியாது என்பதையும் உணரத் தலைப்பட்டு விட்டார்கள் தோட்ட முதலாளிகள்.

தொழிலாளர்களுக்குச் சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் நடுக்கண்ட நியாயம் வழங்கப்பட வேண்டுமென்பதே எமது அவா. தொழிலாளர்கள் இதனைப் பெற நாம் செய்யும் முயற்சிகளுக்குத் தோட்டக்காரர்கள் ஆதரவளிப்பார்களென நம்புகின்றேன்.

இன்னமும் சில தோட்டக்காரர்கள் காலப்போக்கை அறியாதவர்களாக இருக்கிறார்கள். இராமசாமியினிடத்தில் காணப்படும் மாற்றங்களை அறிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலை அதிக நாள் நீடிக்க முடியாது.

இந்தியத் தொழிலாளி சிந்திய வியர்வைக்கு ஒட்டுரிமை தேவை

ஒட்டுரிமை சம்பந்தமாகத் தோட்டக்காரர்கள் தமது தொழிலாளர்களைப் பதிவு செய்ய ஒரு விதமான ஊக்கமும் காட்டாதது ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் இது விஷயத்தில் போதிய ஊக்கம் காட்ட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்தியத் தொழிலாளிக்கு வழங்கப்பட்டுள்ள ஒட்டுரிமையைப் பறிமுதல் செய்யப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. இன்னும் செய்யப்பட்டு வருகின்றன. வருடமொன்றுக்கு ரூபாய் 600 வருமானம் உடையவர்களுக்கு ஒட்டுரிமை அளிக்கப்படுமாம். இந்நாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக்கி இன்றும் அல்லும் பகலும் உழைத்துவரும் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை கிடையாதாம்.

இந்நாட்டில் வசித்த கால எல்லை ஒன்றே ஒட்டுரிமை பெற யோக்கியதாம்சமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்தியத் தொழிலாளி இந்நாட்டுக்கு ஆற்றிய அருந்தொண்டையும், உழைத்துத் தந்த செல்வத்தையும் உத்தேசித்தேனும் இவ்வாறு செய்வது அரசியல்வாதிகளின் கடமையாகும்.

துவேஷ உணர்ச்சி பலிக்காது

இந்தியன் பரந்த நோக்கத்தினின்று மாற்றமடைந்ததற்குக் காரணம் பெரும் பான்மையோர் அவனிடத்தில் காண்பித்த மனப்போக்கேயாகும். இந்தியர்கள் தமக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய உரிமைகளுக்காக மட்டுமே போராடுகிறார்கள். அவர்களிடத்தில் நீதியாக மட்டும் நடந்து கொண்டிருந்தால் எவ்வளவு தூரம் இந்நாட்டின் நன்மைக்காகப் பாடுபட்டிருப்பார்கள் என்பதை எளிதில் உணரலாம். இந்நாட்டின் நலனில் அவர்களுக்குரிய அக்கறையை அறிந்து கொள்ளலாம். பரஸ்பர நல்லெண்ணமும், நேசப்பான்மையும் மீண்டும் நிலவுமானால் மிகுந்த நன்மை பயக்கும். ஆனால் துவேஷம் நிரம்பிய, சரமாரியாக இயற்றப்பட்ட சட்டங்களையெல்லாம் ரத்து செய்தாலன்றி மீண்டும் அன்னியோன்னியமாக வாழ்வது பெரிதும் சிரமமாகும். ஆயினும் பெரும்பகுதி சிங்கள மக்களான கிராமவாசிகளும் படித்த மாணவர்களும் இன்னும் அன்னியோன்னியமாகவே இந்தியர்களோடு பழகி வருகிறார்கள். இந்தியத் துவேஷ உணர்ச்சியைப் பரப்புவது அவர்களிடத்தில் பலிக்காது.

கடைசியில் ஆறு கடலுடன் கலப்பது போல்

தலைவர் அவர்களே! இப்பொழுது இம் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி வைக்கும் பொறுப்பை மகிழ்ச்சியுடன் தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒரு சிறு ஆறு உபநதிகளுடன் சேர்ந்து பெரிய பிரவாகமாக மாறிக் கடலுடன் கலப்பது போல இலங்கை இந்தியர் காங்கிரசு தினே தினே பலம் பெற்று வளர்ந்து, இறுதியாக எல்லாச் சமூகங்களையும் கொண்ட இலங்கையின் தன்னலத்திற்குப் பாடுபடக்கூடிய ஸ்தாபனத்துடன் சேர்ந்துவிட ஈசன் அருள்புரிவாராக. வந்தே மாதரம்! அல்லாஹு அக்பர்! ❑❑❑

"தலைவர் தொண்டமான்"
என்னும் நூலிலிருந்து.

With best compliments from :



HOLIDAY INN
SRI LANKA



மூனாப்பு புதூர் தந்த முழமத்



சிங்கை நகர்வாழும் சீரார் தமிழரெலாம்
உங்கள் பணிகண் டுவப்பினிலே-தங்கும்
பெருவிருது கொள்ளப் பிரியமுடன் உம்மை
வருகவெனச் சொன்னார் மகிழ்ந்து.

பண்டு தமிழ் மக்கள் பவளவிழாக் கண்டவுனைக்
கொண்டழைத்தார் அன்பு கொழித்துவர- எண்டிசையும்
உன்பெருமை எட்ட உனக்குவிழா இங்கெடுத்தோம்
தன்பெருமை கண்டதனால் தான்.

தானாகி எங்கள் தலைவனாய் இன்றெமக்குக்
கோனாகி உள்ளக் குறையகற்றித்-தேனான
வாழ்வளித்த வள்ளல் மருவிலாத் தொண்டமான்
தாழ்வகற்றும் அண்ணலெனச் சாற்று.

பூத்தமலர் கொண்டுனக்குப் பூமாலை போட்டாலும்
காத்தடித்தால் வாடிக் கருகுமென-நாத்தொடுத்த
பாமாலை வெண்பாவில் பாடிக் கொடுக்கின்றேன்
பூமாலை எனறுனக்குப் போட்டு.

கவிஞர் **வி.இக்குவனம்**

With best compliments from :

சோழர் குலத் தோன்றல்
சுந்தரத் தொண்டமான்
வாழிய நீடூழி!

LALITHA JEWELLERY WORKS LTD.,

105, SEA STREET,
COLOMBO.

என்றும் உனது புகழ் இந்தியரின் நெஞ்சத்தில்
நின்று நிலவட்டும் நீடூழி–கன்றுதவும்
வாழையென உன்தொண்டு மன்றில் நிலைக்கட்டும்
தாழைமணம் போலத் தனித்து.

பேசுந் திறன்படைத்தோய் பின்னடையா நெஞ்சுடையோய்
கூசும் இழிச் சொற்கள் கூறாதோய்–மாசு
மருவில்லா உன்தூது மண்புகழும் வண்ணம்
உருப்பெறுதல் உண்மை உணர்.

என்றும் இலங்கைவாழ் எல்லா இனத்தவரும்
நன்றாம் உடன்பிறப்பாம் நட்புறவில்–குன்றாது
மூளும் பகைவிலக்கி முந்தும் புதுநட்பில்
ஆளுவகை நீசெய் அறிந்து.

மாற்றறியாப் பொன்னனைய மன்னுதமிழ் மக்களெலாம்
ஊற்றனைய நல்லுழைப்பை உண்மையுடன – போற்றிவரத்
தென்னிலங்கை நாடு செழிப்படைந்து முன்போல
நன்னிலையைக் கொள்க நயந்து.

தோட்டத்து மக்கள் துயரறிந்த தூயவனே!
தோட்டத்து வாழ்வியலைத் துய்த்தவன்நீ – நாட்டத்தில்
பட்டாடை போற்கருமம் பண்பாடு மிக்கொழுகித்
திட்டமுற நிற்பவன்நீ தேர்.

தானென்னும் ஆணவத்தின் சங்கை நெறித்தவனே!
நானென்னும் எண்ணமிலா நாயகனே – தேனென்னும்
நல்லகுணம் கொண்டவரே நான்காணும் தொண்டமான்
வல்லவரை நல்லவரை வாழ்த்து.

தொல்தமிழர் கூட்டத்தின் சூதில்லா நெஞ்சினன்
வெல்தமிழைப் போற்றும் வினைஞன்நான் – மல்குபுகழ்
புத்தூர் உலகீந்த புண்ணியனே என்னிதயப்
புத்தமுதும் நீயாம் புகல்.

புகலரிய கோட்டியூர்ப் பூமான்பேர் கொண்டோய்
இகலறுத்தே ஓங்குபுகழ் ஈட்டிப் – பகலிரவு
பாராப் பணியாற்றிப் பண்பாடு போற்றிடும்நீ
சீரான செல்வமெனச் செப்பு.

செல்வம் மிகுந்திருந்தும் சேரிடம் நன்கமைந்தும்
வெல்வம் எனுந்திண்மை மிக்கிருந்தும் – அல்லவற்றை
நாடாத தொண்டமான் நல்ல தலைவனெனப்
பாடாத உள்ளமெல்லாம் பாழ்.

மிகுதத புகழுடையோய் மிக்கூறும் அன்பு
புகுத்தும் உளமுடையோய் போற்றும் – வகுத்த
நெறிமுறையில் மாறா நிறைமனத்தோய் வாழ்வின்
குறியுடைநீ வாழ்க கொழித்து.

கொழிக்கும் பவளவிழாக் கொண்டெடுத்தோம் சிங்கைப்
பழிப்பில் இலக்கியத்தின் பாங்கர் – அழிப்பில்லா
நூறாண்டு வாழ்ந்து நுவலரிய சேவையிலே
சீராண்டு கொள்க சிறந்து.

சீராண்டு செல்வச் சிறப்பாண்டு புத்தூரின்
பேராண்டு பூணும் புகழாண்டு – ஏராண்ட
எல்லையிலா நஞ்சை எழிற்புஞ்செய்க் காடுகொண்ட
செல்வன்நீ சற்றே சிரி.

நீயுள்ளாய் என்று நினைக்கின்ற நெஞ்சமெலாம்
தாயுள்ளாள் என்ற தகவுபெறும் – தோயுமன்பில்
போயுறையும் பாசப் புரிந்துணர்வில் உன்குடும்பம்
கோயிலெனும் கள்ளர் குலம்.

குலந்தழுவி வந்த குடிதழுவிப் போற்றும்
நலந்தழுவும் பண்புடனே நாளும் – வலந்தழுவும்
கொண்ட இனந்தழுவும் கோதை மணவாளன்
தொண்டமான் நம்மருந் தூண்

தொண்டின் திலகமே தொண்டமான் என்னும்பேர்
கொண்ட குணக்குன்றே கோமளமே – அண்டுபவர்
துன்பந்துடைக்கும் துணிமனத்தோய் உன்வரவு
இன்ப வரவென்பேன் இங்கு.

இன்னலெலாம் போயொழிந்து இன்ப நலங்கொழித்துக்
கன்னலென நாளுங்களிப்பரும்பிப் – பொன்னனைய
மாசுபடா வாழ்வில் மருவகலாத் தொண்டமான்
தேசுபுகழ் கொண்டவனென் கோ.

கோட்டியூர் காத்துக் குலந்தரும் நாரணன்பேர்
பூட்டிய மாதவனே பொன்மனத்தோய் – ஈட்டுபுகழ்
மூனாப் புதூர் தந்த முழுமதியே நின்வரவைத்
தேனாகக் கொண்டோம் திளைத்து.

திளைத்தேன் மிகையன்பில் சேர்ப்பித்தேன் நெஞ்சம்
விளைவித்த பாவெழுதி மேன்மேல் – களைப்பில்லாப்
பக்குவத்தால் வணக்கம் பண்பமையக் கூறிவிடை
இக்குவனம் பெற்றேன் இனித்து.

With best compliments from :

Lanka Polythene Industry

Manufacturers of

Garment Packing Bags, Films Printed and Plain
Carrier Bags and Shopping Bags Etc.

32-A, Cyril C Perera Mawathe
Colombo - 13. Sri Lanka.
Phone : 440326 - 8
fax : 941 44 0325
MAHAWELI CE 22078

வாழ்க
தொண்டமான்!



சூழ்க
நன்னலம்!



நிமிர்ந்து நிற்பதில் நெப்போலியன்

கோட்டையின்மேல் மட்டுமல்ல வடக்கே நிற்கும்
குளிர்இமயம் மீதினிலும் கொடியை நட்ட
வேட்டைமிகு வீரர்களின் தாய்மண் மீதில்
வீரர்கள் எண்ணற்றோர் வந்து போந்தார்
வேட்டைநாயை முயல்துரத்தும் வீரமிக்க
வியன்பூமி பசும்பொன்மா வட்ட மேயாம்
தோட்டத்துத் தொழிலாளர் காவல் தெய்வம்
தொண்டமானும் கருணாக ரன்வம் சம்!ஆம் !

சித்தம்மை குமாரவேலர் நல்ல பேற்றால்
சிந்தனைவேல் கொண்டமுத்து மகவாய் வந்தார்
கத்துகின்ற கடல்தாண்டிக் கவலை யுற்ற
கனித்தமிழர் வாழ்விற்கு எல்லைக் காவல்
கொத்துமலர்ப் பாட்டாளி இனத்தைத் தாங்க
கேடயமாய் வந்துதித்தார்! கவலை எல்லாம்
முத்துவிளை கடல்தன்னில் கொட்டி விட்டு
முயற்சியையே பட்டமாகக் கட்டி விட்டார்!

பேதத்தைக் கருதாத பெருமை வேந்தர்!
புறமொன்று பேசாத நேர்மைச் சீலர்!
சோதரர்கள் துன்பத்தைத் தாங்கு கின்ற
சுயமான தோணியானார்! தமிழில் கூறும்
வேதமொன்றே உயிரென்று தொண்டு செய்தார்
வெறும் பேச்சுத் தலைவரில்லை ! வெற்றி வீரர்!
பாதகங்கள் தமிழனுக்கு வருமே யென்று
பாட்டாளி காங்கிரசை நிறுவித் தந்தார்

பெண்ணினத்தைப் பேணாத நாடு என்றும்
பெருமைமிகு ஏற்றமொன்றைப் பெற்ற தில்லை!
மண்ணிலிந்த மானிடத்தைப் படைத்த தற்கு
மங்கையர்க்குப் பெரும்பங்கு உண்டு என்போம்!
கண்ணெனவே அவர்நலத்தைக் கருத்தில்கொண்டு
காளையர்க்கு நிகராக உரிமை தந்தார்!
பண்ணெழுதிப் பூவையரைப் போற்றச் சொன்னார்!
பாவையரின் முன்னேற்றம் பேணச் சொன்னார்!

நிமிர்ந்துநிற்ப திலேநெப்போ லியன்போல் ஆவார்!
நெஞ்சுரத்தில் கட்டபொம்மன்! பகைவர் தம்மை
உமியெனவே செய்வதிலே அஞ்சா நெஞ்சன்!
உயிர்புலித்தே வன்திண்மை! சுற்றும் இந்த
பூமியிலே மனிதாபி மானம் தன்னில்
புனிதகாந்தி பதிப்பிவரே என்பேன்! இங்கு
நாமிவரைப் பாட்டினிலே போற்றிப் போற்றி
நாளெல்லாம் நீடுழி வாழ்க என்போம்!

நிலமங்கையின் நெற்றித் திலகத் தைப்போல்
நீள்புள்ளி வடிவந்தான் இலங்கைத் தீவு!
காலமகள் கட்டளையால் பிழைக்கச் சென்ற
கண்ணான தமிழினத்தைக் காத்து நின்று
பாலமெனத் தமிழுறவை இணைத்து வாழும்
பைந்தமிழர் இதயத்தின் துடிப்பே ! மூச்சே !
நீலவானும் கடலோடு மக்கள் வாழும்
நிலம்வாழும் வரைஇவரும் வாழ்வார் ! வாழ்க !

கவிஞர் கருவூர் கோ.செல்வம்

இலங்கைக்குத் தமிழகம் ஈன்றெடுத்தளித்த
இணையிலாத் தொழிலாளர் திலகம்
தொண்டமான் முத்துவிழா மலர் –ஞானப்பூச்
செண்டாய் மணக்க எங்கள் நல்வாழ்த்துகள்!

ARASU EMPORIUM
அரசு எம்போரியம்

147, Dunlop Street, Singapore - 0820
Leading Importers of Indian Handicrafts

Tele.: 3376921 / 3365822

Fax : 3398860

எவ்விழாவிலும் தொண்டமான் முத்துவிழா எனும்
இவ்விழா சிறக்க வாழ்த்துகிறோம்

AR
அன்பு உணவகம்
ANBU RESTAURANT

A Place where you can have all kinds of Indian dishes
at a reasonable price.

158 Serangoon Road
Singapore 0821

Tel. : 2944800
2934938



சமுதாய சர்வகலா சாலையின் பட்டதாரி

அதிகாரபலத்தினாலும், பணவலிமையினாலும் ஒரு தலைவனாக வருவதைவிட, சமுதாய மக்களின் இதய உணர்வுகளை இனங்கண்டு, அவற்றின் தேவைகளை நிறைவேற்றி, சமுதாய நெஞ்சங்களைக் கொள்ளை கொள்வதன் மூலம் ஒரு தலைவனாகத் திகழ்வதே சிறப்புடையதாகும்.

இந்த வரைவிலக்கணத்திற்கு நம் கண் முன்னே தென்படும் ஒரே தலைவர், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பெருந்தலைவரும், இலங்கை மந்திரி சபையின் சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவருமான சுற்றுலாத்துறை, கிராமத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களேயாவார்.

பெருந்தலைவர் தொண்டமான்-தான் தலைமை தாங்கிக் கடந்த சுமார் 40 ஆண்டுக் காலமாக வழிநடத்தும் இந்திய வம்சாவளி மக்கள் சமுதாயத்தின் குறைபாடுகளையும் தேவைகளையும் -அவர்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளையும் தெரிந்து வைத்திருக்கின்றார் என்பதைவிட, புரிந்து வைத்திருக்கின்றார் எனச் சொல்வதே பொருந்தும்.

இதற்குக் காரணம் என்ன?

தலைவர் தொண்டமான் சராசரி அரசியல் தலைவர்களைப் போன்று காரியாலய அறைக்குள்ளும், கட்சித் தலைமையகத்தினுள்ளும் நாடாளுமன்ற கட்டடத்தினுள்ளும் மட்டுப் தலைவராகத் 'தொழிற்படாமல்' மக்கள் சமாஜத்தோடு ஒன்றிணைந்த மக்களின் உணர்வுகளோடு ஒன்று கலந்து -மக்கள் சுகதுக்கங்களை ஒரு பார்வையாளர் வரிசையில் இருந்து பார்த்து ரசிக்காமல், அவற்றின் பங்காளியாக ஒன்றித்த ஒருவராக வாழ்வதேயாகும்.

இந்தக் கூற்றுக்குத் தலைவர் தொண்டமானின் ஐம்பது வருட தொழிற்சங்க-பொதுத்துறை அரசியல் சார்பான வாழ்வியல் சரிதையிலிருந்து எத்தனையோ சம்பவச் சான்றுகளைச் சுட்டிக் காட்ட முடியும்.

பெருந்தலைவர் தொண்டமான் தலைமை தாங்கி நடத்திய அரசியல் போராட்டங்கள் பல உள. அவற்றுள் ஆரம்ப காலத்தில் இடம்பெற்ற கலே பொக்க தோட்டப் போராட்டம் மிக முக்கியமானது. அப்போராட்ட நிகழ்வுகளைச் சற்றே திரும்பிப் பார்ப்போமாக!

இ.தொ.கா.வின் உறுப்பினரான மாயாண்டி என்ற தொழிலாளியை ரோஸ் எனும் இரக்கமற்ற வெள்ளைக்காரத் தோட்டத்துரை வேலையிலிருந்து நீக்கிவிட்டான்.

'மாயாண்டியை மீண்டும் வேலைக்கு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இ.தொ.கா.தோட்டத்துரைமார் சம்மேளனத்துடன் எவ்வளவோ வாதாடியும் பலன் கிட்டாமையினால், தலைவர் தொண்டமான் இவ்விவகாரத்தைக் கையேற்றார்.

ஏ.பி.இராமன் சிங்கை

காவியத் தமிழாய்ப் புகழ்மேவி,
கலங்கரை விளக்காய் ஒளிவீசி,
ஓவியச் சுடராய் உயர்வெய்தி
உலகத் தலைவராய் நடைபோட்டு
சோவியத் போன்ற சோசலிசச்
சொர்க்க பூமியை உருவாக்க
ஆவியும் உடலும் ஈகின்ற
அருமைத் தலைவா! நீ வாழி!

JEKATHA VIDEO CENTRE

SPECIALISED IN VIDEO SPARES & SERVICE

21/1, Narasingapuram Street, First Floor,
Mount Road, Madras - 600 002.
Phone : 835138
Proprietor : **S.Chandrasekar**

✧★✧

JEKATHA ELECTRO INDUSTRIES

IMPORTERS & MANUFACTURERS OF AUDIO & VIDEO SYSTEMS

21/3, Narasingapuram Street, First Floor,
Mount Road, Madras - 600 002.
Phone : 835138
Chief Executive : **S.Chandrasekar**

எட்டு டிவிஷனைச் சேர்ந்த சுமார் 5000 தொழிலாளர்கள் இது தொடர்பாக வேலை நிறுத்தத்தில் குதித்தனர். தொழிலாளருக்குக் கொடுக்கப்பட்டு வந்த அரிசி ரேஷன் அவ்வேலை நிறுத்தத் துடன் நிறுத்தப்பட்டு விட்டது. இதற்காகத் தலைவர் தொண்டமான் தடுமாறிப் போய் விடவில்லை. அப்போதைய உணவு அமைச்சர் திரு. பிலிப்குணவர்தனா மூலம் தலைவர் தொழி லாளர்களுக்கு அரிசி கிடைப்பதற்கு வழி பண்ணினார்.

ஆனால் தொழிலாளர்கள் அரிசி வாங்க, பணத்திற்கு என்ன செய்வது? கிழமைக்கு 5000 ரூபா அரிசி வாங்கத் தேவைப்பட்டது. அந்த நேரத்தில் 5000 ரூபா என்றால் இந்த நேரத்தில் அது 5 லட்சம் ரூபாவுக்குச் சமனாகும். இ.தொ.கா.வின் பண நிலையும், திருப்திகரமானதாக இல்லை. தலைவர் தொண்டமான் கிஞ்சிற்றும் தயங்கவோ தடுமாறவோ இல்லை. அரிசியும், இதர பொருட்களும் வாங்கு வதற்கு, 5000 தொழிலாளர்களுக்கும் தமது சொந்தப் பணத்தை வாரி வழங்கினார்.

இந்த இடத்தில்தான் தலைவர் தொண்டமான் சராசரி தலைவர்களின் வரிசையை விட்டும் தாண்டி வந்து, சமுதாய மக்களின் சந்தோஷ-சங்கட சம்பவங் களில் சரிபாதி பங்கேற்று, 'நானும் உங்களில் ஒருவன்' என்ற மன நிலையின் உச்சியில் ஒரு மக்கள் தலைவராக உயர்ந்து நிற்கின்றார்.

மக்களின் துயர் துடைப்பதற்காக-நீதி நிலை நாட்டப்படுவதற்காக எதையும் செய்யப் பின்னிற்காத பெருந்தகை நம் தலைவர் தொண்டமான் இதற்கோர் உதாரணம். எதிர்பாராத இந்த நிகழ்வினால் மனித நேயம் மிக்க தலைவர் தொண்டமான் நெகிழ்ந்து போனார்.

இறுதியில் தொழிலாளர்களுக்கு வெற்றி கிடைத்தது. தன் நண்பரின் முடிவுக்காக தலைவர் தொண்டமான் வருந்தினார். திரு.வீரப்பபிள்ளை யின் குடும்பத்துக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்தார். அவர் மனைவி விரும்பியபடி, அவரைத் தாய் நாடான இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதற் கான வழி வகைகளையும் செய்துகொடுத்து செலவினங்களையும் ஏற்றுக் கொண்டார். அதே வேளை தன்னை நம்பியிருந்த தொழிலாளர்களின் வாழ்வில் ஏற்பட்ட விடிவுக்காக ஆறுதல் அடைந்தார்.

இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களின் துயர் துடைப்பதில், கஷ்டத்தைப் போக்குவதில், நஷ்டத்தை ஈடுகட்டுவதில் நம் தலைவர் தொண்டமான் தொழிலாளர்களின் மத்தியிலே இருப்பார்.

அவர்களைவிட்டுத் தூர விலகி ஓரமாகிப் போய் நிற்க மாட்டார். இந்த மனநிலை நம் தலைவர் தொண்டமானுக்கு ஏன் வந்தது?

நம் முன்னே நாலாவிதமான தலைவர்கள் நடமாடுகின்றனர். இவர்களில் பிரச்சினைகளைக் கண்டு பின்வாங்குவோரும் உளர். போராட்டம் என்றதும் அறிக்கை விட்டுவிட்டு, தலைநகர் கொழும் பில் பங்களாவில், அல்லது நட்சத்திர ஹோட்டல் குளு குளு அறையில் ஓய்வெடுப்போர் உளர், வேலை நிறுத்தம்-மறியல் என்று திகதி தீர்மானிக்கப்பட்ட தினத்தில் வெளிநாடு ஒன்றில் நடைபெறுவதாகக் கூறப்படும் மாநாட்டில் பங்கேற்கச் சென்று விடும் தலைவர்களும் உளர். இவர்களின் நடுவே பிரச்சினைகளிலும், போராட்டங்களிலும், மறியல்களிலும் துயருறும் தொழிலாளர்களின் நலன் ஒன்றில் மட்டுமே நாட்டம் கொண்டு அவர்களுக் காக வாழ்வதையே, "தவம் தந்த வரமாக" எண்ணி வாழும் தலைவர் தொண்டமான் வித்தியாசமானவர், வேறுபட்டவர்.

கருவிலே திருவுடையவர்களாக உலகில் ஒரிருவர்தான் பிறப்பதுண்டு. நம் தலைவர் தொண்டமானும் அத்தகைய ஒருவரே. பிறவி யிலேயே தலைமைத்துவச் சிறப்பு கொண்டு, அதற் கான தகுதிகள் அவரை நாடி வந்து ஒட்டிக் கொள்ளும் விதமாக சமுதாய மக்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தவர், வாழ்ந்து வருபவர் தலைவர் தொண்டமான் எனில், அஃது மிகையல்ல.

மக்களின் -தொழிலாளர்களின், இ.தொ.கா. உறுப்பினர்களின் சுக-துக்கங்கள் என்னென்ன? -அவற்றின் ஆழ அகலம் யாவை? அவை ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது? என்பவற்றை சமுதாயம் என்ற சர்வ கலாசாலையில் கற்றாய்ந்த ஒரு பட்டதாரியே தலைவர் தொண்டமான்.

இவர்-கல்வித்துறை சார்பான பல்கலைக் கழகத்தின் படிகளை எண்ணியறியாதவர். எனினும்-சமுதாயத்தாரின் வாழ்நிலைப் படித்தரங் களை எண்ணிப் பார்த்தவர். இதனால் இவருக்கு சமுதாயத்தின் வளைவு-சுழிவும், ஏற்ற-இறக்கமும் நன்கு பரிச்சயம். இதன் விளைவாய் இவரால் சமுதாயத்தின் நோயறிந்து நிவாரணஞ் செய்ய முடிகிறது. இந்த இதய உணர்வறியும் குணத்தினால் இவரால் உண்மையான சமுதாய சேவை செய்ய முடிகிறது. இவரின் சேவை சோபிக்கிறது. இவரது சேவையினால் கிட்டும் பயன் வரலாறாகிறது. அந்த வகையில் இவர் ஒரு சமுதாயப் பட்டதாரியே. ❑

முத்துவிழா நாயகர் தொண்டமான் ஒரு முழுநிலா!
கத்துகடல் இலங்கை மக்களின் கற்கண்டுப்பலா!
மல்லாண்ட புயத்தார் பல்லாண்டு வாழியவே!

ROYAL

SECURITY MANAGEMENT SERVICES PTE. LTD.

Block 1001 Woodlands Industrial park D
#04-77, Singapore 2573.

Telephone : 3687890 (3 Lines)



Fax : 3685051

பண்டைநாள்முதல் –புகழ்
கொண்டவர் ஒருவர்
உண்டென்றால் இலங்கையில்
தொண்டமான் ஒருவரே ! –நல்லோர்
கொண்டாடும் தலைவர்
என்றென்றும் வாழ்கவே!

KANNU RESTAURANT

JURONG INDUSTRIAL ESTATE

SINGAPORE

ஆர்.பி. கண்ணு–சரோஜா தம்பதிகள்



நிலம்போல் பொறைசால் உழைப்பாளி
நெஞ்சம் குளிரும் மழையென்பான்
நெருப்பாய்க் காயும் போராளி
நின்று எரியும் விறகென்பான்

மலைபோல் உயர்ந்த மேன்மக்கள்
வணங்கும் தலைவன் என்பார்கள்
மாண்பில் உயர்ந்த சான்றவர்கள்
மருவும் துணைவன் என்பார்கள்

கலையில் சிறந்த கண்ணுடையார்
காக்கும் தோழன் என்பார்கள்
கஞ்சன்கூட இவர்எளிமை
கண்டு நெஞ்சம் பதைத்திடுவான்

நிலையில் திரியா தடங்குகிற
நேயர் தொண்ட மான்முத்தை
நினைக்கும் மக்கள் உள்ளத்தில்
நிலைக்கும் தெய்வம் என்போமே!

'மக்கள் தலைவன்' என்பார்கள்
வாக்கின் உரிமை வாங்கியதால்!
'வாழ்வின் துணைவர்' என்பார்கள்
மலய இளைஞர்க் குதவியதால்!

'சொக்கத் தங்கம்' என்பார்கள்
'தொண்ட மான்நல் நிதி'யத்தால்
துறக்க வாழ்வு என்பதிவர்
சொல்லிப் பெற்ற 'குடியுரிமை'!

சிக்கல் தீர்க்கும் நடுவர்போல்
சேர்த்தார் காணிப் பங்கீடு!
தேடா துதவும் தெய்வமெனத்
தேடி உதவும் பெருந்தலைவர்!

சொக்கும் தமிழர் உளக்கவசம்!
தோழர் தொண்ட மான்முத்தை
துலங்கும் ஈழச் சிப்பியிலே
சுடரும் இறைவன் என்போமே!

முழங்கும் தமிழைத் தேசீய
மொழியாய் ஈழம் கொளச்செய்தார்!
முறையில் லாத சாதிமதம்
முளையில் கிள்ளி அரவணைத்தார்!

வழங்கும் பண்பின் இளந்திரையன்
மரபில் வந்த மாண்பாளர்
மறவர் சீமை 'கருப்பையா'
மனைவி 'சித்தம் மை'மகனார்

அழுங்காத் தெம்பு அறிவாற்றல்
அசையா வெற்றி ஒருபோக்கு
அரசி யல்வான் செம்பரிதி!
அடக்கக் குளத்தின் புரட்சிப்பூ!

எழுங்கால் ஏறும் சோர்கின்ற
ஏமத் தொண்ட மான்முத்தை
ஈழத் தமிழர் உள்ளத்தில்
இனிக்கும் கடவுள் என்போமே!

முனைவர் செங்கைப் பொதுவன்

With best compliments from :

In the World of Surveying You've seen the Crowd now meet the Leader!

SOKKIA

ESTD 1920

SINGAPORE PTE. LTD.

A Sophisticated workshop manned by
Technically Trained Professionals
from Japan

- Total Stations
- EDM Equipment
- Automatic Levels
- Levelling Staves

We simply give the best our globe can offer

Sole Agents

ARTECO AGENCIES

16, Abdul Jabbar Mw, Colombo 12,
117,119, Messenger Street, Colombo 12.
Tel : 435136, 28326



தூரணிக்கே வழி காட்டும் தகுதியாளர்!

முத்துராம லிங்கனாரின் மாவட்டத்தில்
மூனாபுதூர் என்கின்ற ஊரில் வாழ்ந்த
முத்தமிழின் தொண்டரான கருப்பை யாவின்
மூர்த்தியாகத் தோன்றியநீர் இலங்கை சென்றீர்!
எத்திசையும் புகழ்மணக்க எழுச்சி யுற்றீர்!
எவருக்கும் அஞ்சாத நெஞ்சம் பெற்றீர்!
கொத்தடிமை போல்வாழ்ந்த மக்க ளுக்குக்
குலப்பெருமை எடுத்துரைத்து விழிக்க வைத்தீர்!

தரமிக்க தொழிலாளர் தலைவ ரானீர்!
தணியாத ஆர்வத்தால் தொண்ட ரானீர்!
உரமிக்க உள்ளத்தால் உறுதி யோடு
உண்மைக்காய் வாதாடி வெற்றி கொண்டீர்!
அரசியலின் தத்துவங்கள் அனைத்தும் கற்று
அத்துறைக்கே வழிகாட்டும் விளக்கா யானீர்!
தரம்குறையாத் தலைவராக வாழ்ந்து காட்டி
தகுதிமிக்க தலைவர்களின் தலைவ ரானீர்!

தொழிலாளர் முன்னேற்றம் அடைவ தற்காய்த்
துவளாமல் துயிலாமல் தொண்டு செய்து
எழிலார்ந்த இலங்கைவாழ் மக்கள் நெஞ்சில்
இடம்பிடித்த தொண்டமான்நீர் தொண்ட ரானீர்!
அழியாத புகழ் கொண்டீர் அகிலம் எங்கும்
அறிவாளர் போற்றுகின்ற அறிஞ ரானீர்!
மொழிகாக்க அறப்போரில் ஈடு பட்டீர்!
முழுமையான வெற்றி பெற்றீர் அமைச்சரானீர்!

கிராமத்துக் கைத்தொழில்கள் வளர்ச்சி பெற்றுக்
கீர்த்தியுற வைத்தவர் நீர்! நாட்டுக் காக
அரும்பாடு பட்டுநின்றீர்! அதனால் நும்மை
அனைவருமே பாராட்டும் புகழைக் கொண்டீர்!
பெரும்புகழே கொண்டாலும் எளிமையோடு
பிறர்துயரைத் தன்துயராய் நினைந்து நீக்கித்
தருமத்தைச் செய்வதிலே பாரி யானீர்!
தரணிக்கே வழிகாட்டும் தகுதி கொண்டீர்!

முனைவர் இரா.மணியன்

WELDON TRAVEL & TOURS PTE. LTD.

STPB NO. TA 695)
320 SERANGOON ROAD # 04-21 SERANGOON PLAZA
SINGAPORE 0821. TEL: 2919627 (3 LINES)
FAX: (65) 2939337



மலையகம், தமிழர்க்குத் தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக்கையில்
இலகு தொண்டமான் ஏந்தல் நீ தோன்றினாய்!
உன்னை வாழ்த்துகிறோம்! வணங்குகிறோம்!

"உறவுகள் மலரும் உணர்வுகள் மையம்"

இந்திய – மலேசியப் பண்பாட்டுக் கழகம்
INDO - MALAYSIAN CULTURAL ASSOCATION

9, சிவராமன் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005. தமிழகம்.
தொலைபேசி என் : 841758

தலைவர்
புலவர் இளஞ்செழியன், எம்.ஏ.,

செயலாளர்
ஆர். ராஜ்மோகன், எம்.ஏ.எம்.எட்..

4 த்தனும் காந்தியும் போனது எங்கே?



இலங்கை யென்றால் எத்தனை சிக்கல்
எழுந்தே எரிகிறது
எடுத்துச் சொல்ல முடிய வில்லை
என்றே தெரிகிறது
கலங்கு கின்ற மக்கள் கண்ணீர்
கடலாய் ஆகிறது
கடின மான கால மெல்லாம்
கரையப் போகிறது

உழைக்கும் மக்கள் உருக்கு லைந்தால்
உண்மை அழியாதோ?
உண்மை யெல்லாம் மதிப்பி ழந்தால்
உலகம் அழியாதோ?
அழைக்கும் மக்கள் தலைவன் எங்கே?
அறிவு தேடாதோ?
அணைத்துக் கொண்டால் இமய மலையும்
அசைந்தே ஆடாதோ?

அண்ணல் காந்தி அருமை புத்தர்
என்ன ஆனார்கள்?
அகிம்சை சத்தியம் இரண்டும் விட்டு
எங்கே போனார்கள்?
மண்ணும் விண்ணும் அமைதிக் காக
மழையைத் தருகிறது
மனித நேயம் ஒன்றே வெல்லும்
மாற்றம் வருகிறது

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'
என்றே வாழ்ந்தவர்கள்
எல்லாம் இழந்தே அடிமை யாகி
இன்று தாழ்ந்தவர்கள்
சூதும் வாதும் வெல்லும் என்றால்
சூரியன் உதிக்காது
தொழிலா ளர்கள் இல்லை யென்றால்
தோற்றம் இருக்காது

தோற்றம் மாற்றம் எல்லாம் செய்யும்
தொண்ட மான் இங்கே!
தோல்வி கண்டால் ஒளிந்தே ஓடும்
தலைவர் கள் எங்கே?
சேற்றை வாரி இறைத்த போதும்
செந்தாம ரை எங்கே?
சிரித்த முகமாய் நின்று நிலைக்கும்
செந்தமி ழன் இங்கே!
காட்சிக் கெளியன் கடுஞ்சொல் இல்லான்
காலம் மறக்காது
கண்ணை இமைபோல் காத்தி ருப்பான்
கவலை பிறக்காது
ஆட்சிக் கட்டில் ஒருநாள் மாறும்
அழிவும் உருவாகும்
அமைதி ஒன்றே அறிவே யாகும்
அதுவே திருவாகும்.

கவிஞர் உதயை மு.வீரையன்

முகவரி தந்த முதல்வன்



ஆண்டுதோறும்
ஆகஸ்ட் முப்பதில்
மலையகம்
ஆனந்திக்கிறது...

தானே பிறந்ததாய்
மனதார எண்ணிக் கொண்டு
மலையகமே
மகிழ்ச்சி பெறுகிறது!

தன் மகனே பிறந்தானெனத்
தருக்கோடு தலை நிமிர்ந்து
தாய்க்குலமும்
குதூகலிக்கிறது.....

தலைவன் தொண்டமானை–
தலைவனாக மட்டும்
மலையகம்
எண்ணவில்லை!

தன் மகனாய்
தலைமகனாய்
உடன்பிறப்பாய்
உயிர்த்தோழனாய்

அப்பனாய்
அம்மையாய்
ஆயிரம் வாசல்
இதயங்களில்

அனவரதமும்
வந்து போகும்
உறவு நெஞ்சன்
இந்தத் தொண்டமான்!

இவன்...
அறிக்கைகளில்
அரசோச்சத்
தெரியாதவன்!

மேடையில் முழங்கியே
வாடையில் குளிர்காயும்
"அருங்கலை"
அறியாதவன்!

வாழ்வளிக்காத
வாக்குறுதிகளை
வாரி வழங்கி–
சொந்த வாழ்க்கை நடத்தத்

ரோஹினி இலங்கை

தெரியாத அரசியல்வாதி!
சராசரி
அரசியல்வாதியாய்
பூடகமாய்ப் பேசியும்

நாடகமாய் நடித்தும்
பொழுது போக்கப்
புரியாதவன்!

இமைப்பொழுதும்
மலையகத்தை மறவாது
சேவை செய்வதில்
இவன்-
சூரியனையும்
வெற்றி கண்டவன்!

இவன்-
விளக்கேற்றி வைத்தான்,
தன் வீட்டில் அல்ல...
இந்த மலையகத்துக்கே
வெளிச்சமாய்
-தானே விளக்காகி நின்றான்!

அதனால்-
இவனது முகவரியை
எங்கேயும் தேடித் துழாவத்
தேவையில்லை!

ஒவ்வொரு மலையக மைந்தனின்
முகவரியும்
இவனது...
முகவரியேயாகும்!

ஆம்.....
மலையகத்திற்கே
மாறாத முகவரியைத்
தந்த முதல்வன்
இந்தத் தொண்டமான்!

அதனால்தான்-
தானே பிறந்ததாய்
தானாக எண்ணிக்கொண்டு
மலையகம்-
ஆகஸ்ட் இறுதியில்
மகிழ்ந்தே போகிறது!

தலைவனைத் தன்னிலும்
தன்னிலே தலைவனையும்
காணும் சமுதாயம்
ஆண்டுதோறும்
ஆகஸ்ட் முப்பதில்
ஆனந்தங் கொள்வதில்
அர்த்தம் இருக்கிறது;
பொருத்தமும் இருக்கிறது!

பெருந் தலைவன்
தொண்டமானின்
"பிறந்தநாள்" பெருமைகளைப்
பிரியமாய்ப் பங்கிடுவோம்,
புறப்பட்டு வா.....
மலைமகனே.....!

மலையகத்திற்கே
முகவரி தந்த
முதல்வனை
வாழ்க .....வாழ்க.....!
என்று
வாழ்த்துவோம் வா!

With best compliments from :

தொண்டு செய்து உயர்ந்தவரே!
தொன்றுதொட்டு வருபவரே!
பண்டுசெய்த தவப்பயனால்
பார்புகழ வாழியவே!

S. Arumugam & Bros.

128, Old Moor Street,
Colombo - 12, Sri Lanka.
Tel : 549862, 547254, 34189
Telex : 21295 ESAROY CE
Cable : ESSAYBRO, COLOMBO
Fax : 549928

இவரே தலைவர்

'தோன்றிற் புகழோடு தோன்றுக....' என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வாக்கிற்கேற்ப, ஒருவர் பிறக்கும்போதே உயர்குடியில் புகழ்மணக்கப் பிறந்து, செல்வச் செழிப்பில் மாளிகையில் மந்தகாச வாழ்வு நடத்தி, தலைமைத்துவ தகுதியை அடைவது ஒரு வழி. சாதாரண குடும்பத்தில் பிறந்து, சாதாரணமாகப் பயின்று, சமுதாயக் கொடுமைகளால் பாதிக்கப்பட்டு, சந்தர்ப்ப -சூழ்நிலைகளின் தாலாட்டில் படிப்படியாகத் தலைமைத்துவத் தகைமையை நோக்கி உயர்வது மற்றொரு வழி.

இவ்விரு வழிகளுமே பல்வேறு துறைகளிலும் தலைவர்களை உருவாக்கக் கூடிய மார்க்கங்கள். சிலர், இவ்விரண்டில் ஒன்றின் மூலம் தலைவராக வருவர். வேறு சிலர் மற்ற வழி மூலம் தலைவராக உயர்வர். இவ்விரு வழிகளிலும் தலைவராக உருவான தலைவர்களைக் காண்பது அரிதிலும் அரிது. ஆனால்-இவ்விரு வழிகளிலும் தலைவராக உருவான ஒரு பெருந்தலைவர், நம்மிடையே ஒரு ஆலயத்தின் கோபுரமாக கம்பீரமாக எழுந்து நிற்கிறார், நம் நடுவே உலவி வருகின்றார்.

அவர் யார்? அவர்தாம்-இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பயணத்துறை-கிராமத் தொழில் துறை அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் பெருந்தலைவருமான மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் ஆவார்.

எனவே திரு.தொண்டமான் ஒரு தலைவரே தலைவரேதான்!

தலைவர் தொண்டமான் பிறப்பால் உயர்குடியில் பிறந்த பெருந்தகை. அவர் செல்வச் செழிப்பில் வாழ்ந்த விதமும், வளர்ந்த முறையும் அவரை ஓர் 'அரச குமாரர்' போல வாழச் செய்ய வல்லன. ஏழையர் படும் துயர் கண்டு கனியும் இதயம் அவரிடம் இருப்பதால், கடந்த நாற்பதாண்டுக் காலமாக, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் சமுதாயத்தை வழி நடத்தி வரும் பாதையில், எதிர்ப்பட்ட சோதனை, வேதனைகளால் இவர் சாதனைகளைக் குவித்து, ஒரு சரித்திரப் புருஷராக வரலாற்றில் இடம் பெற்று விடும் அளவுக்குத்-தன்னை ஒரு பெருந்தலைவராக உயர்த்திக் கொண்டவர். ஏற்கனவே எடுத்துக்கூறிய இரு வழிகளிலும் அவருக்குத் தலைவருக்கான தகுதிகள் நிரம்பி இருப்பதால்-அவரே தலைவர். அவர்தான் தலைவர்-அவரேதான் என்றும் தலைவர் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

தலைவர் தொண்டமான் ஒரு தலைவருக்கான தகுதிகள் அனைத்தையும் பிறப்பாலும், நடைமுறை வாழ்வாலும் பெற்றிருந்தபோதும், எப்படித் தலைமைத்துவத்தை உறுதியாக்கிக் கொண்டார், எவ்வாறு தலைமைத்துவத்தில் சோபித்தார் என்ற வினாக்களுக்கான விடைகளை அறிந்தால், அவர் என்றும் தலைவரேதான் என்பது நிச்சயப்படுத்தப்பட்ட அம்சமாகி விடும்.

தலைவர்களில் பலவகையினர் உளர். சிலர் வெறுமனே உத்தரவுகளை-பணிப்புரைகளை

பி.பி.காந்தம் சிங்கை

எங்கள் [illegible]ம்பத் தலைவர் தொண்டமான் அவர்களே!
சாகா வரம்பெற்ற சங்கத் தமிழாய் நீங்கள் வாழ்க!



கே. நடேசப்பிள்ளை
என். லெட்சுமி அம்மாள்
மன்னார்குடி
தஞ்சை மாவட்டம்.

குளிர்பூஞ்சோலையே! தொண்டமானே!
குயிலும் உங்கள் புகழ் பாடவேண்டும்!
மயிலும் உங்கள் புகழ்கேட்டு ஆட வேண்டும்!
நூறாண்டிற்குமேல் உங்களுக்கு
ஆயுள் நீடவேண்டும்!

Super Music Co.,
Ph.:834818
Super Recording Co., Pvt. Ltd.,
Ph: 88 44 04
Super Audio
17, Raheja Complex, 834, Mount Road, Madras - 600 002. India.
Ph. : 835188, 835177 Fax : 91-44-881800

பிரகடனஞ் செய்துவிட்டு, அவற்றை நிறைவேற்றும் விவகாரத்தில் ஒரு பார்வையாளராகவே நடந்து கொள்வர். சிலர், தலைவருக்கான சுய ஆளுமை அற்றவர்களாக, ஸ்தாபனத்தின் ஆரோக்கிய சக்திகளின் தாளத்திற்கு ஆடுபவர்களாக இருப்பர். வேறு சிலர் சுயமாகப் பிரச்சினைகளுக்கு முடிவெடுக்கும் அறிவு, அனுபவம்-பக்குவம்-தைரியம் இல்லாதவர்களாகப் பிறரில் தங்கியிருந்து, பெயர் பண்ணுவர். இன்னும் சிலர், கௌரவம் பார்த்து நடப்பர், சமுதாய மட்டத்திற்குக் கீழிறங்கி நடக்க மாட்டார்கள். சமுதாயத்தோடு ஒட்டி நடப்பதை விட்டு, எட்டியே எப்போதும் நடப்பர்.

இந்த வகையறாக்கள் எதிலுமே சேராத- ஒரு வித்தியாசத் தலைவராக வேறுபட்ட ஒருவராகவே தலைவர் தொண்டமான் விளங்கி வருகின்றார். மக்கள் இதயங்களில் இலங்கிவருகின்றார். எப்படி? தலைவர் தொண்டமான் பரம்பரை பணக்காரக் குடும்பத்தில் பிறந்து, நல்ல பாரம்பரியம் மிக்க குடும்பப் பின்னணியில் வளர்ந்து, கஷ்டம் என்பதன் கருத்தென்ன என்பது புரியாத ஒரு செல்வ மதமதப்பில் உருவானவர். அப்படிப்பட்டவர் ஏழையரின் துன்பம், ஒடுக்கப்பட்ட மக்களின் அவலம், பாட்டாளி வர்க்கத்தினரின் பரிதாபம் போன்ற சமுதாய வாழ்வின் இருண்ட பக்கங்களைக் கண்டு மனம் நெகிழ்ந்தவர்.

இயற்கையாகவே தர்மசிந்தை கொண்ட தலைவர் தொண்டமான் சமுதாயத்தார் ஒரு சாராரின் சங்கட வாழ்வறிந்து, அவர்களுக்குத் தன்னால் முடிந்த நன்மைகளைச் செய்வது, தர்மத்தில் எல்லாம் உயர்வான தர்மம் என்று அவரது உள்மனம் அவரை ஆட்படுத்தியது. அதன் விளைவாக, மலையகத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளி மக்களின் பொற்கால விடியலுக்கான ஒரு பொறுப்பை, சந்தோஷமாகவே தன் தலையில் ஒரு கீரிடமாக அணிந்து கொண்டார். அந்தக் கீரிடம் சிலவேளை முள்ளாகத் தன் தலையை குத்திய போதும், அந்த வலியைத் தாங்கிக் கொண்டார். அந்தப் பொறுப்பான கிரீடத்தை மக்களின் தேவையைப் பொறுத்து இன்னும் அவர் கீழே இறக்கி வைக்கவில்லை.

இதன் காரணமாக, தலைவர் தொண்டமான் தான் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களின் தேவைகளையும்-குறைகளையும் இனங்காண -நோய் என்னவென்றறிந்து நிவாரணம் காண- அவர் என்றுமே பின்நிற்கவில்லை.

பிறரை நம்பி, "அவர் சொல்லித்தான் இவர் தெரிந்து கொள்ள வேண்டும்" என்ற நிலையில், அதிகாரிகள் சமாப்பிக்கும் அறிக்கையை வாசித்து நிலைமையைப் புரிந்து கொள்ளும் சூழலில் தலைவர் தொண்டமான் என்றுமே இருந்ததில்லை. ஆரம்ப காலந்தொட்டே மக்களின் பிரச்சினைகளில் தம்மையும் ஒருவராக இணைத்தே வந்திருப்பதால், அவர் என்றுமே மலையகப் பிரச்சினைகளில் ஒரு பார்வையாளர் வரிசையில் இருந்ததே இல்லை. மாறாக, அதன் பங்காளியாகவே இருந்திருக்கின்றார். இதனால் எப்போதுமே பிரச்சினைகள் இவருக்கு அத்துப்படி, இவ்வாறு சமுதாயத்துடன் ஒட்டி, ஒன்றித்து வாழ்ந்துவந்தமையால், அவற்றுக்கு எப்படிப் பரிகாரம் காணவேண்டும், யாரை இது தொடர்பாக அணுக வேண்டும். அவரிடம் எப்படிப் பேச வேண்டும் அவர் தன்னிடம் எதை எதிர்பார்ப்பார். அதன் மூலம் தான் அவரிடம் இருந்து தன் மக்களுக்காக எந்தஅளவு பெறமுடியும் என்பதை உய்த்துணர்த்து மாற்றாருடன் சேர்ந்து கைகுலுக்கும் உத்தியைத் தெரிந்துள்ளார். இதனால்தான் அரசியல் தலைவர்களுடன் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவரிடம் சாதுரியமாகப் பேசி விஷயத்தைச் சாதித்துக் கொள்கின்றார்.

மற்றது-தலைவரிடம் உள்ள துணிவு அவரது தலைமைத்துவத்திற்கு நல்ல ஊட்டச்சத்தாகும் எனலாம். எந்தக் கருத்தையும் எவர் மனமும் புண்ணுறாத முறையில் பிறர் ஏற்றுக்கொள்ளும்படி நியாயப்படுத்திச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லிவிடுவார். அறிக்கை விடுவார். இதற்கு அவர் என்றுமே தயங்கி மயங்கி ஒதுங்கியதேயில்லை.

இதற்குக் காரணம் என்ன? அவரது நேர்மை நெஞ்சமே இந்தத்துணிவிற்கு அடிப்படை. உண்மை இதுதான், எப்படி மாறினாலும் இப்படித்தான் அது திரிபடையும் என்பதைத் தனது தீர்க்கதரிசன-தூரத்துப் பார்வையினால் தெளிந்து கொண்டபின், அதில் நேராக நிற்பார். நினைத்ததை அதனால் முடிக்கின்றார்.

எனவே-இவர் தன் விரலை அசைத்தால், மலையகத் தேயிலைச் செடிகள் அசைகின்றன. மலையக மைந்தர்களின் இதயங்கள் இசைகின்றன. அதனால் திரு.தொண்டமான்-அவர் தலைவரேதான்! ❑

புனிதனார்

தொண்டமான்





இனம்காக்க மொழிகாக்க என்றும் தன்னை
ஈந்துவக்கும் தொண்டமானை எழுச்சி மிக்க
இனம்போற்றும் பெருந்தலைவர் என்றே என்றும்
எந்தமிழர் சமுதாயம் இனிதே போற்றும் !
குணங்காக்கும் குன்றனைய கொள்கை வேந்தன்
கூப்புநெறிக் கரங்களினால் குன்றாப் பண்பின்
மனங்கொண்டு மாண்புலகம் போற்றும் வண்ணம்
மதிப்புமிகும் தொண்டாற்றி மகிழும் நல்லார் !

உலகியலின் வரலாற்றில் உயர்ந்து நிற்கும்
ஒருநாட்டின் தொழிற்சங்க உருவின் ஆக்கம்
பலஇலட்சம் தொழிலாளர் பான்மை காக்கும்
படிமனத்தின் உணர்வதனால் பதிவு செய்தே
இலங்கைத்திரு நாடதனின் ஏந்த லானார்!
இலங்குபுகழ் தமிழ்ச்சமூகம் இனிது காத்தார்!

மு. தங்கராசன் சிங்கை

இலக்கமைத்து இன்றுவரை எடுத்து வைத்த
எழுச்சியடி மாறாமல் இயங்கு கின்றார் !

அரசியலில் காலூன்ற ஆர்வங் கொண்டு
அடிப்படைகள் அமைத்ததெலாம் ஆண்மை
யாகும் !

அரசியலின் அருங்கட்சி என்ப தாக
அணி"ஒருமை" காங்கிரசை ஆரம் பித்தே
முரசியலாய் முழங்குதற்கு இந்தி யாவின்
முன்னோடி "நேருபிரான்" மூலம் தன்னில்
அரசியலார் போற்றும்படி ஆர்த்து நின்றார்
அருந்தமிழர் முரசொலிக்கும் ஆளு மையான் !

பேருக்கும் புகழுக்கும் பெரிதும் ஆசை
பெற்றிலங்கும் வல்லோர்பேர் போடு கின்றார் !
ஊருக்கும் உலகுக்கும் தலையைக் காட்டும்
உலுத்தர்களே அரசியலில் உறுத்து நிற்பார் !
தேருக்குள் அச்சாணி திகழ்ந்து நிற்கும்
தெளிவார்ந்த உண்மையதாய்த் தேர்ந்து நின்றே
நாருக்குள் பூமுடிக்கும் நல்ல விந்தை
நயங்கற்றார் தொண்டமானின் நலங்கள் வாழும்!

சிங்களத்தார் மத்தியிலே செறிந்து நின்று
சிறந்தொளிரும் பதினேழு சீர்த்த ஆண்டும்
தங்குலத்தார் தார்மீகம் பற்றிப் பேசி
தமிழரெலாம் குடியுரிமை தகையப் பெற்று
தங்குதடை இல்லாத தகைமை யோங்கும்
தருமநெறி சமவுரிமை தழையச் செய்தே
பொங்குகடல் சூழ்இலங்கைப் புவனந் தன்னில்
புண்ணியனார் தொண்டமானும் பொலிந்தி
ருப்பார் !

இன்பத்தமிழ் இலக்கியத்தில் இலங்கி நிற்கும்
எழுச்சிமிகு கருணாகரத் தொண்டை மானும்
அன்புத்தமிழ்க் குலோத்துங்க அருமைச் சோழன்
அணிபடையின் தளபதியாய் அமைந்த வீரன்
பண்புத்தமிழ்ப் படைமாட்சி நடத்திச் செல்லும்
பதிகத்துப் பொருளாகப் பதிந்து நின்று
நண்பகத்து நடைவீரர் நமது தொண்ட
மானவரின் நற்செயலை நாடே போற்றும் !

தொண்டைநாட்டு அரசர்களின் தோன்ற லாவார்
தொண்டைமான் மதிநுட்பம் துலங்கித் தேர்ந்து
வண்டையர்க்கு அரசென்றே வாழ்வி னாங்கும்
வளர்தமிழின் இலக்கியத்தில் வாழ்ந்தி ருப்பான்!
கண்டிகதிர் காமமெனும் எல்லை தோறும்
கண்ணியர்நம் தொண்டமானும் காவல் தெய்வம்
நின்றருளும் மாட்சிமைபோல் நீடி லங்கும்
நிலைதமிழர் வாழ்வியலில் நிலைக்கப் பெற்றார்!

தென்னிலங்கை தமிழ்மக்கள் தேர்ந்த உள்ளம்
தெளிந்தபுகழ் தொண்டமானின் திருவின் ஆக்கம்
பொன்னிலங்கை வரலாற்றில் பொலிந்தி ருப்பார்
புண்ணியனார் தொண்டமானின் புகழே மேவும்
மன்னியசீர் அருளுடைமை மறந்தி டாமல்
மாண்புமிகும் தமிழுலகில் மலர்ந்தி ருப்பார்
கண்ணியனார் தொண்டமானின் கவின்பே ரென்றும்
கல்லாடக் காவியத்தில் நிறைந்தி ருக்கும் !
"தமிழுக்குத் தொண்டுசெய்தோன் சாவ தில்லை"
தனிவாழ்த்து தந்துள்ளான் "பாவின் வேந்தன்"!
தமிழுக்குத் தொண்டுசெய்யும் தொண்ட மானும்
தமிழ்கூறு நல்லுலகில் தகைந்து நிற்பார்;
தமிழர்தம் வாழ்வுநலம் தனித்துக் காக்கும்
தமிழுணர்வின் பிறப்பிடமாம் தளரா வேந்தர் !
தமிழன்னை அருள்பெற்ற தார்மீ கத்தால்
தரும்புலவர் வாழ்த்தவரைத் தழைக்கச் செய்யும்!

With Best Compliments from :

"இன்றுபோய் நாளை வா!" என்று
எதிரிக்கும் சிந்திக்க வாய்ப்பளித்த
இராமாயண இராமனின் மறுவடிவம் நீயே!
எங்களுக்கு நீ ஒரு தாயே!
தொண்டமானே! பல்லாண்டு வாழ்வாயே!

LAKESIDE MINI-MART

Blk. 517, # 01-81, Jurong West,
Singapore - 2264
Tel : 5614885

NOORDIN MUTTON STALL
MOHD. SIDEK MUTTON STALL

01-4736, Block 6, Jalan Bukit Merah,
Note Change : (From 2nd Market to 1st Market)

ALI SABRIN

Stall No. 50,
Taman Jurong Market 1,
Singapore - 2264.





எத்தனையோ தலைவருண்டு! தலைமைக் கான
இயல்பில்லார் தகுதியில்லார் பலரிங் குண்டு!
தித்திக்கும் தலைவரிவர்!"தலைவர்" என்னும்
திறன் இவர்க்கோ நூற்றுக்கு நூறு உண்டு!
எத்திக்கும் வாழுகின்ற தமிழர், இந்த
ஈடில்லாத் தலைவரினை அறிதல் வேண்டும்!
புத்திக்கும், வழிநடத்தும் சான்றாண் மைக்கும்
புவிபெற்ற தனித்தலைவர் இவர்தான் என்பேன்.

கருமைபெற்ற உடல்பெற்ற காரணத்தால்
களிறனையார்!மிகுவலிமை பெற்ற ஏந்தல்!
அருமையுள்ள தொண்டமான் மலைய கத்தின்
ஆதியந்தச் சோதி"யென்பேன் இவரைப் போலப்
பெருமைபெற்ற குடிப்பெருமை பெற்ற வர்கள்
பெரும்பாலும் தம்பட்டம் அடிப்ப தில்லை!
உரிமைபெற்ற தமிழ்இலங்கை மக்களுக்கே
உதித்துவந்த செங்கதிரோன் இவர்தான் என்பேன்

தமிழுக்குத் தனிச்சிறப்பை இலங்கை மண்ணில்
தந்தளித்த தந்தையிவர்! தொண்ட மான்போல்
தமிழனைநாம் காண்பதிங்கே அரிதே யாகும்!
தமதுயிரைத் தந்தேனும் தமிழைக் காக்கும்
தமிழர்களின் முன்னோடி இவரே என்பேன்!
தக்கைகளின் கொட்டத்தைத் தட்டி வைப்பார்!
அமிழ்தனையார் இவரை நான் எண்ணும் போது,
அதிசயிப்பேன்! இவரை நான் தினம் தரிசிப்பேன்!

குன்றினிலே ஏற்றிவைத்த சுடர்வி ளக்கு!
கொள்கையிலே புடம்போட்ட பொன்ப தக்கம்!
ஒன்றினிலே ஒன்றென்னும் பேத மில்லா
உறவினுக்கோ இலங்கையண்ணா என்று
ரைப்பேன்!
சென்றெட்டுத் திக்கினிலும் தொழிலா ளர்தம்
சீர்மைக்கும் சுகத்திற்கும் உழைக்கும் செம்மல்!
இன்றெட்டுப் பத்துதனை எய்தும் அன்னார்
இன்னும்பல பத்துகளைப் பெற்று வாழ்க!

பாததேறல இளமாறன் சிங்கை

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப' எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்னும் குறளுக்கோர் இலக்கியமே !
சாதனையின் சரித்திரமே ! சரித்திரத்தின் பொன்னேடே !
தொண்டில் சிறந்த தொண்டமான் அவர்களே !
வாழிய பல்லாண்டு ! என வாழ்த்தி மகிழ்கிறோம்.

B. DHARMARAJ

INDIA - SINGAPORE - SRILANKA

மாண்புமிகு இலங்கை அமைச்சர் தொண்டமான் அவர்களின்
மலர் வெளியீட்டுவிழா மணங்கொழிக்க எங்கள் வாழ்த்துகள் !

A. BAKAR
(Managing Director)
Frozen & Fresh Meat Supplier
(Halal)

Block 497, #01-18
Jurong West Street 41,
Singapore 2264 Office : 5631453



STALL - 4

YONG SENG FOOD CENTRE

Jurong, Singapore - 2284

Block - 302
Chua Chu Kang
Avenue - 4
Singapore

பண்பாட்டுத் துறை வளர்க்கும்

வாரங்கள்



முத்தமிழை வளர்த்துவரு முகவையெனும் நாட்டில்
முன்தோன்றி வளர்ந்துவரும் மூத்தகுடி யொன்றில்
சித்தம்மை கருப்பையா சேர்ந்தமண வாழ்க்கை
சிறந்திடவே பிறந்திட்ட தென்கடலின் முத்தே!
எத்திக்கும் கடல்சூழும் இலங்கையிலே நீயும்
ஏழகவை முதலாக ஈடிணையே இன்றித்
தித்திக்கும் மொழிபேசித் தொண்டுகளைச் செய்து
திசைகாட்டும் விண்மீனாய்த் திகழ்ந்திடவே செய்தாய்!

கடற்கலிங்கம் எறிந்த கரு ணாகரன்றன் வழியில்
கருமுதலாய்த் தோன்றியுமே மலையகமே சார்ந்து
உடற்கலிங்கம் நைந்துருகு உழைப்பாளர் வாழ்க்கை
உயர்ந்திடவே வழிகாட்டி உய்ந்திடவே செய்தாய்
கடற் படையின் தளபதியாய்க் கலங்கரையின்
விளக்காய்க்
கைகாட்டி வழிநடத்தும் காந்தியுமே ஆனாய்!
அடற்புலியே சிங்கமென ஆர்ப்பரிக்கும் ஞான
அறநிதியே! அருளரசே கொடைமரமே! வாழி!

சொத்தெல்லாம் அரசியலார் சுருட்டுகின்ற நாளில்
சொந்தநலம் பாராமல் அறநிதியம் ஆக்கிச்
சத்தில்லா உழைப்பாளர் சத்துறவே நாளும்
சமன்செய்து சீர்தூக்கும் கோலாகி நின்றாய்!
முத்துமனம் கொண்டவனே முல்லையென ஒழுக்கம்
முயங்கிவரு முழுநிலவே! பல்துறையும் போற்றிச்
சித்தரென வாழுகின்ற சிரித்தமுக வேந்தே!
செயற்பாட்டு வினைத்தொகையின் செம்மலேநீ வாழி!

ஆயிரமாம் பிறைகாணும் அமைச்சர் குல திலக
ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதின்மூன்றா மாண்டில்
பாயிரமாய்த் தோன்றிய சீர்ப் பைந்தமிழே! தேனே!
பண்பாட்டுத் துறைவளர்க்கும் பைங்குயிலே மானே!
தாயெனவே தொழிலாளர் நலங்காக்கும் அண்ணா!
தன்னலமே இல்லாத தமிழ்மொழியின் கண்ணா!
பாயாக வரவேற்கும் பைந்தமிழின் பண்பே!
பசுமைநிறை உறவுகளில் பயிராகும் அன்பே!

தொண்டுபல செய்கின்ற தோழமையால் மக்கள்
தொண்டுமான் சீமானைத் தொண்டமான் என்றார்
வண்டுமனங் கொண்டவனாய்ப் பல்துறையின் வளர்ச்சி
வளம்பெருக வைத்தவனே வாய்ச்சொல்வில் நேர்மை
கொண்டுபல போராட்டம் கண்டுபல நாளும்
குதிரைமனங் கொள்ளாமல் கொள்கைநெறி நின்றாய்!
தண்டுபல நடத்தியுமே உலகினையே வென்ற
தமிழர்களின் தலைவனெனத் தலைநிமிர்ந்து நின்றாய்!

பொங்கிவரு காவிரியாய்த் தஞ்சைபெண்ணை யாறாய்
பொதியமலை பிறந்துவரு பொருனைநதி யாக
திங்களெனத் திகழ்கின்ற பாலாறாய் வைகை
சேர்க்கின்ற நலமெல்லாம் சேர்ந்தொன்றாய் ஆக
சங்குவளர் தமிழ்க்கடலில் முத்தெடுத்து நின்ற
தனிப்புலவர் பண்டளித்த ஐங்குறுவின் நூற்றில்
பொங்குதமிழ்க் கபிலனவன் புகல்குறிஞ்சி நூறாய்ப்
புகழ்பரப்பி வாழ்ந்திடவே வாழ்த்துகின்றேன் வாழி!

புலவர் தமிழப்பன்

சிற்றுமுன் தொண்டமான்



தொண்டுசெயும் அன்புமனம்
துயர்துடைக்க எழுந்துவரும்
தொண்டமான் பெயர்கொண்ட
தூய்மையுள்ள பண்புமனம் !

மனிதஇனம் வாடுவதை
வருந்திநாளும் கலங்குமனம் !
தனியாகப் போராடித்
தரித்திரத்தை விரட்டுமனம் !

தோட்டத்துப் பாட்டாளி
துயர்போக்கத் துடித்தமனம் !
தோட்டத்து மக்களுக்குத்
துணையாக நின்றமனம் !

எதையுந்தாங் கித்தாங்கி,
இரும்பான வல்மனந்தான்
எதுவந்து தாக்கிடினும்
ஏற்கின்ற துணிவுமனம் !

எதிர்க்கின்ற வேங்கையையும்
எதிர்கொள்ளும் வீரமனம்!
எதிராளி வியக்கின்ற
ஈரமான இனியமனம் !

இலக்கிய வானில்நித்தம்
இன்பஉலா செய்யுமனம்!
வலக்கரமாய் அரசுக்கு
வாழ்க்கைதனைத் தந்தமனம் !

பிறப்புரிமை வாங்கிடவே
பேருதவி செய்தமனம்!
மரபுரிமை நிலைத்திடவே
மலைக்காது உழைத்தமனம் !

எல்லார்க்கும் தோள்கொடுக்க
இறங்கிவரும் இன்பமனம்!
நல்லார்க்கும் நலிந்தார்க்கும்
நலஞ்சேர்க்கும் உயர்ந்தமனம் !

ஏழ்மைதனை விரட்டிநிதம்
இடுப்பொடிக்கும் வலிமைமனம்!
தாழ்விலா உயர்மனத்தைத்
தலைதாழ்த்தி வாழ்த்திடுவோம் !

தங்கம்போல் ஒளியைவிடும்
தங்கமனம் பெற்றுள்ள
சிங்கமகன் தொண்டமானைச்
சீர்பெறவே வாழ்த்திடுவோம் !

அமைச்சுநிலை பெற்றாலும்
அன்புகுறை யாமனத்தை
உமையாளின் துணையோடு
ஒருமனதாய் வாழ்த்திடுவோம் !

கவிஞர் ஆ.பழனி சிங்கை

கலிங்கம் வென்ற கருணாகரனின் இலங்கை வாரிசு



கட்டுரை படிக்கப் புகுமுன்

("பழம்பெருமை சொல்வதிலோர் மகிமை இல்லை"என்ற பாரதியின் கூற்றைப் பொய்யாக்கிப் பழம்பெருமை சொல்வதிலோர் மகிமை உண்டு" என்று நம்மைப் பாட வைத்திருப்பவர் தொண்டமான். கலிங்கம் வென்ற குலோத்துங்கனின் படைத்தளபதி கருணாகரத் தொண்டமானின் பரம்பரையில் தோன்றிய பழம்பெருமைக்கு உரிமையுடையவர் இன்றைய இலங்கைத் தொண்டமான். இவரா அந்தத் "தொண்டமானின் இரத்தத்தின் இரத்தம்?" என்று நினைக்கும் போது, நமது இதயம் எங்கேயோ பறந்துபோய் இன்பத்தைப் பெற்றுத்திரும்புகிறது! தொண்டமான் அவர்களின் தொல்பழங் காலத்து வரலாறு நாளை வருகிற நல்லிளஞ்சமுதாயம் ஒருபாடமாகப் படிப்பதற்குரிய தாகும். "தொண்டமானும் பண்டைய இலங்கையும்"என்னும் கற்கண்டுத்தலைப்பில் தலைவர் தொண்டமான் நூலில் ஒரு கட்டுரை தீட்டியிருக்கிறார்கள்.மலரை நுகர்வார்க்கு அந்த மதிப்புமிகு சான்றுக் களஞ்சியம் தேவை என்பதால் மறுபடியும் ஒருமுறை அந்தக் கட்டுரைக் கனியை இதில் மணக்கவைத்திருக்கிறோம்)

உண்மை சில சமயங்களில் கற்பனையைவிட அதிசயம் நிறைந்ததாக அமைந்துவிடுகிறது. தலைவர் தொண்டமானுடைய கதையும் அவர் தந்தையாருடைய வரலாறும் இவ்விருவரின் மூதாதையர்களுடைய பூர்வீகமும் படிப்பவர்களை வியப்பிலும் அதிசயத்திலும் ஆழ்த்திவிடக் கூடியனவாகும்.

தொண்டமானின் மூதாதையர்களில் சிலர் அளப்பரிய சாதனையாளர்களாகவும், சரித்திர நாயகர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள். தொண்டமான் இலங்கையின் தலைசிறந்த ஒரு மக்கள்தலைவராக இன்றுவிளங்குகிறார். அவர் இலங்கை அரசாங்கத்தில் ஒருசக்தி வாய்ந்த மந்திரியாக கிராமக் கைத்தொழில்அமைச்சராகப் பிரகாசிக்கிறார்.

ஆசியாவிலேயே மிகப்பெரியதொழிற்சங்கம் என்றுமதிக்கப்படும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முதுபெரும் தலைவராக பல்லாண்டுக்காலம் பதவி வகித்து வருகிறார்.

இப்படிப்பட்ட தலைவர் தொண்டமான் பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டத்தில் பிறந்து இலங்கையில் குடியேறியவர்தான்.

தலைவர் தொண்டமான் - நூலிலிருந்து

ஆனால், தொண்டமானுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. அல்லது இந்தத் தலைமுறையிலோ அதற்கு முந்திய தலைமுறையிலோ ஏற்பட்ட ஒரு தொடர்புதான் என்றும் சொல்வதற்கில்லை.

இலங்கையோடு தொண்டமானுடைய தொடர்பு பலநூற்றாண்டுக்காலத்துக்கு முற்பட்டதாகும்.

தேடக்கூடிய சரித்திரச் சான்றுகளையும், கிடைக்கக்கூடிய வரலாற்றுக் குறிப்புகளையும் ஆதாரமாக வைத்துப்பார்க்கும்போது, தொண்டமானின் மூதாதையர்களில் ஒருவரான கருணாகரத்தொண்டமான் என்பவர் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் காலடி பதித்துவிட்ட மகாபுருஷர் ஆகிறார்.

அவர் வெறுமனே வந்து விட்டுப் போகவில்லை. ஒரு சக்கரவர்த்தியின் ராஜப்பிரதிநிதியாக, பரிபூரண அதிகாரத்தோடு படைப்பட்டாள ஏவலர்களுடன் வந்து தனது பெயரைப் பதித்து விட்டுப் போயிருக்கிறார். அதனால் அவர் பெயர் இலங்கையின் வட பாகத்தில் முத்திரை குத்தப்பட்டபெயராக இன்றும் நின்று நிலவுகிறது.

யாழ்ப்பாணத்திலே, வடக்கே பருத்தித்துறை முதல் தெற்கே யானைஇறவு வரை நீண்டு கிடக்கும் வாய்க்கால் 'தொண்டமான் ஆறு' என்று அழைக்கப்படுகிறது அல்லவா?

கருணாகரத் தொண்டமானின் ஞாபகார்த்தமாகத்தான் இந்தவாவி 'தொண்டமான் ஆறு' என்று வழங்கி வருகிறது.

யாழ்ப்பாணத்திற்குத் தொண்டமான் என்று ஒருவர் வந்திருக்கத்தான் வேண்டும் என்பதை நம்பலாம். ஏனென்றால் தொண்டமான் என்ற பெயர் யாழ்ப்பாண ஊர் வழக்கில் அன்றும் இல்லை, இன்றும் இல்லை.

'தொண்டமான் ஆறு' என்பது மட்டும்தான் வழக்கில் உள்ளது. தொண்டமான் என்ற பெயர் வேறு ஒரு மனிதருக்கு அங்குச் சூட்டப்பட்டதாகவும் தெரியவில்லை.

அதனால், தொண்டமான் என்று ஒருவர் அண்டை நாட்டில் இருந்துதான் வந்திருக்கவேண்டும். அப்படி வந்தவரும் சாதாரண நாடோடியாக இருக்கமுடியாது. ஒரு பிரபலஸ்தராகத்தான் இருந்திருக்கவும் வேண்டும்.

தொண்டமான் என்ற பெயரை இலங்கையில் உள்ளவர்கள் யாரும் தமக்கோ தம் பிள்ளைகளுக்கோ சூட்டிக் கொள்ளவில்லை. இதற்குக்காரணம் உண்டு. தொண்டமான் என்பது ஒரு குலப்பெயராகும்.

ஆதியில், சோழ ஆட்சிக்கு உட்பட்ட தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த கள்ளர் குல மக்கள் இப்பெயரைக் குலப்பெயராகக் கொண்டார்கள்.

அங்கிருந்து தொண்டமான் குலத்தினர் இராமநாதபுரத்தில் குடியேறி வாழ்ந்தார்கள்.

இராமநாதபுரத்தில் இருந்து ஒருசாரார் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு வந்தார்கள். புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருந்து தக்க காரணத்துடன் வெளியேறிய ஒரு பெண்மணி திருப்பத்தூருக்கு 5 மைல் தொலைவில் உள்ள பட்டமங்கலம் என்ற கிராமத்திற்குவந்து சேர்ந்தாள்.

தொண்டமான் பரம்பரை பட்டமங்கலத்தில் பல்கிப் பெருகி வளர்ந்து பின்னர் மூனாபுதூர் என்ற கிராமத்திற்கும் பரவியது.

தொண்டமான் என்பது கள்ளர் குலத்தின் பட்டப் பெயராக அமைந்த காரணத்தால் இலங்கையில் வேறு யாரும் தொண்டமான் என்று பெயர் சூட்டிக் கொள்ளவில்லை.

,இந்தப் பின்னணியை மனத்தில் வைத்துக்கொண்டு குலோத்துங்கன் காலத்து கருணாகரத் தொண்டமானைப்பற்றிச் சிறிது சிந்தித்தால்...

கருணாகரத்தொண்டமான் என்பவர்யார்? அவர் எதற்காக இலங்கைக்குவந்தார்?எப்போதுவந்தார்? அவர் யாரால் இங்கு அனுப்பபட்டார்? அவர் இலங்கையில் என்ன காரியங்களையெல்லாம் செய்துமுடித்தார்?என்ற வினாக்கள் எழுகின்றன.

இத்தகைய வினாக்களுக்கான விடைகளை வரலாற்று நூல்களிலே ஓரளவு காணக்கூடியதாக

இருந்தபோதிலும் மேலும் ஆழமான பரவலான விவரங்களை நாம் கர்ண பரம்பரைக்கூற்றுகளிலே இருந்தும் அறியக்கூடியதாக இருக்கிறது.

பழந்தமிழ்நாட்டின் வட பகுதி தொண்டைமண்டலம் என்று வழங்கி வந்தது. இந்த மண்டலத்தில் அதிபதிகளாக விளங்கி வந்தவர்கள்தான் தொண்டமான்கள்.

சோழப் பேரரசின் காலத்தில் தொண்டமான்கள் பல்வேறு அரச நாமங்களில் பல்வேறு இடங்களில் சிற்றரசர்களாக ஆண்டு வந்திருக்கிறார்கள். சில சமயங்களில் சோழப் பெரும் படையில் மிக முக்கிய பதவிகளை வகித்திருக்கிறார்கள்.

சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் –

சோழர்களுக்கும் சேரர்களுக்கும்–

சோழர்களுக்கும் கலிங்கர்களுக்கும் இடையேபோர் நடைபெற்றபோது தொண்டமான்கள் சோழ ராஜ்யத்தில் தளபதிகளாகப் படைநடத்தியிருக்கிறார்கள்.

போர் செய்வதில் துணிச்சலும், தீரமும் மிக்கவர்களாக விளங்கிய தொண்டமான்கள் யானைப்படையினை நடத்துவதில் விசேஷ திறமை வாய்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

சோழர்களின் படைகளில் ரதப் பிரிவு கஜப்பிரிவு, துரகப்பிரிவு பதாதிப் பிரிவு என்று நான்கு அணிகள் அமைந்திருந்தன. அதாவது படைப்பிரிவு யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்பனவாகும் இவை. இவற்றுள் யானைப்படையின் தளபதிகளாக தொண்டமான் வம்சத்தினரே பெரும்பாலும் பதவி வகித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் தென்முனைப்பிரதேசம் மதுரையிலிருந்து ஆட்சி நடத்திய பாண்டியரின் ஆதிக்கத்திலேயே அதிக காலம் இருந்து வந்தது.

சோழப்பேரரசு 10 ஆம் நூற்றாண்டில் வடக்கிலும் தெற்கிலும் படையெடுத்துத் தன் சாம்ராஜ்யத்தை விஸ்தரித்தபோது வடக்கே கங்கைக்கரை வரையும் தெற்கே தனுஷ்கோடி வரையும் சோழரின் புலிக்கொடி பறக்கலாயிற்று.

பாண்டிய நாட்டின் பிடியிலிருந்த ராமேசுவரம், காயல், சீரலைவாய், தூத்துக்குடி பிரதேசங்கள் எல்லாம் சோழ அரசின் கீழ் வந்தன. அப்போது சுமுகமான ஆட்சி நிர்வாகத்துக்காகச் சில பகுதிகளை வரையிட்டு, நம்பிக்கையான ஆட்சித்தலைவர்களின் கையில் ஒப்படைக்க வேண்டிய அவசியம் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு நடத்திவந்த சோழப் பேரரசுக்கு ஏற்பட்டது.

சோழ அரசுக்கு உட்பட்டு தொண்டை மண்டலத்துள் சிற்றரசர்களாக இருந்தவர்களில் நம்பிக்கையான ஒரு தொண்டமானை அழைத்துப் போய் ராமநாதபுரத்தில் அரசப் பிரதி நிதியாக நிலை நிறுத்தியது சோழப் பேரரசு. அதிலிருந்துதான் இராமநாதபுரத்தில் சேதுபதிகள் என்ற ஒரு தொண்டமான் பரம்பரை உருவாயிற்று. ஆயினும் இந்தச் சேதுபதிகள் சோழ அரசர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இருந்து வந்தார்கள்.

கிறிஸ்துவுக்குப்பின் சுமார் 1070 ஆண்டளவில் அதுவரை வேங்கிநாட்டின் இளவரசனாக விளங்கிய இராசேந்திரன், குலோத்துங்கசோழன் என்ற பெயரோடு சோழ மண்டலாதிபதியானார்.

சோழநாட்டின் வடபால், கோதாவரி நதிக்கரைக்கு அப்பால் கலிங்கநாடு என்று ஒரு தேசம் இருந்தது. அதுவரை சோழநாட்டுக்குத் திறைகொடுத்து வந்த கலிங்கர் சோழ அரசரோடு முரண்பட்டத் தலைப்பட்டனர். எனவே கலிங்கத்தின் மீது போர்தொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் சோழ அரசுக்கு ஏற்படலாயிற்று.

இந்தக் கால கட்டத்துக்குச் சற்று முன்புதான் கருணாகரத்தொண்டமான் எனப்பட்ட சோழர்படையின் வீரத்தளபதி, இலங்கைக்கு வந்தார். குலோத்துங்கசக்கரவர்த்திதான் அவரை இலங்கைக்கு அரசப் பிரதிநிதியாக அனுப்பிவைத்தார்.

தளபதி கருணாகரத்தொண்டமான் எதற்காக இலங்கை வந்தார் என்பது முக்கியமான விஷயமாகும்.

கருணாகரத்தொண்டமான் இலங்கைக்கு வந்ததுபற்றியஆங்கிலக்குறிப்பு ஒன்று பின்வருமாறு:

A short note on "THOHDAIMANARU" is found on page 116in the book "The Tamils of EarlyCeylon" Written by C.Sivaratnam. He has quoted from the Cambridge History of India Vol.I P.169, Which runs as follows-

"....Karunakara Tondaiman, a general of Kulottunga Chola (1070 A.D) came to Manatidal to collect salt at Karanavai and vellaparavai by building a canal to reach these salterns. This canal is now called Tondaimanaru. Tondaiman lived in uduvil for some time when he built the Karunakara Pillaiyar Temple in the Urumpirai District. This event appears to have taken place during the flouris hing period of singai-Nagar (C 1070) "Tondaiman became famous by his successful expedition into Calinga Cambridge History of India Vol. I.P. 169) "

'பூர்விக இலங்கையில் தமிழர்' என்ற நூலை எழுதிய திரு சி. சிவரத்தினம் என்ற சரித்திர ஆசிரியர் தளபதி கருணாகரத்தொண்டமானின் இலங்கை வருகை பற்றித் தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

"கி.பி 1070 அளவில் ஆட்சி புரிந்த குலோத்துங்க சோழனின் படைத்தளபதியாக விளங்கியவர் கருணாகரத்தொண்டமான்"

அவர் முதலில் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள மாந்திடல் என்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார். கரணவாய், வல்லப்பேரவை என்னும் இடங்களில் விளைந்த உப்பைச் சேகரிப்பதற்காகவே வந்தார்.

'இந்த உப்பளங்களைச் சென்றடைவதற்காக அவர் ஒரு வாய்க்காலையும் அமைத்தார். அந்த வாய்க்கால்தான் இப்போது தொண்டமான் ஆறு என்று அழைக்கப்படுகிறது.'

'சில காலம் தொண்டமான் உடுவில் என்ற இடத்தில் வாசம் செய்தார். அப்போது அங்கு கருணாகரப்பிள்ளையார் என்ற பெயரில் ஒரு கோயிலையும் கட்டினார்.'

'பின்னர், இந்தத் தொண்டமான் கலிங்கத்துக்குப் படைஎடுத்துச் சென்று போரில் வென்று பெரும் புகழீட்டினார்.

இவ்வாறுஅந்த நூலில்கூறப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் இந்தியாவின்தேம்பிரிட்ஜ் சரித்திரம் அத்தியாயம் 1 பக்கம் 169 என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நம்மைப்பற்றி அதாவது இந்தியாவைப்பற்றியும் இலங்கையையும் பற்றி, சரித்திரம் என்ற பெயரில் வெள்ளைக்காரன் எழுதிவைத்திருக்கும் குறிப்புகளை எல்லாம் நாம் அப்படியே விழுங்கிவிடக்கூடாது. கொஞ்சம் சலித்துப்பார்ப்பது அவசியம் ஆகும்.

தளபதி கருணாகரத்தொண்டமான் யாழ்ப்பாணத்துக்கு வந்தார்என்பதும் அங்கு ஒரு கால்வாய் வெட்டுவித்தார் என்பதும் உண்மை. தொண்டமான் முன்னின்று அமைத்ததால் இந்தக்கால்வாய்க்குத் 'தொண்டமான் ஆறு' என்று பெயரிடப்பட்டது என்பதும் பொருத்தமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு மலைகூடக்கிடையாது. ஒரு நதி கூடக்கிடையாது. சம தரையான தீப கற்பமே யாழ்ப்பாணம் ஆயினும் யாழ்ப்பாணத்து மக்கள் ஆசை காரணமாக மலை அல்லாத இடத்தை மலை என்றும்,ஆறு அல்லாத ஒன்றை ஆறு என்றும்பெயர் சூட்டி அழைத்து மகிழ்ச்சி அடைகிறார்கள். கீரிமலை, தொண்டமான் ஆறு என்ற இரண்டையும் இங்குக் குறிப்பிடுகிறோம்.

ஆறு என்பதற்கு வழி என்றும் பொருள் உண்டு. தொண்டமான் வெட்டிய கால்வாய் நீர்மேல் வழியாகப் பயன்பட்டதால் ஆறு என்ற பெயரைப் பெற்றது என்று விளக்கம் சொல்லலாம்.

ஆனால் விளங்காமல் இருப்பது வேறு ஒரு விஷயமாகும்.

அதாவது, தளபதி தொண்டமான் எதற்காக இலங்கை வந்து அந்த வாய்க்காலை வெட்டினார் என்பதுதான்.

'உப்பு சேகரிப்பதற்காக' என்று வெள்ளைக்காரர் தயாரித்த சரித்திர நூல் கூறுகிறது. அதை உள்ளூர் நூலாசிரியர் ஒருவரும் எடுத்துஆண்டிருக்கிறார். இதை ஏற்றுக் கொள்ளலாமா?

சோழ சாம்ராஜ்யத்தின் தளபதி, பின்னால் கலிங்கத்துப்போரில் வென்று, மிகப்பெரும்கவிஞர்களில் ஒருவரான ஜெயங்கொண்டார் தமது சீரிய எழுது கோலால்'கலிங்கத்துப்பரணி' என்ற பேரிலக்கியம் படைப்பதற்குக் காரண புருஷராக இருந்த ஒரு தளபதி, உப்பு சேகரிக்க யாழ்ப்பாணம் வந்தார் என்பதும், உப்பை ஏற்றிச்செல்ல கால்வாய் வெட்டினார்என்பதும்வேடிக்கையாக இல்லையா?

இப்படிக் கூறுவது ஒரு பெரிய தளபதியை, ஒரு பெரும் மாவீரரைஅவமதிப்பது ஆகாதா?

ஆம். இது ஒருபெரும் வேடிக்கையான ஜோடனைக்கதைதான்! அவமதிப்பான கூற்றுத்தான்!

முக்கால் பக்கம் கடலால் சூழப்பட்ட தமிழ்நாட்டில் உப்பு என்ன கிடைக்காத ஒரு பொருளா? ராமநாதபுரம் மாவட்டத்தில் அன்று கூட உப்பளங்கள் நிறைய உண்டே. சீரலைவாயிலும், தூத்துக்குடியிலும், விளையாத உப்பையா கரணவாயிலும், வல்லப்பரவையிலும் தேடி வந்தார் சோழத்தளபதி?

அப்படித்தான் மழை, வெள்ளம் காரணமாக உப்பின் இருப்பு குறைந்து போயிற்று என்றாலும், கடல் நீர் கொண்டு உப்புக்காய்ச்சியெடுப்பது சிரமமான காரியம் அல்லவே!

ஒரு பேரரசின் வீரத்தளபதியை இன்னொரு நாட்டுக்கு அனுப்பி அந்த நாட்டைப் பிடித்துவா என்று கட்டளை இடலாம். பொன்கொண்டுவா , பொருள் கொண்டுவா அல்லது ரத்தினங்கள்பெற்றுவா என்று பணிக்கலாம். இதைவிடுத்து உப்புத்தேடுவதற்காக ஒரு மகாமன்னர் தன் தளபதியைப் பயன்படுத்துவாரா? அப்படிப்பணித்தாலும்ஒரு தளபதி அப்பணியைத் தன்மானத்தோடு ஏற்றுச் செயல்படுவாரா?

யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தை எழுதப் போகிறேன் என்று வெள்ளைக்காரனுக்குத் 'தொண்டமான் ஆறு'பற்றி அங்குயாரோ கதை அளந்திருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது.

தளபதி கருணாகரத்தொண்டமான் உப்பு வியாபாரியாக இலங்கை வந்தார் என்ற கட்டுக்கதையை நம்பாமல்,தொண்டமான் பரம்பரைபற்றி இந்தியா சென்றுவாய்வழியாகவும், செவிவழியாகவும்நூல்வழியாகவும், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக சென்னையில் உள்ள கன்னிமாரா நூல்நிலையத்திலும், பரவலாக மதுரையில், தஞ்சையில் உள்ள பல வாசகசாலைகளிலும் தொண்டமான் பரம்பரைபற்றி ஆராயப்பட்டதன் விளைவாகப்பல புதிய கருத்துகள் மிதக்கலாயின.

கல்லூரிப் பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் சிலரிடமும் கருத்துக்கள் திரட்டப்பட்டன. செவிமரபுக் கதைகளும் சேகரிக்கப்பட்டன.

பட்டமங்கலத்திலும், மூனாபுதூரிலும், திருப்பத்தூரிலும் ஜீவவந்தர்களாக உள்ள முதியோர்கள், முன்புகேட்டறிந்த செய்திகளை மீட்டுரைக்கும்படி கேட்டுத் தேவையான ஆதாரங்கள்தொடர்புகள் திரட்டப்பட்டன.விடுபட்ட இடங்களிலிருந்து வரலாறுகள் சேர்க்கப்பட்டன.

இவற்றின் மூலம் கருணாகரத்தொண்டமானைப் பற்றிய பல நிகழ்வுகள் உருப்பெற்றன.கருணாகரத் தொண்டமானை ஓர் உப்புவியாபாரியாக ஏற்றுக்கொள்ள எவருமே மறுத்துவிட்டனர்.அவர் இலங்கை சென்றதன் நோக்கம் இவையாகத்தான் இருக்கவேண்டும் என்று அனுமானமாகவும், ஆணித்தரமாகவும் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

பண்டைக்காலத்திலிருந்தே இலங்கை வளம் மிக்க நாடாகத் திகழ்ந்திருக்கிறது. இலங்கையிலிருந்து பல்வேறு திரவியங்களையும் பொருள்களையும் தமிழ்நாடு இறக்குமதி செய்திருக்கிறது.

இலங்கையின் வன்னிப்பகுதியில்நெல்லின் மணிகள் நிறைய விளைந்தன.பருத்திபடர்ந்து பனிநிறப்பஞ்சு காய்த்தது. யானைகளும், யானைத் தந்தங்களும் மயிலும்மயிற்பீலிகளும்அபரிமிதமாகக் கிடைத்தன. கட்டுக்கட்டாகப் பருத்திப்பஞ்சுப்பொதிகள் இலங்கையின் வட பகுதியிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதுறையாகையால்அதுபருத்தித்துறை

என வழங்கியது. பருத்தித்துறையிலிருந்து நேர்கோடாகவே சென்று நாவாய்கள் தொண்டித்துறைமுகத்தில் நங்கூரமிட்டன.

இலங்கையில் விளைந்த உணவுவகை தமிழகத்தின் சந்தையிலே பரபவிக்கிடந்தன என்பதைப் பட்டினப்பாலை என்ற சங்க இலக்கியநூல் விளக்குகிறது.

இலங்கை இன்னொரு வகையில் முன்னணியில் நின்றது. வல்லமை மிக்க கொல்லர்கள் இங்கு வாழ்ந்தார்கள். யவனத்திலும் சீனத்திலும் இருந்து கிடைக்கப்பெற்ற உருக்குப்பாளங்களைக்கொண்டு காங்கேசன் துறைமுகத்துக்கு அருகில் தரமான ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன. சிறந்த உருக்கிலான வாள்கள், குத்தீட்டிகள், வேல்கள், சூலங்கள், இரும்பிலான தண்டாயுதங்கள் எல்லாம் கொல்லன்கலட்டி என்ற ஊரில் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தியாவில் அரசோச்சிய மன்னர்களுக்கெல்லாம் தரமான படைக்கலன்களை வழங்கும் ஆயுதத் தொழிற்சாலைகள் நிரம்பிய ஒரு நாடாக வட இலங்கை விளங்கியது.

கருணாகரத் தொண்டமான் சோழப்பேரரசின் தளபதிகளில் ஒருவராக நியமனம்பெற்ற கால கட்டத்திலேயே கலிங்கப்போர் கருக்கூட்டத் தொடங்கிவிட்டது. அந்தப்போரில் தாமே தளபதியாகப் பொறுப்பேற்றுப் போர்நடத்த வேண்டிவரும் என்பதை உணர்ந்த கருணாகரத் தொண்டைமான், குலோத்துங்க சோழரின் அனுமதியோடு, தக்கபக்கபலத்தோடும் பணத்தோடும் ஆளடிமைகளோடும் இலங்கை வந்தார்.

அவர் நான்கு பொருட்களை இலங்கையிலிருந்து கொள்வினை செய்து தமிழகத்துக்கு எடுத்துச்செல்வதற்காக இங்கு வந்தார். யானைகள், படைக்கலன்கள், நெல்மணிகள் பருத்தி.

எதிர்பார்க்கப்பட்ட கலிங்கப்படையெடுப்புக்கு இந்தப்பொருட்கள் அவசியம் தேவைப் பட்டன. படைவீரர்களின் சீருடைகளுக்குப் பருத்தியும், போருக்குப்படைக்கலன்களும்நீண்ட கால யுத்தம் ஏற்பட்டால் உணவுசேமிப்புக்கு நெல்லும் தேவைப்பட்டன. இந்தப் பொருள்களோடு ஓரளவு உப்பும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம்.

பொருள்களைச் சுலபமாக ஏற்றிப் பறிப்பதற்கு ஒரு நீர்வழிதேவைப்பட்டதால்தொண்டமான் ஆறு என்ற கால்வாய் அமைக்கப்பட்டிருக்கலாம். கனத்த பொருட்களைத் தரைமார்க்கமாக ஏற்றப்பறிப்பதைவிட நீர்மார்க்கமாக இழுத்துச் செல்வது சுலபமே அல்லவா?

இவற்றையெல்லாம் விட முக்கியமாக யானைகளைப் பெறவேகருணாகரத்தொண்டமான் இலங்கை வந்திருக்கவேண்டும். இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக வன்னியிலும், சிலாபத்திலும், கந்தளாயிலும், மூதூரிலும் யானைகள் அந்த நாட்களில் அபிரிமிதமாக இருந்தன. மலிவுவிலையிலும் கிடைத்திருக்கவேண்டும். போருக்குஏற்றயானைகளைப் பொறுக்கிஎடுக்கவே கஜ சாத்திரம் அறிந்த கருணாகரத் தொண்டமான் யாழ்ப்பாணத்தில்வந்துமுகாமிட்டிருக்கவேண்டும்.

யானைகளை ஆற்றில் இறக்கிப் படகுகளில் ஏற்றிய இடம் யானை இறவு எனப்பட்டது. இறவு என்றால் ஏணி அல்லது படிக்கட்டு என்று பொருளாகும். அந்தயானை இறவு இன்றும் அதே பெயரில் வழக்கில் உள்ளது. ஆங்கிலத்தில் Elephant pass என்கிறார்கள்.

இலங்கையோடு தொடர்புஉடைய முதலாவது தொண்டமான் கருணாகரத்தொண்டமான் தான்.

அவருக்குப்பின்னர் சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கையில் இன்னொரு தொண்ட மானை நாம் காண்கிறோம்.

அவர்தான் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

இந்த மலரின் கதாநாயகரான சௌமியமூர்த்தி தொண்டமானின் இலங்கைத் தொடர்பு ஆயிரம் ஆண்டுப் பழமையானது என்று கொள்வது பொருத்தமே ஆகும் அல்லவா? ❑❑❑



குடும்ப நண்பர்கள் ராஜீவும் தொண்டமானும் குதூகலத்தின் உச்சிக்கே போய்க் குலுக்குகின்றனர் கைகளை!



பாரதப்பிரதமர் பி.வி.நரசிம்மராவ் அவர்களுடன் பாட்டாளியின் பிதாமகன் தொண்டமான் அவர்கள் உரையாடும் ஒப்பற்ற தோற்றம்



முதல் இந்திய கவர்னர் ஜெனரலாக விளங்கிய மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன் தொண்டமான். இடையில் இருப்பவர் அன்றைய இலங்கை இந்தியத்தூதுவர் கண்டேவியா.



மனிதருள் மாணிக்கம் நேரு அவர்களுடன் கை குலுக்குகிறார் மக்கள் தலைவர் தொண்டமான், உடன் இருப்பவர்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயகா, கே. ராஜலிங்கம்.



இலங்கை பிரதமர் பிரேமதாசா அவர்களுக்கு இன்முகத்துடன் நினைவுப் பரிசளிக்கிறார் அன்புத்தலைவர் தொண்டமான். நடுவில் இருப்பவர் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பா.திருநாவுக்கரசு.

இந்தியாவின் மூத்த தலைவர் என்.டி.திவாரி அவர்களுடன் இலங்கையின் மூத்த தலைவர் தொண்டமான்.





இலங்கை அமைச்சர் தொண்டமான் அவர்களோடு இந்திய அரசின் இணை அமைச்சர் அருணாசலம் அவர்கள்.



இளமைத் தோற்ற இந்திரா அவர்களுடன் எழுச்சிமிகு தொண்டமான்



கருப்புக்காந்தி காமராசர் அவர்களுடன் காந்தி மனிதர் தொண்டமான்.



காஞ்சி கரிபால்டி பேரறிஞர் அண்ணா அவர்களுடன்
இலங்கை கரிபால்டி எஸ். தொண்டமான்



கருத்துக்கோமான் கலைஞர் அவர்களுடன்
கண்ணியத்தின் காவலர் தொண்டமான்

பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆருடன் பூமனச் செம்மல் தொண்டமான்





சர்வோதயத் தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களின் குடும்பத்துடன் சர்வ மக்கள் தலைவர் தொண்டமானின் குடும்பம்.



முன்னாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் இலங்கை வந்தபோது, அந்நாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்களுடன் தொண்டமான் சேர்ந்து வரவேற்கும் காட்சி.



சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களுடன்
சிந்தனைச் செல்வர் தொண்டமான்.



முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்
அவர்களுடன் முத்துவிழா நாயகர்
தொண்டமான்



இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களுடன்
இலங்கையின் தேசியத்தலைவர் தொண்டமான்.



நேருவின் தங்கை திருமதி. விஜயலட்சுமி பண்டிட் தொண்டமான் வீட்டிற்கு வருகை தந்திருந்தபோது விருந்து உபசரிக்கிறார் திருமதி கோதை தொண்டமான்.



1990-இல் நடைபெற்ற (SKAL) காங்கிரஸ் தலைவர் அவர்களுடன் பிரேமதாசாவும் தொண்டமானும்.

அமெரிக்கத் தொழிற்சங்கத் தலைவர் திரு. ஜோன் கேர்க்லண்ட் அவர்களுடன் இலங்கைத் தொழிலாளர் தலைவர் திரு.தொண்டமான்



கவிமான் வழிவந்த கண்ணியவான்



முகவையில் மலர்ந்து இலங்கையில் மணம்வீசும்
மண் வாசனையின் பூங்காவனமே!
மலை வாழ் மக்களின் இதயப் பூவே!
தலை முறைகள் நுகர்ந்திட, புதுக்கவிதை
தொண்டமான் புகழ் பாடக் கருவானேன்.

மேடைப் பாத்திகட்டி
பேச்சுப் பயிர் வளர்க்கும்
சராசரி அரசியல்வாதிகளுக்கு
நடுவே-
முத்துவிழா காணும்
வித்தக மனிதனே.....
தொண்டமானே...
நீ கொள்கை மகரந்தம்
சிந்தும் குறிஞ்சி மலர்...!
ஏழையின் செவியில்
மோகனம் இசைக்கும்
புல்லாங்குழல்...!
உனக்கு
முத்துவிழா என்பது
வேருக்கு விழுதுகள்
எடுக்கும் விழா..
தொண்டுக்குத் தோள்கள்
கொடுக்கும் விழா...
வானவில்லுக்கு வண்ணங்கள்
தொடுக்கும் விழா....!

இந்த விழா-
உனக்குத்தான் என்றாலும்
ஒவ்வொரு தமிழனுக்கும்
அதுவே
சுவைப் பலா!
குளிர் நிலா!

மலையக மக்களின்
இமை பிரித்து
நம்பிக்கை வைகறையை
நாளும் காண வைத்தவனே...!
'விதிக்குச் சிக்குண்டு
மதியிழக்கும்
கதியற்றோர் கால் நனைத்திடும்
நதியும் நீ..
நாதியற்றோரின்
நிதியும் நீ...!

தலைவர் சிலர்
சுட்டுவிரல் நீட்டினால்-
நகம் மட்டுமே
நீண்டு தெரிகிறது...
உனக்கோ-
பத்து இலட்சம் தோழர்களின்
தலைகளல்லவா
சிலிர்த்து நிற்கின்றன...!

"என்னைக் கண்டுகொள்ள
அடுத்த தலைமுறைக்கு
வாருங்கள்" என்றான்
ஓர் அமெரிக்கக் கவி
நீயோ-
வாழும் தலைமுறையிடமே
வரலாறானாய்..!
வளையாது நடக்க
வழித்தடமானாய்..!

கவரிமான்
வழிவந்த
கண்ணியவானே...

அரிச்சுவடி எழுதும்
என் விரல்கள்
ஆத்திசூடியான
உனக்கா
பதவுரை எழுதுவது?

இயலாது என்பதால்
இத்தோடு முடிக்கின்றேன்
முத்தோடு முழுநிலவாய்
இத்தரையில் எந்நாளும்
வித்தாக நீ வாழ்க! தமிழ்ச்
சொத்தாக நீ வாழ்க!

முகவை இரா நா.

With best compliments from :



"வீரம் பிறந்த நாட்டில் பிறந்தவர்
வெற்றித்தமிழர்: உலகிற் சிறந்தவர்!"
தொண்டமான் என்னும் தூயபெயரினர்!
தொண்ணூறு கடந்து பன்னூறாண்டு வாழி!

Use the World's Best

Active Dry Yeast & DANIEL Essences
Colourings, Fruit Emulsions

KINGS

Pure Vegetable Cooking Oil

VISIT

S. P. Sahul Hameed & Bros.



244, Bankshall Street, Colombo - 11.
Phone : 25529, 45348.

வெளிநாட்டுக் தமிழர்க்கொரு

விடிவெள்ளி



உலகத்தில் நாகரிகம் தோன்றாக் காலம்
ஒண்டமிழர் உயர்ந்திருந்தார் ; வரலாற் றுண்மை.
கலகத்தில் மற்றவர்கள் ஈடு பட்ட
காலத்தில் பண்பாடு தமிழர் காத்தார்
விலைபோகா வீரத்தில் காதல் தம்மில்
வெற்றிகொண்டார் தமிழினத்தார்; வாழ்க்கை
யோடு
விலகாத இலக்கியத்தைக் கலைகள் தம்மை
வெகுவாகப் படைத்திட்டார் ; புகழும் சேர்த்தார்.

தமிழர்கள் போகாத நாடே இல்லை
தன்னாட்டுக் கொப்பாக அந்த நாட்டை
இமைப்போதும் சோராத முயற்சி யாலே
எழில்குலுங்கச் செய்திட்டார் ; எனினும் இன்று
தமக்களித்த வாழ்க்கையினை மறந்த வர்கள்
தமிழர்களைத் தாக்குகின்றார் ; நன்றி கொன்றார்.
நமக்களித்த வேதனையில் குமுறும் போது
நம்பிக்கை தருகின்றார் தொண்ட மானே !

பலநாட்டில் தமிழர்கள்அல்லற் பட்டுப்
பரிதவித்துத் தாய்நாடு திரும்பும் வேளை
மலைநாடு மொரிசியசு சிங்கப் பூரோ
மார்தட்டி நிற்கிறது! தமிழர் வாழ்வில்
இலங்கையிலோ வேதனைதான் என்றே எண்ணி
இருக்கின்ற வேளையிலே பால்வார்த் தாற்போல்
துலங்குகிற தொண்டமானைப் பார்க்கும் போது
துயரமெலாம் மறைகிறது ; வெற்றிச் சின்னம்!

தொண்டமான் வெற்றியினைக் காணும் போது
தூரத்துக் கிழக்கினிலே விடியல் தோற்றம் !
அண்டையயல் நாட்டிலுள்ள தமிழர்க் கெல்லாம்
அவரேதான் விடிவெள்ளி! தாய்நாட் டிற்கு
என்றைக்கும் மூத்தமகன்; அவருக் கின்றோ
எடுக்கின்றார் முத்துவிழா; தொண்ட மானே
சென்றதெலாம் போகஇன்னும் ஆண்டு நூறு
செழித்தோங்கி வாழ்ந்திடுக ! வளர்க ! வெல்க !

புலவர் கரு-செல்லமுத்து

With best compliments from :

"வயதில் அறிவில் பெரியார் – என்றும்
வாய்மைப் போருக்கு இளையார்!
உயர் எண்ணங்கள் மலரும் சோலை!"
ஒதும் தொண்டமான் பெரியார் வாழ்க!

Anbu Brothers (Pvt.) Ltd.
&
Anbu Steels (Pvt.) Ltd.
Importers & Exporters

100, 333 Old Moor Street,
Colombo - 12.
Phone : 422987 – 24575 – 443800
Telex : 21948 ANBU CE
Fax : 94 - 1 - 449302
P.O. Box : 1964

துரையப்பா தந்தை குமாரவேல்



குமாரவேல். இது சாதாரண மனிதன் ஒருவன் 'பிறந்து விட்டான்' என்பதற்காக வைக்கப்பட்ட ஒரு சடங்குப் பெயரன்று. இது சாதனை வேள்வியின் சரித்திரப் பெயர். உழைப்பு வானில் உலா வந்த ஒரு கருப்பு மேகத்தின் உற்சாகப் பெயர். மூனாபுதூரில் விவசாயக் குடும்பத்தில் மலர்ந்த வியர்வை விழுதின் அடையாளப்பெயர்.

மலைகளோடு கொஞ்சுகிற மேகங்கள், கொஞ்சமும் மழைபொழியாது கைவிரித்தபோது, பஞ்சத்தின் மஞ்சத்தில் மூனாபுதூரின் ஒவ்வொரு குடும்ப வாழ்க்கையும் ஒடுங்கிக் கொண்டிருந்த வேளை...

சொந்த மண்ணில் நடவு செய்ய முடியாமல் ஒவ்வொருவரும் வெளிநாட்டுக்கு வெளிநடப்பு செய்து கொண்டிருந்த சமயம்.

அந்நேரம் ஏற்கனவே இலங்கை சென்று திரும்பிய இருவர்-தம் முகத்தையும் முகவரியையும் மூனாபுதூர் மக்களிடம் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் மருதப்பன். இலங்கையின் கம்பளைப் பகுதியில் காபி தோட்டமொன்றில் அவர் கங்காணியாக வேலை பார்த்து வந்தவர். அவர் பணியாற்றிய தோட்டத்தில் பணியாற்ற, உழைக்கும் கரங்கள் இன்னும் தேவைப்பட்டன. அதனால் அவரை வெள்ளைக்கார தோட்டத்துரை அழைத்து இந்தியா சென்று பணியாட்களை அழைத்து வரக் கேட்டுக் கொண்டார். அதன்படி, மருதப்பன் மூனாபுதூர் வந்தார். அங்கிருந்த இளைஞர்களை அழைத்து ஒரு கூட்டம் போட்டார். நல்ல வேலை வாங்கித் தருவதாகவும், வசதிமிகு வீடு வாங்கித் தருவதாகவும் சொல்லி அனைவரையும் ஈர்த்தார்.

அப்போது கூட்டத்தில் சிறுவன் ஒருவன் எழுந்து "உண்மையில் நல்ல சம்பளம் கிடைக்குமா?" எனக் கேட்க, மருதப்பன் "பத்து வயதிற்கு மேற்பட்ட வர்களுக்கு நிச்சயம் கிடைக்கும்" என்று உறுதியுரை நல்க "நானும் இலங்கை வருகிறேன்" எனப்

புறப்பட்டான் அந்தச் சிறுவன். அச்சிறுவன்தான் தொண்டமான் அவர்களின் தந்தை குமாரவேல் என்னும் தொண்டுத்திலகம். உழைப்பின் நாயகன்.

தோட்டத்து வாழ்வில்.....

1860-ஆம் ஆண்டில் பிறந்தவரான குமாரவேல் கம்பளையை அடைந்தது 1873-இல். அப்போது அவருக்கு வயது 13. குமாரவேல் தன் தூரத்து உறவினரான முத்தையா என்பவரின் பலசரக்குக் கடையில் வேலைக்காரர் ஆனார். அதனால், தோட்டத்து ஒப்பந்தத் தொழில் என்ற வலையில் சிக்காமல் தப்பித்துக் கொண்டார். பின்னர், சூழ்நிலையின் சூழ்நிலைகளால் தோட்டத்துப் பணியாளராகச் சேர நேர்ந்தது. அப்போதும் அவர் சுயமரியாதை காக்கும் சுயேச்சையாளராகவே இருந்தார்.

கம்பளையிலிருந்து விலகிப் பின்னர் கடுகண்ணாவிற்குச் சென்றார். அங்குக் காபி தோட்டமொன்றில் 13 சதத்திற்கு நாள்முழுவதும் வேலை செய்யும் ஒரு தோட்டத் தொழிலாளியாக வேலை தேடிக் கொண்டார். காலச்சக்கரம் ஓடுகிறது. குமாரவேல் கருப்பையா கங்காணியாகிறார்.

1875-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 13 சதம் கூலி பெற்றவர் 1940-இல் இவ்வுலகை விட்டு மறைந்த போது பல தோட்டங்களுக்கும், பல வியாபார நிறுவனங்களுக்கும் பல போக்குவரத்து நிறுவனங்களுக்கும் சொந்தக்காரராக விளங்கினார்.

கோடன் தோட்டத்திலிருந்து அவர் அட்டபாகே தோட்டத்துக்கு மாறியிருந்த சமயம். எடுத்த முயற்சிகளெல்லாம் அவருக்குத் தோல்வி. பொருளாதாரத்தின் அடிமட்டத்துக்குத் தள்ளப்பட்டார். 1955-க்கும், 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் அந்த வீழ்ச்சி ஏற்பட்டது. ஆயினும் சளைக்காமல் , கௌரவம் பார்த்து இளைக்காமல் சின்னஞ்சிறு தொழில்கள் சிலவற்றைச் செய்து மீண்டும் வித்தாக முளைத்தார். முகிழ்த்தார்.

சோப்பு, சீப்பு விற்பதிலிருந்து தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய், விற்பது வரை பலவற்றையும் செய்து பக்குவப்பட்டார். பின்னாளில் தொழில் படிப் படியான வளர்ச்சி பெற்றார்.

சொந்த வாழ்வில்.....

சகுனம் போன்ற முடைநாற்றம் வீசும் மூடநம்பிக்கையில் எல்லாம் கருப்பையா பிள்ளை என்றுமே கவனம் பதித்திடவில்லை. தன்னம்பிக்கை இல்லாதவர்க்குத்தானே மூடநம்பிக்கை. அட்டபாகே தோட்டத்தில் கருப்பையா வேலை பார்த்து வந்த காலகட்டம். வாழ்வின் ஆதாரமான பொருளாதாரம் அவரைப் பாதித்தது. வறுமை பெற்ற மூத்த மைந்தனாய்த் தள்ளாடினார்; தளர்ச்சியடைந்தார். கிழக்கு வெளுக்குமா, கீழ்வானம் சிவக்குமா என்று அவர் கண்கள் உதயத்தை உரசிப்பார்க்கத் துடித்தன. உடனே, நுவரேலியா நோக்கிப் புறப்பட்டார்.

பயணத்திற்காக அவர் பாதம் அசைத்தபோது எதிரே ஒரு நாவிதர், "நல்வழி போகும் நாளில் நாவிதன் குறுக்கே வந்தால் செல்வழி அனைத்தும் தீமை" என்ற பழம்பாடலின் பழமொழி அவரை ஒன்றும் செய்திடவில்லை.

"பகைவனுக்கும் அருள்வாய் நன்னெஞ்சே!" -என்று பாடிய பாரதியின் மனம் நம் கருப்பையா பிள்ளையின் மனம். அதனால், நாவிதரையும் அவர் நண்பராக்கிக் கொண்டார். நற்செய்திகளின் தூதுவராகவே கண்டார்.

ஐயா! ரம்பொடையில் உள்ள வெவண்டன் தோட்டத்துக்குச் செல்லுங்கள். அங்கே ஒரு நல்ல கங்காணியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்" -என்று இதமாக அன்று நாவிதர் வழி சொல்ல, விழிகளில் உற்சாகம் மின்னலடிக்க வெவண்டன் தோட்டத்தை அடைந்தார் கருப்பையா. "கங்காணி" பதவி அவர் தோளில் சுகமாய் வந்து அமர்ந்தது.

இந்நிகழ்ச்சி நடந்தபோது காலத்தின் வயது 1890. 19 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1909-இல் வெவண்டன் தோட்டமே அவருக்கு உரிமையாக பட்டா எழுதிக் கொடுத்துவிட்டது என்றால் அன்னாரின் கடமையுணர்வு உள்ளங்கைத் தேனாக

விளங்கும். காடாக இருந்த மண்ணையெல்லாம் பண்படுத்திப் பண்படுத்தி, தேயிலை விளைவிக்கும் பொன்பூமியாக மாற்றிய பெருமை அவருக்குண்டு.

1875-இல் 25 தோட்டங்களில் மட்டுமே தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது என்று பொரஸ்ட் என்ற வெள்ளைக்காரர் 'இலங்கையில் நூறாண்டுக் கால தேயிலை வளர்ச்சி' என்னும் தம் நூலில் குறிப் பிட்டிருக்கிறார். அத்தோட்டங்களில் கருப்பையா வின் வெவண்டன் தோட்டமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் கங்காணிமார்கள் சுரண்டலின் தத்துப்பிள்ளைகளாக மாறி மதிப்பும் மரியாதையும் இழந்து கொண்டிருந்தார்கள். ஆனால் கருப்பையா பிள்ளையோ என்றும் மனித நேயத்தின் மறுபதிப்பாக விளங்கினார்.

சிட்டுக்குருவி போல் பறந்து பறந்து செல்வம் சேர்த்து, மாட்டு வண்டிகள் வாங்கியும், போக்குவரத்து வாகன நிறுவனம் தொடங்கியும், வியாபாரத்தைப் பெருக்கி ஒரு ராஜாளியாக வளர்ந்தார். வெள்ளை முதலாளியின் அரவணைப்பில் இருந்த தேயிலைத் தோட்டத்தை விலைக்கு வாங்கிய கருப்பு முதலாளியானார். 'ஊழையும் உப்பக்கம்" காண வைக்கும் கருத்து முதலாளியுமானார்.

குடும்பத்து வாழ்வில்.....

வாலிபம், இயற்கை உயிர்களுக்குத் தரும் நன்கொடை. இளமையின் இளையமகனாயிருந்த கருப்பையாவுக்குப் பாசத்தின் நேசமாயிருந்த கதிராயியிடம் காதல் மலர்ந்தது. குடும்பமாய்க் காய்த்து, இரு மழலைகளாய்க் கனிந்தது.

கள்ளர் குலத்துக் கருப்பு ரோஜா கருப்பையா, கள்ளர் குலத்தில் கருவாகாத கதிராயியுடன் கவிதை வாழ்க்கை நடத்தினாலும், மூனாபுதூரில் உள்ள அவர் சமூகத்தினர் சம்மதம் வழங்கிட சம்மதிக்கவில்லை. அதனால் அவர் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்கு நாணலாய் வளைய வேண்டியதாயிற்று.

1903-இல் சித்தம்மை என்னும் மற்றொரு மடந்தையை மணந்தார். இன்னொரு மணவாழ்வைத் தொடர்ந்தார். மக்கட் செல்வமும் பெற்றார். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் ஐந்தில் இரண்டு மடிந்திட மூவர் முத்தமிழாய் எஞ்சினர்.

முதல் நான்கு குழந்தைகளும் பெண்களாய் பிறந்திடவே ஐந்தாவதும் பெண்ணாகிவிடுமோ என அவர்கள் அஞ்சினார்கள். எனவே அன்பு மகன்தான் வேண்டுமென்று அன்னையார் நோன்பு நோற்றார். திருக்கோஷ்டியூர் கோயில் சென்று வேண்டுதல் செய்தார். வேண்டுதலின் தூண்டுதலால் ஐந்தாவது குழந்தை அஞ்சாத சிங்கமாக, மங்காத விளக்காக அவர்களுக்குப் பிறந்தது. அக்குழந்தைதான் திருக்கோஷ்டியூர் திருக்கோயிலில் சௌமிய மூர்த்தி என்று பெயர் சூட்டப்பெற்று இன்று தமிழ் நெஞ்சமெல்லாம் தோகை மயிலாய்ப் புகழ் விரிப்பவர். தோட்டத் தொழிலாளரின் பூபாள விடியலுக்கே விடாது குரல் கொடுப்பவர்! ஆம் .... அவர்தான் பெரியார் தொண்டமான்.

("தலைவர் தொண்டமான்" நூலைத் தழுவி எழுதப்பட்டது.)



எமக்கும் இந்தப்
பெயர் கொண்ட இதர
நிறுவனங்களோடு
சம்பந்தமில்லை.
வேறெங்கும் எமக்கு
கிளைகள் கிடையாது.



குமரன் சில்க்ஸ்

12, நாகேஸ்வரன் சாலை, (பனகல் பார்க் எதி
தி.நகர், சென்னை - 600 017.

**எமக்கு வேறெங்கும்
கிளைகள் கிடையாது.**

தொழிலாளர் இயக்கம்



இந்தியாவிலேயே முதன் முதலில் தொழிற்சங்கம் உருவாகியது சென்னையில்தான். இதன் தோற்றத்திற்குக் காரணமானவர் தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஆவார். தொழிலாளர் இயக்கம் குறித்து அவரது விளக்கவுரை இங்கே இடம் பெறுகிறது.

எனது வாழ்க்கை, தொடக்கத்தில் சமயப்பணிகளில் ஈடுபட்டது. அதனால் பல சமய ஆராய்ச்சிப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சி பொதுமை உணர்ச்சியை உண்டாக்கியது. சமயங்களின் அடிப்படையாயுள்ள பொதுமை சமரசம் ஏன் உலகில் பரவவில்லை என்று யான் எண்ணுவேன். சிற்சிலபோது ஆழ எண்ணுவேன். எனக்கு ஒன்றும் விளங்குவதில்லை. சிங்காரவேல் செட்டியார் கூட்டுறவு சிறிது விளக்கஞ் செய்தது. அவ்விளக்கம் பொதுமையை உலகில் பரப்பி நிலை பெறுத்தவல்லது. காரல் மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் இடம்பெறச் செய்தது.

காந்தியடிகளின் அகிம்சா தர்மத்தில் என் மனம் சென்றது. அகிம்சை நல்லதே. அது வெறும் தத்துவ உலகிலும் கவி உலகிலும் நிலவிக் கொண்டிருக்கும் வாழ்க்கை உலகில் ஒன்றி நிலவுமா? என்று ஐயுறுவேன். சில வேளை ஐயம் முளைத்தெழுந்து என் நெஞ்சைத் துளைக்கும். துளைப்பு, சிற்சில சமயம் மனநோயையும் உண்டு பண்ணும். அந்நோயைப் போக்க, மார்க்ஸ் மருத்துவராய் என் மானத உலகில் தோன்றுவார். மார்க்ஸ் அருளியுள்ள கொள்கை உலகில் பரவினால் வாழ்க்கை அகிம்சையில் ஒன்றுவதாகும் என்னும் நுட்பம் எனக்குச் செவ்வனே விளங்கியது.

ஒரே வயிற்றில் பிறந்தவர் பொருளைக் குறித்துப் போரிடுவதும், மன்றம் ஏறுவதும் என் உள்ளத்தைப் புண்படுத்தும். உடன் பிறந்தவரிடத்தில் போர் மூட்டாத அவரை மன்றம் ஏற்றாத ஆட்சி முறை அமையுமா என்று ஏக்குறுவேன். மார்க்ஸ் நினைவு அவ்வேகத்தைப் போக்கும். அமைதி நினைவு தோன்றும் போதெல்லாம் மார்க்ஸ் நினைவும் உடன் தோன்றுவது வழக்கமாகியது.

மார்க்ஸ் கொள்கைக்கு ஆக்கம் தேடும் அமைப்பு தொழிலாளர் இயக்கம். அவ்வியக்கத்தில் இறங்கித் தொண்டு புரிய கீர் கார்டியின் காட்சியும் 'வேங்கடேச குணாமிர்த வருஷனி சபை"யின் அழைப்பும் துணை நின்றன. வாழ்க்கையில் என்னென்னவோ மாறுதலும் வளர்ச்சியும் நிகழ் கின்றன. அவ்விசித்திரத்தை யான் என்ன என்று விளம்புவேன்?

மார்க்சியம் பொருட் பொதுமையை அறிவுறுத்தும் நாத்திக மன்றோ? என்று சிலர் என்னைக் கேட்பதுண்டு. மார்க்சியம் என்று சிலர் நாத்திகப் பிரச்சாரஞ் செய்வதும் எனக்குத் தெரியும். என் மனத்துக்கு மார்க்சியம் நாத்திகமாகத் தோன்றவில்லை. எப்படி?

மகம்மதுவின் தெய்வ ஒருமையும் கிறிஸ்துவின் அன்பும், புத்தர் தர்மமும், அருகர் அகிம்சையும், கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சிணாமூர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை. அப்பொதுமை அறம் ஏன் ஓங்கவில்லை? சில தடைகள் மறிக் கின்றன. அவை யாவை? சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி வழக்கவொழுக்கங்கள் முதலியன. இவற்றைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி தொழிலாளி வேற்றுமை. இவ்வேற்றுமையை ஒழிக்கவல்லது பொருட் பொதுமை, பொருட் பொதுமை மகம்மது வின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், பிறவும் மன்பதையின் கால் கொள்வதற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்தவை என்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது. அதனால் மார்க்சியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

உலகம் போராட்டத்துக்கும் இரையாதல் கண் கூடு. மூலம் என்ன? இது குறித்துத் தனித் தனி ஆராய்ச்சி செய்தவர் பலர். அவருள் சிறந்தவர் காரல் மார்க்ஸ். உலகப் போராட்டத்துக்கு மூலமாக நிற்பது முத லாளி-தொழிலாளி என்னும் வேற்றுமை உணர் வென்பது மார்க்ஸ் கண்ட உண்மை. இது நடுநிலை யில் நின்று போர்மூலத்தை ஆராயும் ஒவ்வோர் அறிஞர்க்கும் எளிதில் புலனாகும்.

பண்டை நூலில் சாம்ராஜ்யங்கள் பெருகவில்லை. அதனால் முதலாளி-தொழிலாளி உணர்வு, வளராமற் கிடந்தது. இந்நாளில் சாம்ராஜ்யங்கள் பெருகி உள்ளன. அப்பெருக்கம் முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வை வளர்ப்ப தாயிற்று. அவ்வளர்ச்சி வாழ்க்கையில் போராட்டத் தைப் புகுத்தியது. போராட்டத்தை ஒழிக்கும் மருந்து காரல் மார்க்சுக்குக் கிடைத்தது. அது, பொதுமை அறத்தை நிலை பெறுத்தவல்ல பொருளாதார சமரசம்.

மார்க்ஸ் கண்ட பொருட்பொதுமை, உலகில் புற அமைதியை நிலவச் செய்யும் மாண்புடையது. அக அமைதியை மகம்மது, கிறிஸ்து, அருகர், புத்தர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலி

யோர் கொள்கை நிலைபெறச் செய்யும். அக அமைதிக்குப் புற அமைதி வேண்டற்பாலது.

புற அமைதியை உலகில் நிலவச் செய்யும் வல்லமை வாய்ந்த மார்க்சியத்தை நாத்திகம் என்று எப்படித் தள்ளுவது? மார்க்சியத்தைத் தள்ளுவது சான்றோரின் அமைதிச் செல்வத்தைத் தள்ளுவதாகும். போராட்டத்தை அழைப்பதாகும்.

சான்றோர் அருளிய பொதுமை அறத்துக்கு ஆக்கந்தேடவே யான் மார்க்சில் பொருட் பொதுமைக் கொள்கையைத் தழுவுகிறேன். மார்க்சியத்தைச் சான்றோரின் மூலக்கொள்கைக்கு மாறாகப் பயன்படுத்தும் இயக்கங்களில் என் மனம் ஈடு படுவதில்லை.

மார்க்சியம் முழுமையதா? குறையுடையதா? எதிலுங் குறையுண்டு. மார்க்சியத்திலும் சிறு குறையுண்டு, என்ன குறை? அதன் கண்சத் என்னும் நுண் பொருள் வெளிப்படையாகக் காணப்படாமை. மார்க்சியத்தில் 'சத்' என்னும் செம்பொருள் சேர்ந்தால் அது நிறைவுடையதாகும்.

மார்க்சியம் சமதர்மத்தை அறிவுறுத்துவது. சமதர்மத்தில் 'சத்' தானே சேரும். 'சத்' தைக் கொண்ட சமதர்மமே சன்மார்க்கமென்பது. சன்மார்க்கம் எது? மார்க்சியமும், மகம்மது, கிறிஸ்து, புத்தர், அருகர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கையுஞ் சேர்ந்த ஒன்று சன்மார்க்கம். இஃது எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவங்களின்றும் கனிந்த உண்மை.

முதலாளி- தொழிலாளி வேற்றுமை உணர்வு சன்மார்க்கத்தை வளர விடாது. சன்மார்க்க வளர்ச்சிக்கு முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வு பொன்றியே தீர்தல் வேண்டும். வேற்றுமை உணர்வு எப்படிப் பொன்றும்? இதற்குப் புரட்சி தேவை. புரட்சிக்கு உரியது தொழிலாளர் இயக்கம் என்று சொல்லவேண்டுவதில்லை. ஆதலின் யான் புரட்சி மனப்பான்மையுடன் தொழிலாளர் இயக்கத்தில் இறங்கினேன்.

புரட்சி இருவகை, ஒன்று அற வழியில் நிகழ்வது. மற்றொன்று மற வழியில் நிகழ்வது. அஃது அறப்புரட்சி. இது மறப்புரட்சி. உலகைச் சீர் செய்ய அறப்புரட்சி இடம் பெறாத வேளையில், மறப்புரட்சி அவ்விடத்தில் தானே நுழையும். இரண்டாலும் விளையும் பயன் ஒன்றாகுமா? ஒல்லும் வகை அறப்புரட்சிக்கு இடம் தருவதே அறிவுடைமை. இல்லையேல் மறப்புரட்சி எழும். எனது மனத்துக்கு இயைந்தது அறப்புரட்சியே. அறப் புரட்சி வாயிலாகச் சன்மார்க்கத்தை ஓம்பவே யான் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டேன்.

இந்நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இருபத்தைந்து ஆண்டு அனுபவம் எனக்குண்டு. புரட்சி ஏன் உச்சநிலையை அடையவில்லை? சாதி மத வெறி, சம்பிரதாயக் கட்டு, மூடவழக்கவொழுக்கம், மூர்க்கப் பிடிவாதம், முதலாளி அமைப்புகளில் மோகம், தலைமைப் போராட்டம், விட்டுக் கொடுத்தல் இன்மை முதலிய தளைகள் புரட்சியைத் தகைந்து நிற்கின்றன என்று எனது அனுபவம் சொல்கிறது. இத்தளைகளை உடைத்தெறியத் தோன்றிய இயக்கங்கள் பலப்பல. அவற்றுள் சிறந்தது தொழிலாளர் இயக்கம். இது தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டவர்க்கு வியப்பாகத் தோன்றாது.

(1944ல் வெளி வந்த திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் என்னும் நூலிலிருந்து) ❑❑❑

"தாயினும் சாலப் பரிந்தூட்டும்"
தண்ணீர்க் காவிரிபோன்றவர் தொண்டமான் !
அந்தக் காவிரி மணல்போல் அவர் ஆயுள் நீடுகவே !

KAVERY CURRIES

194, Race Course Road,
Singapore -0821
Telephone : 2910448

M.A. YACOB

"வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் - புவி
மக்களெல்லாம் ஒப்புடையார்"
எனும் கொள்கையை இலங்கை மலைநாட்டில்
நடைமுறைப்படுத்திய நற்குணக் குன்றே ! தொண்டமானே !
உங்களை வணங்குகிறோம் ! வாழ்த்துகிறோம் !

CITY BEST
AUTHORISED MONEY CHANGER

272, Serangoon Road
Singapore 0821
Tel.: 2942171, Fax : 2940454
Next to Serangoon Plaza opposite Angullia Mosque.



ஆசியஜோதி உருவாக்கிய அமைப்பில் ஏகாண்டமானின் தோற்றம்

இந்தியாவிற்கும்-இலங்கைக்கும் ஏற்பட்ட தொடர்பு இன்று நேற்றையதல்ல. இது சரித்திர காலத்திற்கு முந்தியது. அரசியல் பொருளாதாரம், கலை இவைகளால் ஏற்பட்ட தொடர்பு மட்டுமல்ல. நம்மவர்களின் ரத்தமும், தோலும், சதையும் இலங்கையர்களின் ரத்தமும், தோலும், சதையும் பிரிக்க முடியாத ஒன்றேயாகும் எனப் பண்டித ஜவஹர்லால் நேரு கூறியது உண்மையிலும் உண்மையாகும்."

-இப்படி இலங்கை, இந்தியத் தொடர்பின் ஆழத்தைப் பற்றி பேசியது யார்?

1940 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம் திகதி கம்பளை மாநாட்டு அரங்கமான "நேரு நகரில் மிகவும் கோலாகலமாக நடைபெற்ற இலங்கை-இந்தியா காங்கிரஸ் (இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முன்னைய பெயர் இது) என்ற அமைப்பின் முதலாவது மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தும் போதுதான் மேற்கண்ட வசனங்கள் ஒரு இளைஞனால் தனது கன்னிப் பேச்சாகப் பேசப் பட்டன.

அந்த இளைஞன் யார்?

அந்த இளைஞன்தான், இன்று இ.தொ.கா.வின் தன்னிகரில்லாத் தலைவராக உயர்ந்து அரசாங்கத்தின் அமைச்சரவையில் ஒரு சிரேஷ்ட அமைச்சராக ஜனாதிபதி மேதகு திரு. ரணசிங்க பிரேமதாசா அவர்களின் பேரபிமானத்திற்கும்-பெருமதிப்பிற்கும் உரித்தான ஓர் உன்னதத் தலைவராக எதிரிகளாலும் ஏற்றிப் போற்றப்படும் ஏந்தலாக மலையே அசைந்தாலும் மனம் அசையாத உறுதியுடன், தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு ஒரு பொற்காலத்தை உருவாக்கித் தந்தே தீருவேன் என்ற திட சங்கற்பத்துடன் திகழும் மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் ஆவார்.

இன்று கிழக்காசியாவிலேயே மிகமிகப் பெரிய தொழிற்சங்கமாகப் புகழ்பூத்து மணக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆரம்ப பெயர்தான், இலங்கை இந்திய காங்கிரஸ் என்பது. இந்த காங்கிரஸ் உதயமாகக் காரணமாக இருந்தவர், "ஆசிய ஜோதி" யென அகில உலக மக்களாலும் போற்றப்பட்டவரும், பின்னாளில் சுதந்தர இந்தியாவின் முதல் பிரதமராக விளங்கியவருமான பண்டிட் ஜவஹர்லால் நேரு ஆவார். எந்த மக்களின் நலனுக்காக இலங்கை இந்திய காங்கிரஸை திரு. நேரு உருவாக்கினாரோ, அந்த மக்களுக்கு அரை நூற்றாண்டுக் காலத்தின் பின் பிரஜாவுரிமையைப்

சிங்கை எம்.யூசுப்

பெற்றுக் கொடுத்ததன்மூலம் ÷தேசிய அந்தஸ்தை" வாங்கித் தந்தவரான மலையக காந்தி என மக்களால்உச்சிமீதுவைத்துமெச்சப்படும்தலைவர் தொண்டமானுக்கு, நேரு உருவாக்கிய அமைப்பில் எப்படி உறவு ஆரம்பமானது என்ற கதையை சற்றே திரும்பிப் பார்ப்பது சுவையான அனுபவமாகும்.

அன்று-அதாவது 1939 ஆம் ஆண்டுக்கு முன்புவரை இந்நாட்டில் வாழ்ந்து வந்த சிங்களர் -இந்துக்கள்-முஸ்லிம்கள் இந்திய தமிழர்-மலையாளிகள்-மலாயாக்காரர்கள் என்று பல இனத்தாரும், மதத்தாரும் ஒரு தாய் பெற்ற மக்களாக வாழ்ந்து வரலாயினர். இலங்கை தொழிலாளர் யூனியன் என்ற அமைப்பின் தலைவரான திரு. ஏ.ஈ.குணசிங்கவின் தலைமைத்துவத்தை ஏற்று, மேற்சொன்ன மக்கள் அனைவரும் ஒன்றாக ஒன்றி வாழ்ந்தனர். ஆனால், திரு.ஏ.ஈ.குணசிங்க நாளடைவில் ஓர் இனத்துவேஷியாக மாறி, இந்திய எதிர்ப்புணர்வைக் கக்க ஆரம்பித்தார்.

இந்த எதிர்ப்புணர்வு ஜுவாலையிட்டுப் பரவவே, இந்நாட்டில் வாழ்ந்த இந்தியர்கள் அச்சம் கொள்ளத் துவங்கினர். இந்த அச்சம் அண்ணல் காந்தியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, மகாத்மா காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பண்டிட் ஜவஹர்லால் நேரு ÷இலங்கைக்கு அண்ணல் காந்தி அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டார்.

பண்டிட் நேரு இலங்கை வந்தபோது, இங்குள்ள இந்தியர்கள் பல்வேறு பிரிவுகளாகவும், சங்கங்களாகவும் பிளவுபட்டிருந்தனர். மிகுந்த பிரயாசையின் இறுதியில், பிளவுபட்டிருந்த இந்தியர்களை நேரு ஒன்றிணைத்தார். தானே சட்ட திட்டங்களை வகுத்துக் கொடுத்து, ஓர் அமைப்பின் கீழ் இயங்குவதன் மூலம் பெறப்போகும் நன்மைகளை விளக்கி, "இலங்கை-இந்திய காங்கிரஸ்" என்ற அமைப்பை உருவாக்கி கொடுத்துவிட்டுத் தாயகம் திரும்பினார். இந்த அமைப்புதான் நாளடைவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் உருமாறி உன்னதம் பெற்றது என்பது பிற்காலச் சரித்திரம்.

ஜவஹர்லால் நேரு தூண்டிவிட்டுச் சென்ற அமைப்பு, அதன் ஆரம்ப கட்டத்தில் மாவட்டங்கள்தோறும் ஜில்லாக் கமிட்டிகளை ஆரம்பிக்கலாயிற்று. இதன் விளைவாய் மதுளை, ஹட்டன், பலாங்கொடை, நுவரேலியா, மாத்தளை, கம்பளை ஆகிய இடங்களில் ஜில்லாக் கமிட்டிகள் தோன்றின. கம்பளை ஜில்லாக் கமிட்டி 1939 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் உருவானது. இந்த கம்பளை ஜில்லாக் கமிட்டி தேசிய மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டது. இந்த மாநாட்டின் வரவேற்பு கமிட்டித் தலைவராக யாரை நியமிப்பது என்ற வினாவுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் விடை தேடியபோதுதான், எல்லாருடைய நம்பிக்கையையும் பெற்ற ஓர் இளைஞன் வரவேற்புக் கமிட்டித் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அந்த இளைஞரே சௌமியமூர்த்தி தொண்டமான்.

காங்கிரசின் முதலாவது தேசிய மாநாட்டை கம்பளையில் நடத்த வேண்டிய பொறுப்பு இறைவனால் உருவாக்கப்பட்டது. இந்திய வம்சாவளியினருக்கு இந்நாட்டில் ஒரு பொற்காலத்தைப் பெற்றுத் தரவல்ல தகையவர் தொண்டமான்தான் என்று இறைவன் அப்போதே தீர்மானித்து விட்டதன் பேறுதான்-கம்பளையில் இ.தொ.காவின் முதல் மாநாடு நடத்தும் தீர்மானம்.

தலைவர் தொண்டமான் தன் திறமை-சிரமம்-பணம் என்று அனைத்தையும் செலவிட்டு, துணிவோடு ஏற்ற கருமத்தைச் சிறப்புற நடத்தி முடித்தார். அந்த மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தும் பணி தலைவர் தொண்டமானுக்கே தரப்பட்டது.

அன்று மேடை ஏறிய தலைவர் தொண்டமான் இன்று இமயமாக உயர்ந்து, தன் சமுதாய மக்களை உயர்த்திவிடும் உன்னதப் பணியில் சாதனைமேல் சாதனைகளைக் குவித்து, ஒரு வெற்றி வீரராக ஜொலிக்கிறார். ❑❑❑

மொழிப்பற்று மிக்க எழில்வேந்தர்



இலங்கைவாழ்தமிழ்ச் சமுதாயத்தின் நலனுக்காக நற்பணியாற்றிய தமிழ்த் தலைவர்கள் பலர் வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் தமிழுக்காக-தமிழின் வளர்ச்சிக்காகச் சேவையாற்றிய செம்மலர் எத்தனை பேர் என எண்ணிப் பார்த்தால், விரல்வீட்டு எண்ணி விடத் தக்க ஒரு சிலரே அத் தகுதியைப் பெறுகின்றனர். இவர்களுள் தமிழ் வாழவும், வளரவும் உன்னதமான உண்மையான பணி செய்தவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தன்னிகரில்லாத் தலைவரும், பயணத் துறை, கிராமத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் பெருந்தலைவருமான மாண்புமிகு சௌமிய மூர்த்தி தொண்டமான் ஒருவரே என்றால், அஃது உண்மைக்குப் புறம்பான கூற்றல்ல.

நாட்டின் அனர்த்தங்களால்வடபுலத்து நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர்கள் நாடாளுமன்றப் பதவிகளை உதறிவிட்டு சென்றதிலிருந்து இன்று வரை, தமிழ் பேசும் மக்களின் தமிழ் மொழி உள்ளிட்ட அனைத்துப் பிரச்சனைகளுக்காகவும் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கும் ஒரே தலைவர் தொண்டமான் தவிர வேறு எவருமிலர்.

அத்தகைய சிறப்புக்குரிய தலைவரான திரு. தொண்டமான், தமிழ் மக்கள் சகலருக்கும் -இன-மத-பேதங்கடந்து, முழுச் சமுதாயத்திற்கும்-நாட்டுக்கும் நற்சேவையாற்றி வருகின்றார். குறிப்பாக, தமிழுக்காக-தமிழின் சிறப்புக்காக-வளர்ச்சிக்காகத் தனிப்பட்ட ரீதியிலும், இ.தொ.கா. அமைப்பு ரீதியிலும், அரசு மட்டத்திலும் என்னென்ன செய்ய வேண்டுமோ, அவற்றை நிறைவாகவும் முறையாகவும் செய்து வருகின்றார். அவ்வாறு செய்த சேவைகள் சிலவற்றை ஈண்டு நோக்குவது நலம் பயக்கும்.

1956ஆம் ஆண்டில் தனிச் சிங்களச் சட்டத்தை நாட்டின் அப்போதைய பிரதமரான திரு.எஸ். டபிள்யு. ஆர்.டீ.பண்டாரநாயக்கா நிறைவேற்றினார். அந் நாள் வரை சிங்களமும்-தமிழும் ஆங்கிலமும் எவ்வித பேதமுமின்றி நாட்டு மக்களால் பிரயோகிக்கப் பட்டு வந்தன. பிரஸ்தாப சட்ட நிறைவேற்றலின் பின், தமிழ் ஒதுக்கப்பட்டு விட்டது. தமிழில் அரசுடன் எவ்விதத் தொடர்பும் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால் தமிழ் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கும்,-சிக்கல்களுக்கும் -ஆளாக நேர்ந்தது.

இந்த நிலையைப் போக்குவது யார்? எப்படி?

இடைப்பட்ட காலத்தில் தமிழ்த் தலைவர்கள் என்போர் பல்வேறு போராட்டங்களையும் மறியல்களையும் எதிர் நடவடிக்கைகளையும் செய்து பார்த்தனர். எந்த முயற்சியும் உரிய பயனைத் தரவில்லை. ஆட்சி மாறி, திருமதி.ஸ்ரீமா அம்மையாரின் ஆட்சிக்காலத்திலும் எதிர்பார்த்த நன்மை எதுவும் ஏற்படவில்லை. அரசியல் சாக்குப் போக்குகளின், ஏமாற்ற வித்தைகளின் மத்தியில் 23 வருடங்கள் -தமிழ் மொழி ஒதுக்கப்பட்ட நிலையில் காலம் உருண்டோடி விட்டது.

எம்.கே.ஏ.ஐப்பார் சிங்கை

1977ல் ஆட்சி மாறி, யு.என்.பி. ஆட்சி அமைத்தது. அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தந்த உறுதியின்படி 1979ல் புதிய அரசியலமைப்பு ஒன்றினை ஏற்படுத்தும் முயற்சியில் ஒரு ஆலோசனைக் குழுவை அப்போதைய பிரதமர் திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அமைத்தார். அந்த நேரம் வடபுலத்துத் தமிழ்த் தலைவர்கள் -நாடாளுமன்றத்தில் அங்கத்தவர்களாகப் பதவி வகித்து வந்தவர்கள் தனித் தமிழ் நாட்டுக் கொள்கையை விரும்பி இருந்தமையால் ஒற்றையாட்சி ஏற்க மறுக்கும் மனநிலையில் பிரஸ்தாப அரசியல் அமைப்புக் குழுவில் அங்கம் பெறுவதை விரும்பாது குழுவையே பகிஸ்கரித்தனர்.

இந்த நிலையில்தான் தமிழுக்கு உரிமை பெற்றுத் தரும் தகைமை -பக்குவம்-நிதானம் அனைத்தும் தலைவர் தொண்டமானிடம் தான் இருக்கின்றன என்று தமிழ்த்தாய் எண்ணினாளோ? என்னவோ? திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு நம் தலைவர் தொண்டமான் அவர்களை அரசியலமைப்பு ஆலோசனைக் குழுவுக்குத் தமிழ் சமூகத்தின் சார்பில் ஓர் உறுப்பினராக ஏற்றுக் கொண்டது.

இந்த நியமனத்தைக் காலம் -தேவை-பயன் கருதிச்செயற்படும் தலைவர் தொண்டமான் அழகுறப் பயன்படுத்தலானார். தமிழ் மக்களின் எண்ணக் கிடக்கைகளைக் குழுவின்முன் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். தாம், இந்திய வம்சாவளி மக்களாகிய மலையகத் தோட்டத் தொழிலாளர்களை வழிநடத்தும் ஒரு தலைவர் தாமே! நாம் ஏன் தேசிய ரீதியில் பிறருக்காகவும் செயல்பட வேண்டும் என்று எண்ணவில்லை. மாறாக, பெறப்பட்ட பதவியைத் தக்க வழியில் பயன்படுத்தித், தமிழுக்கு தேசிய அந்தஸ்தைப் பெற்றுத் தந்தார். எப்படி?

தமிழும் சிங்களத்தோடு தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் மூலம் தமிழர் பெருமளவில் வாழும் வட கிழக்குப் பகுதிகளில் தமிழில் நிர்வாகத்தை நடத்தவும் வழக்காடவும் முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

தமிழுக்குத் தேசிய மொழித் தரம் கிடைத்தமைக்குத் தனித் தலைவராக மேற்படி குழுவில் அங்கம் வகித்து, தமிழர்களின் விருப்பத்தையும் தேவையையும் எடுத்துரைத்து உரிமை பெற்றுத் தந்தது நம் தலைவர் தொண்டமான் அவர்களே.

இவ்வாறு தமிழுக்கு அணிசெய்வதிலும், பணிபுரிவதிலும் தலைவர் தொண்டமான் எப்போதுமே பின்நிற்கவில்லை. எந்தெந்த வழிகளில் தமிழுக்குப் பணியாற்ற முடியுமோ, அவை அத்தனை வழிகளிலும் தலைவர் தொண்டமான் தன்பணியையும் பங்களிப்பையும் இனிதுறச் செய்துள்ளார்.

தலைவர் தொண்டமான் பெற்றுத் தந்த தமிழ் உரிமையின் அடிப்படையில் பின்னர் இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியின் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது தமிழ்மொழிக்குச் சிங்கள மொழியுடன் சம அந்தஸ்து கிடைத்தது. அது மட்டுமல்லாமல், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணையவும் அவை தமிழ்மாகாணங்கள் என்ற உரிமையைப் பெறவும் வழி பிறந்தது.

அண்மையில் தமிழ்மொழியின் இந்தத் தேசிய சம அந்தஸ்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக, ஒரு வழக்கு உயர்நீதி மன்றத்தில் தீர்ப்புக்கு வந்தது. அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டால், தமிழுக்கு தேசிய மகிமையுண்டு, என்ற அடிப்படைக் கொள்கை மறுக்கப்பட்டுவிடும். இதை உணர்ந்து கொண்டநம்பெருந்தலைவர், தொண்டமான் எங்கே எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்து, வெள்ளம் வருமுன் அணைகட்டி விடும் பாங்கில் தமிழைக் காத்து விட்டார். எப்படி என்கிறீர்களா?

தோட்டத் தொழிலாளி ஒருவருக்கு நிர்வாகம் சிங்களத்தில் ஒரு கடிதத்தை எழுதியது. 'எனக்குத் தமிழே தெரியும்' சிங்களத்தில் எழுதியது எனக்குப் புரியாது' என்ற நிலைப்பாட்டில் அத்தொழிலாளி வழக்குத் தாக்கல் செய்தார். வழக்கில் அரசு தரப்பு வக்கீலின் வாதத் திறமையும் செல்வாக்கும் தேசிய மொழிக்குரிய உரிமைகளைக் கொச்சைப்படுத்தும் விதமாகத் திசை திரும்பிப்போய்க் கொண்டிருந்தது. இதை உணர்ந்த தலைவர் தொண்டமான் ஜனாதிபதியின் கவனத்துக்கு வழக்கின் போக்கினைக் கொண்டு வந்தார். ஜனாதிபதியோ மொழி ஆணைக்குழு அதிகாரியின் கவனத்திற்கு விஷயத்தை அனுப்பி வைத்தார். ஆணைக்குழு அதிகாரி அரசு தரப்பு வக்கீலுக்குத் தேசிய மொழிக்கொள்கை-விதிகள் பற்றித் தெளிவுபடுத்தி, ஒரு சட்டவியாக்கியானமே செய்துவிட, தமிழுக்கு வந்த ஆபத்து உரிய நேரத்தில் தடுக்கப்பட்டது. இதற்குத் தலைவர் தொண்டமானே காரணகர்த்தா.

இப்படித் தமிழுக்கு செய்ய வேண்டிய பணிகளை இவர் செய்தே வருகின்றார். மற்றவர்களையும் தமிழ்ப்பணி செய்ய வேண்டும் எனத் தூண்டுகிறார். இத்தகைய கைங்கரியங்களால் தலைவர் தொண்டமான் மொழிப்பற்று மிக்க ஓர் எழில் வேந்தராக விளங்குகின்றார். ❑❑❑



ஜப்பானில் தொண்டமான் தன் அமைச்சு அலுவலர்களுடன் தோன்றும் அரிய காட்சி.



இலங்கையின் முன்னாள் இந்திய உயர் அலுவலரும், இன்றைய இந்திய வெளியுறவு செயலாளருமான திரு.ஜே.என்.டிக்ஸிட் அவர்களுடன் அமைச்சர் தொண்டமான்.

1987-ல் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்கவிழாவில் தொண்டமான் தோன்றும் கம்பீரக்காட்சி.





1987-இல் நடைபெற்ற ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது மலேசியப் பிரதமர் டாக்டர் மகாதீர் முகமது அவர்களுக்கு இலங்கை அமைச்சர் தொண்டமான் பரிசளிக்கிறார்.



மலேசியத் தமிழர் தலைவர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்களுடன் இலங்கை தமிழர் தலைவர் தொண்டமான் களிப்புடன் கைகுலுக்குகிறார்.

இங்கிலாந்து ராணி எலிசபெத் அவர்களுடன் இலங்கை தோட்டத் தொழிலாளர் ராஜாவாம் தொண்டமான் கை குலுக்குகிறார்.





பணியாளர் ஒருவருக்கு வானூர்தி பயணச்சீட்டை வழங்குகிறார்.



தொழில் கருத்தரங்க மேடையில் தொண்டமான் பூங்காற்று ஓசையிடுகிறது.



மஞ்சள் மலர்கள் மகரந்தம் சிந்த, மங்கை இருவர் ஆரத்தி ஏந்த, சூரியச் சுடராய் நம் தலைவர்.

பொதுக்கூட்டமொன்றில் இளைஞர்களின் பூமாலைகளில் புதைந்து நல்வாழ்த்து வழங்கும் காட்சி.





கால் ஊனமுற்ற ஒருவருக்கு ஒற்றையடிப் பாதை வண்டி வழங்கி உள்ளம் மகிழ்கிறார் -காலம் தந்த காவிய நாயகர்.



தமது அமைச்சுப் பணியாளர்களுக்குக் கடன் திட்ட அடிப்படையில் உதவி வழங்கி மகிழும் காட்சி.



தானம், நல்லிசை வழங்க, மத்தள
கல்லிசை முழங்க, குவித்த தாமரை
ைகளோடு உலாவரும் நிலா
தொண்டமான்.



லையகக் கூட்டமொன்றில், மலர்
மாலைகள் நடுவே மாண்புமிகு
தொண்டமான்



தலைவர் தொண்டமான் ' நூல்
வெளியீட்டு விழாவில் ,
தொண்டமான் கையெழுத்துக்குப்
போட்டியிடும் இளங்குருத்துகள்



துள்ளும் வசந்தங்களாம் பள்ளிச்
சிறார்களின் வரவேற்பு நிகழ்ச்சியில்



பொது நிகழ்ச்சியொன்றில் பூரண கும்ப மரியாதையை ஏற்கும் மங்கலக் கோலம்.

பெருந்தோட்டப் பகுதி
விளையாட்டு விழாப்
பரிசளிப்பில் எழுச்சியின்
கொண்டலாய் தொண்டமான்





ஏ.எஸ். சுப்பையா, ஆர். விஜயபாலன், ந. இராமகிருஷ்ணன், ஏ.எஸ்..ஆர். தொண்டமான், பா. திருநாவுக்கரசு ஆகியோருடன் தாய்க்குணத் தலைவர் தொண்டமான்.

மக்கள் தலைவர் மாண்புமிகு தொண்டமான் அவர்களுடன் மலர்க்குழுத்தலைவர் சிங்கப்பூர் ந.இராமகிருஷ்ணன், தொண்டமான் அவர்களின் இணைப்புச்செயலாளர் திரு.பா.திருநாவுக்கரசு ஆகியோர் தேனீர் அருந்துகிறார்கள் காணுங்கள்.



தலையாட்டிப் பொம்மைகளைத் தட்டி
எழுப்பும் தலைவர் டிஸ்னிலேண்டில்





தலைவர் தொண்டமான் அவர்களுடன்
சிங்கை நண்பர்கள் இராமகிருஷ்ணன்,
எம்,ஏ.கே.ஜப்பார், எம்.ஏ ரஹீம்
-அமைச்சரின் செயலாளர்
பா.திருநாவுக்கரசு, மற்றும்
அவரின் பேரன்.



அன்பு உள்ளங்கள் அணிவகுக்க,
பண்பு வெள்ளமாய்ப் பாயும்
முத்துவிழா நாயகர்



முக்கியர்கள் புடைசூழ-முழுநிலவாய்
முறுவலிக்கும் தொண்டமான்

உணர்வும் உறவும்



சிறு பெண்கள் சிலர் கூடி மணலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் புன்னைக் கொட்டைகளை வைத்துக்கொண்டு விளையாடினார்கள், காசு முதலியவைகளை மணலில் அழுத்தி மறைத்துப் பிறகு மணலைத்தோண்டி எடுத்துப் பார்ப்பதில் சிறுவர்களுக்குத் தனி இன்பம் உண்டு. அழித்தல் ஆக்கல் என்னும் ஆற்றல் தங்களிடம் இருப்பதை அப்போது அவர்கள் உணர்கிறார்கள் அல்லவா? அதுதான் இன்பத்துக்குக் காரணம். பொம்மைகளை வைத்து விளையாடுவதில் காக்கும் ஆற்றல் இருப்பதை உணர்ந்து மகிழ்கிறார்கள். இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலில்தான் சிறுவர்களும் இன்பம் காண்கிறார்கள்.

இப்படி விளையாடி வந்த புன்னைக் கொட்டைகளில் ஒன்றை மறந்து விட்டு விட்டார்கள். அந்தக் கொட்டை மணலிலேயே அழுந்திச் சிலநாள் கிடந்தது. அதனுள் கிடந்த உயிர் வாளா இருக்குமா? அது வெளிப்பட்டது. புன்னைக் கொட்டை புன்னைச் செடியாகித் தோன்றியது.

விளையாடிய சிறுமியர் பலருள் ஒருத்தி அந்த விந்தையைக் கண்டு வியந்தாள். படைத்தலும் மறைத்தலும் ஆகிய விளையாட்டுக்கு உரிய புன்னைக் கொட்டை இப்போது காத்தல் தொழிலுக்கு உரிய இளஞ்செடியாக விளங்கியது. சிறுமியோ இளந்தாயாகிவிட்டாள், அந்தச் செடியின்மேல் கொண்ட அன்புதான் அவள் மனத்தைத் தாய்மனம் ஆக்கிவிட்டது.

சிறு செடி வளர்ந்து ஓங்கும் என்று கனவு கண்டாள், வளர்க்க முனைந்தாள், அன்பு சொரிந்தாள்.

அந்தப் புன்னைச் செடிக்குத் தண்ணீர் மட்டும் ஊற்றினால் போதும். ஆனால் அது யார் செய்யும் செயல்? அதைச் செடி என்று அறிந்த மூளை உடையவர் செயல். சிறுமியோ தன் அன்பை முன்னே செலுத்தி உணர்ந்து வளர்த்தாள். தன் தாய் தன்னை வளர்த்தமுறை-தேனும் பாலும் ஊட்டித் தன்னை வளர்த்த முறைதான் சிறுமியின் உணர்வில் நின்றது. தானும் அந்த இளஞ்செடியை அவ்வாறு வளர்க்க முனைந்தாள்.

இளம் புன்னைச் செடிக்கு நாள்தோறும் தேனும் பாலும் கிடைத்து வந்தன. தண்ணீரும் ஒவ்வொரு வேளை கிடைத்திருக்கும்.

பல ஆண்டுகள் கழிந்தன. செடி மரமாக ஓங்கியது. சிறுமி மங்கையாக வளர்ந்தாள். திருமணம் நடந்தது. இல்வாழ்க்கை அமைந்தது. குழந்தைச் செல்வமும் வாய்த்தது. இந்தக் குழந்தை ஒரு பெண் குழந்தைதான்.

டாக்டர் மு.வரதராசனார்

இந்தக் குழந்தை வளர்ந்து சிறு பெண் ஆனது. பெற்ற தாய்க்கு இந்தச் சிறு பெண் முதல் குழந்தையா? இரண்டாம் குழந்தையா? உணர்வு உலகம் கண்டவர்கள் உண்மையைச் சொல்வார்கள். இந்தச் சிறு பெண் அவளுக்கு இரண்டாம் குழந்தைதான். அவள் மனம் அன்பு நெஞ்சம்-வளர்த்த முதல் குழந்தை புன்னைமரம் தானே!

இதை அந்தத் தாயே ஒரு நாள் சொல்லிவிட்டாள்.

ஒரு நாள் அவளுடைய சிறுபெண் அழுதாள். தேனும் பாலும் பருகாமல் தொல்லை கொடுத்தாள். அப்போதுதான் சொன்னாள், "அம்மா! நீ இப்படிப் பாலும்தேனும்பருகாமல் அழுகின்றாயே! உன்னால் எனக்கு எவ்வளவு தொல்லை! உன் அக்கா ஒரு நாளும் அப்படிச் செய்தது இல்லையே!" என்றாள்.

"யாரம்மா அக்கா?" என்று மகள் கேட்டாள். "இதோ இருக்கின்றதே இந்தப் புன்னை மரம்தான். இதுதான் நீன் முதலில் வளர்த்த குழந்தை. நாள் தோறும் என் கையால் தேனும் பாலும் ஊட்டினேன். ஒரு நாளும் மறுக்கவில்ல. அழவில்லை, கோபம் வரவில்லை. ஒரு நாளும் தொல்லை கொடுக்காமல் உண்டு வந்தது. நீ மட்டும் இப்படிச் செய்கின்றாயே!" என்றாள் தாய்.

மகளின் மனத்தில் அரைகுறையாக இந்தச் செய்தி பதிந்தது. இன்னும் சில ஆண்டுகள் கழிந்தன. அவளுடைய அறிவு வளர்ந்தது. அப்போது புன்னை குழந்தையாகப் பிறந்த கதையையும் வளர்ந்த வரலாற்றையும் தாய் விளக்கினாள். மகளுக்கு உண்மை விளங்கிவிட்டது.

மகளும் உற்ற வயது அடைந்தாள். வாழ்க்கை தொடங்கினாள்.

ஒரு நாள் தன் காதலனோடு அந்தப் புன்னை மரத்து நிழலில் இருந்து பேசிக்கொண்டிருந்தாள். பேச்சில் விளையாட்டும் நகைச்சுவையும் பெருகிவிட்டன. காதல் பேச்சு, காதல் விளையாட்டு இவற்றுக்கு இடையே திடீரென்று காதலியின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தடையாக எழுந்தது. பேச்சும் மகிழ்ச்சியும் தடைப்பட்டன.

காரணம் வேறொன்றுமில்லை. நிழலில் இருந்த அவள் நினைவு நிழல் தந்த புன்னை மரத்தின் மேல் சென்றது. இளமை முதல் தன் உள்ளத்தில் ஊறி வந்த உறவுமுறை முன்வந்து நின்றது.

புன்னை மரம் தமக்கை, தான் தங்கை.இதை எப்படித்தான் மறக்க முடியும்? ஒரு நாள் பாடமா? தமக்கையின் எதிரில் காதல் பேச்சும் விளையாட்டும் நிகழ்த்தத் தங்கைக்கு மனம் இல்லை. "என்ன செய்தோம் " என்று நாணம் அடைந்தாள்.

இதை அவளுடைய உயிர்த்தோழி அந்தக் காதலனுக்குத் தெரிவித்தாள்.

இந்தக் கருத்து ஒரு பழம் பாட்டில் உள்ளது. பாடிய புலவர் யார் என்று தெரியவில்லை. தமிழ்நாடு பெயரை மறந்துவிட்டது. ஆனால், நல்ல காலம் அந்தப் பாட்டை மறக்கவில்லை.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும்" என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே!
அம்ம நாணுதும் நும்மொடு நகையே!

-நற்றிணை 172
(மணல் வீடு என்னும் நூலிலிருந்து)

❑❑❑



தொண்டமானுக்கு முத்து விழா

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்கு
எழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல்
திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும்
இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!

எனத் தமிழன்னையின் சிறப்பைப் பாடியுள்ளார் மனோன்மணீயம் சந்தரனார். உலகம் ஒரு மங்கை. கடல் அவளுக்கு ஆடை. பரத கண்டம் அவளுடைய முகம். தெக்கணம் நெற்றி. திரவிடநாடு (தமிழ்நாடு) அந்நெற்றிப்பொட்டு என உருவகிக்கிறார் சுந்தரனார். இவ்வரிசையிலேயே சொல்லிச் சென்றால் இலங்கையை உலக மங்கையின் நெற்றிச் சுட்டி எனலாம். அந்நெற்றிச் சுட்டியில் ஒளிவீசுகின்ற ஒரு முத்தாகத் திகழ்பவர் தொண்டமான்-இன்றைய இலங்கை அரசின் கிராம-கைத்தொழில் வளர்ச்சி அமைச்சர். இலங்கையின் ஒளிமுத்துக்கு (மத்துவிழா! உள்ளத்தை மகிழ்ச்சியில் துள்ள வைக்கும் ஒப்பற்ற விழா!

ஊருக் குழைத்திடல் யோகம்-நலம்
உற்றிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும்-உளம்
பொங்கல் இலாத அமைதி மெய்ஞ்ஞானம்

என்பார் பாரதியார். தொண்டமான் ஊருக்கு ழைப்பதையே வாழ்க்கையாகக் கொண்டிருப்பவர். ஆதலால் அவர் யோகத்தில் இருக்கிறார். பிறர் நலனுக்காகத் தன்னை அர்ப்பணிப்பவராக, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக விளங்கும் யாகத்தைச் செய்கிறார்; நீதிக்காகப் போராடும் போது சிறிதும் மனங்கலங்காத மெய்ஞ்ஞானியாகவும்

டாக்டர் சிலம்பொலி செல்லப்பன்

திகழ்கிறார். இந்த ஞானிக்கு முத்து விழா!
நிலம் நாடாக இருந்தால் என்ன? காடாக இருந்தால் என்ன? பள்ளமாக இருந்தால் என்ன? மேடாக இருந்தால் என்ன? இயற்கையமைப்புகளால் மட்டும் ஒரு நாடு பெருமை பெற்று விடுவதில்லை. எங்கு மக்கள் நல்லவர்களாக-வல்லவர்களாக வாழ்கிறார்களோ அந்த நிலமே பெருமை பெறும் என்கிறார் தமிழ்மூதாட்டி ஔவையார்.
நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ
அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே
என்பது ஔவை வாக்கு. நாட்டுக்குச் சிறப்பு நல்லவர்களாலேயே என்னும் இவ்வமிழ்த மொழிக்குக் காட்டாக விளங்குபவர் தொண்டமான். தொண்டமானால் அவர் பிறந்த நிலம் -வாழும் நிலம் பெருமை பெறுகிறது. நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் இந்த நல்லவர்க்கு முத்துவிழா! இவர் குலோத்துங்க சோழனின் படைத்தளபதி கருணாகரத்தொண்டமானின் குடிமரபில் வந்தவர் என்பதை வரலாறு மெய்ப்பிக்கிறது. சங்க காலத்தில் தொண்டைமான் இளந்திரையன் என்றொரு மன்னன். கடியலூர் உருத்திரங் கண்ணனார் அவனை 'நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகியவன்"
எனப் பாராட்டிப் புகழ்கிறார். 'விரும்பி அடைந்தவர்க்குப் பாதுகாவலன்" எனும் இத்தொடர் இன்றைய இலங்கைத் தொண்டமானுக்கும் பொருந்தி வருகிறது. ஆம்! அவரை விரும்பித் தலைவராக ஏற்றுள்ள இலட்சோபலட்சம் தொழிலாளர்கட்கு இவர் ஒப்பற்றபாதுகாவலராக ஒரேபாதுகாவலராக விளங்கி வருகிறார். 'நச்சிச் சென்றோர்க்கு ஏமம்" ஆகிய நம்தொண்டமானுக்குமுத்துவிழா! அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்து சால்பு ஊன்றிய தூண் என்கிறது திருக்குறள். சான்றாண்மை என்பதை ஒரு மண்டபமாகக் கொண்டால் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்தும் அம் மண்டபத்தைத் தாங்கும் தூண்களாக அமைந்துள்ளன என்கிறார் திருவள்ளுவர். தொண்ட மான் ஒரு தொண்டு மண்டபம். இந்தியத் தோட்டத் தொழிலாளர்க்குக் குடியுரிமை, வாக்குரிமை, காணிப் பங்கீடு, மலையக இளைஞர்கட்குக் காவல் துறைப் பயிற்சி, ஆசிரியர் நியமனம் என்னும் ஐந்து சாதனைத் தூண்கள் அத்தொண்டு மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. தொண்டு மண்டபத்திற்கு முத்து விழா!

நீரோடை நிலங்கிழிக்க நெடுமரங்கள் நிறைந்துபெரும் காடாக்க,. பெரு விலங்கு நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின் நெடுங்குன்றில் பிலஞ்சேரப் பாம்புக்கூட்டம் போராடும் பாழ் நிலத்தை அந்த நாளில் புதுக்கியவர் யார்?

இது பாவேந்தர் வாக்கு. பாம்போடும்பருக்கைக் கல்லோடும் போராடி இலங்கை மலை மகளுக்குத் தேயிலைப் பச்சையாடையை அணிவித்தவர் யார்? தமிழர்கள்-தமிழர்கள். இலங்கை நாட்டில் பொழுது தோறும்

புனலுக்கும் அனலுக்கும் சேற்றினுக்கும்
கக்கும்விஷப் பாம்பினுக்கும் பிலத்தினுக்கும்
கடும்பசிக்கும் இடையறா நோய்களுக்கும்
பலியாகிக் கால் கைகள் உடல்கள் சிந்தும்
பச்சை ரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடைய தாகத்
தந்த தெவர்?

தோட்டத் தொழிலாளர்கள்! உடலொடியப் பாடுபட்ட தமிழர்கள்!

அவர்களெல்லாம் எலியாக, முயலாக சந்து பொந்துகளில் நாயினும்
கீழாய் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

கரும்புத் தோட்டத்திலே–அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே! இந்து
மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே! –அவர்
துன்பத்தை நீக்க வழியில்லையோ? ஒரு
மருந்திதற் கிலையோ?–செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின்றார்– அந்தக்
கரும்புத் தோட்டத்திலே

எனப் பிஜித்தீவில் தமிழ்ப் பெண்டிர் கரும்புத் தோட்டங்களில்
வடித்த கண்ணீரை நெஞ்சுருகிக் காட்டினானே பாரதி, அதே நிலையிலேதான் இலங்கையிலும் தேயிலைத் தோட்டங்களில் பஞ்சை மகளிரெல்லாம் துன்பப்பட்டு, மடிந்து மடிந்து ஒரு தஞ்சமும் இல்லாது வாழ்ந்து துடித்தனர். இவர்கள் துன்பங்களைப் போக்க வழியே இல்லையா? என்று நல்லோர் வேதனைப் பட்டபோது ஏன் இல்லை ? இதோ நான் இருக்கிறேன் என் கண்ணனைய இந்த மக்களின் கண்ணீரைத் துடைப்பேன் எனச் சூளுரைத்துத் தோட்டத் தொழிலாளர்களின் துயர் தீர்த்த தூயவனுக்கு தொண்டமானுக்கு முத்துவிழா!

பாலை நிலம். மரங்களெல்லாம் இலையுதிர்த்து விட்டன. கதிரவனின் கதிர்கள் காய்கின்றன. எங்கும் நிழலில்லை. எவருமே நுழையாத வெப்பம் மிகுந்த பாலை நிலம். ஓர் ஆண்மானும் பெண்மானும் அப்பாலையில் திரிகின்றன. நிழலின்மையால்
பெண்மான் பெரிதும் வருந்துகிறது. அதன் துன்பத்தைக் கண்ட ஆண்மான், தான் வெயிலில் நின்று, அதனால் ஏற்பட்ட நிழலில் பெண்மானை இருத்தி இளைப்பாறச் செய்கிறது. துணையின் துயர் தீர்க்கத் துன்பத்தைத் தான் ஏற்கிறது.

இன் நிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்தளிக்கும் கலை...

எனப் பாலைக் கலியில் பாலை பாடிய பெருங்கடுங்கோ அருமையாகப் பாடியிருக்கிறார். குறுந்தொகையிலும் இப்படியொரு பாடல் உண்டு.

பாலை நிலத்தில் உண்ணுதற்குப் புல் பூண்டு எதுவுமில்லையாதலால் ஆண்மான் ஒன்று அடி மரத்தை வேகமாக உதைக்கிறது. அதனால் பெயர்ந்த சிறு பட்டையில் தன் குட்டி உண்டது போக எஞ்சியதைத் தான் உண்கிறது. பின்னர், தான் நிற்பதால் ஏற்படும் நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்கிறது. இதனை, தெறித்து நடை மரபில்தன் மறிக்குநிழல் ஆகி நின்று வெயில் கழிக்கும்எனக் கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றன் எடுத்துரைக்கிறார். தியாகத்தில் தொண்டமானை மானுக்கு ஒப்பிடலாம். தான் துன்பத்தை ஏற்று, தன்னைச் சார்ந்தோரின் துன்பத்தைப் போக்கி நன்மை உண்டாகப் பாடுபடும் அவரைத் தொண்டுமான் என்றே சொல்லலாம். தொண்ட மான் எனும் தொண்டுமானுக்கு முத்து விழா! தொண்டமானுக்குவிழா எடுப்பது தொண்டுக்கு விழா எடுப்பதாகும். முத்துவிழாக் காணும் மக்கள் தொண்டர் தொண்டமான் இன்னுமொரு முத்துவிழாக் கால அளவு வாழ்ந்து மக்களுக்குத் தொண்டாற்றும் தொண்டுமானாக விளங்க வேண்டுமென என் உள்ளத்தின் ஆழத்தே ஊற்றெடுக்கும் அன்பு வெள்ளப் பெருக்கோடு வாழ்த்துகிறேன். ❑❑❑

உலகத் தலைவர்கள் நடுவில் ஓர்
ஒளிவிளக்கே! வாராது வந்த மாமணியே!
ஒங்கி உலகளந்த பெருமாளாய் வாழியவே!

LETCHUMI MANAVARAI SERVICES

We Specialise In:

- Manavarai
- Music Party
- Food Catering/Servicing
- Video Filming
- Photographing
- Table & Chairs
- Wedding Flowers/Make Up
- Wedding Cards/Wedding Car
- P.A. System
- Arasani Pots
- Decoration of Banana Trees

Contact : *N. Raj* Tel.: 259-2591 Pager: 209-4718 Off: 339-4911

Efficient Service & Moderate Charges

 # B-11, Selegie Centre, Selegie Road, SINGAPORE - 0718

ஏற்ற பணியை இனிது முடித்திடும் ஆற்றல் உள்ளவரே!
"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்"
என்ற குறளை வள்ளுவர் உங்களை எண்ணித்தான் எழுதினாரோ?

AUTHORISED MONEY CHANGER

Buying and Selling of all foreign currency Please visit us

DE'RAHAMATTH CENTRE

01-07, Hong Leong Building, 16, Raffles Quay, Singapore 0104. Tel.: 2204786

TAQDEER TRADING PTE. LTD.

Authorised Money Changer

- looking for International Newspapers and Magazines? We sell them here.
- Forgot your Toiletries when you had to pack in a hurry? Don't worry we stock a whole range of everything you had missed.
- We also accept foreign currencies at competitive rates. Visit us at # 2-09, Same level as the Hotel Lobby.



1. பல இன மக்களைக் கொண்ட இலங்கை மக்களின் ஆத்மார்த்த உணர்வுகளைப் போற்றி வளர்த்து, இலங்கையில் வாழும் வித்தியாசமான சமூகங்களிடையே சமத்துவத்தையும் மரியாதையையும் உருவாக்குதல்.

2. உணவு, உடை, உறையுள், கல்வி, மனிதப் பண்பாட்டு வளர்ச்சி ஆகியவை தொடர்பாக-சமூகங்களிடையேயும் மக்களிடையேயும் காணப்படும் சமத்துவமின்மையை அகற்றி, சமூக நீதியை உறுதிப்படுத்தி, வசதிகள் இன்றி அவதிப்படும் மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுதல்.

3. கல்வி வசதிகளைப் பெருக்கும் பொருட்டும், அறிவு வளர்ச்சியை அமைக்கும் பொருட்டும் பள்ளிகளை-பண்பாட்டு நிலையங்களை மற்றும் ஆராய்ச்சிக் கூடங்களை நிறுவி, அவற்றைப் பேணும் வகையில் அவற்றிற்கு நிதி உதவி, நன்கொடை வழங்கல், புலமைப் பரிசில்கள், கல்லூரி நிதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல், எல்லாவகையான உயர்கல்வி நிறுவனங்களுக்கும் நிதி உதவி வழங்கல், முயற்சியுடைய பொருத்தமான பேர்களுக்கு வாணிக, தொழில் துறைகளிலும் நிபுணத்துவம் கொண்ட தொழில்களிலும் வாய்ப்பளித்தல், தடைப்பட்டவர்களின் திறமைகளை வளப்படுத்தும்வகையில் பயிற்சி நிலையங்களை அமைத்தல்.

4. வறுமை மற்றும் துன்பங்களை நிவர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு நிதி உதவி, மற்றும் ஏனைய பொருளாதார உதவிகள் வழங்கல், வறுமையாலும் விபத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளவருக்கு உதவும் வகையில் அநாதை இல்லங்கள், திக்கற்றவர்களுக்கான

இல்லங்கள், ஏழைகளுக்கு உதவி செய்யும் அமைப்புகள், புனர்வாழ்வு நிலையங்கள் ஆகியவற்றை அமைத்து நடத்தல்.

5. எல்லாவிதமான நோய்களையும் தடுத்து நிவாரணம் அளிக்கும் முயற்சிகளுக்குப் பொருளாதார உதவி அளித்து உதவி செய்தல். நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், உடல் ஊனம் கொண்டவர்களுக்காகவும் இயங்கும் ஆஸ்பத்திரிகள், மருத்துவ விடுதிகள், சுகாதார நிலையங்கள், ஓய்வு விடுதிகள் ஆகியவற்றை அமைத்து நடத்துதல்.

6. சிறுவர் சிறுமியரின் சுகாதாரத்தைப் பேணும் உணவு, உடை, மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சை வசதிகளை ஏற்படுத்துதல். ஊட்டச்சத்து இன்மை (போஷாக்கின்மை), விபத்து மற்றும் நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையங்களை அமைத்துப் பாதிக்கப்பட்டவர்களை முறையாகப் பராமரித்தல்

7. இலங்கைவாழ்மக்களின் கற்பனை வளத்தை அதிகரிக்கும் வகையில் கலை, கலாசார மற்றும் இலக்கியத் துறை முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்து வளர்த்தல்

"தலைவர் தொண்டமான்"
நூலிலிருந்து

ஒரு விளக்கம்

❑ இந்த அறநிதியம் தொண்டமான் பவுண்டேசன் (THONDAMAN FOUNDATION) என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ளது.

❑ கல்வியில், வாணிகத்தில், அறிவியலில், ஆராய்ச்சியில், சுகாதாரத்தில், தொழில்துறைகளில் என எல்லாத் துறைகளிலும் மலையக மைந்தர்கள் முன்னேற்றப்பட வேண்டும் என்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

❑ இந்த அறநிதியத்திற்குப் பத்து இலட்சம் ரூபாய் தம் சொந்தப் பணத்தை முன்தொகையாகத் தந்த பெருமைக்குரியவர் திரு.எஸ். தொண்டமான் அவர்கள்.

❑ ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் இதற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளார்.

❑ இலங்கையில் வேறு எந்தத் தலைவரும் சிந்திக்காத– செயல்படாத திரு. தொண்டமானின் புதிய சிந்தனை இது; செயல்திட்டம் இது.

❑ திரு.தொண்டமான் அவர்கள் தமது 75வது வயதில் இந்த அறநிதியத்தைத் தோற்றுவித்தார்.

❑ இந்த அறநிதியத்திற்குத் தோட்டத் தொழிலாளிகள் ஒவ்வொருவரும் தங்கள் ஒருநாள் சம்பளத்தை அன்பளிப்புச் செய்து, இந்த நிதியைப் பெருவெள்ளமாகப் பெருக்கவைக்க வேண்டும் என்பது திரு. தொண்டமான் அவர்களின் வேண்டுகோளாகும்.

❑ அமெரிக்காவில் ஒரு ஹென்றிபோர்டு, ஒரு ராக்பெல்லர், இந்தியாவில் ஒரு பிர்லா,. தமிழகத்தில் ஒரு ராஜா அண்ணாமலையார் நிறுவிய அறநிதியங்கள் போல, இலங்கையில் தொண்டமான் அறநிதியம் ஒளிவிடப் போகிறது.

❑ தொண்டமான் அறநிதியம்-கார் உள்ளளவும், கடல்நீர் உள்ளளவும் அவரது பெயரை நிலைக்கவைக்கப் போகிறது. ❑❑❑❑❑❑❑

–ம.ஆ.

வெள்ளைநிலவு



மக்கள் மனங்கவர் மாமேதை தொண்டமான்
திக்கற்ற தமிழர்க்குத் திசைகாட்டி! விடிவெள்ளி!

உழைப்பவர் துயர் நீக்கும் உன்னத மருந்து!
தழைக்கும் செந்நெல் தமிழ்க்கிவர் மேகம்!

கலிங்க வெற்றிக் கவசம் பூண்ட
கருணா கரனின் கண்கண்ட வாரிசு!

பிரார்த்தனைப் போரில் பெருவெற்றி பெற்றவர்!
தராசு முனைபோல் சமநீதி காப்பவர்!

கலிங்கத்துப் பரணியைப் போன்று இவர்க்கும்
இலங்கைப் பரணி எழுவது நிச்சயம்!

அமிழ்தென இனிப்பவர், அழகிய சொல்லர்!
இமிழ்கடல் சூழ்ந்த இலங்கையின் செங்கதிர்!

இந்தியத் தொழிலாளர் இன்ப வாழ்வுக்கு
நந்திகள் தம்மை நசுக்கிப் போட்டவர்!

வாடிய தமிழரைக் கண்ணுறும்போதெலாம்
வாடிய தங்கத் தலைவர் தொண்டமான்!

மறவழி மறந்தவர், மகாத்மா வழியில்
அறவழி நடந்தவர்! அகிம்சையின் தூதுவர்!

இரும்பு மனிதராய் இருப்பவர்! இவரே
கரும்பு மனிதராய்க் கசக்கா திருப்பவர்!

எண்பதின் இளைஞர்! இளைஞர்க்கோர் விளக்கு!
விண்ணில் எழுந்த வெள்ளை நிலவிவர்!

மண்ணில் பிறந்த மக்கள் கனவிவர்!
எண்ணிலா ஆண்டுகள் எய்தி வாழ்கவே!

புலவர் நா.இளங்கோ

தேயிலைத் தோட்டத்துத் தென்றல் காற்றே!
வாயில்லாப் பூச்சிகளைப் பேசவைத்த
வளநாட்டுப் போர்முரசே!
நோயில்லாமல் நீங்கள் நூறாண்டு வாழ,
நெஞ்சார வாழ்த்துகிறோம்.

CISONS ELECTRONICS

Manufacturers & Exporters
Audio & Vidio Replacement Spares

21/1, NARASINGAPURAM STREET,
MOUNT ROAD, MADRAS - 600 002.
INDIA.

Fact : 835838
Phone : Off : 833521
Res : 868444
Telex : 041-6566 CE



தோளாப் புகழ்



தொண்டமான்

மனிதர்கள் நாளும் பிறக்கிறார்கள், ஆனால் அவர்களில் எத்தனை பேர் சிறக்கிறார்கள்? எவ்வளவு பேர் மனிதர்களாக மிளிர்கிறார்கள்? மாந்தரில் மீமாந்தராகப் பொலிபவர்கள் மிகச் சிலரே! அந்த மாமனிதர்கள் -மனிதரில் புனிதர், மற்றையோருக்கு முன் மாதிரியாக ஒளிர்கிறார்கள், இளந்தலைமுறைக்கு எடுத்துக் காட்டாக இலங்குகின்றனர்.

அத்தகு வியத்தகு தலைவரில் ஒருவரே நம் தொண்டமான் அவர்கள். தமிழகத்தினின்று (புதுக்கோட்டை பக்கல் மூனாபுதூர்) ஏழு வயதில் இலங்கை சென்று சிறந்து ஏற்றமிகு தலைவராகப் பிறக்கும் பெருமகன், அங்கே அமைச்சராகி, 10 இலட்சம் தோட்டத் தொழிலாளரின் தோன்றாத் துணைவராகி எல்லோர் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ள ஏந்தல், எண்பதாண்டு இளைஞர், ஆயிரம் பிறை காண இருக்கும் அண்ணல், முத்து விழாக் கண்டிடும் மூதறிஞர்.

இப்படி இங்கிருந்து அங்குச் சென்று கொடி கட்டிப் பறக்கும் கோமான் வரலாறு, நமக்கெல்லாம் வழிகாட்டி, இளைய தலைமுறைக்கு வழி காட்டும் ஒளி விளக்கு. இப்பெரியாரின் சீரிய வரலாறு நமக்கெல்லாம் உந்து சக்தி -ஊக்குமுகம். எப்படி எதனால் இவர் இப்படி ஒங்கி ஒளிர முடிந்தது (risen to the pinacle of glory) என்றாய்ந்து அவ்வகையில் -வழியில் நாமும் நடந்து சிறப்பதே நம் கடன். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரே, ஞாலப் புகழ் பெற முடியும். அதற்கு ஆன்றோர் வாழ்வு அரிய சாதனம்.

அவர்கள் அடிச்சுவட்டினைப் பின்பற்றிச் செல்வதே வருங்காலப் பெருவாழ்வினுக்குரிய சீரிய வழி. வாழ்வது ஒரு கலை. தோன்றிற் புகழோடு தோன்ற வேண்டும்.நிலையற்ற உலகில் நிலை யில்லா வாழ்வில் நிலைபெற நம் புகழினை நிலைநாட்ட வேண்டும். 'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பது ஒன்று இல்'(குறள் 233)

வாழ்வின் வெற்றியே-இசைபட வாழ்தலில்தான் உள்ளது. ஏற்றமிகு வாழ்வின் ஊற்றம் யாங்குளது? நம்முன் சிறந்தாரைப் பின்பற்றுதல் வேண்டும். அப்படி வாழ்வோமாயின், நாம் வரும் தலைமுறைக்கு எடுத்துக் காட்டாக அமைவோம். (First of all follow an example, then only you will be able to set an example) உயர் வாழ்வின் மையமே போலச் செய்தலில் தான் உளது. வாழ்ந்தால் தொண்டமான் போல்வாழ்வோம்-வாழவேண்டும். அவர் போல புகழ்

பேராசிரியர் மது.ச.விமலானந்தம்

பூத்துப் பொலிய வேண்டும். மக்கள் தலைவராய் மிளிர்தல் வேண்டும் என்ற எண்ணம் திண்ணிதாக வேண்டும்.

ஏனெனில் வாழ்வே வளம் மிக்க சான்றோரைப் போன்று வாழ்தல் வேண்டும் என்ற வேணவாவில்தான் உளது. (Life is nothing but an imitation rather an imitation of imitations. we must first imitate and then emulate. This is the secret of a successful-exemplary life).

'பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று என்று பிறந்தோம், உண்டோம் உறங்கினோம், மறைந்தோம் என வாழாது, சாதனை செய்து, வரலாறு படைத்து நாட்டு வரலாற்றில் மொழி வரலாற்றில் சமுதாய வாழ்வில் பேரும்புகழும் பெற்றுப்பிறங்க வேண்டும். அப்படித் தொண்ட மானிடம் நாம் கண்ட வாழ்வியல் கூறுகள், என்னென்ன என இனங்கண்டு, அதன்படி நடந்து நாமும் தொண்டமானின் வாரிசுகளாக விளங்க வேண்டும்-துலங்க வேணும். அதனை விடுத்து, வெறுமனே கண்மூடிக்காதல் கொண்டு கொண் டாடுதல் (hero worship) கூடாது. அது உணர்வின் பாற்பட்டது, அறிவின் பால் அமைவது அன்று. எனவே தொண்டமானின் பல்வேறு பரிமா ணங்களை உற்று நோக்கி உண்மை கண்டு அவ்வழி நடந்து அவர் போல் திகழ்வோம்.

கடமை: மக்களாகப் பிறக்கும் நமக்கு எனச் சில கடமைகள் உண்டு. அவற்றை ஒல்லும் வகையான் ஒவாது ஆற்றின், உயர்புகழ் பெறலாம். (The path of Duty is the way to Glory-Lord Tennyson) நம்மில் பலர் நமக்குரிய கடமைகள் ஆற்றுவதில்லை, எனவே நலம்பெறுதல் இல்லை, வளமுறுதலும் இல்லை. இலக்கிய மன்னவனாம் நம் அண்ணா நவிலவில்லையா? கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு. Duty, Dignity, Discipline-Three Ds. கடமை செய்யின் கண்ணியம் பெறலாம்அதற்குக் கட்டுப்பாடு தேவை. இந்த முந்நெறியில், நன்னெறியில் நடப்பின், முதன்மை பெறலாம். தொண்டமான் அவர்கள் மக்கள் சேவையே மகேசன் சேவை' எனத் தமிழைத் தேசிய மொழி ஆக்கினார். இந்தியத் தோட்டத் தொழிலாளர்க்கு அவர் ஆற்றிய கடமைகள் அளப்பில. அதனால் மிகு புகழ் மேவினார்.

உண்மை நன்மை: 'அரசியல் போக்கிலிகளின் கடைசிப் புகலிடம்' (politics is the last resort of the scoundrels). அங்குப் பொய்யும் புனைசுருட்டுமே ஓங்கும். காந்தியடிகள் தேசியத்தில் தெய்வீகத்தை இணைத்தார், அதனால் மகாத்மா ஆனார். தொண்டமான் தேர்ந்த அரசியல் ஞானி. உண்மை உரைத்தார், நன்மை செய்தார். கண்ணதாசன் கருதுமாப்போலே 'உண்மையைச் சொல்லி, நன்மையைச் செய்தால், உலகம் உன்னிடம் மயங்கும்' உண்மை (Truth) நன்மை (Goodness) தொண்டமானின் இரு கண்கள். எனவே மக்களின் கண்களானார்.

மனிதநேயர்: மனிதம் (humanism) மிக்கோரே மனிதர், இல்லாதோர் விலங்கு (human beast). உறுப்பு ஒத் திருத்தலால் எல்லோரும் மனிதராகார். மனிதநேயம் மேவுதல் வேண்டும். தொண்டமான் அவர்கள் நேயத் தில் தலை நிற்பவர். எனவே மக்களால் நினைந்து போற்றப்பெற்றார்-பெறுகிறார்.

துணிவுடைமை: தலைமைக்கு மிகுதியும் வேண்டுவது துணிவு. துணிவு எப்போது தோன்றும்? தூய்மை இருந்தால்தான், துணிவுபிறக்கும். குறையும் கறையும் குற்றமும் கூனிக்குறுகவே செய்யும். கைத் தூய்மையும் (Fingers must be clean) கறை படியாத கரமுமே துணிச்சலைத் தரும். I am stronger than you ten, because I am pure என்றார் ஓர் அறிஞர் எதிரிகளை நோக்கி பைபிளும் Blessed are the pure, because there lies the kingdom of god என்கிறது. தொண்டமான் நேர்மையில் நிற்பவர், நெறியில் நிலைப்பவர். எனவே பீடுடை நடையும் பெருமிதத் தலைநிமிர்வும் தானே வரும், துணிவு வரவே செய்யும்.

பேதமற்றவர்: எல்லோர்க்கும் பொதுவாக ஆனபின், வேண்டியவர், வேண்டாதவர் என்ற விருப்பு வெறுப்போ, இன, மத, மொழி பேதமோ காண்பது கூடாது. ஏற்றத் தாழ்வற்ற சம சமுதாயம் காண வேண்டிய தலைவர், ஏற்றத் தாழ்வு எண்ணுவது அடாது. தொண்டமானிடம் கிஞ்சிற்றும் வேற்றுமை கிடையாது. எல்லோரும் ஓர் நிறை என்றே எண்ணியவர்-இயங்கியவர். எனவே எல்லோர்க்கும் இனியர்-இதய தெய்வம்.

கனிவு-பணிவு: 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்றார் வள்ளுவனார். கணம், பட்டம் பதவியால் உயர்ந்தோங்கும்போது, தருக்கும் செருக்கும் தாமே தோன்றும் களையென! காசு ஏற ஏற, மாசு மேவும்' கள் போதை போலே, புகழும், போதை தரும். அதில் தடம் புரளாது நிலையிற் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிதெனக் கொள்ள வேணும். கண்ணதாசன் கழறுமாறு "நிலை உயரும்போது பணிவு கொண்டால், உலகம் உன்னை வணங்கும்" இத்தகு நிலைதடுமாறா நெஞ்சர் நம் தொண்டமான். காட்சிக் கெளியர், கடுஞ்சொல்லர் அல்லர், அதனால் மீக் கூறினர் மக்கள்.

உத்தமர், வித்தகர் : Man is made up of matter (உடம்பு), Mind (அறிவு) and spirit (அன்பு) அழியும் உடலில் அழியா இருபெரும் ஜோதிகளாக அமைவன மூளையும் இதயமும் பலரிடம் அறிவு ஒங்கி இருக்கும், உணர்வு மங்கி இருக்கும், இன்னும் பலரிடம் உணர்வு ஒங்கி ஒளிரும், அறிவு மங்கி மடிந்திருக்கும். இரண்டும் சிறந்து சமனப் பட்டிருப்போரே, வாழ்வில் சிறந்தொளிர்வர். (There must be a balance between head and heart) ,தொண்டமான் அறிவும் அன்பும் இருகண்களாகக் கொண்டவர்.அறிவுமதிக்கச் செய்யும், அன்பு துதிக்க வைக்கும். அதனாற்றான் அருணகிரியார் "மதியால் வித்தகனாகி, மனதால் உத்தமனாகி" என்றார். One must be good at heart and great at mind). இவர்களைத்தான் 'ஸ்தப்பிரக்ஞன்" என்றேத்து கிறது கீதை. சால்பர் என்கிறது வள்ளுவம். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஐந்தும் சால்பூன்றிய தூண். தொண்டமான் மதியால் வித்தகர், மனதால் உத்தமர்.

மும்மை நலத்தர்: உள்ளத்தில் உருவாவது உண்மை, அது வாய்வழி வருவது வாய்மை, அது மெய்வழி மிளிர்வது மெய்மை. இந்த மும்மையே மனம், வாக்கு, காயம் என 'திரிகரண சுத்தியாக' வடமொழி விளம்புகிறது. மூன்றுக்கும் தொடர்பிருக்க வேண்டும். சொல்வேறு செயல்வேறாய் இருப்பவர்கள், மனச்சாட்சியால் தின்னப் பெறுவர். எனவேதான் கண்ணதாசன் 'ஒன்றே சொல்வார், ஒன்றே செய்வார், உள்ளத்தில் உள்ளது அமைதி ' என்றார். அது போன்றே நினைப்பது ஒன்று, நவில்வது ஒன்று. இதுவும் ஆகாது (We must mean what we say).

வேறு வகையில் விளம்பின் வள்ளுவனும் கூறுமாறு 'உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உளன்' மக்கள் உள்ளத்தில் உறைகிறார் தொண்டமான். இதற்குக் கரணியம், உண்மை (Sincerere to the core).

தலைமை: இப்போது தலைவர்-அவர் நலத்திற் காகத் தொண்டர், அவர்நலத்திற்கெனக்கட்சி அப்படி உளது, இப்படி இயலுவது, நலமான அரசியல் ஆகாது. கட்சிக்காகத் தொண்டர், தொண்டர்கட்காகத் தலைவர் என்ற முறையே நிறைவானது-நன்மை பயப்பது-நலம் தருவது. தொழிலாளரே தொண்டமானின் உயிர். எனவே இவருக்காக உயிரும் கொடுக்குவர். தொண்டமான் தொண்டருக்குத் தொண்டர். "தொண்டர் தம் பெருமை பெரிது" 'பெரிது' (அவ்வை)

தொண்டமான் ஓர் வைரம், அந்த வைரத்தின் பலவாய பட்டைகளின்று (Faets) காலும் ஒளி போல், தொண்டமானின் பலவாய பண்புகள்-பல்திறங்கள் அவரை உலகப் பெருந்தலைவராக உயர்த்தியுள்ளது. ஆளுமை சிறந்த ஆன்றோர், சால்புமிக்க சான்றோர், தன்னேரில்லாத் தலைமையர் (a great world personality).

காண்தகு ஆண்டகை, கண்ணியமிக்க புண்ணியர், ஒழுக்க சீலர்,ஒப்பரிய தலைவர், பாத்தரும் பண்பர், பல்லோரின் இதயதெய்வம், உழைப்பின் உருவம், உண்மையின் வடிவம், சுருங்கக்கூறின் ஒரு முழு மாந்தர், மாமனிதர், கருணாகரத் தொண்டைமான் வழியினர், மறவர் மரபினர். தமிழுக்கோங்கிய திருமாமணி, உலகிற்கோங்கிய ஒரு மாமணி, வாழ்க தலைவர் தொண்டமான்! வெல்க அவர்தம் மக்கட்தொண்டு!! ❑❑❑

ஆயிரம் பிறைகள் கண்ட அண்ணலே ! தொண்டமானே !
பாயிரம் – நாங்கள் கற்கும் பாடநூல் நீங்கள் என்போம் !
ஆயிரம் ஆண்டுக்குப்பின் அரசாண்டோர் மரபில் வந்த
நாயகர் தாங்கள் என்போம் ! நல்லாயுள் பெற்று வாழ்க !

ஜி. ஜேம்ஸ்

SRILANKA - CANADA - SINGAPORE

❖ ❖

"பாடுகள் பட்டோம் —புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம் "!

எனப் பாடுகின்ற தொழிலாளர் சமூகத்தின் பாதுகாவலரே !
மலையகத் திருப்பவரின் மனத்தகத் திருப்பவரே !
மாமலை வழங்கும் பூமழை மேகமே ! சௌமியச் செம்மலே !
விழாவும் மலரும் சிறக்க விழைகிறோம் ! வாழ்த்துகிறோம் !

S.A. MAJEED BROTHERS

GRAMOPHONE RECORD HOUSE
34, Upper Dickson Road
Singapore 0820 Tel : 2946965

Dealing In:
Audio, Video, Compact Disc, Records, In Tamil & Hindustani

Branch:

S.A. MAJEED MUSCIAL CENTRE
189, Selegie Road #B1-13, Selegie Centre
Singapore 0718 Tel.: 3392616

உழைக்கும் வர்க்கத்தின் உயிர்நாடி



இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஒரு விடிவெள்ளியாகவும் 10 லட்சம் தமிழ்மக்களின் பாடிவீடாகவும் திகழ்பவர் மக்கள் தலைவர் தொண்டமான். கங்காணிகளால் காட்டு விலங்குகள்போல் நடத்தப்பட்ட உழைக்கும் வர்க்கத்திற்குக் கண் திறந்துவிட்டு அவர்களையும் நாட்டு மக்களாக வாழ, வழி செய்த தியாக தீபம் திரு கருப்பையா தொண்டமான் ஆவார். இலங்கைத் தோட்டங்களில் இலைகள் வளர்வதுதான் வாடிக்கை; ஆனால் அத்தோட்டத்தில் ஒரு பூவும் பூத்தது. அந்த மனோரஞ்சித மலரின் பெயர் மக்கள் தலைவர் தொண்டமான்.

உழைக்கும் வர்க்கத்திலிருந்து ஓர் உரத்தகுரல் புறப்படும்பொழுது, அதே கூட்டத்தில் அடிபட்டு, மிதிபட்டெழுந்த ஓர் உயிர்தான் உறுமிக்கொண்டுவரும். மாவீரன் லெனினின்

டாக்டர் தி. இராசகோபாலன்

தொழிற்சங்கத்தை அலசி ஆராய்ந்த சிந்தனையாளர் பி.கோவல், "முதலாளித்துவ அமைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கப்பெற்ற மனித ஜென்மங்களாலேயே சோசலிசத்தைக் கட்டமைக்க வேண்டும்" என்று வரையறுக்கின்றார். ஆனால், இந்த விதியையே மாற்றும் விதியாக அமைந்தவர் தொண்டமான். 1924 இல் கெம்போலாவிலிருந்து ரம்போடாவிற்குச் செல்லும்பொழுது, தமது தந்தையின் காரிலேயே சென்று இறங்குகிறார். செல்வச் செழிப்பான குடும்பத்திலிருந்தும், உழைக்கும் வர்க்கத்திற்கு ஓர் உரத்த குரல் புறப்படமுடியும் என்று சரித்திரம் படைத்தவர் தொண்டமான். அரண்மனையைத் துறந்து போதி மரத்திற்குப் போனவர் வரலாறாகிவிட்டார். பங்களா வாழ்க்கையைத் துறந்து, தோட்டத்திற்கு வந்த தொண்டமான், இன்று காட்சியாக நம் கண்முன்னே நிற்கிறார்.

மகாத்மா காந்தியடிகளின் செல்வாக்கு, தலைவர் தொண்டமானின் 14ஆம் வயதிலேயே ஆழமாக வேரூன்றிவிட்டது. 1927 நவம்பர் 13ஆம் நாள் ஜிந்துபிட்டியா கூடத்தில் மகாத்மா காந்தியடிகள் பேசிய பேச்சு, மக்கள் தலைவரின் மனத்தில் கல்வெட்டாய்ப் பதிந்துவிட்டது. "தோட்டத்தொழிலாளர்களே! இலங்கை மக்களோடு நீங்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் நட்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். உங்களுடைய வாழ்க்கை முறைதான், பல்லாயிரக்கணக்கான இந்தியர்களைப் பற்றிய நல்லெண்ணத்தை உருவாக்கும். எனவே, உங்கள் நடத்தை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும்" என்று மகாத்மா பேசிய பேச்சு, மக்கள் தலைவரின் எதிர்காலத்திற்கு ஒரு வரைபடத்தை வரைந்து கொடுத்துவிட்டது. மேலும், 'பலா பலன்களை எதிர்நோக்காமல் கடமையைச் செய்' எனப்போதித்த பகவத்கீதையும், தொண்டமான் அவர்களுடைய இலட்சியங்களைப் பட்டை தீட்டின. அடுத்தடுத்து நேரிட்ட பல பேரழிவுகளிலிருந்து தோட்டத் தொழிலாளர்களை அவர் காத்துச் சென்றது, மேற்சொன்ன மகான்கள் காட்டிய மார்க்கத்தின் வழியாகத்தான்.

சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் காந்தியத்தைக் கடைப்பிடித்தாலும், தமிழர்களுடைய உரிமைகள் பறிக்கப்படும் காலத்தில் நரசிங்கமூர்த்தியாகக் கிளர்ந்து எழுந்திருக்கிறார். 1948இல் இலங்கைவாழ் தமிழ் மக்களின் குடியுரிமை, பிரதமமந்திரி டி. எஸ்.சேனநாயகா அமைச்சரவையால் சூறையாடப்பட்டது. ஆங்கிலேயர்கள் ஆட்சியில் தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரங்களையெல்லாம், சாபங்களாக்கியது சேனநாயகா அரசு. தமிழ் மக்கள் அன்றைக்கே அகதியாக்கப்பட்டார்கள். இந்தக் கருப்புச் சட்டத்தைக் கண்டு கொதித்தெழுகிறார் தொண்டமான். தமிழர்கள் இந்த நாட்டின் தற்காலிகக் கூலிகள் அல்லர். இரண்டு மூன்று தலைமுறைகளாக இந்த மண்ணில் வேரூன்றிவிட்ட மண்ணின் மைந்தர்கள். கண்டியில் இன்றைக்கு இருக்கும் சிங்களவர்களைப் போலவே நாங்களும் இந்த மண்ணின் மகன்கள் மகள்கள். காடுகளைத் திருத்தி, தோட்டங்களாக்கியவர்கள் நாங்கள்÷ என்று ஓங்கி ஒலித்தார். சேனநாயகா ஆட்சியில் நிதியமைச்சராயிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்து, 'நான் ஒரு கண்டித்தமிழன்" தெரியுமா?" என்றார். உடனே ஜெயவர்த்தனா, 'கண்டித்தமிழனா?" என்றார். அதற்குத் தொண்டமான் 'ஆமாம்" நான் கண்டித்தமிழன்தான். எந்த யுஎன்பி ஆட்சி எங்களை அகதிகளாக்குகிறதோ அதே யுஎன்பியை வைத்தே குடியுரிமைச் சட்டத்தை மீட்கிறேன் பார்!" என்று சவால் விட்டார்.

அதே ஜே.ஆர்.ஜெயவர்த்தனே 1978இல் தொண்டமான் அவர்களைத் தமது

அமைச்சரவையில் சேரும்படி அழைத்தார். அப்பொழுது தொண்டமான் அவர்கள் நான் உங்கள் அமைச்சரவையில் சேருவதென்றால், ஆமாம்சாமியாக இருக்க மாட்டேன், என் மக்களுடைய பிரதிநிதியாகவே இருப்பேன், அவர்களுடைய உரிமைகளுக்காக எப்பொழுதும் குரல் எழுப்புவேன்+ என்ற உரிமைக்குரலோடுதான் உள்ளே நுழைந்தார். 'நீ தமிழனா" என்று கேட்டவரையே, தம் மந்திரி சபையில் அங்கம் வகிக்க வேண்டும் என்று கேட்குமாறு சரித்திரத்தை மாற்றியமைத்தவர் மக்கள் தலைவர் தொண்டமான். மேலும் பதவி வருகின்றபோது மாலைகளில் மயங்காமல் தனக்குப் பின்னாலே நிற்கும் இனத்தைக் காக்கப் பயன்படுத்தியவர் மக்கள் தலைவர். குடியுரிமைச் சட்டத்தை மீட்டுத் தருவதிலே டிஸ்ரேலி எவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொண்டாரோ (இங்கிலாந்தில்) அவ்வளவு முயற்சிகளையும் இலங்கையில் மேற்கொண்டவர் தொண்டமான்.

1948இல் இலங்கைத் தமிழர்களின் குடியுரிமைக்குச் சோதனை வந்தது போலவே. 1956இல் தமிழ்மொழிக்குச் சோதனை வந்தது. பண்டாரநாயகா தலைமையமைச்சராகத் தேர்ந் தெடுக்கபடுவதற்கு முன்பேயே அங்கிருந்த மதவாத சக்திகள் 'சிங்களம் மட்டுந்தான் இலங்கையில் ஆட்சிமொழி என்று பிரகடனம் செய்யத் தொடங்கிவிட்டன. 1956 ஏப்ரல் 13ஆம் தேதி பண்டாரநாயகா பதவியேற்கும் நாளன்று மக்கள் தலைவர் அவர்கள் அழைக்கப்பட்டார்கள். புதிய பிரதமருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துவிட்டு, -சிங்களத்திற்குத் தாங்கள் முதலிடம் கொடுப்பதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அதேஇடத்தைத் தமிழுக்கும் தரவேண்டும் என்றார்.

பண்டாரநாயகா 'நானும் அதைத்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். தொண்டமான், 'தமிழுக்கும் சரியான இடத்தைத் தராவிட்டால், விளைவுகள் வீபரீதமாகும்" பண்டாரநாயகா, 'நான் நேர்மையாகவே நடந்துகொள்வேன்" இப்படிப் பிரதமர் சொன்னாரே தவிர, அடுத்த சில நாட்களிலேயே பிற்போக்குச் சக்திகள் அவரைத் திசை திருப்பின. என்றாலும் மக்கள் தலைவர் அவர்கள் தமிழுக்குரிய இடத்தைப் பெறுவதற்குப் போராடிக்கொண்டேயிருந்தார்

சௌமியமூர்த்தி தொண்டைமான் இலங்கைத் தமிழர்களுக்காக உப்பாகக் கரைந்தவர். 1957இல் இலங்கை சென்ற பண்டித ஜவகர்லால் நேரு, தொண்டமான் இலங்கைவாழ் இந்திய சமூகத்தின் மாபெருந்தலைவர் என்றார். கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்குத் தொண்டமானைநுவரே லியாவிற்கு அழைத்துச் சென்ற பிரதமர் பண்டாரநாயகா, 'தொண்டமான் உங்களைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன். உங்களுக்குத் தமிழர்களிடம் இருக்கும் செல்வாக்கைப் போல், எனக்கும் சிங்களவர்களிடம் இருந்தால் பிரச்சினையே இருக்காது என்றார். இவ்வாறாகத் தலைவர்களாலேயே மதிக்கப்படும் தலைவராகத் திகழ்கின்றார் மக்கள் தலைவர் தொண்டமான்.

தொண்டமான் இலங்கை வாழ் வம்சாவழித் தமிழர்களுக்காக 'இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை நிறுவியவர். உழைக்கும் வர்க்கத்தை ஈடேற்றம் செய்வதற்காகப் பல சோதனைகளைச் சந்தித்தவர். 'கூலிகள்" என்று அழைக்கப்பட்ட தமிழர்களைத் 'தோட்டத் தொழிலாளர்கள் என்று அழைக்கும்படி செய்தவர். ❑❑❑

With best compliments from :

RENARSS SUPPLIES CENTRE

135 A, Wolfendhal Street,
Colombo - 13.

Dealers in : Tyres & Tubes

Telephone : 432885/434348/434736/432761
Fax : 941-445228
Importers , Estate of Corporation Suppliers,
Dealers in all Brands of Tyres, Tubes
of Agent for Sri Lanka Tyre Corporation.

துணிச்சலின் முழுப்பெயர் தலைவர் தொண்டமான்



அறிக்கை விடுவதும், பத்திரிகைகளுக்குப் பேட்டி தருவதும், கூட்டம் கூட்டுவதும், மேடையில் பேசுவதும், மாநாட்டு நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குவதும், பிற நாட்டுத் தலைவர்களுடன் கைகோத்துப் படம் பிடித்துக் கொள்வதும் மட்டுமே உண்மையான ஒரு தலைவருக்குரிய தகைமைகள் அல்ல.

தான் எந்தச் சமுதாய மக்களைத் தலைவராக வழி நடத்துகின்றோமோ, அந்த மக்களின் குறைகளையும் – தேவைகளையும் உரியவர்களுக்கு, உரிய நேரத்தில், உரிய விதத்தில் எடுத்துச் சொல்லும் பக்குவமும், அனுபவமும், நிதானமும் எவரிடம் இருக்கின்றனவோ, அவரே உண்மையான தலைவராக உயர முடியும். இதற்கு அடிப்படைத் தேவை நேர்மையும் துணிச்சலுமே தவிர வேறில்லை.

ஒரு தலைவருக்கு மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைக்கத் துணிச்சல்

சதாசிவம் வீரையா

இருந்தால்தான், அவரிடம் உள்ள பக்குவம் பளிச்சிடும், அனுபவம் அழகுபெறும், நிதானம் நிறைவுதரும். துணிச்சல் என்ற நாரிலே அனுபவம்-பக்குவம்-நிதானம்என்றபூக்களைச் சரமாகத் தொடுத்து அந்த மாலையை அணிந்தவாறு நம்மிடையே உலாவரும் ஒரே தலைவர், இலங்கைதொழிலாளர் காங்கிரசின் பெருந்தலைவரும், கிராமத் தொழில்துறை அபிவிருத்தி சுற்றுலாத்துறை அமைச்சரும், இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் தலைவருமான மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமானே ஆவார் என்றால், அது பொய்யல்ல.

இன்றைய சமகால அரசியலில் "துணிச்சலுக்கு மறுபெயர் தலைவர் தொண்டமான்தான்" எனச் சொல்லுமளவிற்கு, தான் வழிநடத்தும் இந்தியவம்சாவளி மக்களின் பிரச்சினைகளையும், தேவைகளையும், குறைகளையும் சம்பந்தப்பட்ட அரசியல் வாதிக்கோ, தேசிய தலைவர்களுக்கோ, ஸ்தாபனத்துக்கோ, அமைச்சுக்கோ எடுத்துச் சொல்லி, தீர்வுகாணத் தூண்டுவதில், அவருக்கு நிகர் அவரேதாம்.

தனக்கு வேண்டியவர்-தன் உறவினர்-தன்னுடைய அத்யந்த நண்பர்-தன் ஊரார்-தன் இனத்தார் என்ற எவ்விதத் தகுதியும் தலைவர் தொண்டமானிடம் குடிகொண்டிருக்கும் துணிச்சலின் முன்னால் என்றுமே எடுபட்டதேயில்லை. இன்று பதவிக்காக படாதபாடுபடும் தலைவர்கள் பலரை, சமுதாய, வாழ்வில் நிதர்சனமாகக் காண்கிறோம். அரசின் பங்காளியாக, அமைச்சரவையின் சிரேஷ்ட அமைச்சராக இருக்கும் உயர்நிலையை எவரும் கைகழுவ நாடுவாரோ? நாட மாட்டார்கள்.

ஆனால், - தலைவர் தொண்டமானுக்கோ அவை எதுவும்பொருட்டல்ல. தன் தலைமையில் இயங்கிவரும் இ.தொ.காவுக்காக தமது, உடல், பொருள், ஆவி அனைத்தையுமே தியாகம் செய்ய அவர் எப்போதுமே தயாராக இருப்பார்.

அவர் ஜனாதிபதியின் நண்பராக இருந்தபோதும், தன்னை நம்பியிருக்கின்ற இந்திய வம்சாவழி மக்களின் குறைகளை-தேவைகளை-விவகாரம் தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதியின் முன்னிலையில்எடுத்துச் சொல்வதில்என்றுமே அவர் தயக்கமோ-மயக்கமோ காட்டியதில்லை.

அதுவும் சொல்லவேண்டிய விஷயங்களை, சொல்ல வேண்டியவர்களுக்கு, சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டிய முறையில் துணிந்து சொல்வதில் தலைவர் தொண்டமான் மகா சமார்த்தியசாலி.

பிரச்சினைகளைத் தலைவர் தொண்டமான் எடுத்துச் சொல்வதில் மட்டும்தான் துணிச்சல்காரர்-அதாவது பேச்சளவில் மாத்திரமே இவரது துணிச்சல் இருக்கும், மற்றபடி செயலளவில் இராது என்று எவரும் தப்பர்த்தம் கொண்டுவிடக்கூடாது. எந்த அளவு இவர் பேச்சில் துணிச்சல் மிக்கவரோ, அந்த அளவில் இவர் செயலிலும் துணிச்சலான பேர்வழிதான் என்பதற்கு, அவரது வாழ்க்கை ஏட்டிலிருந்து எத்தனையோ நிகழ்ச்சிகளை நிரல்படுத்திவிட முடியும்.

இன்று அரசோச்சும் இதே யு.என்.பி சுதந்தரத்திற்குப் பின் நாட்டை ஆண்டபோது, திரு.டி.எஸ்.சேனநாயக்கா அன்றைய பிரதமராகப் பதவி வகித்தார். இவர் இந்திய வம்சாவளியினரின் நாடாளுமன்ற பலத்தைக் குறைக்கும் நச்செண்ணத்தின் வெளிப்பாடாக, இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம், இந்தியர்

பாகிஸ்தானியர் (வதிவிட) பிரஜாவுரிமைச் சட்டம் என்று இரு சட்டங்களை நிறைவேற்றினார். இதனைக் கடுமையாக எதிர்த்து வந்த இலங்கை இந்திய காங்கிரஸ் (இ.தொ.கா.வின் முன்னைய பெயர்) 1952-ல் ஒரு போராட்டத்தைத் திரு. தொண்டமான் தலைமையில் நடத்த முடிவு செய்தது. இதுவே இலங்கையில் சத்தியாக்கிரக அடிப்படையில் நடந்த முதலாவது அரசியல் போராட்டமாகும்.

அன்று கவர்னர் ஜெனரல் சோல்பரி பிரபுவின் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நாடாளுமன்றம் தயாராகியது. நாடாளுமன்றத்தின் முன் சத்தியாக்கிரகிகள் ; தலைவர் தொண்டமான் தலைமையில் நாடாளுமன்றப் படிகளில் அமர, போலீசார் ஒவ்வொரு தொண்டரையும் தூக்கி புல்தரை மீது வீசினார்கள்.

மறுநாள்-சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் தலைவரும், தொண்டர்களும் ஈடுபட்டிருந்த வேளை, ஒரு குதிரையைக் கொண்டு தொண்டர்களை மிதிக்கச் சதி நடந்தது. சற்றைக்கெல்லாம் ஒரு போலீஸ் அதிகாரி அரபுக் குதிரை ஒன்றின் மீதேறி, குதிரையை முடுக்கிவிட்டு, சத்தியாக்கிரகிகளைத் துவம்சம் செய்ய விரைந்து வந்தான்.

எப்படியோ தலைவர் தொண்டமான் இதை உணர்ந்து சற்றும் தாமதியாமல் பாய்ந்துவரும் குதிரையின் முன்சென்று , தன் இடக் கரத்தால் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, வலக்கரத்தால் குதிரையின் முகத்தில் ஒங்கி ஒர் அடி கொடுத்தார். குதிரையும் எதிர்பாராத தாக்குதலால் தடுமாற, குதிரை மேலிருந்த அதிகாரியும் நிலைகுலைந்தான். தலைவர் தொண்டமானின் இந்தத் துணிச்சலான வீர -தீரச் செயலால் பலர் காயமுறாமலும், உயிர் இழக்காமலும் தப்பினர்.

இவ்வாறு தலைவர் தொண்டமான் எத்தனையோ போராட்டங்களையும், மறியல்களையும், வேலை நிறுத்தங்களையும் முன்நின்று நடத்தியிருக்கிறார். சராசரி அரசியல் தலைவர்கள் போன்று இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு மாளிகையில் இருந்தபடியே பணிப்புரை தந்துவிட்டு, தொண்டர்கள் அடிபட, தான்மட்டும் "பத்திரமாகப் " பனிமலையில் பாதுகாப்போடு இருப்பது போன்று நம் தலைவர் தொண்டமான் ஒதுங்கியிருந்ததில்லை. மாறாக, தானும் தொண்டர்களோடு ஒரு தொண்டராக, சத்தியாக்கிரகிகளோடு ஒரு சத்தியாக்கிர கியாகப் போராட்டக் களத்தில் அடி உதை படுவார், அனுபவம் பெறுவார்.

ஜே.வி.பி.யினரின் கெடுபிடி உச்சக்கட்டத்தில் இருந்த நேரம். அப்பாவி இளைஞர்கள் எவ்வித காரணமுமின்றிக் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தனர். ஊரடங்குச் சட்டத்தையும் மீறிப் பயங்கரவாதம் தலைவிரித்தாடிய காலம். தலைவர் தொண்டமான் ஜே.வி.பி.யினரின் செயலை விமர்சித்து அறிக்கை வெளியிட்டார். இதற்குத் தலைவரின் துணிச்சலே காரணம்.

அண்மையில் நாட்டுக்குச் சமாதானத்தை ஏற்படுத்தும் நன்னோக்கில் , தமிழ்ப் போராளிகளுடன் எவருமே பேச முன்வராத ஒரு பயங்கரச் சூழலில், இ.தொ.கா.வின் சார்பில் தான் வடக்கே சென்று, தமிழ்ப் போராளிகளுடன் பேசிச் சமாதானத்திற்கான கதவைத் திறந்துவிட, முன் வந்த தலைவர் தொண்டமானின் துணிவை என்னென்பது?

இவ்வாறு எந்தக் கட்டத்திலும் , எதையும் செய்வதிலும், எதையும் சொல்வதிலும், எந்தப் பிரச்சினை மீதும் அறிக்கை விடுவதிலும், எது குறித்தும் கருத்துச் சொல்வதிலும் நம் தலைவர் தொண்டமான் தீரத்தின் இருப்பிடம்! துணிச்சலின் பிறப்பிடம்! ❑❑❑

With best compliments from :

THE

Galle Face Hotel

CO. LTD.

ESTD. 1864
OVER A CENTURY OF SERVICE WITH A SMILE

Regd. Off.: 323 Union Place, Box 330, Colombo 2, Sri Lanka (Ceylon).

The Hon. S. Thondaman

has been a veritable

Giant

of the 20th Century

who helped to lift

the living standards

of hundreds of thousands

of Sri Lankans who

were downtraders.

IN THE HEART OF THE CAPITAL BY THE SEA
YESTERDAY'S CHARM & TOMORROW'S COMFORT, TODAY – INTERNATIONAL, BUT NATIONAL
★ HELP POOR ★ GROW FOOD ★ CONSERVE WATER ★ STOP SMOKING
★ AVOID ALCHOHOLISM ★ KEEP FIT ★ DON'T GAMBLE

Cyril Gardiner
Chairman Since 1965



அரசியலில் வெற்றி கண்ட ஒரே தலைவர்

இலங்கை அரசியல் துறையில் எத்தனையோ தலைவர்கள் நாட்டுக்காகவும் -சமூகத்திற்காகவும் நற்பணியாற்றியுள்ளார்கள். இவர்களில் எத்தனைபேர் நின்று நிலைத்தனர். கரைசேர்ந்தனர் என்று அலசிப் பார்த்தால் பல தலைவர்கள் தங்களுடைய நோக்கத்தில் வெற்றி பெறாமல், தங்கள் முகவரியைத் தாங்களே தொலைத்து விட்டு, தேடியலைந்து விலாசம் இழந்து போனவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். ஒரு சிலர் மட்டுமே தங்கள் இலட்சியத்தில் வெற்றிகண்டு , நின்று நிலைக்கின்றனர். மக்கள் இதயங்களில் நீங்காத இடம் பெற்றுள்ளனர். இத்தகைய தலைவர்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், கிராம தொழில்துறை அபிவிருத்தி சுற்றுலாத்துறை அமைச்சரும், இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் பெருந்தலைவருமான மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் சிறப்புக்குரியவர்.

தலைவர் தொண்டமான் அரசியலில் அபார வெற்றிகள் கண்டதையும் மற்ற அரசியல் தலைவர்களோடு ஒப்பிடுகையில் எவ்வகையில் வேறுபட்டு நிற்கின்றார் என்பதையும் இங்குச் சற்று ஆராய்வது நலமாகும்.

நம் நாட்டு அரசியலில் தத்தமக்கு ஒரு மேடை வேண்டும், ஒரு பதாகை வேண்டும், ஒரு கட்சி வேண்டும் என்று தாமே திரைமறைவில் திட்டங்கள் வகுத்து அரசியல் கட்சிகளை அமைத்துக் கொண்டவர்கள் பலர் உள்ளனர். இவர்கள் எடுத்த விஷயங்களுக்கெல்லாம் அறிக்கை விட்டும், கூட்டம் போட்டுப் பேசியும், துண்டுப் பிரசுரம் வெளியிட்டும் சலசலப்பை உண்டாக்கினார்கள். எத்தனையோ கூட்டங்களைப் போட்டார்கள், ஊர்வலங்களை நடத்தினார்கள். போராட்டங்களையும் சத்தியாகிரகங்களையும் மறியல்களையும், வேலை நிறுத்த நடவடிக்கைகளையும் அவசியம் ஏற்படும் போதிலெல்லாம் அத்தகைய அரசியல் தலைவர்கள் மேற்கொண்டார்கள். என் னென் னமோ கோரிக்கைகளை முன்வைத்து நாடாளுமன்ற நாற்காலிகளைப் பிடித்தார்கள். கூட்டிக் கழித்துப் பாாத்தால் கண்ட பலன் எதுவுமேயில்லை. எந்தவொரு விஷயத்திலும் அவர்கள் நிரந்தரப் பயன் தரும் வகையில் வெற்றி பெறவில்லை.

அரசியல் தலைவர்களான திருவாளர்கள், பிலிப் குணவர்தனா, டாக்டர் விக்கிரமசிங்கா, டாக்டர் என். எம்.பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா, பீட்டர் கௌமன், ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.

ஆர்.ருத்திராபதி சிங்கை

வி.செல்வநாயகம், சுந்தரலிங்கம் போன்றோர் இவ்வாறு போராடி வெற்றி காணாதவர்கள் ஆவர். இவர்கள் சாதாரண அரசியல்வாதிகளா? நன்கு படித்தவர்கள், கலாநிதி பட்டம் பெற்றவர்கள், சட்டம் பயின்றவர்கள், அரசியல் வரலாறுகளைக் கரைத்துக் குடித்தவர்கள், எனினும் அவர்களால் எதையுமே உருப்படியாகச் சாதிக்க முடியாமல் போயிற்று. இன்று இவர்களில் பலர் இறந்தும் விட்டனர். இவர்களை மக்களும் மறந்து போயினர்.

உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள், உயர்வு தாழ்வை அகற்றுகிறோம், வர்க்க பேதத்தைக் குழி தோண்டிப் புதைக்கிறோம். முதலாளியின் சவப்பெட்டி மீது ஆணியறைந்து கல்லறையில் வைக்கிறோம் என்று பேசிய மாவீரர்கள் எங்கே? மாஸ்கோவில் மழை பொழிந்தால் மருதானையில் குடைபிடித்த சிவத்தச் சட்டைக்காரர்கள் எங்கே?

பாட்டாளி மக்களின் யுகப் புரட்சி கால்பேஸ்தெரு மூலைக்கு வந்து விட்டது. நாளை வருகிறது சமதர்ம ஆட்சி என்று இரும்புக்குரலில் முழங்கிய காகித அட்டைச் சிங்கங்களும், கலாநிதிப் பட்டதாரிகளும், கொட்டன் ஹோல் குதிரைகளும் எங்கே?

ஐம்பதுக் கைம்பது கட்சி, சமஷ்டிக் கட்சி, தனிநாடு கட்சி என்றெல்லாம் அமைத்து ஆர்ப்பாட்டம் செய்த அவர்கள் அரசியல் இலக்குகளை அடைந்தார்களா? இவர்களோடு தலைவர் தொண்டமானை ஒப்பிட்டுப்பார்த்தால், தொண்டமான் படித்துப் பட்டம் எதுவும் பெறாதவர். சட்டம் பயின்று தரணி ஆகாதவர். ஆனால் தான் எந்த மக்களின் தலைவனாக அரசியல் துறையில் அறிமுகமானாரோ, அதே மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து, அதற்கேற்ப ஆட்சியாளர்களுடன் பேசுவார்த்தை நடத்தி, வெகு சாதுரியமாக நடந்து, சட்டமியற்ற வைத்து சாதனைகளைக் குவித்துக் கொண்டார்.

தலைவர் தொண்டமான் கடந்த நாற்பதாண்டுக் காலத்தில் தனது சமுதாய மக்களுக்காகச் செய்த சேவைகளையும், சாதித்துச் சட்டமாக்கிக் கொண்ட சாதனைகளையும் ஒருமுறை திரும்பிப்பார்த்தால், நமக்கே மலைப்பாக -ஆச்சரியமாக இருக்கும். ஒரு தனிமனிதரா இப்படியெல்லாம் சாதனைகளைக் குவித்திருக்கின்றார் என்று அதிசயப்பட்டுப் போவோம்.

மலையக சமுதாயம் நாற்பதாண்டுக் காலமாக பிரஜாவுரிமை-வாக்குரிமை என்பன பறிக்கப்பட்ட நிலையில் அடிமைகளை விட மோசமாக அலைக்கழிக்கப்பட்டனர். வெறும் "கூலிகள்" என்று ஒடுக்கப்பட்டனர். இந்நாட்டின் பொருளாதார செல்வத்திற்கே கரம் தரும் தோட்டத் தொழிலாளர்கள் மற்ற இனத்தார் அனுபவிக்கும் எதையும் அனுபவிக்க முடியாத அடிமைகளாக அவமதிக்கப்பட்டனர். இவர்களுக்குப் பிரஜாவுரிமை வாங்கித் தந்து, தேசிய மட்டத்தில் இவர்களுக்கும் நல்லிடம் பெற்றுத் தரும் பணி, தலைவர் தொண்டமான் முன் விரிந்து கிடந்தது.

1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை நன்கு பயன்படுத்தினார். அமைச்சரவையில் ஓர் அமைச்சரனார். தனது சமுதாய மக்களின் ஒற்றுமையைப் பலப்படுத்தி, அதையே எதிரியை மடக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தி ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நிகழ்த்தினார். அண்ணல் காந்தியின் அஹிம்சை வழியில் பல்வேறு போராட்டங்களுடன் பிரார்த்தனை இயக்கத்தையும் நடத்தினார். 1988 இறுதியில் பிரஜாவுரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. இதைத் தொடர்ந்து வாக்குரிமையும் தேசிய அந்தஸ்தும் கிடைத்தன. இது தலைவர் தொண்டமான் செய்த சேவைகளில் எல்லாம் உச்சமானது.

தமிழ் மொழிக்கு உயரிடம் பெற்றுத் தரும் பணியில் பல தமிழ்த் தலைவர்கள் போராடிக் களைத்தனர். தலைவர் தொண்டமான் எந்த ஆயுதமும் தூக்காமல் தனக்குப் பின்னால் அணி திரண்டுள்ள மக்கள் சக்தியைக் காட்டியே அரசமைப்பில் தமிழுக்குத் தேசிய அந்தஸ்தைப் பெற்றுத் தந்தார். இதுவும் தலைவர் தொண்டமான் சாதித்த சாதனைகளுள் இன்னொரு இமயமாகும். இப்படிச் சம்பள உயர்வு, ஆண், பெண் சம சம்பளம், கல்விவாய்ப்பு, தொழில் வேலை வாய்ப்பு, அரச பதவி நியமனம், கலை கலாசார வளர்ச்சி என்று பல்வேறு பணிகளை-ஒரு சமுதாயத்திற்குத் தேவையான அத்தனை விஷயங்களையும் நிறைவாகச் செய்துள்ளார். இவற்றை எல்லாம் கூர்ந்து கவனிக்கும்போது, தலைவர் தொண்டமான் மற்ற எல்லாத் தலைவர்களை விடவும் வேறுபட்டு உயர்ந்து காணப்படுகின்றார். அரசியல் துறையில் வெற்றி கண்ட தனித்தலைவர் தொண்டமான் ஒருவரே. ❑

தகைமை மிகவும் தானே பெற்றவர்

தொண்டமான் என்னும் பெயருக் கேற்பத்
தொண்டையே தனது தொழிலாய்க் கொண்டவர்!
ஈழ நாட்டில் என்னருந் தமிழர்
வாழக் காரண மானவர் இவரே!
இதனை மறுக்க எவருளர்? இதனை
மறுத்துப் பேசும் மாந்தர் எங்குளர்?
தனக்கு நிகரிலாத் தலைவர் ஒருவர்
இலங்கையில் உண்டெனில் இவரே யாவார்!
தமிழீழப் பகுதியின் தணலைத் தணிக்கும்
தகுதி இந்தத் தலைவர்க்கே உண்டு!
சிக்கலைத் தீர்த்து மக்களைச் சேர்த்துத்
திருந்திய தீர்ப்பைத் தீட்டுவார் இவரே!
அகவை எண்பதை அடைந்தார் என்பதால்
தகைமை மிகவும் தானே பெற்றவர்
பகைமை தீர்த்துப் பாதை வகுக்கப்
பல்லாற் றானும் பயன்வழி காட்டுவார்!
பிறைகள் ஆயிரம் கண்டிடும் பெரியார்
குறைகள் தீர்ப்பார்! குடிகளைக் காப்பார்!
பெயர்வளர் சாதனை பெரியது எனினும்
தரையிடை பெற்ற தரணி முழுமையும்
உரையிடை பெற்ற நூல்போல் சிறக்க
ஓர்பணி உளது! உலகு புகழ்ப்பணி!
யாரதை முடிப்பார் தொண்டமான் அன்றி?
வாழ்த்துவம் யாமே! வாழ்கவே!
வளனெலாம் பெற்று வாழ்க வாழ்கவே!



புலவர் கரந்தை கணேசன்

வாழிய உன்றன் வண்ணத் திருப்பெயர்!



இலங்கைத் தீவில் என்னருந் தமிழர்
இன்னல் தீர்க்க எழுந்த இமயம்!
களங்கள் வென்ற காவலன் மரபில்
காந்தியம் காக்கக் கனிந்த கன்னல்!
வளங்கள் தந்து வறுமையில் வாடும்
வக்கிலா தவர்க்கு வாய்த்த வள்ளம்!
துலங்கும் அகவை எண்பதை நோக்கித்
தொடரும் பயணம் வெல்க வெல்கவே!

தேயிலைக் காவில் தேம்பிடும் நாவின்
கூவலைத் தடுக்க குவிந்த உரிமை
காத்திடும் கருணைத் தொண்டமான் முகமே!
கலிங்கம் வென்ற பரணியின் அகமே!
முழங்கிடும் தொண்டில் முத்தமிழ் முரசமே!
முத்துடன் நூற்றினை ஒத்திடும் அரசனே!
வாழிய உன்றன் வண்ணத் திருப்பெயர்!
வளருக உன்றன் வற்றா நெடும்புகழ்!

ஓவியப்பாவலர் மு.வலவன்

தினம் இவர் பெயரைச் சொல்வேன்



வரலாறு எவ்வா றென்றால்
வையத்து மாந்தர் வாழ்வு,
ஒருவரை ஒருவர் சார்ந்து
ஒழுகுதல் ஆகும்! இந்த
அருமுறை தனக்கு நல்வேர்
அன்பாகும்! அன்பு ஈனும்
"திருஎது?" என்று கேட்டால்
அதன்பேரே 'தொண்டு" ஆகும்!

அன்பினால் தொண்டி ழைப்போர்
அருகிடும் இந்த நாளில்,
துன்புறும் மக்கள் முன்னே
தொண்டமான் தோன்றி நின்றார்!
அன்புதான் இறைவன் என்றால்
அவனேதான் நானென்னு ராரே!
அன்பினால், தொண்டால், மக்கள்
அகத்தினை இவர்வென் றாரே!

மிக்கபேச் சாற்றல் வாய்ந்த
மேலான தலைவர்! என்றும்
மக்களுள் ஒருவராகி
மலைநாட்டில் இவர்வ ளர்ந்தார்!
தக்கவர் இவரை யன்றித்
தலைவராய் எவரங் காவார்?
சக்கர வர்த்தி! எந்தச்
சபையிலும் இதைநான் சொல்வேன்!

மனநலம் பூண்ட செம்மல்!
மறைநலம் போற்றும் அண்ணல்!
இனநலம் காத்தல் ஒன்றே
இவரது குறிக்கோள் ஆகும்!
சினமுறும் சிங்கம்! மூடச்
சிறியர்செய் செயலை ஒப்பார்!
தினம் இவர் பெயரைச் சொல்வேன்!
தென்னாட்டின் புகழைக் காப்பேன்!

வீ.தமிழ்மறையான் சிங்கை

சொல்லுக்கோர் வாசமுல்லை



பண்வளம் நிறைந்த நாளு-உலகப்
பாட்டாளி உவந்த நாளு
எண்பதாண்டு பிறந்த நாளு-அது
எழில் தவழும் கொஞ்சம் கேளு!

சாந்தமுறச் சொல்லுவேன் நானு-அதைச்
சற்றுநீயும் கேளு நின்னு!
சௌமியமூர்த்தி தொண்டமானு-இங்கே
சௌக்கியமாக வாழ வேணும்

லட்சம்பேருக்கு ஒரு எம்.பி.-நம்
லங்காவில் உள்ளனர் தம்பி!
லட்சிய சின்னமே எம்.பி.-நாம்
எல்லோரும் வாழணும் இவரை நம்பி!

பிளந்திடித்தாலும் பூமி-அவர்
போடாரே ஆமாம் சாமி!
நலந்தரும் கொள்கை வீர சாமி-இந்த
நாட்டிலே வேறு யாரு சாமி?

தம் இல்லாள் இறந்த காலை-பல
இன்னல் சூழ்ந்த வேளை
தன்மனஞ் சோர்ந்திடாத காளை-இத்
தரணி குளிரவந்த சோலை!

அல்லலெனும் கடலிலே நீந்தி-உண்மை
அஞ்சாமை கரத்திலே ஏந்தி
எல்லோருக்கும் வேண்டினார் காந்தி-ஆமாம்
ஆசிய நாட்டுக் கிவரே காந்தி!

ஸ்டிரைக் என்னும் சரித்திரத்தில் -இவர்
இலக்கியம் படைத்த வேளை
பெஸ்டான தொழிற்சங்க மூளை-அந்தப்
பெருந்தகை யார்காட்டு ஆளை!

எத்தனையோ நாடுகளில்-நாளும்
எத்தனையோ தொழிற்சங்கம்
அத்தனைக்கும் பலருள்ளார்-ஆனால்
இவர்போல் வாய்ந்தோர் எவருள்ளார்?

சொல்வதிலே பயனிலையே-இங்கே
சொன்னபடி செயலிலையே
சொன்னவர்கள் செய்த தில்லையே-இவர்தான்
சொல்லுக்கோர் வாசமுல்லையே!

பி. அந்தோணிமுத்து இலங்கை

EMERSON AND THIRU.VI.KA SOCIAL REFORMERS



Emerson has contributed a lot for the eradication of slavery in the United States. Thiru. Vi.Ka too contributed for the upliftment of the downtrodden in Tamilnadu by way of working hard for the eradication of untouchability. Both the scholars also strived hard for the upliftment of the women folk in all spheres of life. Thiru.Vi.Ka also fought for the welfare of the laboourers. He as the first Indian to start a labour Union in India. Besides Thiru. Vi.Ka was also a freedom fighter.

Emerson revealed his opposition against slavery by 1835. He observes: " I have not a syllable of all the planter. If by opposing slavery, I go to undermine institutions, I confess that I do not want to live in a nation where slavery exists. The life of this world has but a limited worth in my eyes and really is not worth such a price as the toleration of slavery".

In 1838 the Cherokee Indians were pushed out of Georgia on the basis of a ' treaty' The so called treaty was only a pretext and it was against the welfare of the cherokee tribes. Emerson reacted in his Journel in 1838: "Then is this disaster of the cherokee's brought to me by a sad friend to blacken my days and nights". Emerson's estimate of the Negro changed in 1844. Emerson addressed a public meeting in Concord to celebrate the tenth anniversary of the emancipation of the Negroes of the British West Indies. He admitted that the black race can contend with the white and that the Negro race was susceptible of rapid civilization. "not the least affecting part of this history of abolition is the annihilation of the old indecent nonsense about the nature of the Negro.:... It now appears that the Negro race is, more than any other, susceptible of rapid civilization... Nature will only save what is worth saving, and it saves not by compassion, but by power ... If the black man is feeble and not important to the existing races, not on Parity with the best race, the black man must serve

M.SOLAYAN

and be exterminated. But if the black man carried in his bosom an indispensable element of a new and coming civilization; for the sake of that element, no wrong nor strength nor circumstance can hurt him; he will survive and play his part... I esteem the occasion of this Jubilee, to be the proud discovery that the black race can contend with white."

The Concord speech celebrating the Emancipation in the British West Indies " was one of Emerson's most memorable, and, after the "American Scholar' and the 'Divinity school Address' probably the best. In it he gives vent to an outrage which had been growing within him for atleast seven years, and in some of his strongest public language he makes absolutely clear his attitude toward the evil of slavery: 'The blood is moral: the blood is antislavery: it runs cold in the veins: the stomach rises with disgust, and curses slavery".

Emerson considered the Fugitive Slave Law as not only compromising an ideal issue, but also seeking to force citizens of Massachusetts to act against their consciences. The law was an encroachment on the sacred freedom of the individual which he cherished. In his Journal he says of the Law, "This filithy enactment was made in the 19th century, by people who could read and write. I will not obey it, by God".

In 1854, Emerson addressed the Anti slavery society of New York. Then he remarked that his task was to him, " like Hamlete" task imposed on so unfit an agent as Hamlet." Later in another speech he observed: " I do not often speak to public questions-they are odious and hurtful, and it seems like meddling or leaving your work". Yet he goes on to point out that " My own habitual view is to the well being of students or scholars. And it is only when the public event affects them that it very seriously touches me". Emerson goes on to express his understanding that for him, "Liberty is aggressive, liberty is the crusade of all brave and conscientious men".

In his speech, 'The Assault upon Mr.Sumner', Emerson expressed what was now his firm belief that America was facing a crisis and that " we must get rid of slavery, or we must get rid of freedom".

The violent affairs in Kansas and the dramatic exploits and the execution of John Brown drew from Emerson responses to the evils which would soon be resolved only by war. Emerson describes active opposition to slavery as being as natural as 'gravity, or the ebb of the tide". When the war came finally, Emerson supported it enthusiastically, upon visiting the charles town, navy yard in the course of the war he was reported as saying, "Ah! sometimes gun powder smells good."

Emerson described the sufferings of the Negroes in his second West India Emancipation Address. "It is, that the creater of the Negro has given up to stand as a victim of a caricature of the white man, beside him, to stoop under his pack, and to bleed under his whip. If that be the doctrine, then, I say, if He have given up his cause, He has also given up mine, who feel his wrong, and who in our hearts must curse the creator who has undone him."

He concludes the address with an optimistic tone. "Rogues seem promoted, and honest men put down; yet the just cause

prospers... Those who hope and trust, are always proved right. Therefore, friends of liberty, enemies of slavery, go on and prosper."

In 1856 Charles Sumner was attacked physically as he had made a vehement political speech in the senate. Emerson got angry. He addressed a meeting at Concord in 1856. Then he described attack as the barbarous act of a man representing a barbarous state.

In 1861 Emerson made a speech before the Massachusetts Anti-slavery society in Boston. The institution of slavery is based on a crime of decomposing men. Therefore Emerson asserts that his opposition to slavery was based on moral grounds. "They say that the Asiatic cholera takes the viral principle out of the air by decomposing the air. I think it is the same with the moral pestilence under which the country has suffered so long; it actually decomposes mankind. This institution of slavery is based on a crime of that fatal character that it decomposes men. The barbarism which has lately appeared where ever the question has been touched, and in the action of the states where it prevails, seems to stupidly the moral sense. The moral injury of slavery is infinitely greater than its pecuniary and political injury. I really do not think the pecuniary mischief of slavery, which is always shown by statists, worthy to be named in comparison with the power to subvert the reason of men, so that those who speak for it; who defend it, who act in its behalf, seem to have lost the moral sense." In 1863, when emancipation came into force, Emerson read from his 'Boston Hymn':

" I break your bonds and masterships

And I unchain the slave:

Free be his heart and hand henceforth

As wind and wandering wave."

Thiru.Vi.Ka.suggested that some congress workers should go over to the Harijan Colonies and they should dwell along with the Harijans. Moreover they should educate them. They should also help them in keeping their streets clean. Then only the Harijans would co-operate with the other forward community people. Gandhiji once expressed his desire that if he had to be reborn, he should be an untouchable so that he might share their sorrows, sufferings and affronts levelled at them. Thiru.Vi.Ka too expressed his desire that he should be also an untouchable in the next birth and thereby he wanted to serve Gandhiji.

Thiru vi.ka used to mingle with the Harijan friends freely. He used to take food even at the houses of the Harijan friends. He served as a teacher in the Wesley Mission School, which was specifically built for the education of the Harijans. Then he mingled with the Harijan Children. He realised that all human beings are equal to one another. Once he went to Bangalore and attended the party athis Harijan student's house. Even at Madras he was given a feast by a lady. When he demanded that he should be served only vegetarian food, the lady replied that he could get the same prepared by Harijan cook. Yet Thiru.Vi.Ka remarked that he never worried about the caste of a man and enjoyed the feast. Thiru Vi.Ka also advocated intercaste marriage as a solution for the problem of untouchability.

Thiru. Vi.Ka. felt that God is everywhere.

And he is also present in the hearts of the Harijans. Hence one should not call them as untouchables as God resides in their hearts.

Thiru. Vi.Ka also shows the way to eradicate untouchability. All Indians should forget their caste names. And they should all bear the caste name namely Indian. He also suggested that a seperate institution should be founded for the eradication of untouchability. Thiru Vi.Ka also exhorted the Harijans to found an institution for their welfare. He asked them to fight for their right to enter the temples. He also asked the others to pave way for the Harijans to enter the temples.

Thiru Vi.Ka was certain that India could not attain independence without removing untouchability even if a hundred thousand congress workers entered the portals of the prison . That was why Gandhiji gave importance for the removal of untouchability. Some of the comparable ideas found in the writings of the two scholars are stated below:

Thiru Vi.Ka observed that untouchabiliy was the most cruel thing for the human beings. It had spread like a pestilence and affected the Indian nation. Even after realising the troubles caused by the untouchability, people were not prepared to get rid of that pestilence.

Similarly Emerson also compared the slavery to that of a pestilence. In his speech which he made before the Massachusstts Anti-slavery society in Boston in 1861, Emerson declared that his opposition slavery was based on moral grounds:

"They say that Asiatic Cholera takes the vital principles out of the air by decomposing the air. I think it is the same with the moral pestilence under which the country has suffered so long, it actually decomposes mankind. This institution of slavery is based on a crime of that fatal character that it decomposes men."

Emerson observes that liberty is the crusade of all brave and conscientious men'.

In his biography Thiru Vi.Ka expresses that he possesed humility and he was hostitle to slavery. He would not be a slave of his own brother even.

Emerson ends his second west India Emancipation Address with an optimistic note: "there seems required of every right thinking and right feeling man, the exercise of sublime patience, to listen to what the years and centuries say to the hours and the days. The reality is contrary to the appearance. Rogues seem promoted and honest men put down, yet the just cause prospers. The course of civilisation is an endless train of felonies, yet, somehow, the ends of justice are answered-no thanks to the felons. Those who hope and trust are always proved right. Therefore, friends of liberty, enemies of slavery, go on and prosper".

Even in Thiru.Vi.Ka's speech and writing one can identify the optimistic note.

"we need not have the fear whether we would attain the home rule in the near future or in the distant future. If we strictly adhere to the non-violent and the non-cooperative movement, we can certainly attain home rule in the nearest future".

SELF DEVELOPMENT: Emerson finally realised that Blackmen could content with the white. He exhorts the audience that in this world, " You must save yourself, black or white, man or woman, other help is none". Thus he stresses the importance of ' self Development'. Thiru. Vi. Ka. also stresses 'Self Development'. He was not for reservation for the scheduled castes and the backward classes. These people should strive hard to contend with the forward community people in education and other efforts.

Thiru. Vi.Ka observed that India, would not get independence till it got rid of untouchability. Even if the human efforts try to bring independence, God would stay it.

Similarly Emerson feels that God desires to end slavery as God does not like slavery. Therefore he observes:

"It is, that the creator of the Negro, 'has given him up to stand as a victim of a caricature of the white man beside him, to stoop under his pack, and to bleed under his whip. If that be the doctrine, then, I say, if He (God) have given up his cause, He has also given up mine, who feel his wrong, and who in our hearts must curse the creator who has undone him".

When writing about the sufferings of the Harijans Thiru Vi.ka.observes:

"The high caste people obtained their food, clothes and house only out of the toil of the Harijans. The latter toil in the fields from the morning to evening. It is unjust on the part of the high caste people to illtreat the Harijans even after utilising their services. It is unfair to hit and drive them away from the streets, temples and wells."

Emerson too describes the pitiable plight of the black when compared to the white in his speech:

"Whatever may appear at the moment., however contrasted the fortunes of the black and the white- though the one live in his hereditary mansion-house, and the latter in a shed; though one rides an Arabian horse, and the other is hunted by blood bounds; though one eats, and the other sweats; one strikes; and the other dies- yet is the planters and unsafe and unblest condition."

Thiru.Vi.Ka observes that God resides in the hearts of the Harijans. Hence it is wrong to call the abode of God as untouchable. When we ridicule the Harijans, we really ridicule God himself. Those who love God never believe in untouchability.

Emerson also visualizes the greatness of the black men:

"It now apppears that the Negro race is, more than any other susceptible of rapid civilisation.... If the black man carries in his bosom an indispensable element of a new and coming civilisation, for the sake of that element, no wrong nor strength nor circumstance can hurt him, he will survive and play his part... I esteem the occasion of this jubilee to be the proud discovery that the black race can contend with the white."

Thus the two great champions of the depressed classes had strived hard for the individual freedom of the human beings through their essays and lectures. ❑❑❑



எவரெவர் தமிழுக்கும் தமிழருக்கும்
இனிய தொண்டு ஆற்றுவாரோ,
அவரெவர் ஆயினுமே
அவர்க்குநான் தாள்பணிவேன்!

அவ்வாற்று வழியில்
உவரேதும் இல்லாமல்
உயர்திரு. தொண்டமானுக்கு
இவண்யானும் வாழ்த்துகின்றேன்
இளமாறன் எனும் மானக் கவிஞன்!

"கவிதைச் செம்மல்"

பாத்தேறல் இளமாறன்

சிங்கப்பூர்.

சான்றோர் போற்றும் சரித்திர நாயகன்

உலகம் ஏத்தும் உயர்தமி ழகத்து
இலகும் புகழ்க்குலோத் துங்க சோழனின்
படைத்தள பதிகரு ணாகரத் தொண்டமான்
தடைபல கடந்து கலிங்கமும் இலங்கையும்
கடாரமும் கண்ட குடிவழித் தோன்றல்
பசும்பொன் முத்து இராம லிங்கர்
மாவட்ட மூனாப் புதூர்ப்புகழ் குமார
வேலனார் மகிழச் சித்தம்மை ஈன்ற
சௌமிய மூர்த்தி தொண்டமான் சான்றோர்
போற்றும் சரித்திர நாயகன்! மாற்றுயர்
தங்கம் ஈழம் சென்று தங்கிய
நந்தம் தமிழ்த்தோட் டத்தொ ழிலாளர்
பங்கம் துடைத்துக் குடியுரிமை தந்து
நெஞ்சுய ரச்செய்த அஞ்சாத சிங்கம்!
இலங்கைத் தொழிற்சங் கம்கண்ட திரு.வி.க.
அறிவில் அண்ணா! அரசியலில் ராஜாஜி!
ஒழுக்கத்தில் காந்தி! உண்மை வள்ளல்!

மன்னும் இமயப் பொருப்பினு முயர்ந்த
கன்னிப் பழந்தமிழ்க் குமரிக் கண்டத்து
மண்ணின் ஈரம் காற்றில் கரையுமுன்
ஊன்றிய வித்தை உயிர்க்க உதவும்
பரிதிப் பயனறி பழங்குடி மக்கள்
உழைப்பின் பயனை உலகுக் காக்கிய
உண்மைத் தொண்டே உயர்ந்த தொண்டு!

இந்தியத் தமிழர் ஈழத்துத் தோப்பில்
இழைக்கும் பயனை இயல்பாய்க் காத்து
தண்டமி ழாசான் திருவள் ளுவன்வழி
தொண்டமான் தலைமையில் பெண்டிரோ டாடவர்
வேளாண்மை போற்றித் தாளாற்றும் தமிழர்
தோளோடு சேர்ந்து கேளாக வாழ்கவே!

கற்பகத் தருவும் ஈழத்திற்
கருணையோ டிரங்கி வந்து
அற்புதப் பணிகள் செய்தே
அருள்மழை பொழிந்தாற் போலே
கற்பவர் தமக்கும் நொந்து
கலங்குவார் தமக்கும் தொண்டு
பொற்புடன் செய்து ஓங்கும்
புகழத்தொண் டமான்வா ழியவே.

புலவர் த.ஆறுமுகன்

காவியத் தலைவன்

களம்பல நிகழ்த்திடுங் கலையகம் உயர்ந்தெழக்
களிப்புடன் ஒளிர்ந்திடுங் கதிர்!
வளம்பல நிறைந்திட வகைபல வகுத்திடும்
வலிமைகொள் வளர் தமிழ்ப் புதிர்!
உளம்மிக உயர்ந்தநல் லுரையினை உகுத்திடும்
உலகியல் நெறிக்கிவர் நிகர்!
இளந்தலை முறையதன் எழுச்சியின் விளைநிலத்
தியற்பயிர் வளர்த்திடும் மகர்!

கலைவள மிகுமுயர் கவினுறு மலைமகள்
கனவினில் களிப்புறும் மகன்!
தலைவரெம் மலையினில் தனிப்பெரும் புதல்வனாம்
தரணியில் உதித்த கோ மகன்!
அலையெனப் பெருகிடும் அறிஞர்தம் அகவொளி
அணைப்பொடு மலர்ந்தபூ மகன்!
நிலைபெருந் திருவொரு நிலமிசைப் புகழுறும்
நிகரிலாக் கனித்தமிழ் மகன்!

வீரத்தை யூட்டி யன்பின்
வெற்றியைத் தொட்டிலாக்கித்
தீரத்தைக் காட்டி மேன்மைத்
தியாகத்தைச் சூட்டி நெஞ்சப்
பாரத்தைப் பாடல் ஆக்கிப்
பாட்டிசை கூட்டி, என்றும்
நேரத்தை நமக்கே ஈந்த
நேர்மையின் சிகரம் வாழி!

சத்தியம் காத்த நல்லோன்!
சன்மார்க்க சீலன்! தெய்வச்
சித்தம்மை பெற்ற சேயோன்!
செகம்புகழ் அஞ்சா நெஞ்சன்!
உத்தமன் அறிவுச் செல்வம்!
ஊட்டிடும் கருணை வள்ளல்!
வித்தகன் வகுத்த பாதை
வெற்றியின் விளைவே கேளீர்!



காவியத் தலைவன்! காக்கும்
கரங்களின் கர்ம யோகி!
பூவினிற் புனிதன்! அன்புப்
பொங்கிய கருணை யுள்ளம்
தூவிய தேசப் பற்றின்
தூயநல் லுறுதி காத்துப்
பாவினில் நின்றோன்! காட்டும்
பாதையில் செல்வோம் வாரீர்!

அருட்குரு வானோன்! ஆத்தாள்
அன்புரு துணைவ ரானோன்!
பொருள்மிகப் புவியில் சேர்த்தோன்
புகழறங் காத்த மேலோன்!
வருமிடர் தாங்கி நெஞ்சம்
வருந்திடா வளத்தோன்! உண்மைத்
திருவிடம் நிற்குந் தெய்வத்
திருவழிச் செல்வோம் வாரீர்!

ஓங்கிடும் அதர்மம் நீக்க
உதித்தநற்தலைவன்! மக்கள்
தாங்கிடுந் துயரம் நீக்கித்
தருமனாய்த் திகழும் வல்லோன்!
ஏங்கிடும் மலைய கத்தின்
ஏந்தலாய் ஏற்றம் பெற்றே
தூங்கிடும் உணர்வைத் தூண்டும்
தூயவன் வழியே சேரீர்!

உடல்பொரு ளாவி மூன்றும்
ஒண்டமிழ் மக்கட் கென்றே
அடல்ஏறு வாகி நின்று
அர்ப்பணம் செய்யும் மேதை!
கடல் ஆழம் மிக்க அன்புக்
கனியுதிர் தருவாய் நிற்கும்
கடலிறை வண்ணன் போலக்
களிப்புறும் தலைவர் வாழ்க!

கவிஞர் **க.ப.லிங்கதாசன்** இலங்கை



PEOPLE'S LEADER THONDAMAN

Tamils possess a special and unique culture, Art, customs, convention, usages, behaviour, traits, language, literature, grammar, prose, poems, and dramas in the cosmic universe. Their mode of life, habit, dress, food, way of speaking and personal behaviour differ from rest of the world. Anybody can easily identify a person whether a particular person is a Tamilian or not by mere seeing of his or her appearance itself. The mode of dressing of Tamils is unique features. The personality of traits and behaviour of Tamils are unique in the annals of the human civilization. Their face is bright and their eye sight is clear and fearless. Their structure is majestic and subverb. Their food is very simple, their way of life is a very simple, but their thought is deep and their words are very meaningful. Their approach is modest and submissive. Their behaviour is honest and cunningless. They are very good for friendship and companianship. "Generality" thy name is Tamils prowers is the way of their life, fearlessness thy name is Tamils. sacrifice is the way of life of Tamils. They lived for welfare of others, Tamils have been a goodhost from time immerorial. Tamils worked for the upliftment of down trodden people. They are ready to sacrifice their wealth, health and even their life for the sake of others.

Among creations of all beings human beings were created lastly, among creations of human beings, Tamils were created firstly that is, Tamils are the origin of mankind. So their language is too the origin of the creation of languages. That is why the Tamils are called as ancient people and their language is called as ancient language.

The formation of earth or universe might be changed from yuga to yuga or from epoch to epoch but the way of life of Tamils and personality traits of Tamils are never changed till now. Tamils culture is a mile stone in the annals of cosmic universe. Tamil culture is a forerunner in the human civilizations. Tamils culture spread all over the world. Irrespective of religion, nationality and language. Tamil culture is not only educative but also easily adoptable by body in the universe. because Tamil culture is nothing but natural instinct

Prof. S.NARAYANASAMY

of mankind. Tamil language is sweet and melody. It has rich literature and grammar, study of Tamil literature is worthy of credit of a reader. one can acquire knowledge in philosophy, morals, art, cuture, civilization and scientic riddles by mere reading of Tamil poems and proses.

Tamil kings, ministers, warriors, donors, poets, authors, were forerunners in various fields. Tamils are lover of friendship and hospitality, Tamils are lover of music poem prose and dramas. Tamils are teachers to the mankind, Tamils are guide to the world, Tamil language is a source of all languages in the universe. Tamils were great leaders and scholars in the past all over the world. Their life style is the best example to the rest of the world.

Among great Tamil leaders Mr.Thondaman is one of the best labour leader in the world. Thondaman is the father of the labour movement in Ceylon. He untiringly served for the welfare of the Tea garden labourers in the ceylon from his young age. So he is considered as a "Rising star" of the Tea garden labourers. He is the strength of labourers. He is the blood of the workers, he is the source of wealth of workers in the ceylon. He is the leader of the million of workers in the ceylon. He is the refuge of workers,He is the best captain for the ship of labour movement in ceylon. He is the light house for workers who are suffering in the ocean of misery and penury.

Thondaman is a best politician, he is the best orator. He is the hard worker. He is the best worker, he is the man of puncuality. He is a wiseman, he is a knowledgeable leader and minister, he is the best administrator , he is a frank and free leader, he is cunningless politician but he is a fearless politician , he is a man of patience but he is very good stratagic politician and leader he is submissive in talk, walk and action. He is a very simple in appearance, he is very easily accessible leader and minister, he is the embodiment of good behaviour, he is the abode of sublimity and kindness. He is a humanitarian leader, he is not only matured politician but also rippened leader. He is very popular among labourers, workers, youngsters and poors because of his liberal contribution to the needy people. He not only helps the poor but also satisfies their wants then and there.

He never makes a worker or visitor to wait to see him and thereby he saves the golden time of labourers and thereby he getss love and affection of workers. His mind thinks always for the welfare of the workers. His hands do actions only for the welfare of labourers. His mouth speaks only for the upliftment of downtrodden people.

Mr.Thondaman achieved many things for the welfare of the Tea garden workers. He caused for the formation of Tea labour movement in the ceylon. He fought for the right to vote of laborers in the ceylon. He fought for the share of workers in the Tea industry. He fought for the distribution of land to th workers. He established young men's asssociation and also he gave training to the youngsters. He fought for the appointment of Tamil Teachers in the schools and thereby he caused for the teaching of Tamil medium along with singla medium.

He created "The Thondaman Trust" for the welfare of workers in the ceylon. He worked for the upliftment of Tea garden labourers. In helping , he sees no caste, creed, colour, language, religion, place of birth and nationalties etc., That is, he seems humanity in all mankind and nothing else. He respects all people and all people respect him irrespective of caste, creed, language, religion, and nationality, This type of unique feature is enjoyed only by Thondaman and none else.

Thondaman is a great futurist, he can predict events accurately, he has a a great skill of trick of winning enemies easily without any hurt of their

feelings or displeasure between him and them and thereby he proves that he is friend of all, leader of all and lover of all.

He toured most part of the world and thereby he gained a lot of rich empirical knowledge in the field of politics and truth of life, his vast knowledge helps him to convince all people towards his ideology and thereby he becomes a friend of all and certainly there cannot be a enemy against him. If there is an enemy against him he must be an ignorant and none else.

He is the lover of gandhian philosophy. He is the follower of non-violance. He is the lover of all religion, he is the lover of all languages. He is lover of sacred books. He is the lover of music, he is the lover of poets and poems, he is the lover of simple and humble life. He is lover of friendship and brother hood. He has no faith in violance in achieving things, but he has a strong faith in worship of God. His life is a best example for austerity of life, he is a living good natured great leader.

He is the descendant of the great warrior Karunakara Thondaiman, who served in the reign of Kulothunga Chola, though he has a blood relationship in ceylon through his ancestors but he acquires ministership in the Premadossa cabinet through his sincerety and sublimity only.

He was born to Kumaravel alias Karuppia Pillai and Seethamai in August 30th in the year 1913 at the small hamlet in the District of Pasumpon Muthuramalinga Thever, Tamilnadu, India. He left his native village at the age of seven and went to ceylon at the call of his relatives in the ceylon. He raised his status step by step by stone of self confidence and preservence, patience is the key of his success, honesty is the way of his life, gratitude is the strength of his life, kindness is the wealth, mercy is his health.

He became a member of the Parliament in the year 1947 itself. twice he was nominated for the member of the parliament because of his outstanding service to the people. He was the cause for the recognition of Tamil language as one of the National languages in ceylon.

He has access with almost all great leaders in the world. He had a access with Mr.Nehru former Prime Minister of India. Who inaguarated the first labour conference in Ceylon. He has a good support of leaders in Tamilnadu.

He is a man of justice, he is a man of good Character and conduct, he is a man of wisdom, he is the most popular leader among Tamil leaders. He fought for the equaliy of right among people, though he is a minister and belonging to ruling party, he never fails to oppose or raise objection against Government when latter tries to pass any law against the interest of the poor people or labourers. This kind of attitude and behaviour brought him rich popularity among people. He never submites to anarchy or dictatorship of anybody. He never swayed by either praise or honour or reward or award or any title and he remains as usual forever. He never yields to anybody's pressure or threat or inducement in the political career.

Thondaman is a socialist, he is a a reformer, he is a calm and seren man. He is man of action. He is a man of discipline. He is a man of impeacable character, he is a man of conscentrious worker. He is a reliable leader, politician , worker and minister , He is the follower of dharma, he is the follower of the teaching of Bhavadgita. His life and style are inspiration for the youngsters. He is the symbol of peace and friendship of Tamils. His name will be in the world history till the existence of the world or mankind. ❑❑❑

பாரதிதாசன் கண்ட சமுதாயம்!



பாரதிதாசனார், பாரதிக்குப் பின் வந்த பைந்தமிழ்ப் பாவலர், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர், புதுவை தந்த புதுமைப் புலவர், புரட்சிக்கவிஞர்.

ஆம் அவர் கண்ட உலகு, புதிய உலகுதான், அவரே பாடுகின்றார்,

'புதியதோர் உலகு செய்வோம்-கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்.'

அவ்வுலகில் சமூக நீதிகள் சிறந்து விளங்கக் காணலாம். அங்கே சாதிச்சண்டைக்கு இடமில்லை. சமயப் பூசலுக்கு வாய்ப்பில்லை, மூட நம்பிக்கைக்கு வாழ்வில்லை, முதலாளி தொழிலாளி என்ற பேதமில்லை.

அங்கே கல்வியற்ற மக்களைக் காண முடியாது, இளம் விதவையர்களின் இதயக் குமுறலைக் கேட்க முடியாது. கடவுளையும் மதத்தையும் தங்கள் நலத் திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் சுயநலமிகளைப் பார்க்க இயலாது.

புலவர் நடேசநாராயணன்

எந்தச் சமூகத்தில் நீதி நிலைபெறவில்லையோ அந்தச் சமூகம் பிற எவ்வகையில் உயர்ந்திருப்பினும் நிலைத்து வாழ முடியாமல் நிலை குலைந்து வாழ நேரும். அதனால்தான் நமது புரட்சிக்கவிஞர், அரசியலைவிட பொருளாதாரத்தைவிட சமூக நீதியையே தமது இலட்சிய கீதமாக -இதயப் பாட்டாக -உயிர் மூச்சாகக் கொண்டு அறிவுறுத்தி வந்தார்.

அரசியல் பொருளாதாரம் அனைத்தும் சமூகத்திற் கேயன்றோ? எனவே அரசியல் பேசும் இடமாயினும் சரி, பொருளாதாரம் பற்றிப் பேசும் இடத்திலும் சரி, குடும்பம் பற்றிப் பேசும் இடத்திலும் சரி, அவர் சமூக நீதிகளை வற்புறுத்தத் தவறவே இல்லை.

சமூக நீதிகளைச் சுருதியாக வைத்துக் கொண்டு தான் அவர் அரசியல் பொருளாதாரம், குடும்பம் எனும் பாடல்களைப் பாடினார். இந்த வகையில் அவர் பாடல்கள் அபஸ்வரமில்லாமல் சுருதியோடு இயைந்தே இருந்தன.

சமூக நீதிகளை வற்புறுத்தி மறுமலர்ச்சிக்கு ஆக்கம் தேடிய காரணத்தினால்தான் பாரதிதாசனார் 'புரட்சிக் கவிஞர்" எனப் புகழாரம் சூட்டப்பெற்றார்.

சாதியிலும் சமயத்திலும் வெறி கொண்டவர்கள் மிகுதியாக இருக்கும் சமூகத்தில் நீதி என்பது இடம் பெற இயலாது. நிம்மதி என்பது நிலைபெற முடியாது.எனவேதான் நமது புரட்சிக் கவிஞர், மக்களில் உயர்வு தாழ்வு கற்பிப்பது சமூக அநீதி களில் மிகப் பெரிய அநீதியாகும் என்று கருதினார்.

கடல் மேற்குமிழிகள் என்ற நூலிலே செம்மறி வாயிலாகச் செப்புகின்றார் நம் கவிஞர்..

திறல் நாட்டு மக்கள் தம்பால்
மெய்ம்மையே புகல்வேன், மக்கள்
மேல் என்றும் மட்டம் என்றும்
பொய்மையால் புகலும் ஏட்டை
புகலுவார் தம் ஏற்பாட்டை
இம்மா நிலத்தில் மாற்ற
ஆவன இயற்றித் தீர்வேன்
இதுவே நான் மக்கட்கு இந்நாள்
இயற்றிட எண்ணுந் தொண்டு

என்று புகழ்கிறார். இதிலிருந்து சாதி வேறுபாட்டை ஒழிப்பதில் -சமூக நீதியை நிலைநாட்டுவதில் -எவ்வ ளவு அக்கறை காட்டியுள்ளார் என்பதை அறியலாம்.

இருட்டறையில் உள்ளதடா
உலகம்-சாதி
இருக்கின்ற தென்பானும்
இருக்கின்றானே

என்று கொதிப்புடன் வியக்கிறார்.

எல்லோரும் தாயின் கர்ப்பத்திலிருந்து தோன்றியவர் கள்தாம். அந்தத்தாய் தீண்டத் தகாதவர்களையும் ஈன்று தருவதுண்டோ? எனவே தீண்டத் தகாதவர் எனச் சிலரை ஒதுக்குவது சமூகத்திற்கு இழைக்கும் அநீதியல்லவா?

அற்பத் தீண்டாதார் என்னும்
அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தோரன்றோ-சகியே
கர்ப்பத்தில் வந்தோரன்றோ?
தீண்டும் மக்களின் அன்னை
தீண்டாரையும் பெற்றாளோ
ஈண்டிதை யார் நம்புவார்-சகியே
ஈண்டிதை யார் நம்புவார்?

சிலரை, பிறப்பால் தாழ்ந்தவர் எனக் கூறி அவரைத் தீண்டத்தகாதவர் என ஒதுக்கியதோடன்றி எல்லா உயிர்களையும் வேறுபாடின்றிக் காக்கும் ஆண்டவ னின் பொது மன்றத்திலும் அவர் நுழைவதற்கு அருகதையற்றவர்கள் என்றும் விதி வகுத்திருந் தார்கள். இது நம் சமூகத்தில் ஊடுருவிவிட்ட அநீதி யாக இருந்தது. இதையும் கண்டிக்கத் தவறவில்லை நம் புரட்சிக் கவிஞர்.

இறைச்சியுண்ணும் நாயும் காகமும் கோயிலில் நுழைவதால் வராத தீட்டு, மக்களில் சிலர் மட்டும் போவதால் வந்திடுமோ? நாய்க்கும் காகத்திற்கும் தரும் மதிப்புக்கூடவா மனிதனுக்கு இல்லை என்று கேட்கிறார்.

குக்கலும் காகமும் கோயிலிற் போவதில்
கொஞ்சமும் தீட்டில்லையோ-நாட்டு
மக்களிலே சிலர்மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டில்லையோ?

தேகம்சுமை என்று கருதும் ஞானியர் நிரம்பிய நாடு நம்நாடு. இந்த நாட்டில்தான் அதே தேகத்தைக் காரணமாகவைத்துப்பேதத்தை வளர்க்கிறார்கள். எத்தனை கேவலமான புத்தி என்று இகழ்கிறார் புரட்சிக்கவிஞர்.

தேகம்சுமை நமைச் சேர்ந்ததில்லை என்று
செப்பிடும் தேசத்திலே -பெரும்
போகம் சுமந்து உடற்பேதம் கொண்டோம் மதி
போயிற்று நீசத்திலே

இமய முதல் குமரி மட்டும் உள்ளோர் அனைவரும் ஒரு சாதியே. நாம் அனைவரும் பாரத நாட்டின் படைமக்களே-இந்த உணர்ச்சிதோன்றினால்தான் ஒருமைப்பாடு நிலைக்கும், வெற்றி பலவிளைக்கும்.

கோரும் இமாசலமுதல் தெற்கில்
கொட்டும் புனல் நற்குமரி மட்டும்
இருப்போர்-இவர்
யாருமொரு சாதி எனவும்-இதில்
எவ்வளவும் பேதமெனல் இல்லை
எனவும் -நம்
பாரத நற்றேவி தனக்கே -நாம்
படைமக்கள் எனவும் நம்மிடை
இலக்கணம்-அந்த
ஒருணர்ச்சி தோன்றியவுடன்-அந்த
ஒற்றுமையன்றோ நமக்கு வெற்றியளிக்கும்

இவ்வாறாகச் சாதிபேதத்தை நீக்குவது, மக்கள் சரிநிகர் சமானம் என வகுப்பது சமூக நீதிகளில் முக்கியமான நீதி என்பதைத் தெளிவுபடுத்தி யுள்ளார்.

சமூக அநீதிகள் எந்த உருவத்தில் வந்தாலும் அதை இனங்கண்டு சாடத் தவறவில்லை நம்மறுமலர்ச்சிக் கவிஞர். கடவுளின் பெயரால் ஆகட்டும், சமயத்தின் பெயரால் ஆகட்டும், சமூக நீதிகள் பாதிக்கப்படு மானால் தகர்க்கப்படுமானால் அவர், அந்த அநீதி களைப் புறக்கணிக்கத் தவறவில்லை. சமூக நீதிகளைத் தகர்ப்பதன் வாயிலாகத் தன்னலத்தைக் காத்துக் கொள்ளக் கருதும் சுயநலமிகள்தாம் சமயத் தையும் கடவுளையும் குறுக்கே இழுத்து வருகிறார் கள் எனக் கருதினார். எனவே தயங்காமல் அவற்றைப் புறக்கணித்தார். சிலரது மனம் புண் படுமே என்பதற்காக அவர் தயங்கவில்லை. சமூகம் பண்பட்டால் போதும் என்று கருதினார்.

உயர்ந்த சாதியாருக்கு ஒரு கடவுள், தாழ்ந்த சாதி யாருக்கு ஒரு கடவுள், பணக்காரருக்கு ஒரு கடவுள், ஏழைக்கு ஒரு கடவுள் என்று கடவுளையும் பிரிக்கும் கொடுமையைக் கண்டார் கவிஞர். சினம் பிறக்கிறது! சிரிப்பும் வருகிறது. அவருக்கு. நகைச்சுவையோடு தன் கருத்தைத் தெரிவிக்கிறார்.

என்னை அளித்தவர் ஓர் கடவுள் மற்றும்
ஏழைக்கோர் கடவுள் எனில்
முன்னம் இரண்டையும் சேர்த்துருக்குங்கள்
முளைக்கும் பொதுக் கடவுள்

இளம் விதவையர்களின் ஏக்கப் பெரு மூச்சை-இதயக் குமுறலை- இரத்தக் கண்ணீரை கேட்டும் பார்த்தும் உணர்ந்தும் நெஞ்சம் நொந்தவர் நம் புரட்சிக்கவிஞர். கைம்பெண்கள் கலங்குவது சமூக அநீதியாகும். அந்த அநீதியை ஒழித்து அவர்களை மறுமணம் செய்து கொள்ள அனுமதித் துச் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் எனச் சங் கென முழங்கினார், முரசென அறைந்தார்.

இதோ இளம்விதவை ஒருத்தி தன் குமுறலை ஏக்கப் பெருமூச்சை வெளியிடுவதைக் கேளுங்கள்.

எணைமணந்தார் இறந்தார்என் குற்றமல்ல
இறந்தவுடன் மங்கலநாண் நல்லா டைகள்
புனைமலர் குங்குமம் அணிகள் போனதுண்டு
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?
என்று கேட்கின்றாள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் காதலில் மாற்றம் இருக்க முடியுமா? வயது முதிர்ந்த கிழவன், தன் மனைவி இறந்துவிட்டால் வேறொரு இளம் பெண்ணைத் தேடி மணக்கிறான். இதைச் சமூகம் அனுமதிக் கிறது. ஆனால் இளமையிலேயே தன் கணவனை இழந்துவிட்ட கைம்பெண், வேறொரு ஆடவனை மணக்கக்கூடாதாம். இதுதான் சமூக நீதியா? கிழவனுக்கு மட்டுந்தான் காதலுணர்வு இருக்கும். இந்த இளம் விதவைக்குக் காதலுணர்வு இருக்காது என்பது எண்ணமா?

பாடாத தேனீக்களை, உலவாத தென்றலை, பசியாத நல்வயிற்றை யாரேனும் பார்த்திருக்க முடியுமா என்று கேட்கிறார்.

ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முன்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?

என்று கேட்கிறார்.

இளங்கைம்பெண் ஒருத்தி மறுமணம் செய்து கொள்ளச் சாத்திரம் தடையாக இருக்குமானால் அச்சாத்திரத்தை ஒதுக்குங்கள், சமூகத்தில் நீதியை நிலைநாட்ட முயலுங்கள் என்கிறார்.

இனி, ஆடவர்தான் கல்விகற்க உரியவர் என்றும் அடுக்களை வேலைகளை மட்டுமே செய்யும் பெண்களுக்குக் கல்வி தேவையில்லை என்றும் வேறுபாடு காட்டினர். இதுவும் அநீதியே என்றுணர்ந்தார் கவிஞர். பெண்ணடிமை நீங்க வேண்டும் என எண்ணினார். ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் வாழவேண்டும் எனக் கருதினார். அதனால் பெண் கல்வியை வற்புறுத்திப் பாடினார். வளர்ப்பவர்கட்குக் கல்வி அறிவு இருந்தால்தான் வளர்க்கப்படுபவர்கள் நல்லவர்களாக விளங்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம் அந்நி லத்தில்!
புல்விளைந் திடலாம், நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை.
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி, அங்கே
நல்லறிவுடைய மக்கள்
விளைவது நவில வோநான்?

என்று கேட்பதன் மூலம் பெண் கல்வியின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகின்றார்.

பெண்கள் அடிமை வாழ்வு வாழ்வதை விரும்பாதவர் நம் புரட்சிக் கவிஞர்.

பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே

என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார் நம் கவிஞர்.

நாடு அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டுமா? முதலில் நாம் பெண்களை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க வேண்டும். அப்போது தான் நாட்டு விடுதலையும் நாம் பெற முடியும். பெண்கட்குச் சுதந்தரம் தராதவரை நம் மண்ணுக்கும் சுதந்தரம் கிடைக்காது என்கிறார்.

குடியரசு நாட்டில் சமூக நீதிகளைச் சம்பிரதாயமாக மட்டும் வற்புறுத்தினால் போதாது, சட்டங்களாக ஆக்க வேண்டும் என்று கூறுகிறார்.

பாரதிதாசன் கண்ட உலகு பரந்து விரிந்த உலகு. அது அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு திகழ்வதாகும். ❑❑❑

சரித்திரச் சோலை தாங்கும் சந்தனத் தரு

வணக்கத்துக் குரிய கொண்டல்!
வண்டமிழ்த் தொண்டுத் தண்டல்!
கணக்கற்ற ஏழைமக்கள்!
கண்ணீரைத் துடைத்த தென்றல்!
பிணக்கற்றிவ் வுலகம் பேசும்
பேராற்றல் புகழின் மன்றல்!
மணக்கட்டும் மறவர் கோனே!
மணித்தொண்ட மானே! வானே!

நீர்வண்ணம் சுமந்து கொண்டு
நிழல்வண்ணம் காட்டும் வானக்
கார்வண்ணம் போன்ற மேனி!
கைவண்ணம் கருணை மாரி!
ஏர்வண்ணம் பயிரால் தோன்றும்
என்றென்றும் உலகில்; உன்றன்
பேர்வண்ணம் கலிங்கப் போரா?
பெருவாழ்வே தொண்டமானே!

சரித்திரச் சோலை தாங்கும்
சந்தனத் தருவே! அன்று
தரித்திரம் தலையில் தாங்கித்
தண்கடல் தாண்டிச் சென்று
குறித்தநற் கொள்கைக் குன்றாம்
"குமரவேல் மைந்தா"! அன்பைப்
பொறித்தநல் நீதிக் காவின்
பூந்தொண்ட மானே! வாழ்க!

போர்க்கலன் வாங்கிக் கொண்டு,
புறப்பட்டுக் 'கலிங்கம்' வென்று,
ஊர்க்கெலாம் வெற்றித் தேனை
ஊற்றிய மானும் ஒன்று!
'பார்க்கலாம் விடியல்' என்ற
பயணத்தில் தலைவா, நீங்கள்
சேர்க்கலாம் வெற்றி! அந்தச்
சேவைமான் நீயே இன்று!

மானத்தால், தமிழர் வீர
மரணத்தால்; கலைகள் கண்ட
ஞானத்தால் அற்றை நாளில்
நமைஒத்தார் இல்லை என்றார்
வானத்தார் புகழ்ந்தாரென்ற
வடிவத்தார் நாமா, இன்று?
மானத்தாய்த் தலைவா! வெற்றி
மலரைத்தா வணங்குகின்றேன்!

தந்தையர் சேர்த்த செல்வத்
தருநிழல் தவழ்ந்த தங்கம்!
முந்தையர் பெயரை, தொண்டை
மூச்சாக்கிச் சிறந்த சிங்கம்!
கந்தையர் கண்ணீர் நீக்கும்
கைகளாய் என்றும் எங்கும்
சிந்தனைத் தேனே பொங்கும்
செம்மலே! வாழ்க நீடு!

பாத்தென்றல் முருகதாசன் சிங்கை

பாட்டாளிப் பெயரைச் சொல்லிப்
பறித்துண்ணும் நரிகள் கூட்டம்,
கூட்டாளி போலும் செந்நீர்
குடிக்கின்ற அட்டை சூழ்ந்த
நீட்டாழி உலகில் நீநல்
நீராழி ஆன தென்னே!
தோட்டத்தை அடகிட்டேழைத்
துயர்தீர்த்த தொண்டமானே!

நீதிக்குக் குரல் கொடுக்க
நினைக்காமல் தன்னுயர்ச்சிப்
பாதிக்கப் படுமே என்று
பதுங்கிடும் தலைவரெல்லாம்,
சாதிக்கப் போவ தென்ன?
சரித்திரம் சுமப்பதெங்கே?
ஆதிக்க வாதி கையால்
அழிவோமா? அருளம்மானே!

கதிரவனும் தங்கள் ஆணை
கேட்டெழுவன் என்று ரைத்த
அதிபதிகள் காந்தி அண்ணல்
அறப்போரால் தோல்வி கண்டார்,
உதிரமுடன் பிறப்பெடுத்தார்
உயிர்வதைகள் துயரமெல்லாம்,
விதிவழியா? சதிகள் தானா?
வெற்றிவேண்டும் தொண்டமானே!

ஆயிரம்பேர் வாழும் நாட்டார்
அடிமை விலங்கறுத்துயர்ந்தார்!
நாயினும் நாம் கீழ்மை யுற்றோம்
நாதியற்றோம் நலிந்து கெட்டோம்,
ஆயினும்உம் போன்றார் நெஞ்சின்
அறம்வெல்லும் வெல்லும்; அந்தத்
தாயின்மனம் தறுகண் ணாண்மை
தாங்கியஎம் தலைவா வாழ்க!

தூங்காமை துணிவு கல்வி
தொண்டுள்ளம். தோட்டத் தோழர்
தாங்காமைக் கெல்லாம் நீயே
தலைதந்தாய், தருகை கொண்டாய்!
பாங்காகத் தொழிற்சங் கத்தைப்
பயனாக்கித் தமிழர் துன்பம்
ஓங்காமல் தடுத்த பாரி
உருவம்நீ தொண்டமானே!

போராட்டம் உன்முன் தோன்றிப்
போராடித் தோற்ற போதும்
காராட்டம் பொருளை அள்ளிக்
கைசிவக்கக் கொடுத்த போதும்
நீராட்டம் குளிர்ந்த நெஞ்சே,
நெறிமேவும் தலைவா! உன்னை
ஆராட்டம் சொல்வேன்?! ஒப்புக்(கு)
ஆளில்லை அறமே வாழ்க!

பிறக்கின்ற தமிழன் உன்போல்
பிறக்கட்டும் தலைவா? இன்று
உறக்கத்தில் கிடப்போ ரெல்லாம்
உணர்வேற்றுத் தோள்தூக்கட்டும்,
அறக்கட்டில் காந்தீயத்தை
அணைத்துக்கொண் டுயர்ந்த உன்போல்
சிறக்கட்டும் தமிழர் வாழ்வு!
செழிக்கச்செய் தொண்டமானே!

உறவுக்குக் கொடுத்த கையும்
உரிமைக்குத் துடித்த மெய்யும்
பிறவிக்குப் பெருமை சேர்க்கப்
பிறர்நலம் நினைத்த நெஞ்சும்
துறவிக்கும் வருமா? தொண்டைத்
தொண்டமான் பெருமை; அந்த
இரவிக்கு நிகராம் என்பேன்
இணையில்லாத் தலைவர் வாழ்க!

காசிக்குப் போன நாயின்
கதையாச்சித் தமிழர்காட்சி,
யாசிக்கத் துணிந்தா ருண்டு!
யோசிக்கத் தெரிந்தா ரில்லை!
ஊசிக்கும் அடித்துக் கொள்ளும்
உணர்ச்சிக்கே அடிமைப்பட்டுத்
தூசிக்குள் மறைந்தே போகும்
துயரைப்பார் தொண்டமானே!

பூமாலை வாடிப் போகும்,
பொன்மாலை உனக்கா இல்லை?
பாமாலை சூடும் நோக்கில்
படித்தேனுன் வரலாற் றேட்டை!
நீமாலை, நின்னைப் பற்றி
நினைப்போர்க்குன் நிழலும் மாலை!
கோமானே! உன்னைப் பாடிக்
கொண்டாடிக் கதியுற்றேனே!

சான்றோர் இலக்கணத்துக்கு தொண்டமான்



உலகில் வாழும் மக்களுள் சிலரை நாம் இவர் பண்பு நலன்களில் நல்லவர் எனப் போற்றிப் புகழ்கின்றோம். வேறு சிலரை இவர் செயலாற்றுவதில் வல்லவர் எனப் பாராட்டுகின்றோம். நல்லவராயுள்ளவருள் பலர் வல்லவராய் இருப்பதில்லை. வல்லவராய் இருப்பவருள் பலர் நல்லவராய் இருப்பதில்லை. நல்லவராகவும் அதேசமயம் வல்லவராகவும் திகழும் ஒரு சிலருள் சிறந்தவராகப் போற்றப்படுபவர் முத்துவிழாக் காணும் மக்கள் தலைவர், உயர் பண்பாளர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆவார்.

அன்புத் தலைவர் தொண்டமான் வாழ்க்கையையும் அவர் மக்களுக்கு ஆற்றிவரும் அருந் தொண்டினையும் பார்க்கும்பொழுதும் , அவர் பண்புகள் பற்றிப் பிறர் கூறக் கேட்கும் பொழுதும் வான்புகழ் கொண்ட வள்ளுவர் அருங்குறள் நினைவுக்கு வரும். ஆம். உலகம் நிலைபெற்றிருப்பது எதனால்? என்னும் ஒரு வினாவினை எழுப்பி அதற்கு விடை கூறுகின்றார் வள்ளுவர்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்"

பண்புடையோர், சான்றோர் தோன்றியதால் இவ்வுலகம் எப்பொழுதும் நிலையாக உள்ளது. அவ்வாறு பண்பாளர் தோன்றுதல் இல்லையாயின் இவ்வுலகத்தின்கண் உள்ள உயிர்கள் அனைத்தும் மண்ணின்கண் புகுந்து மாய்ந்துபோகும் என்கிறார் வள்ளுவர். ஏன்? பண்புமிக்கவர் உள்ளமையால்

ஆர்.ராஜமோகன் எம்.ஏ,எம்.எட்

அவரைச் சார்ந்து உலகம் வாழுகின்றது. நிலை பெற்றிருக்கின்றது. அவர் இல்லையெனில், தோன்ற வில்லையெனில் பிற உயிர்கள் ஒரு சார்புமின்றி அழிந்து விடும் என்பதே இக்குறளின் கருத்து. உலகம் நிலைபெற்று இயங்குதற்குக் காரணமான சான்றோருள் ஒருவர்தாம் முத்துவிழாக்காணும் தொண்டமான் அவர்கள்.

உலகம் நிலைபெற்று இயங்குவதற்குக் காரணமான சான்றோரிடம் எவ்வகைப் பண்புகள் குடி கொண்டிருக்கும் என்னும் வினா எழுதல் இயல்பே. அதற்குப் புறநானூற்றுப் புலவர் விடை கூறுகின்றார். அப்புறப்பாட்டைப் படித்து அப்பண்புகளை அறிவோம். அப்பண்புகள் அனைத்தும் மக்கள் தலைவர் தொண்டமானிடம் பொருந்தியிருப்பது கண்டு மகிழ்வோம்.

"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயையவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவிலர்
துஞ்சலும் இவர், பிறர் அஞ்சுவதஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"-(புறம் 182)

தோட்டத் தொழிலாளரின் குடியுரிமை, வாக்குரிமை, காணிப்பங்கீடு, மலையக இளைஞர்களுக்குக் காவல்துறைப் பயிற்சி, ஆசிரியர் நியமனம் என்னும் ஐந்து கொள்கைகளுக்காகப் போராடி வெற்றி கண்டமையால் அவர் தன்னலம் கருதாது பிறர் நலம் கருதி உழைப்பவர் என்பதனை நாம் நன்கறியலாம். சாவா மருந்தாகிய அமிழ்தம் கிடைப்பதாயினும் தாமே தனியாக உண்ணார், பிறருக்கும் கொடுத்து மகிழ்வர் சான்றோர். அது போன்றே அனைவரும் செல்வம் பெற்று, வறுமை நீங்கி வாழ வேண்டுமெனத் 'தொண்டமான் அறநிதியம்' ஏற்படுத்தி மக்களை மகிழச் செய்தவர் தொண்டமான்.

'உள்ளங் கவர்ந்தெழுந்தோங்கும் சினம் காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க' என்பதனைப் புறநானூறு 'முனிவிலர்' என்னும் தொடரால் குறிக்கின்றது. சிறு சிறு தவறுகளுக்கெல்லாம் உணர்ச்சிவயப்பட்டுச் சினத்துக்கு ஆளாகும் சாதாரணத் தலைவர்கள் போலன்றித் தவறு கண்ட விடத்தும் இவர் மென்மையாகக் கூறிக் காட்சிக்கு எளியராகவும், கடுஞ்சொல்லரல்லராகவும் விளங்குகிறார். மக்கள் பல்லாண்டுகள் இவரை அமைச்சராகத் தேர்ந்தெடுத்துப் பெருமைப் படுத்தியதிலிருந்து இதனை நாம் நன்குணரலாம்.

இவர் அயராது உழைப்பவர். தமக்குப் பழியேற்படும் செயல்களில் என்றும் ஈடுபடாதவர். மக்களோடு அன்பாகப் பழகுகிறார். அவர்கள் மகிழ்வுடன் வாழ்கின்றனர். தன்னலம் கருதாது உழைக்கின்றார். அதனால் தோட்டத் தொழிலாளர் நலம்பெற்று வாழ்கின்றனர். நேர்மையாகச் செயல்படுகின்றார். அரசு நல்ல முறையில் இயங்குகின்றது. இவ்வாறு, பண்புடையாளருக்கு என வள்ளுவர் கூறும் இலக்கணத்துக்கும், சான்றோர்க்குப் புறநானூறு கூறும் இலக்கணத்துக்கும் இலக்கியமாகத் திகழ்பவர் மக்களின் அன்புத் தலைவர் தொண்டமான் இவர் முத்துவிழாக்காணும் இளைஞர். வாழ்க பல்லாண்டு! ❑❑❑

சிந்தைக்கினிய



முன்னுரை

'மணற்கேணி', தோண்டத் தோண்ட, நீர் சுரக்கும், மழலைச் செல்வங்கள், வாய்வைத்துச் சுவைக்கச் தாய்மார்பகம் பால் சுரக்கும். அவைபோல வள்ளுவர் மொழிந்த வண்டமிழ்க் குறளும், படிக்கப் படிக்க அறிவுநீர் சுரக்கும் தன்மையது. அதனாற்றான், ஆண்டுகள் ஈராயிரம் ஆயினும், இன்றும் அதன் நறுமனம் குன்றாது, உலகெங்கிலும் ஒளிவீசி நிற்கின்றது! வள்ளுவர் அருளிய அனைத்துக் குறட்பாக்களுமே உயர்வுடை யன, எனினும் , சில குறட்பாக்கள், அவ்வக் காலத்துக்கேற்பப் புதுப்பொருள்தந்து பொலிவுடன் காட்சியளிக்கின்றன. அவை, சிந்தைக்கினியவை. அத்தகு விந்தைக் குறள் சிலவற்றை இங்குச் சுட்டலாம்.

'மிக நலம் பெற்றாள்'

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம் பெற்றாள் தமியள்மூத் தற்று' (1007)

என்பது, 'நன்றியில் செல்வம்" எனும் அதிகாரத்தில் வந்துள்ள ஒப்பற்ற குறள். ஒரு பொருளும் இலராயினார்க்கு , அவர் வேண்டியது ஒன்றனைக் கொடாதானது செல்வம், வீணே கழிதல், பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாள் ஒருத்தி, கொடுப்பார் இன்மையின், கொழுநன் இன்றித் தமியளாய் மூத்த தன்மைத்து" என்பது இக்குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரை விளக்கம்.

செல்வத்தைத் தேடுபவன், அச் செல்வத்தின் பயனைத் தான் துய்த்தலன்றிப் பிறர்க்கும் கொடுத்து இன்பமடைதல் வேண்டும். 'செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே" என்பது சங்கச்சான்றோர் வாக்கு, ஈட்டியவர்க்கும், பிறர்க்கும் பயன்படுதல் இல்லாத செல்வமே 'நன்றியில் செல்வம்" எனப்பட்டது. தம் அருகிலேயே வறியவர் இருந்தும், அவர்க்கு ஏதும் கொடாதிருப்போர் , ஓர் ஊரின் நடுவே, நச்சுமரம் பழுத்திருந்தால் எத்தகைய தீமையோ அத்தகைய தீமைக்குரியவர் என்பது வள்ளுவர் வாக்கு. வறியார்க்கு அவர் வேண்டுவதொன்றைக் கொடுத்தலே 'ஈகை' எனப்படும், அங்ஙனம் கொடுக்காதவனது செல்வம், பயனின்றிக் கழியும். இதை விளக்கவந்த வள்ளுவர், 'மிக நலம் பெற்றாள், தமியள் மூத்தற்று" என்ற அழகானதொரு உவமை மூலம் விளக்குகின்றார்.

டாக்டர் சாம்பசிவனார்

வள்ளுவர் கையாளும் "மிக நலம் பெற்றாள்" எனும் தொடர் எண்ணி மகிழ்தற்குரியது. 'நலம்' என்பதற்குப் பரிமேலழகர், "வடிவின் நன்மையும், குணத்தின் நன்மையும் என்று விளக்கம் தருவர். 'நலம்" என்பது, நன்மை, அழகு, பண்பு எனப் பலபொருள் தரவல்லது. 'சீவக சிந்தாமணி" பாடிய திருத்தக்க தேவராயின், இந் 'நலம்' என்பதற்கு இப்படி விளக்கம் தந்திருப்பார், "மதி போன்ற முகமுடையாள்; கெண்டைமீன் போன்ற கண்ணினையுடையாள், பவளம் போலும் வாயினையுடையாள், வில் போன்ற புருவத்தாள், முத்துப் போலும் பல்லினாள், கொங்கு உண் கருங்கூந்தலாள், மெல்லிய ஆகத்தாள், கோங்கரும்பு போன்ற மார்பகத்தாள், (சீவக.643) என்றெல்லாம் வருணித்திருப்பார். கம்பராயின், "கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவை எல்லாம், வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழிகொண்டவள் (கம்ப.பால:516) என்றும் , குயில் தொடர் குதலை, ஓர் கொவ்வை வாய், இளமயில் தொடர் இயலி; செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடி, அம்சொல் இள மஞ்ஞை , அன்னம் என மின்னும் வஞ்சி" (சூர்ப்ப 246, 248) என்றெல்லாம் வருணித்திருப்பார்.

திருக்குற்றாலக் குறவஞ்சி பாடிய திரிகூடராசப்பக் கவிராயராக இருந்தால், "துடிக்குள் அடங்கியொரு பிடிக்குள் அடங்குஞ் சின்ன இடையினாள். காமத் துட்டன் அரண்மனைக்குக் கட்டுங் கதலிவாழைத் தொடையினாள், அடுக்கு வன்னச் சேலை எடுத்து நெறிபிடித்த உடையினாள், மட அன்ன நடையிலொரு சின்ன நடைபயிலும் நடையினாள்" (குறவ.9) என்று புகழாரம் சூட்டியிருப்பார். ஆனால், வள்ளுவரோ, இத்தனையும் உள்ளடக்கி, மிகச் சுருக்கமாக 'மிக நலம் பெற்றாள்" என்று கூறிவிட்டார்.

வடிவழகு மட்டும் ஒரு பெண்ணுக்கு இருந்தாற் போதுமா? குண அழகு வேண்டாமா என்று கருதிய பரிமேலழகர், 'குணத்தின் நன்மையும்" என்று குறிப்பிட்ட நயம் அறிந்து மகிழத்தக்கது. 'குணம் என்பதற்குத் தொல்காப்பியர், "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு" முதலானவற்றைக் குறிப்பர். வள்ளுவரும், தற்கொண்டான் வளத்தக் காள், மனைமாட்சி, கற்பெனும் திண்மை, கொழு நற்றொழுது எழுதல், தகைசான்ற சொற் காத்தல், நிறை காத்தல்" எனப் பலவற்றையும் குறிப்பிடுவர். எனவே, வடிவழகும், குணவழகும் ஒருங்கே பெறு தல் அரிது என்பது தோன்றவே இக்குறளில், 'மிக நலம் பெற்றாள்" என்று பெய்தார். இவ்விரண்டும் ஒருங்கே பெற்றிருந்தும், அம்மங்கை நல்லாளை மணமுடித்துக் கொடுத்தற்குரிய பெற்றோர் எவரும் இன்மையான், கணவனைப் பெறாமல், வாழ்நாள் முழுதும் கன்னியாகவே காலம் கழித்தால், அவள் வாழ்வும் பயனின்றிப் போம், அவளால் இன்பம் பெறத்தக்க ஓர் ஆடவனும் பயனின்றிப் போதல் போலப் பிறர்க்குக் கொடுக்கா தவனது செல்வமும் பயனின்றிப் போம் என்பது இதன் விளக்கம்.

ஆனால் இக்குறட்பாவை நுணுகிநோக்கினால் மற்றுமொரு உயர்கருத்தும்புலனாகும்! பெற்றோரும் மற்றோரும் இருந்தும், அவளுக்கு மணமுடிக்க வேண்டும் என்று தகுந்த ஒருவனைத் தேடியும் கூட, அம் மங்கை, தனக்கு எப்போதுமே திருமணம் வேண்டாம் என்று சொல்லிக் கடைசிவரை கன்னியா கவே காலங்கழித்தலும் உண்டன்றோ? இதுவும் தவறு என்கின்றார் வள்ளுவர்! இறைவன், ஆணை யும் பெண்ணையும் படைத்ததன் நோக்கமே, இவ்விருபாலரும் அறன்வழிப்பட்டு இல்லறம் ஏற்று இன்புற்றிருக்கவேயாம். பெண்டிர் மணமாகாமல் இருத்தல், இறைவனது ஆணைக்கு முற்றிலும் மாறுபட்டது என்பது வள்ளுவர் கருத்தாதல் வேண்டும்.

இனிக் களவு வழியிலோ, கற்பு முறையிலோ, மணமுடித்த பெண் ஒருத்தி, சில ஆண்டுகளில், தன் கணவனை இழக்க நேரின், தன் அழகனைத்தும் பயனின்றி, வாழ்நாள் முழுதும் கைம்மைநோன்பு நோற்று, இடர்ப்படுதலையும் வள்ளுவர் விரும்ப வில்லை என்பதும் இக்குறட்பாவால் உணரமுடி கின்றது. பருவம் வாய்ந்த மங்கை, இளமையில் தன் கணவனை இழக்க நேரின், மீண்டும் மறுமணம் செய்து கொள்வதில் தவறில்லை. அப்போதே மிக

நலம் பெற்ற அவள் தனிமையில் மூத்துநிற்காமல் வாழ்வின் பயனை எய்த முடியும். இவ் உயரிய பொருளையும் தந்து நிற்கின்றது 'மிக நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று எனுந்தொடர்!' ஒரு கல்லில் இரண்டு மாங்காய்' என்பது போல, வள்ளுவர், ஒரே குறட்பாவில் (1) செல்வம் பெற்றோர், ஒன்றும் இல்லாதோர்க்குக் கொடுத்து உதவ வேண்டும் (2) மிக நலம் பெற்ற பெண்ணொருத்தி. இல்லறவாழ்வு ஏற்று, அந்த நலத்தின் பயனை நுகர வேண்டும் என்னும் இரண்டு உயர்ந்த பொருளைக் கூறியிருப்பது நம் சிந்தனைக்கு இனிக்கின்றதன்றோ?

கசடறக் கற்க

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (391)

எனும் குறளை அறியாதார் இலர்! 'கல்வி" என்னும் அதிகாரத்தில் இடம்பெற்ற அருமைத் திருக்குறள் இது!

"ஒருவன், கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்க வேண்டும், அங்ஙனம் கற்றால், அக் கல்விக்குத் தக அவை சொல்லுகின்ற நெறியில் நிற்க வேண்டும்" என்பது இதன் பொருள். இதற்குப் பரிமேலழகர், மேலும் சில விளக்கம் தருவர், "கற்பவை என்று கூறியதனால், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் உணர்த்துவனவற்றையே கற்றல் வேண்டும். இவையன்றிப் பிற பொருள் உணர்த்துவனவற்றைக் கற்றல், சின்னாள், பல்பிணியுடைய சிற்றறிவினர்க்குக் கூடா! "கசடறக் கற்றல்" என்பது, ஐயம் திரிபு இன்றி, மெய்ப் பொருளை, நல்லோர் பலரோடும் பலகாலும் பயிலல்! "நிற்றல்" என்பது, இல்லறத்தில் நிற்குங்கால் அதற்கு ஒதிய நெறிப்படி ஒழுகலும், துறவறத்தில் நிற்குங்கால் மெய்யுணர்ந்து அவா அறுத்தலும் ஆகியவற்றினின்று வழுவாதிருத்தல் .

ஆனால், இக்குறட்பாவைச் சிறிது ஊன்றி நோக்கினால், மேலும் பல நுட்பங்கள் காண இயலும். 'கற்க' 'நிற்க' எனும் சொற்கள் ஆழ்ந்த பொருள் பயப்பன. மனிதப் பிறவி எடுத்ததன் பயன், கற்றல் ஆதலின் வள்ளுவர் 'கற்க' என ஒங்கி அறைவது போற் கூறுகின்றார். கற்றபின், அதற்கு முன்பின் முரணாக வாழ்வோர், எண்ணில் பலர்! "படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. கற்ற பின் அதன்படி நடத்தலே அக்கல்வியின் விழுமிய பயன். அதனால்தான் 'நிற்க' எனும் சொல்லைப் பெய்தார் வள்ளுவர்! கண்டிப்பாக அதன்படி நிற்றல் வேண்டும் என்பது அவர் கருத்து.

நுனிப்புல் மேய்வது போல், பல நூல்களையும், ஆங்கொன்று ஈங்கொன்று என்று படித்துவிட்டு "யாம் படித்தவை இத்தனை நூல்கள்" எனல் பெருமையன்று! ஓரிரண்டு கற்றாலும், அவற்றை ஆழமாக-மிக மிக நுட்பமாக அதன்கண் புலமை உண்டு எனக் கருதுமாறு கற்றல் வேண்டும் என்பது தோன்றவே "கசடற" என்றார். இவ்வுலகின் கண் நாள்தோறும் புற்றீசல் போல் பெருகிவரும் நூல்கள் கணக்கிலடங்கா! வெற்றிலை பாக்குக் கடைகளில் எல்லாம் நூல்கள் தொங்கிக்கொண்டுள்ளன. "மரக்கிளையில் பிணம்", 'அவளின் திறந்த மேனி" என்ற தலைப்பில் எத்தனையோ நூல்கள். நாம் இவ்வுலகில் வாழும் நாள், மிகமிகக் கொஞ்சம். பெறுதற்கரிய பிறவி, இம்மானிடப் பிறவி. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? எவரும் அறியார்! பெற்ற இப்பிறவியின் பயனைப் பெற, விழுமிய நூல்களைப் படித்தல் வேண்டும் என்பது தோன்ற 'கற்பவை' என்றார் வள்ளுவர்!

"ஒரு துறையில் கற்றோம்" கற்றல் முடிந்து விட்டது" என எண்ணல் கூடா! கல்வி கரையற்றது, ஆழ்ந்தது, விரிந்தது. சாந்துணையும் கற்கலாம்! எனவே கற்றுவிட்டோம் இனி நமக்கு எதற்குப் படிப்பு என்று எண்ணாமல், கற்றபின்னும் கற்க வேண்டும். மேலும் , ஒரு நூலைக் கற்கத் தொடங்கினால், அந்த நூலில் சொல்லப்படும் பொருளுக்கு ஏற்பக் கற்கவேண்டும். சிலவற்றை விரைவிலேயே கற்றுவிடலாம். சிலவற்றைக் கற்கக் காலம் மிகுதியும் தேவைப்படும். இதனை உட்கொண்டே வள்ளுவர், 'அதற்குத் தக, கற்க' என்றார்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்னும் குறளை மீண்டும் படித்துப் பார்க்கவும். ஓர் இசையாசிரியர், பாடல் புனைவது போல் வள்ளுவர் இக்குறளையாத்துள்ள நுட்பம் தெரியும்!

"கற்க .....கசடறக் கற்க.....கற்பவை கற்க.....கற்றபின் கற்க...

கற்க நிற்க....அதற்குத் தகக் கற்க.....கசடற நிற்க.....கற்றபின் நிற்க....

நிற்க....கற்க.....கற்க.....நிற்க.....அதற்குத் தகநிற்க..." என்றெல்லாம் பண்ணோடு பாடினால், இஃது ஓர் இன்னிசைப் பாட்டுப்போல் தோன்ற வில்லையா? என்னே வள்ளுவர்தம் அறிவுக்கூர்மை? இவ்வகையில் 'சிந்தைக் கினிய விந்தைக் குறள்' ஆக இது காட்சியளிக்கின்றதன்றோ?

'திருக்குறளில் தமிழ்'

ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட இலக்கணம் 'தொல்காப்பியம்.' அதனை இவ்வுலகிற்குவழங்கியதொல்காப்பியர்கூடத், தாம்யாத்த இப்பெரும் இலக்கண நூலில், 'தமிழ்' என்ற சொல்லையும், இத் தமிழ்நாட்டையும், இதனை ஆண்ட 'வண்புகழ் மூவரை'யும் குறிப்பிட்டுள்ளார். தமிழ் என் கிளவியும் அதனோரற்றே" என்று கூட நூற்பா யாத்துள்ளார். ஆனால், திருவள்ளுவரோ, தமிழ்நாட்டில்தோன்றியும், தமிழில்ஒப்பிலா நூலை எழுதியும், யாண்டும் "தமிழ்" எனும் சொல்லை ஆண்டாரிலர். தமிழின் சிறப்பெழுத்தாகிய 'ழகரத்' தைக் கையாண்டு, குறள் பாடியுள்ளார்.

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்" (குறள் 66)

என்னும்குறளை அறியாதார் உளரோ? குழல், யாழ், மழலை என்னும் மூன்று சொற்களைப் பெய்து "ழகரத்"திற்கு ஏற்றம் தந்துள்ளார்!

"அகர முதல் கைர இறுவாய்
முப்பஃதென்ப...." (தொல்.எழுத்து.1)

என்பது தொல்காப்பியத்தில் வரும் நூற்பா. "அகரம்" தமிழில் உள்ள முதல் எழுத்து, 'லகரம்' தமிழில்உள்ள இறுதிஎழுத்து. "உயிர்பன்னிரண்டும் மெய் பதினெட்டும் ஆகத் தமிழில் உள்ள முதல் எழுத்து முப்பதாகும்" என்கின்றார் தொல்காப்பியர். இதனைக் கருத்திற் கொண்ட வள்ளுவர், தாம் எழுதிய திருக்குறளில், முதற் குறட்பாவை, அகர முதல" என 'அகரத்'தில் தொடங்கியுள்ளார்.

'ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கிப் பெறின்" (1330)

என்பது திருக்குறளின் கடைசிப்பா. இப்பாட்டில் தொல்காப்பியர் கூறிய 'னகரத்'தை நூலின் இறுதியில் வைத்துள்ள நுட்பம் அறிந்து இன்புறத்தக்கது. 'தமிழ்' என்னும் சொல்லை எடுத்தாளவில்லையே தவிரத் தமிழில் உள்ள எழுத்துக்களைத் தொல்காப்பியர் வழிநின்று 'அகரத்'தில் தொடங்கி 'னகரத்'தில் முடித்துள்ளாரே, எண்ணிப் பார்மின்!

"வாழ்க்கைத் துணைநலம்"

திருக்குறள் அதிகாரத் தலைப்பும் கூட நம் சிந்தனைக்கு இனியதாக உள்ளது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

'வாழ்க்கைத் துணைநலம்' இவ் அதிகாரத் தலைப்பின் நுட்பம் எண்ணத் தக்கது. வள்ளுவர் எண்ணியிருந்தால், 'மனைவி, இல்லாள், இல்லவள், பெண், மகளிர், மனையாள், நன்னுதலாள், என்பன வற்றில் ஏதேனும் ஒன்றை ஆண்டிருக்கலாம். ஆனால், 'வாழ்க்கைத் துணைநலம்' எனும் தொடர் தரும்பொருளை அது தாராது! ஒருபெண், இல்லறம் ஏற்றபின், தன் கணவனுக்குத் துணையாக இருத்தல் வேண்டும், ஆனால் துணைமட்டும் போதாது, நலமாகவும் இருத்தல்வேண்டும்என்பது வள்ளுவர் கருத்து. பலகுடும்பங்களில் கணவனும் மனைவியும் பாம்பும் கீரியும் போல், நாயும் பூனையும் போல் வாழ்வது பலர் அறிந்தவொன்று! அது வாழ்வா காது! கணவனும் மனைவியும் உள்ளன்பின்றி ஒருவருவர்க்கொருவர் கசப்பான வாழ்க்கை வாழ்ந்துவருதல் உண்டு, ஊர் உலகிற்கு அஞ்சி வாழ்தலும் உண்டு, கணவனும் மனைவியும் நீண்ட ஆயுளுடன் மங்கலமாக மனமகிழ்வுடன் வாழ்தலே 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற தொடர்க்குப் பொருள். கணவன் இறந்தபின் மனைவி தனித்து வாழ்தலோ, மனைவி இறந்தபின் கணவன் தனித்து வாழ்தலோ' வாழ்க்கைத்துணை நலம் ஆகாது என்றெல்லாம் பொருள்தரும்படி இஃது அமைந்துள்ளது. இத்தொடர் நம் சிந்தனைக்கு இனிப்பாக உள்ளதன்றோ?

முடிவுரை:

திருக்குறளை இவ்வகையில் நோக்கினால் சிந்தைக்கினிய விந்தைக்குறள் நிறைய உண்டு என்பது போதரும், வள்ளுவர் குறளை நுணுகி நோக்குவோம், சிந்தை குளிர்வோம்! ❑❑❑

சிலம்பில் குறள்



காலத்தாலும் கருத்தாலும் முதுமையும் பெருமையும் உடையது திருக்குறள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் கூறிய வாழ்வியல் நெறி, அரசியல் நுட்பம், நிருவாகம், வாணிபம் முதலியனபற்றிய அடிப்படைக் கொள்கைகளும், கோட்பாடு களும் இன்றளவும் உலகம் ஏற்கத்தக்கன.

திருக்குறளுக்குப் பின் தோன்றிய பேரிலக் கியங்கள், காப்பியங்கள், இதிகாசங்கள், புராணங்கள், சமயநூல்கள், சிற்றிலக்கியங்கள் முதலியன திருக்குறள் கருத்துக்களையும் சொல்லாட்சி களையும் அடியொற்றி ஏற்றுக் கூறுவதைக் காணலாம்.

அவ்வகையில் சிலப்பதிகாரத்தில் கூறப்படும் திருக்குறள் கருத்துக்களையும் சொல்லாட்சி களையும் நினைவு கூரலாம்.

1. கணவனைத் தெய்வமாகத் தொழுது போற்றும் மனைவி 'பெய் என்றால் மழை பெய்யும்'.

புலவர் ப.அரங்கசாமி

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை- என்கிறது குறள்.

இதிலடங்கிய நுண்பொருள் – உட்பொருளாவது, கற்புடைய பெண்ணின் ஏவலை மழை முதலிய இயற்கைத் தெய்வங்களும் பிற தெய்வங்களும் ஏற்றுச் செய்யும் என்பதாம். இக்கருத்தைச் சிலம்பு ஏற்றுக் கூறுகிறது.

கண்ணகி கோவலனைத் தெய்வமாக வழிபட்டாள் என்பதை

'கடிமலர் அங்கையில் காதலன் அடிநீர்
சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி'

எனச் சிலம்பு கூறுகிறது

இடைக்குல மடந்தை மாதரி வீட்டில் கண்ணகிகோவலனுக்கு உணவு படைத்தபோது அவனது அடிகளைச் சுடுமண் கலையத்து நீரால் கழுவித் தொழுதாள். கணவனைத் தொழும் கற்புடைய மகளாகக் கண்ணகி விளங்கினாள். அதனால் கண்ணகி மதுரை மாநகரில் இட்ட ஏவல்களை ஞாயிறு, நெருப்பு ஆகிய கடவுளர்களும், மதுராபுரித் தெய்வமும் கேட்டன.

கோவலன் கொலையுண்டதறிந்து அடங்காச் சினத்துடன் மதுரை நகர வீதிகளில் புலம்பிச் செல்லும் கண்ணகி ஞாயிற்றைப் பார்த்து

'காய்கதிர்ச் செல்வனே கள்வனோ, என் கணவன்
எனக் கேட்க, அதற்கு ஞாயிறு
"கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்"
என்று கூறினான்.

கண்ணகி மதுரையைத் தீயூட்ட முற்பட்ட போது, அங்கியங் கடவுள் (நெருப்பு) அவள் முன் தோன்றி

'மாலை எரிஅங்கி வானவன் தான்தோன்றி
மாபத்தினி நின்னை மாணப் பிழைத்தநாள்
பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டையோர்
ஏவல் உடையேனால் யார் பிழைப்பர் ஈங்கு'

என்று கண்ணகியின் ஏவல் கேட்டு நின்றான். மற்றும், மதுரையைக் காக்கும் மதுராபுரித் தெய்வம், மதுரையை எரித்த சீற்றத்துடன் செல்லும் கண்ணகிக்கு முன்
தோன்ற அஞ்சி நாணி அவளைப் பின்தொடர்ந்து சென்று
'முன்னிலை ஈயாள் பின்னிலைத் தோன்றி
கேட்கின் வாழி நங்கை என்குறை'
என்று தன்குறை கேட்க வேண்டிற்று.
இங்ஙனம் கணவனைத் தெய்வங்களாகத் தொழும் கற்புடை மகளின் ஏவலை மழைத் தெய்வம் கேட்கும் என்ற குறட்கருத்தை அடியொற்றி கற்புடைய கண்ணகியின் ஏவலை ஞாயிறு , நெருப்பு, மதுராபுரித் தெய்வம் முதலியன கேட்டன என்று சிலம்பு கூறுவதை அறிகிறோம்.

2.கோவலன் கொலையுண்டபின், பாண்டிய மன்னன் அவையில் கண்ணகி உரைத்த வழக்கைக் கேட்டுப் பாண்டியன் மயங்கி வீழ்ந்து இறக்க, அவனருகிலிருந்த பாண்டிமாதேவியும் மயங்கி வீழ்ந்தாள், அப்போது கண்ணகி

"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்
நற்பகலே"

முற்பொழுதில் பிறருக்குக் கேடு செய்தவர் பிற்பொழுதே தாம் கெடுவர் எனக் கூறுகிறாள். (அதாவது முற்பொழுது கோவலனைக் கொன்ற பாண்டியன் பிற்பொழுது தானே கேடுற்றான்)

இது
பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்

என்ற குறட்பாவை அடியொற்றிச் சொல்லாட்சி இருப்பதைக் காணலாம்.

இதில் இன்னொரு குறிப்பும் உண்டு. கோவலன் சென்ற பிறப்பில் பரதன் என்ற பெயரோடு வேந்தனிடம் பணியாற்றினான். அப்போது சங்கமன் எனும் வணிகனைப் பிற நாட்டு ஒற்றன் என்று கோவலன் அரசனிடம் பொய் கூறி அவனைக் கொல்லச் செய்தான். அதனால் வருந்திப் புலம்பிய சங்கமன் மனைவி நீலி, தன்னைப் போல் கண்ணகியும் கணவனை இழந்து துன்பம் அடைவாளாக எனச் சாபமிட்டாள்.

முற்பிறப்பில் கோவலன் பிறருக்குச் செய்த தீங்கால் இப்பிறப்பில் தான் தீங்குற்றான் என்ற குறிப்புள்ளது.

3. கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் மூவரும் உறையூரின் நீங்கி மதுரைக்குச் செல்லுங்கால் வழியில் தங்கினர்.

அவ்வமயம் சேரநாட்டு மாங்காடு எனும் ஊரிலிருந்து அங்கு வந்த மறையவன் மதுரைக்குச் செல்லும் மூன்று வழிகளைக் கூறி அவற்றுள் ஒரு வழியிலுள்ள இட்டசித்தி என்னும் பொய்கையில் நீராடினால் நினைத்ததெல்லாம் எய்தலாம்

'இட்டசித்தி எய்துவிர் ஆயின்

இட்ட சித்தி எய்துவிர் நீவிர்

எனக் கூறினான். அதற்குக் கவுந்தியடிகள்

வாய்மை தவறாது உயிர்களைப் போற்றுகிறவர்களுக்குக் கை கூடாத பொருள் ஏதும் இல்லை, (அதனால் நினைத்ததை அடைவதற்கு இட்டசித்தியில் மூழ்க வேண்டியதில்லை)

'வாய்மையின் வழாது முன்னுயிர் ஓம்பு நர்க்கு யாவதும் உண்டோ எய்தா அரும் பொருள் என மறையவன் கூற்றை மறுத்து வாய்மையின் சிறப்பை உணர்த்தினார்.

சிலம்பின் கூறப்படும் இஃது

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.
யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்

தொன்றும்
வாய்மையின் நல்ல பிற,
கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்
எனும் குறட்பாக்களின் அடியொற்றி நிற்பது.

4. மாதரி வீட்டில் கண்ணகியோடு கோவலன் அளவளாவி விட்டுக் காலையில் மதுரைக்குச் சிலம்பு விற்கச் சென்றவன் அன்று மாலை யில் வெட்டப்பட்டுப் பிணமாயினான்.

புண்ணிலிருந்து குருதி வழிந்தோடப் பிணமாகக் கிடக்கும் கோவலனைக் கண்ணகி கண்டாள்.

'வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல் மேல்
கொண்டாள் தழீஇக் கொழு நன்பால் காலைவாய்ப்
புண்தாழ்க் குருதிபுறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம்'

காலையில் உயிரோடு கண்ட கோவலனை மாலையில் பிணமாகக் கண்டாள், அதாவது காலையில் இருந்தவன் மாலையில் இல்லை.

இஃது

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு

என்ற குறட் கருத்தை ஒப்பநிற்பதை உணரலாம்.

5. இந்திர விழாவில் கோவலன்

ாதவியோடு கடற்கரையிலமர்ந்து, மாதவி
ிடமிருந்து யாழை வாங்கி அகப்பொருள்
குறிப்புத்தோன்ற கானல்வரிப் பாடல்களை
இசைத்தான்

ஒரு பாடலில் காதற் குறிப்புடன் ஒரு
பெண்ணை முன்னிலைப்படுத்தி அவள்
கண்கள், 'கண்கள் அல்ல. அவை கூற்றம்'
எமன்) ஆகும்

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றமே

என இசைக்கிறான்.

இச்சிலம்பின் அடிகளில்

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து
பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர் கட்டு

என்ற குறட்பாக்களின் கருத்துப்
பொதிந்துள்ளது.

6. அங்ஙனமே மாதவி பாடிய கானல் வரிப் பாடலில் தன்னைப் பிரிந்து சென்ற தலைவன் தன்னை மறந்தாலும், தன்னால் அவனை மறக்கமுடியவில்லை'

தம்முடைய தண்ணளியும் தாமும் தன்
மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மெ னிணர அரும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்

என்று ஒரு தலைவி பிரிவாற்றாமையால்
புலம்பும் குறிப்புத் தோன்றப் பாடினாள்.
இங்ஙனம் சிலம்பில் கூறப்படுவது

யாமும் உள்ளேங்கொல் அவர்நெஞ்சத்து என்
நெஞ்சத்து
ஓஒ உளரே அவர்
நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து.
நாங்காதல் கொண்டார் நமக்கென் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.

என்ற குறட்பாக்களை நினைவூட்டுகிறது அல்லவா?

தலைவனைப் பிரிந்த தலைவி ஒருத்தி
மாலைப் பொழுதில் பிரிவாற்றாமையால்
வருந்தி மாலைப் பொழுதை நோக்கி 'நீ
மாலைப் பொழுது அல்ல. மணந்துகொண்ட
மகளிரின் உயிருண்ணும் பொழுதாக
இருக்கிறாய்'

மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலை நீ வாழி பொழுது
பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர்

என்ற குறட்பாக்களின் கருத்து

நுளையர் விளரி நொடிதருந்தீம் பாலை
இளிகிளையிற் கொள்ள இறுத்தாயான் மாலை
இளிகிளையிற் கொள்ள இறுத்தான் நீயேல்
கொளைவல்லாய் என் ஆவி கொள்வாழி மாலை
பையுள்நோய் கூரப் பகல்செய்வான் போய் வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள்மாலை
மாலை நீ யாயின் மணந்தார் அவராயின்
ஞாலமே நல்கூர்ந் ததுவாழி மாலை

என்று சிலம்பில் இடம்பெற்றுள்ளது.

இங்ஙனம் சிலம்பில் குறள் இடம் பெற்ற பகுதிகள் பல உண்டு. ❑❑❑



நடமாடும் தெய்வம்

தொண்டமான்

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்"-பேரறிஞர் அண்ணாவின் திருமந்திரம் இது. திருமந்திர வெளிப்பாட்டிற்கு முன்னமே... அதனை எந்திர சக்தியாகத் தன் அகத்தில்கொண்டு வாழ்ந்து வருபவர் - ஒருவருண்டு! அவர்தான் ...

தமிழகத்தில் பிறந்து, ஏழாம் வயதில், இந்திய வழி மரபு இலங்கைத் தமிழராகி, இலங்கை வாழ் அடித்தள அனைத்துத் தமிழர்களுக்காகவும் வாழ்ந்து, வளர்ந்து வரும் மக்கள் தலைவர்-தொண்டமான் அவர்கள்!

தமிழ்நாடு-மண்ணகம் எல்லைக்குட்பட்டது. தமிழர்களோ - இனப்பெருக்கத்தில் எல்லை மீறியபோது, காலச்சூழ்நிலை வஞ்சித்தபோது - பிறந்த மண்ணைத் தாண்டியும், திரை கடல் ஓடியும்

காஞ்சி துரை.சௌந்தரராசன்

திரவியம் தேட முற்பட்டனர். வாழ்ந்த மக்களுக்கு.. உள்ள இடத்தில், வெள்ளாமை (விளைச்சல்) போதவில்லை! வந்தாரை வாழவைக்கும் தமிழகம், சொந்த நாட்டுக்காரரையும் சோற்றுக்காக.. வெளியுலகம் செல்லும் வண்ணம் வழிவிட்டது, மிதக்கவும் வைத்தது!

அப்படி, மிதந்து சென்றவர்கள் இலங்கைக் கரையோரங்களிலும்... ஒதுங்கியதுண்டு! ஏரம் ஒதுங்கியவர்கள், ஊடுருவி..தோட்டம், துரவுகளில் வஞ்சமற்ற முறையில் உழைத்துப் பிழைக்க முற்பட்டனர். உழைப்பதற்காக உணவ வேண்டினர். உணவு கண்டபின் உழைத்தனர். கடுமையாக அவர்கள் உழைக்க, உழைக்க... சென்றடைந்த நாடும் வளம் கண்டது, சொர்க்கமானது!. வளமை கூட்டியவர்கள்... ஏனோ வளமிழந்து வாழ்ந்தனர். வாய் செத்த பூச்சிகளாக மாறினர். இவர்கள் மட்டுமல்ல... இவர்களைப் போல ஏற்கெனவே அங்கே வாழ்ந்தவர்களும் ஏராளம், ஏராளம்!

மனிதர்களாகப் பிறந்தும் மனித உரிமை கிடைக்கவில்லை! உழைப்பிற்குக் கிடைத்த ஊதியத்தைக் கணக்கிடவும் தெரியவில்லை! அந்த அளவிற்கு.. அவர்கள் கல்வி ஞானத்தில்..சூன்யம்!

அவர்கள் வாழ்வதற்கு ஒரு விடிவெள்ளி... தமிழகம் அனுப்பியிருந்தது - அவர்தான் மக்கள் தலைவர் - தொண்டமான்!

மண்ணோடு மண்ணாகும் வகையில், உழைத்து, மண் புழுவாய்த் துடித்து வாழ்ந்த அவர்கட்கு, அவர்களும் மனிதர்களே.. மனித இனமே, அவர்களிடம் காட்ட வேண்டியதும் மனித நேயமே - அவர்கட்கும் தர வேண்டியது - தார்மீக உரிமைகளே - எனக்குரல் கொடுத்து, ஒருவர் எழுந்தார்!... வாயற்றோர்க்கு வழக்கறிஞரானார். அந்த மக்களுக்குத் தொண்டரும் ஆனார் அவர்தான் மக்கள் தலைவர் தொண்டமான்!

பாலைவன வாழ்வுள் - பசுஞ்சோலை காட்டும் தென்றலா?... நம்ப முடியவில்லை!... ஆனால், உண்மை! தமிழகம் தந்த நம்பிக்கை நட்சத்திரத்தைக் கண்டனர்... சூழந்து கொண்டனர். இலங்கை இந்திய காங்கிரசு மாநாட்டுப் பெருமை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை உருவாக்கியது. நிறுவியவர் - ஏழைகளின் சிரிப்பில், இறைவனைக் கண்டுவரும், கண்டு வாழும், கண்டு வளரும் - அண்ணல் தொண்டமான் - அவர்களே!

தலைவரானார்.. வழி காட்டியுமானார்.. சாதனைகள் படைத்து.. நாயகருமானார். அவர் நெஞ்சின் இலட்சியஜோதி - அவரைப் பல இலட்ச அடித்தள மக்களின் நடமாடும் - காவல் தெய்வமாக ... உலாவரச் செய்துள்ளது!

மக்கள் தொண்டே.. மகேசுவரன் தொண்டெனக் கருதிய மாமனிதருக்கு நாடாளு மன்றம் மலர்ப்பாதையிட்டு வரவேற்று, நாடாளும் அமைச்சராகவும் ஆக்கி, தன்னையும், தொண்டை யும் பெருமைப்படுத்தியது. அதன் பலன், நாட்டின் கிராமக் கைத்தொழில் வளர்ச்சி கண்டது. நாடும் பொருளாதார மேம்பாடும் கொண்டது.

மனித நேயம், பண்பு, நன்னெறி, நல்வழிகள், இவைகள்.. தொண்டமான் அவர்களை மக்கள் திலகமாக்கியது!

அடித்தள மக்களான, தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை, காணிப்பங்கீடு, மலையக இளைஞர்களுக்குக் காவல்துறைப் பயிற்சி, ஆசிரியர்-நியமனம் என்னும் ஐந்து கொள்கைகளின் வெற்றிக்கே, தம்மை முழுமையாக அர்ப்பணித்தார். களம் கண்ட வரெல்லாம் வெற்றி காண்பதில்லை-வெற்றிகள் காண மட்டுமே களம் கண்ட நேர்மையாளர், உத்தமர் - தொண்டமான் அவர்களே!

உண்மை, நேர்மை, தூய்மை, ஒழுக்கம், துணிவு, கருணை, தொண்டு மற்றும் இன்னபிற

குணச் சிறப்புகளும், பல்வேறு திறமைகளும் ஒன்றிணைந்த ஒரு மாபெரும் சக்தியின் உருவமே – மக்கள் தலைவர் தொண்டமான்!

குறள்நெறிவாழ் தொண்டமான்

தமிழர்கள் – இப்படித்தான் வாழவேண்டும் என இலக்கணம்வகுத்துக்கொண்டு வாழ்பவர்கள். அவர்களின் வாழ்வியல் இலக்கணங்களைக் கூறுவது, வழிகாட்டுவது – திருக்குறள் என்னும் தமிழ் மறை! தமிழ் மறை – உலகாய பொதுமறையாகவும் விளங்குகின்றது!

தமிழ்மறை தரும் நெறிவழி வாழ்பவர்கள் உலகியலுள் தனித்துவம் கொண்டு, தன்னிகரில்லாத் தலைவராகவும் திகழ்வர்!

தமிழ்மறைத் தமிழர்கள் எங்கெல்லாம்
வாழ்ந்தாலும்,

வளர்ந்தாலும், அங்கெல்லாம் அன்பு – வளரும்,

பண்பு–மிளிரும், அறம்–பெருகும், நல்லாட்சி
–மலரும்,

அமைதி–கூடும், ஞானம்–விரியும், நல்வாழ்வு
–காணும்!

தோன்றிற் புகழொடு தோன்றுக! – என வாழ்வியல் நோக்கை உறுதியாக எடுத்துச் சொன்னவர் தமிழ்மறை தந்த பெருமகனார் – திருவள்ளுவர்!

தோற்றத்தின் காலமே – புகழிற்குரியதாக சிலருக்கு மட்டும் அமைவதுண்டு! தோன்றிய பின் தன்னைத்தான் அறிந்து, உலகையும் அறிந்து, நற்குண, நற்செயல்களால் என்றும் அழியா அறநெறிகள் வழி நின்று, வாழ்ந்து நிலைபேறு கொள்ளுதல் சிறப்பு!

நிலைபேற்றுக்கான மனித வாழ்வியல் இலக்கணங்களை தமிழ் மறையுள் ஆய்வோமாக!

தனக்கு உவமை இல்லாதவராக வாழ்தல்! தானம், தவம் – இரு கண்களெனப் போற்றுதல்! நிறைமொழி கூறி வாழ்தல்! நற்குணங்களால் சிறந்து விளங்கி வாழ்தல்! செயற்கரிய செயல்களைச் செய்து வாழ்தல்! ஒல்லும் வகையான் நல்லவை செய்தல்! அன்றறிவோம் என்னாது அறம் செய்தல்! அறத்தான் வருவதே இன்பம் என உணர்ந்து வாழ்தல்! அன்பும், அறமும் உடையவராய்த் திகழ்தல்! அமிழ்தினும் இனிமையாகப் பேசுதல், அல்லவை தேய பயன்படுதல், காலத்தில் பிறர்க்கு உதவி செய்தல், தக்கார் இவரென மிளிர்தல். செறிவறிந்து சீர்மை பயப்பன செய்தல். அறிவறிந்து கடமைகள் ஆற்றுதல், ஒழுக்கம் உடையவராதல், உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல், நன்றியுடையவராக வாழ்தல், பிறரை தகுதிகளால் வெல்லுதல், அறம் சொல்லும் நெஞ்சத்தவராதல், சீர்மை, சிறப்பு பெரும் வகை வாழ்தல். சொல்லிற் பயனுடைய சொல்லுதல். மறந்தும் பிறர்க்குக் கேடு நினையாது வாழ்தல், ஒத்தது அறிந்து வாழ்தல், பண்பு நிறைவால் பேரறிவாளனாகத் திகழ்தல். அருளுடை நெஞ்சத்தவராதல், செய் தவத்தால் மேன்மையுறுதல், காட்சிக்கு எளியவனாக வாழ்தல், கடுஞ்சொல்லற்று வாழ்தல், என்றும் அறிவுடையவராக வாழ்தல், வருமுன் காத்து வாழ்தல், அளவறிந்து வாழ்தல், காலம் அறிந்து வாழ்தல், ஊக்கம், உழைப்பு உடையவராக வாழ்தல், அஞ்சா நெஞ்சினராக வாழ்தல், பல்வேறு திறம் உணர்ந்து வாழ்தல், குணம் நாடி வாழ்தல், பெருமைக்குரியராதல், புகழ்ந்தவை போற்றி செயல்படுதல், முறை காக்கும் செங்கோல் நெறி வாழ்தல், முயற்சியுடையவராக வாழ்தல், சொல்லேர் உழவராக வாழ்தல், பண்புடையவராக வாழ்தல்!

இப்படி எண்ணற்ற வாழ்வியல் இலக்கணம் கூறும் தமிழ் மறை வழி நம் காலத்திலேயே வாழ்ந்து வருபவர் மாண்புமிகு தொண்டமான் அவர்கள்! எனவேதான், அவர் மக்கள் தலைவர் – தொண்டமானாகத் திகழ்ந்து வாழ்கிறார்!

குறள்நெறிவாழ் – தொண்டமான் வாழ்க! வளர்க!!

❑❑❑



பரணி பாடிட ஜெயங்கொண் டாருக்குப்
பராக்ரமம் விளைத்தவர் கருணாகரத்
தொண்டமான் !
தரணி போற்றிடக் காஞ்சியி லிருந்து
சாம்ராஜ்யம் கண்டவர் இளந்திரையத்
தொண்டமான் !
முரணில் லாமல் இலங்கை மலையக
முத்தமிழ் மக்களை அன்றும் இன்றும்
அரணாய் நின்று புரப்பவர் எங்கள்
அடல்சேர் சௌமிய மூர்த்தி தொண்டமான் !

முனைவர் அரு.கோபாலன்

பாண்டிய மன்னர்போல் பைந்தமிழ் ஊற்றம்
பல்லவ மன்னர்போல் கலைகளில் நாட்டம்
மூண்டெழும் சோழ மாமன்னர் போல
மோதிப் பகையை நொறுக்கும் வீரம்

வேண்டும் திறன்கள் அனைத்தும் கொண்டு
மேதினி வெல்லும் சேரர்போல் ஏற்றம்
தோன்றில் புகழே தோற்றும் ஆற்றல்
துலங்கக் களம்பல கண்டவர் தொண்டமான் !

பண்டித நேரு தொடங்கி வைத்திடப்
பார்புகழ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
கண்டு, அதன்வழி மலையகத் தமிழர்
கரத்தின் பலத்தை உலகிற் குணர்த்தி

என்றும் இலங்கையின் முதுகெலும் பாக
இனத்தை உயர்த்திய குணத்தின் குன்று
எண்டிசையும் சென்று உரிமை காத்தவர்
இருந்தாலும் நடந்தாலும் இயக்கமாய்ப் பூத்தவர் !

சேன நாயகா, பண்டார நாயகா,
ஜெய வர்த்தனா, பிரேம தாசாவென
ஆன சிங்களத் தலைவர்கள் யாவரும்
ஆற்றலை ஒப்பி ஏற்றுக் கொண்ட

தானைத் தலைவர் எங்கள் தொண்டமான்
தமிழினத் தலைவர் எங்கள் தொண்டமான்
ஊனை, உயிரை மலையக மக்கள்
உயர்வுக் களித்தவர் எங்கள் தொண்டமான்!

தந்தை செல்வா, வன்னிய சிங்கம்,
தமிழ்க்காங் கிரசின் ஜிஜி.பொன் னம்பலம்,
சுந்தர லிங்கம் முதலிய ஈழச்
சுடர்மணித் தமிழர் தலைவர்கள் எல்லாம்

சிந்தை ஒன்றப் பழகிய சீலர்!
சிக்கலைக் கடக்க முசுலிம் மக்களும்
வந்து அணுகி யோசனை கேட்க
வழிகள் கூறும் தலைவர் தொண்டமான் !

சோதனைக்கே ஒரு சோதனை பெய்து
தொட்டதில் எல்லாம் வெற்றியே கொய்து
சாதனைச் சரித்திரம் நாளும் படைப்பவர்
சதியை, பொறாமையைப் பழியைத் துடைப்பவர்

மாதரை மதிப்பவர், மரபைத் துதிப்பவர்
மக்கள் தொண்டிலே மகேசனைக் காண்பவர்
ஏத மில்லாத எங்கள் தொண்டமான்
எழுகதிர் முழுநிலா பற்பல நின்ற வான்!

தோட்டப் பாட்டாளி குடியின் தேனவர்
தொழிலாள வர்க்க முடிமணி யானவர்
ஏற்ற இறக்கங்கள் எல்லாம் கண்டவர்
இந்திய-இலங்கை பாலமாய் நின்றவர்

மாற்றா ரும்புகழ் ஏற்றம் கொண்டவர்
மந்திரிப் பதவிக்கே மரியாதை தந்தவர்
வாட்டம் போக்கும் வரலாறு கண்டகோன்
வாழ்க மக்கள் தலைவர் தொண்டமான்



வேறு பெயர் : நீரிழிவு, மதுமேகம், இனிப்பு நீர், வெகுமூத்திரம், சுக்கிலப் பிரமேகம்.

இயல்: குருதியில் சர்க்கரையின் அளவு இயல்புக்கு அதிகமாய் உயர்ந்து, மிகுந்த அளவில் அடிக்கடி சிறுநீரிழிதல், ஏழு உடற்கட்டுகளும் வன்மை இழத்தல், உடல் இளைத்தல் என்னும் இயல்பினை உடைய நோய்.

நோய் வரும் வழி (etiology)

பசித் தீக்கும் அதிகமாக உண்ணுவதும் மிகுந்த கலவியில் ஈடுபடுவதும் இந்நோய்க்குக் காரணமெனச் சித்தர்கள் அறிந்தனர்.

"கோதையர்கலவி போதை
கொழுத்த மீன் இறைச்சி போதை
பாதுவாய் நெய்யும் பாலும்
பரிவுடன் உண்பராகில்
சோதபாண் டுருவ மிக்க
சுக்கில பிரமே கந்தான்
ஒதுநீரிழிவு சேர
உண்டென அறிந்து கொள்ளே"

(அகத்தியர் 1200)

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல்
நிற்கும்
கழிபோரிரையான்கண் நோய்"

" தீயளவன்றி தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்"

என்ற குறட்பாக்களும்,
எண்ணிப் பார்க்கத் தக்கன.

தற்கால மேற்கத்திய நாட்டு மருத்துவ அறிஞர்கள், அதிகமாக உண்ணுவதும், போதுமான அளவிற்கு உடலுழைப்பு இல்லாததுமே நீரிழிவு நோய்க்கான முதன்மையான காரணங்களெனக் கூறுகின்றனர். மேற்கூறிய காரணங்களால் குருதிச் சர்க்கரை அளவை ஒழுங்குபடுத்துகின்ற கணையத்தின் பீட்டா செல்கள் முற்றிலும் செயலிழப்பதின் காரணமாக அல்லது செயல்திறன்

டாக்டர் ஆனந்த குமார்

குறைவதன் காரணமாக உடலில் சர்க்கரைச் செரிமானத்திறன் பாதிக்கப்பட்டு குருதிச் சர்க்கரை உயர்தலும் (Hyperglycaemia) சிறுநீரில் சர்க்கரை வெளித்தள்ளப்படுதலும் (glycosuria) நிகழ்கின்றன எனக் கண்டறிந்துள்ளனர்.

இளமையிலேயே நீரிழிவு நோய் தோன்றுவதை (Juvenile Type) என்றும் முதிர்ந்தவர்களில் தோன்றுவதை (Matured onset Type) என்றும் சொல்கின்றனர். குழந்தைப் பருவத்திலிருந்து 35 வயது வரை தோன்றும் நீரிழிவு முதல் வகையிலும் 35 வயதிற்கு மேல் தோன்றுவது இரண்டாவது நிலையிலும் கருதப்படுகிறது. ஒருவருடைய அன்னையும் தந்தையும் நீரிழிவு உடையவர் எனில் அவருக்கு நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்பு 100% உண்டு. தாய், தந்தை இருவரில் ஒருவருக்கு நீரிழிவு இருந்தால் அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கு நீரிழிவு வரக்கூடிய வாய்ப்பு 50% உள்ளது.

சிலரின் கணையத்தில் பீட்டா செல்கள் முற்றிலும் செயலிழந்து விடுவதால் அத்தகையவர்களுக்கு வேறு மருந்துகள் பலனளிக்காததால் இன்சூலினையே நம்பி வாழ வேண்டியிருக்கிறது. ஆகையால் அத்தகையவர்களை இன்சூலின் டிப்பெண்டென்ட் (Insulin Dependent Diabetics) என அழைக்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் தவிர ஒருவர் பிறக்கும்போது இருக்கின்ற கிரக அமைப்புகளின் படி அவர்கள் பிற்காலத்தில் நீரிழிவு நோயாளிகளாகக் கூடும் என்பதை சித்தர்கள் அறிவுறுத்தியுள்ளனர். அத்தகையவர்கள் இளம் வயதிலிருந்தே யோக சாதனைகளில் ஈடுபட்டால் நீரிழிவு நோயிலிருந்து தப்பிக்கலாம்.

முதிர்ந்தவர்களில் தோன்றும் நீரிழிவு பெரும்பாலும் தடித்த உடல் படைத்தவர்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. பொது வழக்கில் "Diabetes is the legal wife of obesity என்று சொல்வார்கள்.

"அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலஉள
கண்டங்கள் ஏழுக்கும் கபாலியாமே."
என்ற திருமூலர் கருத்து முற்றிலும் உண்மை.

சிக்கல்கள் : (Complications)

ஒழுங்கற்ற அல்லது திறமையற்ற மருத்துவத்தின் காரணமாக அநேக சிக்கல்கள் எழக்கூடும். Longer the duration greater the complication எனச் சொல்வார்கள். இவர்கள் வேறு ஏதேனும் நோய்க்கு இலக்காகின்ற போது மற்ற வகையான நோயாளிகளைவிட இவர்களைக் கவனமாகக் கையாள வேண்டியுள்ளது. சரியாகக் கவனிக்கப் படாத நீரிழிவு நோய் முதுமையை விரைவு படுத்துகின்றது. நாடிச் சுவர்த் தடிப்பு ஏற்பட்டு இரத்தச் சுற்றோட்டப் பாதிப்புகள் (Cardio Vascular Complications) ஏற்படலாம்.

Myocardial Infraction எனும் மாரடைப்பு நோய்க்கும் Hemiplegia எனும் பக்கவாத நோய்க்கும் இலக்காவோரில் அநேகர் நீரிழிவு நோயாளிகளே.

மாவுப்பொருள் செரிமானம் மட்டுமல்ல தொடர்ந்து கொழுப்புப் பொருள் செரிமானமும் பெரும் அளவாகப் பாதிக்கப்படுவதால் குருதிக்கொழுப்பு அளவு உயரக்கூடும். விரைவில் இரத்தக் கொதிப்பு ஏற்படலாம்.

புண்கள் ஏற்படின் விரைந்து உரிய மருத்துவம் செய்ய வேண்டும். இல்லையேல் அவை அழுகல் விரணமாகக்கூடிய (Gangrene) ஆபத்து உண்டு. அத்தகைய சூழ்நிலைகளில் பாதிப்பிற்கு இலக்கான உறுப்பையே அறுவை மருத்துவத்தால் அகற்ற நேரிடலாம்.

நரம்பு முனைகள் அழற்சி அடைந்து (Peripheral Neuritis) கை, கால் எரிச்சல் ஏற்படக்கூடும். நரம்பு மண்டலப் பாதிப்பின் காரணமாக உள்ளுறுப்புகளின் செயல்திறனும் பாதிக்கக்கூடும். இந்நிலைகளை ஒட்டுமொத்தமாக Diabetic Neuropathy என அழைக்கின்றனர்.

Ratina என்னும் விழித்திரையில் குருதிக் கசிவுகள் ஏற்பட்டு பார்வை இழப்பு ஏற்படலாம். சிலரின் விழித்திரை பிரிந்து விடுவதும் (Retinal detachment) உண்டு.

தாதுக்கள் உஷ்ணமடைவதால் Osteoarthritis போன்ற நிலைகள் விரைவுபடுத்தப்பட்டு என்புகளில் வலி தோன்றலாம். நெடுங்காலமாக நீரிழிவு நோயில் அவதிப்படுபவர்களுக்கு பிருக்கம் Kidney பாதிக்கக்கூடிய ஆபத்து உண்டு.

மிகவும்முதிய நீரிழிவு நோயாளிகள் நுரையீரல் இளைப்பு நோய்க்கு (Pulmonary Tuberculosis) எளிதில் இலக்காகின்றனர்.

நோய்க்கணிப்பு

சித்தர்கள் தந்திருக்கின்ற "நாடி ஸ்பரிசம் நா நிறம்மொழிவிழி மலம்மூத்திரம் மருத்துவர் ஆயுதம்"

என்ற எண்வகைத் தேர்வுகளோடு குருதிச் சர்க்கரை அளவை அறிவதற்கும் நீரில் சர்க்கரைச் சத்து செல்வதை அறிவதற்கும் உரிய நவீன ஆய்வுக்கூடப் பரிசோதனைகளையும் பயன்படுத்திக் கொள்வது நல்லது.

மருத்துவம்

கணையத்தின் பீட்டா செல்களின் செயல்திறனை ஒழுங்குபடுத்தவும் உடற்கட்டுகளை வன்மைப் படுத்தவுமான மருந்துகளை வழங்குதல் வேண்டும். அந்த முறையில் கீழ்க்கண்ட மருத்துவ முறைகளைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். அவை

1. உணவு மருத்துவம்
2. பூரண மருத்துவம்
3. அடயோக மருத்துவம்

உணவு மருத்துவம்

அதிகமான இனிப்புப் பதார்த்தங்களையும், மிகு அளவிலான அரிசி உணவையும் தவிர்க்க வேண்டும்.

செரிப்புத் தன்மை நன்றாய் இருக்கும் பொழுது கோதுமை, சம்பாகோதுமை, கேழ்வரகு இவை களால் ஆக்கிய உணவு, கத்தரிப்பிஞ்சு, அவரைப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பால், தயிர், மோர் போன்றவைகளும் கொள்ளலாம்.

நோய்நிலை முன்னேற முன்னேற தேன் சேர்த்துக்கொள்ளலாம். Slow Sugar உடைய காய்ந்த திராட்சை, பேரீச்சங்காய் சர்க்கரை பயன் உடையது.

பூரண மருத்துவம்

சிலரில் இன்சுலின் மட்டுமே பலனிக்கின்றது. அத்தகைய நோயாளிகள் மருத்துவரின் ஆலோ சனையைப் பெற்று அதற்கேற்ப இன்சுலின் மருத்து வத்தை மேற்கொள்ள வேண்டும்.

சித்த மருத்துவம்

கெடுதி அடைந்த உடற்கட்டுகளை வன்மைப் படுத்த இரசத்திற்காக கந்தகத்தாலாகிய கந்தக பற்பம், கந்தக இரசாயனம், கந்தகச் சுடர்த் தைலம் முதலியவைகளில் ஏதேனும் ஒன்றை வழங்கி, குருதி

யைப் பெருக்குவதற்கு இரும்பினாலான செந்தூரங்களை வழங்கித் துணையாக நாவல் பட்டைச் சாறாகிலும் அல்லது ஆவாரைக் குடிநீராகிலும் கொடுத்தல் நன்று.

ஊன் பெருகவும் உடலில் மேகத்தால் பிறந்த அழலைப் போக்கவும் வெள்ளி பற்பம் அல்லது செந்தூரத்தை நீர்முள்ளிப் பூ, மணத்தக்காளி வித்து இவைகள் போன்ற நீரின் எரிச்சலைப் போக்கக் கூடியவைகளைக் கொண்டு செய்த குடிநீர், சூரணம், நெய், இளகம் ஒன்றினைத் துணை மருந்தாகக் கொடுத்தல் வேண்டும்.

கொழுப்பைப் பெருக்கவும், என்பை வன்மைப்படுத்தவும் பொன்னாலாகிய பற்பம், செந்தூரம், மாத்திரைகள் ஆகியவற்றைத் தக்க துணை மருந்தோடு கொடுக்க, உடலின் வன்மை மிகுந்து, மேனிசிவந்து காணினும் இதுவரை செய்த மருத்துவத்தை விட்டுவிடின் பயன் அற்றதாகும். ஆதலின் மூளையையும் விந்துவையும் பெருக்குமாறு காரீயம், செம்பு இவைகளாலாகிய மருந்துகளில் காரீய மருந்தை ஒன்று அல்லது இரு முறை தக்க துணை மருந்துகளோடு கொடுத்தபின் செம்பாலாகிய மருந்தை வழங்கின் நலம் பயக்கும்.

இந்நோய்க்கு நாவரட்சி, நீர்வேட்கை, கழிச்சல், உடல்எரிச்சல், மயக்கம், விக்கல் போன்ற பலவகைப்பட்ட குறிகளும் தொடருமாதலின் அவ்வப்போது எழும் குறிகளைத் தடுத்தற்கான மருந்துகளைத் தனித்தேனும் நோய்க்குக் கொடுக்கும் மருந்துகளுடன் கூட்டியேனும் கொடுக்கலாம்.

நமது மருத்துவமனையில் நடைமுறையிலிருக்கின்ற மருத்துவம்.

I (1) கீழா நெல்லிச் சூரணம்

1 முதல் 2 கிராம் ஒரு நாளைக்கு 2 அல்லது 3 வேளை

(2) சீந்தில் குடிநீர் 30 முதல் 60 மி.லி. இரண்டு அல்லது மூன்று வேளை

அல்லது

II (1) வசந்தகுசுமாகரம் மாத்1 திரிபலாச் சூரணம் 2 கிராம் ஒரு நாளைக்கு இரண்டு வேளை

2) நிலவேம்புக் குடிநீர் 30 முதல் 60 மி.லி. ஒரு நாளைக்கு 2 அல்லது 3 வேளை

அல்லது

III அப்ரக செந்தூரம் – 120 மி.கி.
சீந்தில் சர்க்கரை – 120 மி.கி.
சிலாசத்து பற்பம் – 120 மி.கி.
ஒருநாளைக்கு 2 வேளை தேனுடன்.

அடயோக மருத்துவம் :

நடப்பது
நின்றபடி மிதிவண்டி ஓட்டுவது
டிரடுமில் பயிற்சி – இவற்றோடு கீழ்க்கண்ட அடயோக மருத்துவத்தையும் மேற்கொள்வது நலம் பயக்கும்.

இன்சுலினையே நம்பியிருக்கின்ற நோயாளிகள் கூட கணையத்தின் பீட்டா செல்களை இயக்க அடயோக மருத்துவத்தினை முயன்று வெற்றி கண்டுள்ளதாக யோகி இராமையா அவர்களின் ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அவை

1. தலை முழங்கால் ஆசனம்
2. நின்ற கொக்காசனம்
3. விட்டில் ஆசனம்
4. அமர்ந்த கொக்காசனம்
5. வில்லாசனம்.

இவற்றிற்கு நோய் போக்கும் ஆற்றல் (Curative effect) மட்டுமல்ல, நோய் தடுக்கும் ஆற்றலும் (Prophylatic effect) இருப்பதால் இளமையிலிருந்தே அடயோகத்தைப் பின்பற்றினால் நீரிழிவு நோய் வருவதைத் தடுக்கலாம். ❑❑❑

முத்துவிழா மாறனென்று கொண்டாடுங்கடி!



கொஞ்சு தமிழ்ப்பாடி கொட்டுங்கடி — கோலத்
தொண்டமான் புகழ்பாடிக் கொட்டுங்கடி!
விஞ்சு தமிழ்ப்பாடிக் கொட்டுங்கடி — அமைச்சர்
வித்தகர் பெயர்பாடிக் கொட்டுங்கடி !
மிஞ்சு திறம்பாடிக் கொட்டுங்கடி — நல்ல
மேலவன் நலம்பாடிக் கொட்டுங்கடி !
நெஞ்சத் திறம்பாடிக் கொட்டுங்கடி — தலைவர்
நேர்மை வழிபாடிக் கொட்டுங்கடி !

அஞ்சி வழிமாறிச் செல்லாமலே — அவரின்
அயராத தொண்டினைப் பாடுங்கடி !
பஞ்சில் நிறம்தோய்த்த பாங்கினைப்போல் — நல்ல
பாசத் தலைவரென்றே பேசுங்கடி !
நெஞ்சில் மகிழ்வோடு கொட்டுங்கடி — அவர்
நேர்த்தியைப் பாடியே கொட்டுங்கடி !
தஞ்சம் அடைந்த தோழர்க்கெல்லாம் — நித்தம்
தோள் கொடுத்த தொண்டனென்று
கொட்டுங்கடி !

கொஞ்சு தமிழ்கேட்டு வாழ்த்துவதே — அவர்
கொள்கை எனக்கொண்டார் கொட்டுங்கடி !
மிஞ்சு தமிழ்க் காதல் நேசனையும் — நன்கு
மேன்மையுறும் வண்ணம் பாடுங்கடி !
தஞ்சை மரபினரென்றே கொட்டுங்கடி — அவர்
தன்மானச் சிங்கமென்றே கொட்டுங்கடி !
பஞ்சையர் தோழரென்றே பாடுங்கடி — அந்தப்
பகுத்தறிவுச் செம்மலை நாடுங்கடி !

முத்துமணி ஆரமென்று கொட்டுங்கடி — அந்த
முதிர்ந்துவந்த முத்தினைப் போற்றுங்கடி !
முத்துவிழா மாறனென்று கொட்டுங்கடி — அந்த
மோகனப் புன்னகையை வாழ்த்துங்கடி !
பத்துவிழா காணவேண்டிக் கொட்டுங்கடி —
இதுபோல்
பாரெங்கும் புகழ்பாடக் கொட்டுங்கடி !
சித்திரத்து நாயகனைப் போற்றுங்கடி — அந்தச்
சீரார்ந்த தொண்டமானைப் பாடுங்கடி !

தங்கவயல் **லோகிதாசனார்**

உயர்ந்தோர் இமயம்



பாரத நாட்டதன் வீரத்தின் வித்தாக
ஏழினில் சென்ற பிள்ளை!
பாரும் வியக்கத்தன் சீர்மிகு செயலால்
உயர்ந்ததோர் இமயமாக!

கொற்றக் குடை தாங்கும் மன்னர்க்குத் துணையாக
சென்றந் நாள் நின்றகுடி!
சுற்றும் போராட்டங்கள் மன்பதைக்காகவே
செய்தின்று வென்றகுடி!

துடிக்கின்ற உழைப்பாளி ஒலிக்கின்ற அவலத்தில்
துவள்கின்ற தூய உள்ளம்!
வெடிக்கின்ற பகையாவும் உன்னாலே விழிபட்டு
வீழுமே தீய பள்ளம்!

துயர்ப்பட்ட மாதர்கள் தூள்படும் நேரத்தில்
துணுக்குறும் அன்பு நெஞ்சம்!
அயர்ந்திட்ட நெஞ்சங்கள் ஆறுதல் நிழல்தன்னில்
அடைக்கலம் ஆகும் கொஞ்சம்!

இனமென்று மொழியென்று மதமென்று இதயத்தே
பேதத்தின் சேறு இல்லை!
தனமொன்று தனதென்று தடையென்று தந்திட
தயக்கமும் கொண்டதில்லை!

தோட்டத்துத் தொழிலாளி வாட்டங்கள் நீக்கியே
துன்பந் துடைத்த தோளாம்!
கோட்டத்துத் தலைமையில் குடியாண்டு
கோலோச்சி
குறைதீர்த்த பகையின் வேலாம்!

ஞாயிற்றின் நலம்போலே திங்களின் கலைபோலே
கூடிற்று உந்தன் பெருமை!
ஞானத்தில் சிறந்தோரும் ஞாயத்தில் வளர்ந்தோரும்
நவில்வாரே உந்தன் அருமை!

வானத்து மீனினை எண்ணலாம் உன்புகழ்
வார்த்தையில் அடங்கிப் போமோ?
தேனொத்த உன்மனம் தெரிந்தவர் கூறினும்
ஏட்டிலே முடிக்கப் போமோ?

இவரெங்கள் இனமென்று எந்நாளும் மகிழ்வென்று
இயம்பட்டும் தமிழின் முரசம்!
இவரெங்கள் தமிழன்பன் என்றென்று எழுதட்டும்
என்போன்ற புலவர் கரமும்!

அன்பது கொண்டு பண்பதில் வாழ்ந்து
எண்பதைக் காணும் தலைவ!
உன்பெயர் சரித்திர ஏட்டினில் பொன்னென
ஒளிர்ந்திடும் இஃது உண்மை!

புலவர் அனு.வெண்ணிலா

தலைவர்களில் உயர்ந்த தலைவர்





உழைப்புக்கு இலக்கணத்தை, உண்மைத்தொண்டை
உலகத்தில் பார்ப்பதற்கு வேண்டும் என்றால்
அழைக்கின்றேன் வாருங்கள் இலங்கை செல்வோம்
அங்குதான் இவ்விரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து
தழைத்துள்ளார் தொண்டமான் என்ற பேரால்!
தலைவர்களில் அவர்உயர்ந்த தலைவர் ஆவார்!
பிழைக்கின்ற மலையகத்துத் தமிழாக் காக
பிறப்பெடுத்த தனிமனிதர் உலக ஏட்டில்!

சித்தம்மை கருப்பையா பெற்ற பிள்ளை
சிறுவயது முதற்கொண்டே மணக்கும் முல்லை!
ஒத்தவர்கள் இவர்போல எவரும் இல்லை!
உழைப்பாலே உயர்ந்தஇவர் அறிவின் எல்லை!
புத்தம்புதுப் புன்னகையால் எதிர்ப்பை எல்லாம்
புறம்கடத்தும் பெருமனிதன்! உயர்ந்த செம்மல்
எத்தனையோ மேடுபள்ளம் வாழ்வில் கண்டும்
எப்போதும் நிலைமாறா மக்கள் தொண்டர்

காங்கிரசு இயக்கத்தை இலங்கை மண்ணில்
கால்கோல வைத்தமகன்! உழைக்கும் வர்க்கம்
தீங்கின்றி வாழ்வதற்குத் தனது வாழ்வைத்
தினந்தோறும் அர்ப்பணித்த கொள்கை வீரர்!
பாங்கறிந்து பகைவர்களும் இவரைக் கண்டால்
பணிகின்ற குணக்குன்றாய் இருக்கும் அண்ணல்!
ஓங்குபுகழ் வந்தாலும் உள்ளம் மட்டும்
உயர்ந்துள்ள இவரிடத்தில் பணிவாய்த் தோன்றும்!

தொழில் வளர்ச்சி இவராலே இலங்கை எங்கும்
தொட்ட இடம் அத்தனையும் பொன்னாய் ஓங்கும்!
மொழிவளர்ச்சி அடைவதற்கும் வழிகள் காண்பார்
முதுமைதரும் சோம்பலையும் முறித்துப் போட்டு
வழிநடத்த வலம்வருவார் மக்கள் தம்மை!
வாஞ்சையுடன் பகைவரையும் அணைத்துக்
கொள்வார்!
குழிபறிக்கும் குணம் அறியாத் தலைவர்! தொண்டர்
குடியுயரத் தினமுழைக்கும் தோழர் ஆவார்!

புலிகளுக்கும் இவரிடத்தில் வாஞ்சை உண்டு
புறப்பட்டால் இவர்பேச்சு அல்வாத் துண்டு!
கலியுகத்தின் கண்ணன்இவர்! ஆட்சி செய்வோர்
கண்டெடுத்த நல்முத்து ஈழ நாட்டில்!
மலிந்திருக்கும் மடமைகளைக் கொளுத்தும்போரில்
மற்றுமொரு ஈரோட்டுப் பெரியார் ஆவார்!
கிலிபிடிக்கும் பலபேர்க்கு இவரைக் கண்டால்
கீழ்மைகளும் பறந்துவிடும் இவர்முன் வந்தால்!

காந்தியாரும் காமராசும் ஒன்றாய்ச் சேர்ந்த
கட்டுருவம் தொண்டமான்! உலகம் எங்கும்
ஏந்துகிற தலைவர்களில் இவர்போல் யாரும்
இல்லைஎனச் சொல்லும்படி வாழ்ந்து காட்டி
மாந்தர்களில் உயர்ந்தவராய்த் தமிழர் நெஞ்சில்
மாறாமல் என்றைக்கும் நிலைத்து நிற்பார்!
சாந்தவுரு அவர்காட்டும் வழியில் சென்றால்
சத்துருவும் மனம்மாறி நட்புக் கொள்வார்!

கவிஞர் குழிபிறை **வீ.கே.கஸ்தூரிநாதன்**

தமிழர் வாழ்வின் தாயான அமைச்சர்



அன்புதான் கடவுளெனும் முதிர்ந்த ஞான
ஆன்மிகப் பலமதத்தார் ஒன்று சேர்ந்து
இன்பமாய் ஓர்தாயின் பிள்ளைகள் போல்
ஈழத்துள் வாழ்கின்றார் தொன்று தொட்டு !

விளைவதெலாம் பவுனாகும் பொருள் வளங்கள்
வேற்றுமைகள் இல்லாத மொழி, இனங்கள்
கலைகளெலாம் இறையருளின் பெருவரங்கள்
கற்றவரும் மற்றவரும் நிறை குடங்கள்.

நிறைகுடமாய், இலங்கைவாழ் தமிழர் வாழ்வின்
நெஞ்சகமாய் தியாகமிகு தலைவ ராக
பெரியபல செயல்களைக் கூர்ந்து ஆய்ந்து
பிணக்குகளைத் தீர்க்கின்ற அமைச்சர் ஆனார் !

தொண்டமான் அவர்கட்குச் சிங்கப் பூரில்
தூயநல் உள்ளங்கள் ஒன்று கூடிச்
கண்டபெரும் பாராட்டுத் திரு விழாவில்
காவியத்தால் வாழ்த்துகிற அரிய வாய்ப்பைத்

தந்தவர்க்கு நன்றிகூறித், தமிழர் வாழ்வின்
தாயான அமைச்சர் திருதொண்ட மானைச்
சிந்தனையால் செந்தமிழால் இன்று போலச்
சீருடன்பல் லாண்டு வாழி நலமே சூழ !

என்றுநான் வாழ்த்துகிறேன் இலங்கை மண்ணின்
இடர்ப்பாடு சிறுகுறைகள் யாவும் தீர்ந்து
அன்றுபோல் கதிர்காமக் கந்த னாலே
ஆழிசூழ் உலகமெலாம் போற்ற வாழ்க !

வேம்பத்தூர் கிருஷ்ணன்



செயற்கரிய செய்த பெரியார்

1950ஆம் ஆண்டு...

அப்போது எனக்கு வயது பதினொன்று. எங்கள் வீட்டிற்கு எல்லாத் தமிழ் வார மாத இதழ்களும் வருவதுண்டு. அக்கால கல்கி வார இதழில் இலங்கை தோட்டத் தொழிலாளர் பற்றியும் அதன் மாண்புமிகு தலைவர் தொண்டமான் பற்றியும் அடிக்கடி செய்தி வரும்.

எங்கள் பக்கத்து ஊர்களில் இருந்து இலங்கை சென்று திரும்பியவர்கள், அந்நாட்டைப் பற்றி, தோட்டத் தொழில் பற்றி, அதன் தலைவர் தொண்டமான் பற்றி மற்றும் யாழ்ப்பாணத் தமிழர் பற்றி கதை கதையாகப் பல செய்திகளைக் கூறுவார்கள். திறந்த வாயுடன் கண் கொட்டாமல் அவைகளைக் கேட்டுக் கொண்டிருப்பேன்!

தனிமையில் பல நேரம் சிந்திப்பதுண்டு! ஏறத்தாழ 10 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களைத் தன் அன்பாலும் பண்புப் பாசத்தாலும் கட்டியணைத்து-ஒருங்கிணைத்து-உலகிலேயே மிகப் பெரிய தோட்டத் தொழிலாளர் சங்கமாக அமைத்திருக்கிறாரே, எவ்வளவு பாடுபட்டிருப்பார் இந்தச் சாதனை மன்னன்! என்று வியப்பதுண்டு. கல்கியில் அவரது புகைப்படத்தைக் கண்டு திகைப்பதுண்டு. ஆம், 'எத்தனை எளியவராய் இருக்கிறார்' என்று பெருமிதம் கொள்வதுண்டு.

இன்றைய அரசியல்வாதிகளைக் காணும்போது தொண்டமான் வாழ்வு காந்திய நீரோட்டம், கொள்கைத் தேர், குணக்குன்று என்று உணரலாம்.

பின்னாளில் சென்னையில் இப்பெருமகனாரைத் தொலைவில் இருந்து கண்டதுண்டு. ஆனால் அருகே சென்று பேசக் கூச்சம்! ஆம் ! அண்மைக் காலம் வரையிலும் யாரைச் சந்திக்க வேண்டுமானாலும் நாணுவேன், நடுங்குவேன் மீறிச் சந்தித்து விட்டாலோ நாக்குழறுவேன்! இதுஎன் அன்றைய இயல்பு! எனவே இந்தத் தமிழ்த் தலைவனுடன் நேரில் பேசியதில்லை. இருப்பினும் மானசீக அன்பு எப்போதும் என்னுள் இருந்து வந்தது. தூணாய் இருந்து துரும்பாய்ப் போன தமிழனுக்குத் தொண்டு செய்வோர் பாதமே என் மலர்ப்படுக்கை!

இவ்வாறே யாழ்ப்பாண முன்னாள் தலைவர்கள் பற்றி கல்கி இதழில் தொடர்ந்து படித்து வந்திருக்கிறேன். அவர்களிடையே இருந்த தேவையற்ற போட்டிகள் அதனால் ஏற்பட்டு வந்த

சாத்தூர் சேகரன்

வீழ்ச்சிகள் பற்றி வேதனித்திருந்தேன். பெரிய பெரிய தலைவர்கள்- சர். பொன்னம்பலம், செல்வா, அமிர்தலிங்கம்..." இப்படிப் பலரை கல்கி மூலம் அறிந்திருந்தேன். எனவே இலங்கை பிரச்சினை பற்றி அந்தச் சிறுவயதிலேயே புரிந்திருந்தேன்.

ஆம், ஒவ்வொரு சிங்கள ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவி ஏற்கும்போதெல்லாம் இலங்கைத் தமிழனின் சில உரிமைகள் பறிக்கப்படும்! ' என்று அன்றைய என் கணிப்பு இன்று வரையிலும் சரியாகவே இருக்கிறது.

அப்போதே என் சிறு வயது மூளையுள் ஓர் ஆசை! குடியரிமைக்காகவும் ஒட்டுரிமைக்காகவும் நல்வாழ்விற்காகவும் போராடும் மலைவாழ் தமிழருக்கு, யாழ்ப்பாணத் தமிழர் உதவ வில்லையே, ஆறுதலாக நடந்து கொள்ளவில்லையே என்று ஏங்கினேன்.'யாழ்ப்பாணத் தமிழரும் மலைவாழ் தமிழரும் ஒன்றுபட மாட்டார்களா? ஒருமித்த குரலில் பேசமாட்டார்களா? இரட்டைக் குழல் துப்பாக்கியாக இயங்கிடமாட்டார்களா?' என்று வெம்பி வெம்பிக் கண்ணீர் வடித்தேன். இரண்டு பெரும் சக்திகளும் ஒன்று படாததால் தானே இலங்கைத் தமிழருக்கு உரிமைகள் ஒட்டுமொத்தமாக மறுக்கப்படுகின்றன' என்று மருகினேன்.

தொண்டமான் அவர்களது தீரத்தாலும் வீரத்தாலும் அளப்பரிய திறமையாலும் தோட்டத் தமிழர்களுக்குப் படிப்படியாகக் குடி உரிமைகள் கிடைக்கப் பெற்றன. விடிவு காலம் பிறந்தது. தனி மனிதனாக, தனி மனிதத் தானையாக தொண்டமான் மகத்தான வெற்றி பெற்றார். மலைவாழ் தமிழர் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்தார்!

இது அவர் செய்த மாபெரும் சாதனை! இந்த எண்பது வயது இளைஞர் புரிய வேண்டிய சாதனை இன்னும் ஒன்று உள்ளது. நம்மிடம் வாழும் முதுபெரும் தமிழினத் தலைவர் இவர் மட்டுமே. எனவே இந்த இரண்டாம் சாதனை அவர் புரிய வேண்டிய கடமை என்பேன். இவரால் மட்டுமே முடியும் என்று நம்புகிறேன்.

அதற்குப் பின்னணியாக ....சிலவற்றைச் சொல்ல வேண்டும்.

1987 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த ஒரு வாரத்தில் இரவு நேரத்திலும் காலை நேரத்திலும் பல யாழ்ப்பாணத் தமிழர்களைச் சந்தித்து நான் உரையாடியதுண்டு.

'மலைவாழ் தமிழர்களைச் சரிசமமாக மதிக்காமல் அவர்களது நல்வாழ்விற்காகப் பாடுபடாமல் இருந்தீர்களே' என்று பலரைச் சாடினேன். அவர்களது குற்றங்களை உணர வைத்தேன். 'இனியேனும் ஒன்று பட்டு வாழுங்கள், இழந்த உரிமைகளை மீட்டுப்பெறுங்கள்!' என்று அறவுரை கூறினேன்.

1989ஆம் ஆண்டு திருவனந்தபுரம் அகில உலக திராவிடப் பள்ளி) I.S.D.L என்னும் ஆராய்ச்சி நிலையத்தில் 'உலகத் தமிழர் அவலம்' பற்றிய மாநாடு ஒன்று நடைபெற்றது. யான் அதில் ஆயுள் உறுப்பினர். எனவே மாநாட்டில் கலந்து கொண்டேன்.

இருகண்ணுமற்ற ஓர் அமெரிக்க மேல்பட்டதாரி ஆய்வாளர், அமெரிக்காவில் இருந்து தனியே வந்து தம் அரிய தலைமை உரை கட்டுரையைப் படித்தார். தமிழர் ஏற்றம் பற்றிப் பேசிய போது விம்மிதம் பெற்ற அவர் குரல், படிப்படியாகத் தமிழன் தாழ்ந்த நிலையைச் சுட்டிக்காட்டிப் பேசிய போது உலகெங்கும் தமிழன் உதைவாங்கும் விவரத்தை, உரிமை இழக்கும் அந்த பரிதாப நிலையை, விவரித்தபோது-பீஜித் தீவிலே, இலங்கையிலே, மலேசியாவிலே, தென் ஆப்பிரிக்காவிலே, ஏன் வட இந்தியாவிலே (இப்போது கருநாடகத்தில் கூடத் தான்) இப்படி நாடு நாடாகப் பட்டியல் இட்டு, பரிதவிக்கும் இழிநிலையை இயம்பியபோது.... அவர் குரல் உடைந்து நாதழுதழுக்கக் குழறினார்.

ஓர் அமெரிக்க வாசிக்கு-இருகண்களற்ற நிலையிலும் உண்மையைக் கண்டு, விண்டுரைத்த அந்த அயல் நாட்டினனுக்கு இருந்த இரக்க உணர்வுகூட, இன்றைய தமிழருக்கு வற்றி விட்டதா அல்லது இற்றுவிட்டதா? போரும் காதலும் என்று வாழ்ந்த அந்தப் புறநானூற்றுப் பெருந் தமிழ்க்கூட்டம் மரமாய் மட்டையாய் வெறும் மண்ணாய் மாறிப் போனதா?ஏ தமிழ்ச்சாதியே.....ஏ தமிழ்ச்சாதியே இந்த ஈனம் உனக்குப் போதாதா-என்று பாரதி போல் அரற்றிடத் தோன்றுகின்றது.

கல்கத்தாவில் இருந்து கட்டுரை வாசிக்க வந்திருந்த மொழி அறிஞர் திருவாட்டி லீலா அம்மையார், தமிழர் படும் பல துன்பங்களை விளக்கிப் பேசும் போது.. மேலும் பேசமுடியாமல் அழ ஆரம்பித்துவிட்டார். விம்மி விம்மி அழுதார். பேச இயலாமல் இருக்கையில் அமர்ந்து விட்டார். ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் சீர்மிகு டாக்டர் வி.ஐ. சுப்ரமணியம் அவர்களும் யானும் அந்த அம்மையாருக்குத் தேறுதல் கூறினோம்.

சிலமணிநேரம் அந்த அறிஞருடன் தனித்துப் பேச எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உலக முழுவதும் தமிழனின் வீழ்ச்சியைச் சுட்டிக் காட்டினார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகள் என்னுள் ஓர் வேதியல் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன்பின் என் எழுத்துக்களோ பேச்சுக்களோ மொழி ஆய்வு பற்றி இருந்தாலும் தமிழர் ஒற்றுமை பற்றியும் இருந்தது. சாரம் இருந்தது, மிகுந்த காரமும் இருந்தது.

மாநாட்டின் இரண்டாம் நாள் சிறப்புப் பேச்சாளர் இலங்கை தமிழர் தலைவர்களுள் முதியவரான மாண்புமிகு அமிர்தலிங்கம் அவர்களே. நிகழ்ச்சி முடிந்த பின்பு ஏறத் தாழ நான்கு மணி நேரம் அவருடன் உரையாட வாய்ப்புக் கிட்டியது. அரை மணி நேரம் அவரைத் திட்டித் தீர்த்தேன். 'அயல் நாடு சென்று மேற்படிப்பு பெற்ற அறிஞரான நீங்கள் ஏன் முன்னாளில் இருவகை இலங்கைத் தமிழரையும் இணைத்து, தமிழர் வாழ்வில் இன்பத்தை அள்ளித் தெளித்திருக்கவில்லை?என்று வசை பாடினேன். எதிர்காலத்தில் அவர் செய்ய வேண்டிய கடமைகளை வற்புறுத்தினேன். வீர இளைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழுங்கள் என்று வேண்டினேன். ஆனால் ....இன்று அவரும் நம்மிடையே இல்லை.

எனது பல்வேறு நாட்டுப் பயணங்களிலும் இலங்கைத் தமிழரை நேரில் கண்டு அவர்தம் இன்னலைக் கேட்டிருக்கிறேன்.

உலகத் தமிழர் அவலம் பற்றிச் சிந்திக்கும் சில உண்மைத் தலைவர்களுள், திரு தொண்டமான் அவர்கள் இமயம் என உயர்ந்து நிற்கின்றார். சாதனை ஒரு புறமும் தன்னலமற்ற தன்மை மறுபுறமும் அவருக்குக் கட்டியங் கூறுகின்றனவே!.

பெரியவர் தொண்டமான் கலிங்கம் கொண்ட கருணாகரத் தொண்டமான் வம்சவழி என்பர். அவர் கை அசைந்தால் இலங்கை தோட்டத்தொழிலே நிலை குலைந்து போகும். இது நாம் காணும் உண்மை. இன்றைய இலங்கை அரசுக்குப் பெரும் வருவாய் ஈட்டித் தருவது தோட்டத் தொழில் மட்டுமே.

தமது அளப்பரிய தொண்டால், தொண்டமான் உலகத் தமிழ்த் தலைவராக பரிமளித்து உள்ளார். தமிழ் உணர்வும் தமிழின உணர்வும் கொண்டவர்.

செயற்கரிய செய்வர் பெரியர் என்னும் திருக்குறள் தொடருக்குச் சிறந்த எடுத்துக்காட்டு தொண்டமான் ஆவார்.

வாழ்க பல்லாண்டு! வளர்க அவர்தம் திருத்தொண்டு! ❑❑❑

தொன்றுதொட்டுப் புகழ்படைத்த தொண்டமானே!
என்றுமுள தென்றமிழ்போல் நின்று வாழ்க!

BK Enterprises

Dealers In

Audio & Video Blank Cassette Tapes & Accessories

21/9, Narasingapuram Street, Mount Road,
Madras - 600 002.

✆ : 834194.

வாடிய மக்களின் மீட்டிய வீணை



இலங்கை மக்களின் இதயம் நிறைந்தே,
இலங்கை இந்திய காங்கிரஸ் கண்டவா!
இலங்கைத் தோட்டம் வியர்வையால் நனைத்தே
இலங்கை சரித்திரம் இலங்கிடச் செய்தவா!

மக்களை மதித்திடும் மாத்தமிழ்த் தலைவா!
மக்களால் ஏத்திடும் மன்பதைத் தோழா!
மக்களை மக்களாய் மாண்புறச் செய்தே,
மக்களின் தொண்டில் மனம்பறி கொடுத்தவா!

காட்சிக் கெளியவா! கடுஞ்சொல் களைந்தவா!
ஆட்சிக் கட்டிலை அலங்க ரித்தவா!
மீட்சிக் கின்றி வாடிய மக்களின்
மீட்டிய வீணையாய் மேதினி மிளிர்ந்தவா!

தொண்டே மூச்சாய் தொடர்ந்து செய்தே
'தொண்ட மான்' எனும் திருப்பெயர் பூண்டவா!
தொண்டுக் கேது தொய்வு என்றே
தொண்டே உருவாய்த் தொகுத்து நின்றவா!

என்பதாம் ஆண்டில் காலடி வைத்தே,
எண்ணித் துணிந்து ஏற்ற கருமம்
நன்னி ஆற்றும் தொண்ட மான்புகழ்
பண்ணி ஒங்குக பாருய்ந் திடவே!

புலவர் சீ.ஈ.எஸ்.பெருமாள்



நல்வினை யாற்றி மக்கள்
நலத்தினை வளர்த்து வாழ்வில்
பல்துறைத் திறனும் பெற்றுப்
பகைப்புலம் தவிர்த்து நாளும்
நெல்விளை கழனி யாகி
நிறைபயன் வழங்கி என்றும்
நல்லவ னென்று இந்த
நானிலம் போற்றும் செம்மல்!

அன்றொரு தொண்டை மானோ
ஆற்றலை உலகம் போற்ற
வென்றனன் கலிங்கம் தன்னை
வியந்தனர் பரணி பாடி,
இன்றுள தொண்டை மானோ
இதயங்கள் இணையும் வண்ணம்
கன்றுள பசுவாய் நாளும்
கடமைகள் ஆற்று கின்றான்

மற்க்களம் தவிர்த்து மக்கள்
மகிழ்வினைப் பெரிதும் போற்றி
அறக்களம் அமைத்து நாட்டில்
அனைவரும் ஒன்று சேர்ந்து
கருக்களம் சிதையா வண்ணம்
காவலாய் நின்று நெஞ்சில்
உரக்களம் விளைத்துக் காட்டும்
ஒப்பிலாத் தலைவன் வாழ்க!
வண்டினம் சேர்த்த தேனாய்
மானிடம் உய்யும் வண்ணம்
எண்டிசை உலக மக்கள்
இதயங்கள் இணைய வாழ்வில்
தொண்டினுக் கடிமைப் பட்டுத்
தொடர்ந்தறப் பணிகள் ஆற்றும்
தெண்டிரை இலங்கை மக்கள்
சிறப்புக்கும் உரிமை பூண்டோன்!

புலவர் நெல்லை அறிவன்

காவல் தெய்வம் ஏசானமுத்து



மக்கள் தலைவர் தொண்டமான் அவர்கள் வருகிற ஜூலைத் திங்கள் 26-ம் நாள் (26-7-92) 79 ஆண்டுகள் நிறைவு பெற்று 80-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி "சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர் குழு"வின் சார்பில் "முத்துவிழா மலர்" ஒன்று வெளியிடப்பட இருக்கிறது என்ற பொன்னான செய்தியை ஏந்தி, பரத நாட்டியக்கலை வளர்த்து, உலகப் புகழ்பெற்ற பந்தநல்லூர் வந்து சேர்ந்த, சிங்கப்பூர் வாழ் முத்தமிழ் வளர்க்கும் வித்தகர் என். ராமகிருஷ்ணன், சிங்கை ஜனநாயகப் பூங்காவில் பூத்து மணம் வீசும் எம்.கே.ஏ.ஐப்பார் Ex. M.P., நபிகள் நாயகத்தின் சீடராக, இரக்க நெஞ்சத்திற்குச் சொந்தக்காரராக வாழும் சிங்கை எம்.ஏ.ரகீம் ஆகிய பெருமக்களை அறிமுகப்படுத்தி வைத்த எனது ஆசிரியர் டாக்டர் மார்க்கண்டன் ஆகியோர், எனக்கிட்ட அன்புக்கட்டளையின் வெளிப்பாடே இக்கட்டுரை!

"மலர்மாமணி" புலவர் இளஞ்செழியன் கரம்பட்டு, தித்திக்கும் தேனமுதாக, கவினூறும் காவியமாக, தென் பொதிகைச் சந்தனமாக மணம் வீசி வருகிறது இம்மலர்!

மனித நேயத்தால் வானோங்கி வளர்ந்து புகழ்ச் சிகரத்தில் அமர்ந்திருக்கும் மாணிக்கத்

என். வீராசாமி

தமிழன் தொண்டமான் அவர்களின் புகழ்கூறும் "முத்து விழா மலர்"!

உலகத்தில் கோடானு கோடி மக்கள் பிறக்கிறார்கள். அவர்களில் சிலரை மட்டும்தான் பல இதயங்கள் பாதுகாத்து வைக்கின்றன!

நினைவுத் திரையிலிருந்து அழிக்க முடியாத ஓவியங்களாகச் சில உருவங்கள் மட்டுமே பதிகின்றன.

அன்றாடம் ஏற்படும் கோபதாபங்களையும் தாண்டி அன்பிற்குரியவர்களாகச் சிலரை மட்டுமே நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

அபூர்வமாகத் தோன்றுகிற அந்த அற்புத மனிதர்கள் நீண்ட காலம் வாழவேண்டுமென்று நம் நெஞ்சம் வாழ்த்துகிறது! அப்படிப்பட்ட அற்புதத் தலைவர்தான் "முத்து விழா" காணும் மூத்த தமிழ் மகன் தொண்டமான்!

நாம் வாழ்க்கையில் எத்தனையோ தலைவர்களைச் சந்தித்து வருகிறோம்! சிலரை சீக்கிரம் மறந்து நிம்மதி அடைகிறோம்.

சிலரை மறக்க முடியாமல் அந்தரங்க ஆத்மாவில் அடைத்து வைத்துக் கொள்கிறோம். இதயச் சிம்மாதனத்தில் இடம்தந்து ஏற்றுக் கொள்கிறோம்!

ஒழுங்கான நடத்தை, கட்டுப்பாடான வாழ்க்கை முறை, அதர்மநெறிக்கு அஞ்சும் தன்மை, தெய்வத்தையும், பெரியவர்களையும் மதிக்கும் பண்பாடு இவை அனைத்தையும்விட, தனது சமுதாயத்தின் மேல் உள்ள பற்று. இத்தன்மைகளால் உயர்ந்து நிற்கிறார் மக்கள் தலைவர் தொண்டமான்.

தற்போதைய மாறிவரும் சூழ்நிலையில் இந்தக்குணநலன்களை –அவரைப் பின்பற்றும் தமிழ்ச் சமுதாயம் கட்டாயம் கடைப்பிடித்தே ஆக வேண்டும்!

பிறந்தோம், வாழ்ந்தோம் என்று இல்லாமல் நம்மாலும் நமது சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டல் செய்தல்வேண்டும்என்றநல்நோக்கம்தான் அவரை மனிதருள் மாணிக்கமாக உயர்த்தி இருக்கிறது!

இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் தேம்பி திரிந்த 10 இலட்சம் இந்திய வம்சா வழித்தமிழர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்த இலட்சிய மனிதர் அவர். மனித குலம் போற்றும் மாமேதை மக்கள் தலைவர் தொண்டமான்.

தமிழ்நாட்டில் முதல் தொழிற்சங்கம் கண்ட தமிழ்த்தென்றல் திரு.வி.க. வழிவந்தவர்! தன்னேரில்லாத்தலைவன். தரணி போற்றும் தமிழ் வளர்க்கும் பெரியார்.

"உயர்ந்த நெறியில் வாழ்ந்த வாழ்க்கையை ஆண்டுகளால் அளவிடக்கூடாது! செய்துள்ள செயல்களைக் கொண்டுதான் அளவிட வேண்டும்" என்று ரிச்சர்ட் ஷெரிடன் என்ற அறிஞர் கூறுகிறார்.

இலங்கையில் இன, மத, மொழி பேதமில்லாது எல்லோராலும் போற்றப்படுபவர், ஏற்கப்படுபவர்! திரு தொண்டமான் அவர்கள்.

மலைநாட்டு இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் 10 இலட்சம் பேர்களின் காவல் தெய்வமாக வாழ்ந்துவரும் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் இன்றுபோல், என்றும் வாழ்ந்து மக்கள் தொண்டு செய்ய இந்தத் தமிழ் நெஞ்சம் வாழ்த்துகிறது! ❑❑❑

எண்பதாண்டு நிறை கலைஞர்



பண்டைநாள் தொட்டுப் பயின்று வந்த
பண்பாட்டு நெறிதன்னைப் பற்றி நிற்கும்
தொண்டமான் பசும்பொன் னனையார்
தொண்டுமிகப் புரிவதிலோர் வியப்பு மில்லை !

அன்றைநாள் அரசுவழி அறவழிதான்
அப்படியே தமிழர்க்கெலாம் வாழ்வளிக்க
நின்றிங்குப் பேராற்றல் கொண்டிலங்கி
நீணிலத்துத் தமிழர்க்குதவும் ஆணிவேராய்

எண்பத்து ஆண்டு நிறைகின்ற இளையோராய்
எத்திசையும் புகழ்பரப்பும் நல்லோராய்
விண்டுரைக்க வியலாத வீரம் மிகக்காட்டி
வியனுலகில் புகழ் நாட்டும் செளமிய மூர்த்தி

கண்டுள்ளார் தம்வாழ்வில் கணக்கில் வெற்றி!
களிதமிழ்போல் அவர் பெறுக நல்லாயுள் !
பண்ணிசைக்கும் தமிழெடுத்து வாழ்த்துகின்றேன்
பல்லாண்டு தொண்டமான் வாழியவே !

கலைமாமணி மன்னர் மன்னன்

தமிழ் வாழ, தலைவா நீ வாழ்கின்றாய் !
தமிழ்க்கொரு தாழ்வெனில் நீ தாங்கமாட்டாய் !
வாழும் நாள் எல்லாம் வாழ்க நீ வளமுடன் !

திரு . சிவலிங்கம்

தலைவர், சிவகிருஷ்ணன் ஆலயம்
மார்ஷலிங் ரோடு, சிங்கப்பூர்.

இலட்சியத் தீபமே ! நீ இலட்சத்தில் ஒருவன் !
இமயமாய் - எவரெஸ்டாய் என்றென்றும் நீ வாழ்க !

PRIYASHINIS PTE LTD.

Importers, Exporters of Garments etc.

276/278 Serangoon Road
1st Floor, Singapore 0821
Tel.: 2996965 Fax : 2947380

தொண்டா ! நீ கிழக்கு ஆசியாவின் தொழிலாளர் ஜோதி !
தொடமுடியா வானும் அறியும் உன் சேதி !
வாழ்க நீ எம்மான் — இந்த வையம் இருக்கும்வரை !

DIETRICH AGENCY

95, South Bridge Road
10-32, Pidemco Centre
Singapore - 0106

Wellwishers

S.V.ASHOKUMAR
G. YOGARAJ
Tel.: 5355300
Fax : 5355890

ஆயிரம் ஆண்டு மரபுப் பழமை கொண்ட அபூர்வச் சோழன் நீ!
பன்னூறாண்டு பாங்குடன் வாழியவே!

வீனஸ் திருமண சப்ளை

திருமணம், விருந்து போன்ற விழாக்களுக்கு நல்ல சிறந்த முறையில் சைவ சாப்பாடு, கோழி, இறைச்சி, சைவ பிரியாணி, நெய் சாதம் குறித்த நேரத்தில் நல்ல முறையில் நியாயமான விலையில் தயார் செய்து தரப்படும். அதோடு மேஜை, நாற்காலி, திருமண கார், இசைக்குழு, வீடியோ, புகைப்படப்பிடிப்பு, மணமகள் அலங்கரிப்பு போன்ற வசதிகளும் செய்து தரப்படும்.

சங்கரதாஸ்

புளோக் 201. # 12 – 1071. தோ பாயோ, லோரோங் 1, சிங்கப்பூர் – 1231.
பேஜர் : 8038466 போன் : 2569323



கண்டவுடன் இதயத்தில் இடம் பிடிக்கும்
கலைப்பரிதியாய்த் திகழும் தொண்டமானே!
விண்டுரைக்க வொண்ணாத செழுந்தமிழ் மேல்
விலகாத பற்றுவைத்த அறிஞர் கோனே!
வண்டுலவும் மலர்க்காவின் வாசத் தேனை
வார்த்தைகளில் கொண்டுவரும் புதியவானே!
தொண்டுகளில் காலமெல்லாம் தோயத் தானோ
தொண்டமானின்குலமரபில்தோன்றலானீர்?

ஆழமுள்ளகடலெல்லாம் கலம் செலுத்தி
அவனியெல்லாம் தலைவணங்கும் புகழ்நிறுத்தி
வேழமென்றும் வேங்கையென்றும் பகை நடுங்க
வீரத்தால் தமிழ்நிலத்தை ஆட்சி செய்த
தாழ்வறியாக் குலோத்துங்க சோழ மன்னன்
தளபதியாய்க் களம்கண்ட தொண்டமானின்
வாழ்குலத்துப் புகழ்விளக்கை வின்னில் தூக்கி
வைத்த உங்கள் அருமை சொல்ல
வார்த்தையுண்டோ?

குமாரவேல்-சித்தம்மையார் இல்ல றத்தின்
குன்றாத கீர்த்திசொல்லப் பிறந்த கோவே!
அமராமல் தொண்டு செய்தே எண்பதாண்டாய்
அதிசயிக்கும் சாதனைகள் பல புரிந்தீர்!
சமுதாயம் மொழி நாடு காப்பதில் நீர்
சரித்திரத்தில் இணையற்று விளங்கு கின்றீர்!
சுமைதாங்கி, முதுமையிலும் ஏழை மக்கள்
சுகம்காண உழைக்கின்ற சுடரே வாழ்க!

திருக்குறளின் பொருளையெல்லாம் எழுதிக் காட்டத்
திறந்திருக்கும் நீலவானும் போதா தன்றோ?
அருந்தமிழின் அழகையெல்லாம் விளக்க, மண்ணின்
அறிஞரெலாம் திரண்டாலும் முடியாதன்றோ?
கருணையுள்ள தாய்க்கீடாய் வேறு ஒன்றைக்
காட்டுதற்குக் கடவுளாலும் இயலாதன்றோ?
பெருந்தலைவர் தொண்டமானின் பெருமை யாவும்
பேசிமுடிப்பார் எவரும் இல்லை யன்றோ?

க.து.மு.இக்பால்

தமிழாய் வாழி!



நீண்டிருக்கும் சோழநாட்டு வயல்கள் என்றும்
நிலவளத்தைத் தன்னகத்தே கொண்டி ருக்கும்!
பூண்டிருக்கும் எழில்சோலை குளிர்ந்த தென்றல்
புல்லரிக்க அள்ளிவரும் நன்ம ணத்தை!
ஆண்டிருக்கும் அன்பேதான் மக்கள் நெஞ்சை
அணுவணுவாய்த் தன்னகத்தே ஈர்த்து நிற்கும்!
ஈண்டிருக்கும் தொண்டமானின் தூய உள்ளம்
எப்போதும் தமிழர்க்கே உழைத்து வாழும்!

கனிச்சாறு சொல்லேதான் அன்பைக் காட்டும்
கற்கண்டு செயல்கள்தான் துயரை ஓட்டும்
பனிச்சாறு போல்குளிர்ந்த விழிகள் என்றும்
பைந்தமிழர் வாழ்வுயர அருளைச் சிந்தும்
இனியாரும் துயரந்தான் கொள்வ துண்டோ
இருந்தமிழன் தொண்டமான்தான் வாழும்நாட்டில்?
நனிபுகழோய்! குமாரவேலன் ஈன்ற செல்வ!
நானிலந்தான் போற்றநித்தம் தமிழாய் வாழ்க!

நாள்தோறும் உடல்நோக உழைக்கும் மக்கள்
நலியாது நல்வாழ்வு காண்ப தற்கே
ஆல்தோறும் விழுதுகள்போல் அரிய திட்டம்
அன்றாடம் தீட்டியவர் தம்மைக் காத்தாய்!
நூல்தோறும் புலவர்தம் பாக்கள் தோறும்
நுவல்கின்ற ஏடுகளின் செய்தி தோறும்
வாள்தோறும் மின்னுகின்ற ஒளியைப் போல
வற்றாத புகழ்பெற்று வாழி! வாழி!

இலங்கையிலே இருக்கின்ற தமிழ மக்கள்
இன்னல்கள் நீங்கித்தான் வாழ, போட்டிச்
சலங்கையிலே ஒலிக்கின்ற ஒலியைப் போலச்
சமத்துவத்துக் குரலெழுப்பி உரிமை கேட்டாய்!
கலங்கையிலே யார்காப்பார் உழைப்போர் தம்மை?
கடுகளவும் தன்னலந்தான் கருதார் தானே!
துலங்கையிலே தூயமணிக் குன்றே போலத்
துலங்கித்தான் தொண்டமானே! கதிராய் வாழி!

புலவர் வி.குலோத்துங்கன்



சோழனார் வழியில் வந்த சுந்தரத் தமிழர்

ஈழமாம் இலங்கைத் தீவின்
எண்ணரும் மக்கள் நெஞ்சில்
ஆழமாய் இடத்தைப் பெற்றே
அவனியே போற்ற வாழும்
வேழமாம் எங்கள் அண்ணல்
வியத்தகு தொண்ட மானார்
சோழனார் வழியில் வந்த
சுந்தரத் தமிழர் ஆவார்!

தொண்டினில் திளைத்த தூயர்
தொய்விலாத் தீரர்; தம்மை
அண்டிய மக்கட் கெல்லாம்
அமுதமாய் விளங்கும் அன்பர்!
மண்டிய தொழிலா ளர்க்கே
மாபெரும் தலைவர்! யாரும்
விண்டிட அரிய தாகும்
வித்தகம் இவரின் சொந்தம்!

கண்ணினைப் போன்ற சீலம்
கனவிலும் மறவாத் தோன்றல்!
உண்ணுநீர் வழங்கிக் காக்கும்
ஊருணி போன்றார்! நாட்டில்
எண்ணிட முடியா தான
இடர்மிகு போராட் டத்தில்
நண்ணிய இவரின் வெற்றி
நாளெலாம் புகழும் கீர்த்தி!

பெண்டிரின் மேன்மைக் காகப்
பேருழைப்(பு) உழைத்த செம்மல்!
மண்டலம் வாழ்த்திப் பாடும்
மனிதநே யத்தின் வார்ப்பு
பண்டுநம் முன்னோர் போன்றே
பசித்தவர்க் கீயும் வள்ளல்!
உண்டோ இங் இவர்க்(கு) ஈடாய்
உத்தமர், உலக முற்றும்!

உண்மை, எளிமை, செம்மை
உன்னத வளமை, நேர்மை
நன்மை, புதுமை, தூய்மை
நன்றி யுடைமை, நீர்மை
பொன்றிடாப் பொறுமை, மேன்மை
பொருந்திடும் திறமை, நுண்மை
இன்னநற் குணங்கள் எல்லாம்
இவரிடம் தஞ்சம்! தஞ்சம்!

சாதனைச் சிங்கம்; ஓங்கும்
சரித்திரத் தங்கம்; ஏழை
வேதனை தீர்க்கும் சங்கம்!
வீரமே இவரின் அங்கம்!
சீதளத் திங்கள் நெஞ்சம்!
செயலினில் ஒழுக்கம் விஞ்சும்!
மாதவத் தொண்ட மானார்
வாழ்கவே வாழ்க நீடு!

புலவர் தமிழ்ப்பித்தன்

தொழிலாளர் தோழன்

தொண்டமான்



ஆரிவர் என்பீர் ஆயின், இவரே
சீரிய மரபாம் செந்தமிழ் இனத்துக்
குலோத்துங்க சோழனின் படைத்தள பதியாம்
கரணா கரத்தொண்ட மான்வழிக் கன்னித்
தமிழகம் உதித்த தீந்தமிழ்ச் செல்வர்
சௌமிய மூர்த்தித் தொண்டமான் ஆவார்!

ஏழாம் அகவையே இலங்கைத்தீ வேகி
வீழாது விட்டு விலகாது தீக்காய்
வார்போல் சிங்களர் வாழ்நிலந் தங்கி
சீர் நிறை கல்வியும் சிறந்தநல் லறிவும்
ஆற்றலும் பெற்றே அனைத்துத் தரப்பின்
போற்றலும் உற்றவர்! பொதுமை மனத்தார்!

தோட்டத் தொழில் செய் திறனிறை தமிழின
வாட்டம் போக்க வகைதொகை தெரிந்தே
தொழிலாளர் குரலாய்த் திறமுடன் முழங்கிப்
பழியிலா வகையே பயன்பல விளைப்பவர்!

அரசியல் நுழைவால் அமைச்சர் ஆகி
உரமாய்த் தொழிலாளர் உயிராய் நின்றே
நலம்பல விளைப்பவர்! நாட்டுக் குழைத்தே
உலகு புகழ உயர்ந்து சிறப்பவர்!

மலையத் தமிழர் வாழ்வு சிறக்க
நிலையாய் உழைத்துமே நீள்புகழ் உறும்அப்
பேரறி வாளன் பேர்புகழ் வாழ
ஊரறி தமிழால் உயர்த்துவோம் புகழ்ந்தே!



பெரியார் பெருங்கவிஞர் **கருஞர் பாரி**



நம் சிந்தைஅணு ஒவ்வொன்றும் சிலிர்க்க வைக்கும் தலைவர் தொண்டமான் எழுதுகோலுடன் சிந்தித்திருக்கும் சீர்மிகு கோலம்.

தொண்டமான் பஞ்சசீலம்



அலைபட்ட துரும்பன்ன மலைய கத்தார்
அவர்க்குரிய காணிப்பங் கடைய வேண்டும்;
நிலையான குடியுரிமை எய்த வேண்டும்;
தேர்தலிலே வாக்களிக்கும் உரிமை வேண்டும்;

கலையார்ந்த ஆசிரியப் பயிற்சி வேண்டும்;
காவல்துறைப் பயிற்சியொடு வேலை வேண்டும்
மலைவாழும் தொழிலாளர் மனித ராக
வகுத்தளித்தார் தொண்டமான் பஞ்ச சீலம்!

அறியாத மக்களுக்குத் தொண்டு செய்தீர்!
அதனாலே உயர்மக்கள் தலைவ ரானீர்!
வறியார்க்கு நீர்செழித்த வாழை, தென்னை!
வலிவான கொள்கையிலே முதிர்ந்த தேக்கு

சிறியாரை மேல்கொணர்ந்த தொண்ட மானே
சீர்குமர வேல்சௌமிய மூர்த்தி வாழ்க!
நெறிசிறந்து முத்துவிழா கண்ட சான்றோய்!
நீண்டதமிழ் போல்மேலும் வளர்க! வாழ்க!

தொழிலாளர் காங்கிரசுத் தலைவர்; நீவீர்
தோட்டத்தில் உழைப்பாரின் தொண்டர்; வாழ
வழிகேட்டு வருவார்க்கு வள்ளல்; பெண்கள்
வளர்தற்குத் துணைநின்ற அண்ணல்; சான்றோர்

பொழிகின்றார் வாழ்த்துமழை; சிங்கப் பூரில்
பூக்கின்ற மலர்கண்டீர் வயிரம் காண்பீர்!
மொழிகின்றேன் பல்லாண்டு வாழ்க! வாழ்க!!
முத்துவிழா நாயகரே வாழ்க! வாழ்க!!

புலவர் **துரை தில்லான்**



தொண்டமானைக் கண்டேன்

'விற்பெரும் தடந்தோள் வீர வீங்குநீர் இலங்கை வெற்பில் நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேன் நல்லேன் இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும் கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

என்று சொல்லின் செல்வனாகிய அனுமன், வில்லின் செல்வனாகிய இராமனிடம் தான் இலங்கையில் கண்ட கற்பின் செல்வியாகிய சீதையின் பொற்பினை-சிறப்பினை எடுத்து இயம்புவதாகக் கவியின் செல்வனாகிய கம்பன் தன் இராமாயணத்தில் கூறிச்சென்றான். நான் இலங்கைத் தலைநகராகிய கொழும்பில் அண்மையில் கண்ட தொழிலாளர் தலைவர் அமைச்சர் மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களைப்பற்றி இக்கட்டுரையில் கூற முற்படுகிறேன்.

இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில் இலங்கை அரசாங்கத்தைச் சார்ந்த இந்து சமய கலாசார அமைச்சு அலுவல்களின் இயக்குநர் திரு.க சண்முகலிங்கம் அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தில் இந்து சமயக் கலாசார அமைச்சு 1992 மே 7,8, 9 ஆகிய நாட்களில் சமுதாய மொழியியல் தமிழ் வளர்ச்சி பற்றிய கருத்தரங்கு ஒன்றைக் கொழும்பில் நடத்த இருப்பதாகவும் அதற்கு நான் வந்து கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரை ஒன்று படிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருந்தார்.

தமிழ் கூறும் நல்லுலக நாடுகளாகிய மொரிசியசு, இலண்டன், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு அண்மையில் சென்று திரும்பிய எனக்கு இலங்கை செல்ல வேண்டும் என்று நீண்ட நாளாக ஒரு வேட்கை இருந்தது. எனவே இயக்குநரின் அழைப்பினை ஏற்றுக் கொண்டேன். தமிழ் கற்பித்தலில் 'மேனாட்டுச் செல்வாக்கு' என்னும் கட்டுரை ஒன்றைக் கருத்தரங்கில் படிப்பதாகவும் தெரிவித்தேன்.

மே 6 ஆம் தேதி இரவு சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு கொழும்பு சென்றேன். கொழும்பு சென்ற பிறகுதான் இலங்கை அரசாங்கத்தின் இந்து சமய கலாசார தமிழ்அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி.பி.தேவராஜ் அவர்கள் ஆர்வத்துடன் முன்னின்று நடத்தும் தமிழ் சாகித்ய விழாவின் ஒரு சிறப்புக் கூறாகிய சமுதாய மொழியியல் கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருக்கும் நிலையை நான் உணர்ந்தேன். அடுத்த நாள் விழா நிகழ்ச்சிகளையும் ஏற்பாடுகளையும் நோக்கியபோதுதான் இந்தத் தமிழ்சாகித்யவிழா அளவால்சிறிய ஓர் உலகத் தமிழ் மாநாடு என்பதை என்னால் உணர முடிந்தது.

மே 7 ஆம் தேதி காலை 9 மணி அளவில் இலங்கை அதிபர் மாண்புமிகு பிரேமதாசா அவர்கள் மொழியியல் கருத்தரங்கினைத் தொடங்கி வைக்க, இலங்கை மன்றக் கல்லூரிக்கு வருகை தந்தார். அவரை வரவேற்றுப் பழந்தமிழ்ப் புலவர்கள் அருந் தமிழ் வளர்த்த சான்றோர்கள் தமிழ் இலக்கியச் சுவடிகள், தமிழர் பண்பாட்டுச் சின்னங்கள் அடங்கிய ஊர்வலம் உலாவரக் கண்டு உவகை கொண்டேன். பிறகு விழாமேடையில் அதிபர் அவர்களின் அருகே ஒரு பெரியவர் அமர்ந்திருக்கக்கண்டேன். அருகில் அமர்ந்திருந்த நண்பரிடம்

டாக்டர் சுப.திண்ணப்பன் சிங்கை

இப்பெரியவர் யார் எனக் கேட்டேன். அவர்தான் அமைச்சர் தொண்டமான் என்று சொன்னார்.

விழாவின் தொடக்கத்தில் இந்து சமய, கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி.பி.தேவராஜ் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவ்வரவேற்புரையில் "இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர், சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்ட மான் அவர்கள் எம் மத்தியில் இருப்பது நாம் ஆற்றும் பணிகளுக்குக் கிடைக்கும் தார்மீக வலிமையாகக் கருதுகின்றோம். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் தொண்டாற்றும் அவர், மலையகத் தமிழ் மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பிடித்திருப்பவர். அகிம்சை வழியில் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்கின்ற மூத்த தமிழ்த் தலைவர். இலங்கை வாழ் தமிழ் மக்களின் பேரபிமானத்துக்குரியவராகத் திகழ்கின்ற மாண்பு மிகு தொண்டமான் அவர்களை மனப்பூரிப்புடன் வரவேற்கின்றோம்" என்று கூறினார்.

தொண்டமான் அவர்கள் இலங்கையிலுள்ள பழம்பெரும் அரசியல்வாதி என்று கேள்விப் பட்டிருக்கின்றேன். ஆனால் நான் அன்றுதான் அவரை நேரில் பார்த்தேன். அவர் இலங்கை அதிபர், அமைச்சர்கள், மக்கள் அனைவரும் மதிக் கத்தக்க மாமனிதர் என்பதை அறிந்து கொண்டேன். பிறகு தொண்டமான் அவர்கள் சாகித்ய விழாவினை ஒட்டி அந்த மேடையில் பேசினார்கள். அவர்கள் பேச்சு இரத்தினச் சுருக்கமாக இருந்தது. அதே நேரத்தில் அவர் சிறந்த அரசியல்வாதி என்பதையும் மெய்ப்பித்தது.

சிங்களம், தமிழ் இரண்டிலும் அரசாங்கக் கடிதங்கள் அனுப்புதல் வேண்டும் என்னும் நடை முறைக்கேற்ப அரசாங்க அதிகாரி ஒருவர் நடக் காமல் சிங்களத்தில் மட்டுமே கடிதம் எழுதிய நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட்டுத் தமிழில் எழுது வதற்கு வழி செய்தது பற்றி அவர்கள் பேச்சில் குறிப் பிட்டார்கள். அவர்கள். தமிழ் நலம் பேணுதற்கு எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு வருகிறார் கள் என்பதற்கு இது சான்றாக அமைந்தது.

தமிழ் சாகித்ய விழாவினை நடத்திவரும் இந்து சமய இராஜாங்க அமைச்சரைப் பாராட்டிப் பேசிய தன் வாயிலாக, தொண்டமான் அவர்கள் தம்முடன் பணியாற்றும் இளைய அமைச்சர்களுக்கு எத்தகைய ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி வருகிறார் என்பதை என்னால் உணர முடிந்தது. மேலும் தமிழ்சாகித்திய விழாவை நகரங்களில் மாத்திரம் நடத்துவதோடு நின்று விடாது தோட்டங்களில் பட்டி, தொட்டி தோறும் வாழும் மலையக மக்களும் பயன்பெறத் தக்கதாகச் செய்ய அமைச்சர் ஆவன செய்ய வேண்டும் என்று அரிய ஆலோசனை ஒன்றையும் தொண்டமான் தம் பேச்சில் குறிப்பிட்டார். இலக்கி யம், கற்றோர் மட்டும் சுவைப்பதற்குரியதன்று. கல் லாத மற்றோரும் அதன் இன்பத்தைச் சுவைக்க ஆவன செய்வதில் தொண்டமான் எவ்வளவு அக் கறை கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து கொண் டேன். மேலும் அவர் உயிர், உணர்வு, உரை அனைத் தும் தொழிலாளர் நலத்தையே மையமாகக் கொண்டு இயங்கும் இயல்பின என்பதையும் கண்டேன்.

மேலும் இலங்கையில் தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்கு இந்துக்கள் மட்டுமன்றி இசுலாமிய மக்களும் அருந்தொண்டாற்றிய பெருஞ்செயலைத் தொண்டமான் நினைவுகூர்ந்து பேசினார். இஃது ஏனைய சமயத்தாரையும் இணைத்துக் கொண்டும் அணைத்துக் கொண்டும் செல்லும் அவரது சமரசச்சமய நோக்கினைக் காட்டுகிறது.

இறுதியாகத் தொண்டமான் அவர்கள் தம் பேச்சில் ஒரு கருத்தினைக் குறிப்பிட்டார்கள். சாகித்திய விழா போன்ற நிகழ்ச்சிகள் வாயிலாக ஏனைய மொழியினர் நம்மை ஐயுறாத வகையில் நாம் நடந்து கொள்ள வேண்டும் என்று ஒரு எச்சரிக் கையும் விடுத்தார்கள். பல இன , பன்மொழிச் சூழ லில் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்னும் கருத்தை எடுத்துரைக்கும் அவரது அரசியல் அறிவின் முதிர்ச்சியை அப்போது நான் நன்கு அறிந்து கொண்டேன்.

தொடக்கவிழா நிகழ்ச்சிக்கூட்டம் முடிந்தது. தேநீர் சிற்றுண்டி நிகழ்ச்சி. அப்போது அமைச்சர் பி.பி.தேவராஜ் அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்துள்ள மொழியியல் அறிஞர்களைத் தொண்ட மான் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார் கள். ஒவ்வொரு அறிஞரிடமும் தொண்டமான் அவர் கள் அன்புடன் அளவளாவினார்கள். பிறகு நான் சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கிறேன் என்று சொன்ன தும் சிங்கப்பூரிலுள்ள அவரது நண்பர்கள் திரு ஜபார் போன்றவர்களைப்பற்றி விசாரித்தார்கள். பிறகு மலேசியாவிலுள்ள தொழிற்சங்கவாதியான

திரு.பி.பி.நாராயணன் அவர்களைப் பற்றிக் கேட்டார்கள். தொழிற்சங்கம் தொடர்பாக அனைத் துலக மாநாடுகளில் கலந்து கொள்ள அவர்கள் பல நாடுகளுக்கும் சென்று வந்தது பற்றியும் கூறினார் கள். இலங்கையின் தொழிலாளர் முன்னேற்றத்துக் காகப் பல ஆண்டுகள் பாடுபட்ட ஒரு தலைவருடன் அனைத்துலக ரீதியில் தொழிற் சங்கவாதியாகத் திகழும் ஒரு தலைவருடன் உரையாடிக் கொண் டிருக்கிறோம் என்னும் உணர்வை நான் பெற்றேன். அவர் நான் பிறந்த ஊருக்கு அருகிலுள்ள ஊரைச் சார்ந்தவர் என்னும் செய்தி அறிந்ததும் என்னை யறியாது அவரிடம் எனக்கு ஒரு நெருக்கம் ஏற்பட்டது. மேலும் அவர் அண்மையில் திருக்கோஷ் டியூரிலுள்ள பெருமாள் கோவில் திரு விழா ஒன்றில் தம் மூதாதையர் காலத்திலிருந்து நடத்தி வரும் மூன்றாம் திருநாள் மண்டகப்படிக்குத் தவறாது ஆண்டுதோறும் சென்றுவரும் செய்தியையும் அவர் தம் பேச்சிடையே குறிப்பிட்டார். இதன் வழியாக மரபுபோற்றும் அவரது மாண்பும், இறையுணர்வும் என்னால் அறிய முடிந்தது.

பிறகு சாகித்ய விழா நாட்கள் இரவு பல இடங் களில் நடந்த கலை நிகழ்ச்சிகளில் தொண்டமான் அவர்களைச் சந்தித்தேன். விழாவின் இறுதிநாள் அன்று கொழும்பிலுள்ள ஒரு நவநாகரிக உணவு விடுதியில் இந்து சமய கலாசார அலுவல்கள் இரா ஜாங்க அமைச்சர் திரு.பி.பி.தேவராஜ் அவர்களும் அவரது துணைவியாரும் சாகித்ய விழாவில் கலந்துகொண்டவர்களுக்கு ஒரு விருந்து அளித்தார் கள். அந்த விருந்திற்குத் தம் பேத்தியுடன் வந்த அமைச்சர் தொண்டமான் அவர்களைச் சந்தித்துச் சிறிது நேரம் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. எங்களுக்குத் தம் பேத்தியை அறிமுகம் செய்து வைத்தார்கள். விரும்பிய உணவு எடுத்து உண்ணு மாறு கூறி விருந்தோம்பினார்கள். இந்திய ஹைகமிஷனர், வணிகப்பெருமக்கள், முதலானோர் களையும் அறிமுகப்படுத்தினார்கள். மேலும் அவர் கள் ஒவ்வொருவருடனும் பேசி நலம் விசாரித்தார் கள். அப்போதுதான் அமைச்சர் தொண்டமான் அவர்களிடம் சமுதாயத்தின் மேல்மட்டத்தினர் மதிப்பையும், மரியாதையையும் அறிய முடிந்தது. அங்கு என் அருகில் உடனிருந்து உணவுண்ட வணிகப் பெருமகனார் ஒருவரிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது சிங்கப்பூரில் அய்யா அவர் களின் பிறந்தநாள் விழாக்கொண்டாடப் போவதா கவும் அதற்கு அவர்கள் குழுவினராக வரப்போவதாக வும் சொன்னார். அப்போது தொண்டமான் அவர் களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா என்று எண்ணி அகமகிழ்ந்தேன். சிங்கப்பூரில் அவரைச் சந்திப்போம் என்று நினைத்து இன்புற்றேன். சிங்கப்பூர் வந்ததும் என் மேசையில் ஒரு கடிதம் இருந்தது. அதனைப் பிரித்துப் பார்த்தேன். நண்பர் இராம கிருஷ்ணன் தொண்டமான் அவர்களுக்கு எண்பதாம் ஆண்டு நிறைவு விழா சிங்கப்பூரில் நடைபெறப் போவதாகவும் அதற்கு ஒரு மலர் வெளியிடப் போவதாகவும் கூறித் தொண்டமான் அவர்களைப் பற்றி ஒரு கட்டுரை வேண்டும் என்றும் கேட்டிருந்தார். பிறகு தொலைபேசியிலும் தொடர்புகொண்டு பேசினார். அப்போதுதான் தொண்டமான் அவர்களுக்கு வயது எண்பது என என்னால் கணிக்க முடிந்தது. தொண்டமான் அவர்கள் வயதால் எண்பதை எட்டி இருக்கலாம். ஆனால் அவர்கள் உள்ளத்தால் , உழைப்பால் உணர்வால் என்றும் இளையவராகவே காட்சி அளிக்கின்றார். நான் வந்ததும் தமிழ் நேசன் நாளிதழ் ஞாயிறு மலரில் தொண்டமான் அவர்களின் நிழற்படத்துடன் பேட்டி ஒன்று ஒருபக்க அளவில் வந்திருக்கக் கண்டேன்.

அப்பேட்டியில் இன்றைய தமிழீழப் பிரச்சினை பற்றிய அவர் கருத்துக்களை கூறிய பின்னர் இறுதியில் இந்தியர் குடியுரிமைப் போராட்டத்தில் தொண்டமான் பணியையும் பேட்டியாளர் குறிப்பிட்டிருந்தார். அப்போது அவர் தம் பதவியைத்துறக்கத் தயாராக இருந்தார் என்பதையும் அதன் வாயிலாக அறிந்து கொண்டேன். அந்தப் பேட்டியில் இறுதிப்பகுதி:

"1985 ஆம் ஆண்டு மாபெரும் பிரார்த்தனை இயக்கத்தை நடத்தி நாடற்றவர்கள் என்று கருதப்பட்ட இலங்கைவாழ் இந்தியர்கள் அனைவருக்கும் குடி யுரிமை பெற்றுக் கொடுத்த திரு தொண்டமானின் சாதனை இலங்கை வரலாற்றில் அடித்தெழுத முடியாத ஒரு பளிங்கு ஏடு"! ஆம்! தொண்ட மான் அவர்கள் ஒரு வரலாற்று மனிதர், தொழி லாளர் தலைவர், தமிழ் நலம் பேணும் தகைமையாளர், வருமுன்னர் காக்கும் ஒரு நல்லமைச்சர், சமயப்பொறை மிக்க சான்றோர்! அவர் வாழ்க பல்லாண்டு! முத்து விழாக் காணும் முதுபெரும் தலைவர் தொண்டமான் முத்தமிழ் போல் வாழ்க பல்லாண்டு! ❑❑❑

சிங்கத்தின் தமிழ்க் குகையிலும்



சிங்கத் தின்குகையில்-அதன்
பிடரைக் குலுக்குபவர்!
பங்கம் வந்துவிட்டால்-மேலே
சிகையை உலுக்குபவர்!

சிங்களச் சோதரரை-என்றும்
சேர்த்தே அரவணைப்பார்.
சங்கம் வழியாகப்-பல
சாதனை கள்படைத்தார்.

தங்கத் தலைவரடா-அவர்
தமிழர் தலைவரடா.
அங்கம் பூரிக்கும்- அவர்
அறிவை நினைக்கையிலே.

தொண்டமான் பெருமை-நாவால்
சொல்லவும் அரிதே!
ஒன்றா? இரண்டா? -தலைவர்
தொண்டுகள் பெரிதே!

தேயிலை, ரப்பர்-மலைத்
தோட்டங்களில் தமிழர்
வாயில்லாப் பூச்சிகளா? – இல்லை,
வக்கிலாத் தேரைகளா?

அறப்போர் என்னும்-நல்
ஆயுதம் ஏந்தி
அநீதியை எதிர்த்துவிட்டார்-பகையை
அடித்து நொறுக்கிவிட்டார்.

"போக்கிடம் அற்றவர்"-என்ற
புன்மையை நீக்கிடவே
வாக்குரிமை, குடியுரிமை-அன்றே
வாங்கித் தந்துவிட்டார்.

அரியணையில் தமிழை.உரிய
தேசிய மொழியாக்கிச்
சரிநிகர் சமமென்றார்-இது
சரித்திரம் ஆனதடா!

கலிங்கம் வென்ற -கருணாகரன்
வழியில் வந்தவர்
கலங்குவ தில்லையடா! -அவர்
கர்ச்சனை இடியோசை!

அமைச்சராய் இருந்தபோதும்-சங்கத்
தொழிலாளர்க்(கு) அல்லவென்றால்
ஆர்த்தெழுந் திடுவார்-அவர்
கண்ணீர் அகற்றிடுவார்!

அரைநூற்றாண்டு-இவர்
அரும்பணி ஆற்றி
ஆயிரம் பிறைகண்டார்-இன்று
அழியாப் புகழ் கொண்டார்.

முத்துவிழாக் காணும்-தலைவர்
தென்பாண்டி முத்தாவார்.
குத்துவிளக் கேற்றி-விழாக்
கொண்டாடு வோம் நாமும்!

நூற்றாண்டு காணட்டும்-தமிழர்
நொந்தமனம் ஆறட்டும்.
போற்றும் குறள், கீதை-வழி
புதிதாய்க் காட்டட்டும்!

பாம்பன் பாலமென-அவர்
பணிகள் தொடரட்டும்!
பசும்பொன் தேவரைப் போல்-என்றும்
பசுமையாய்ப் படரட்டும்!

கவிஞர் மா.வழித்துணைவன்



தொல்காப்பியர் கண்ட தனித்தமிழ்

"தமிழன் என்றொரு இனமுண்டு

தனியே அவர்க்கொரு குணமுண்டு

அமிழ்தம் அவனுடைய மொழியாகும்

அன்பே அவனுடை வழியாகும்"

இது பிற்காலத்துப் பாடல்; இக்காலத்துப் பாடல்; அரசவைக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கர் பாடல், என்றாலும், பண்டைக்காலத்துத் தொல்காப்பியர்க்கு முற்பட்டகாலத்து வாழ்வினை நினைவுறுத்துகிறது.

பண்டைத் தமிழன் அன்பின்வழி ஒழுகினான்; அதுவே அவனுக்கு இன்பத்தைப் பயந்தது; "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்றார் ஔவையார். தலைவன், தலைவி இருவரிடையே இயல்பாய் எழுந்த அன்பு ஒன்றுகலந்து இல்லறமாயிற்று, பின்னர்த் தாம்பெற்ற மக்கள்பாலும், அவர்சார்பாயும் தாமிருவர் சார்பாயும் தோன்றிய சுற்றத்தினர், நண்பர் பாலும் அவ்வண்பு பரவிற்று. அதனால், தாம் பிறருக்கு உதவியும், பிறர் உதவியைத் தாம் பெற்றும் வாழும் இன்பவாழ்வு அவர்க்குக் கிட்டிற்று. அவ் வாழ்வினையே பண்டைத தமிழன் ஒரு பொருளாகக் கருதினான். வேறெதனையும் அவன் ஒரு பொருளாய் மதித்தறியான். அப் பொருளினையே, அவ் வாழ்வினையே தொல்காப்பியர் கூற முற்பட்டார்; தம் நூலின் ஒருபகுதியை அதற்கென ஒதுக்கி, அதற்குப் "பொருள்" என்றே பெயரிட்டார்.

பொருள் களவு, கற்பு என இருவகைப்படும். தலைவன், தலைவி இருவரும் களவு வழியில் இன்பம் துய்த்தல் களவாகும்; இதனைப் பிறர் கந்தர்வ ஒழுக்கம் என்றனர். "களவொழுக்க மென்னும் பெயர் பெற்று, வீடு பேற்றின் பயத்ததாய் அன் பினானிகழ்ந்த காமப் பொருணுதலிக் கந்தருவரொழுக்கத் தோடொத்து" என்பது திருக்கோவையார் பேராசிரியர் உரை. இதனைக் காமப்புணர்ச்சி எனவும் காமக்கூட்டம் எனவும் கூறுவர்.

களவுவழி இன்புற்றுவந்த தலைவன், தலைவியர் திருமணத்தால்பலரும அறிய இல்லறத்தில்ஈடுபட்டு வாழ்தல் கற்பொழுக்கமாகும் இவ்விரு ஒழுக்கங்களையே தொல்காப்பியர் "பொருள்" என்றார் அதனை ஒன்பது தலைப்புகளால் ஓதினார்; களவு, கற்பு எனும் இரு ஒழுக்கங்களுக்கும்

பேராசிரியர் இராம.சுப்பிரமணியன்

அகமாகிய பகுதிகளை அகத்திணையியலான் ஓதினார்; களவியல் களவு ஒழுக்கத்தையே கூறுகிறது; கற்பியலும் கற்பொழுக்கத்தையே கூறுகிறது. களவு, கற்பு ஒழுக்கங்களில் விடுபட்டனவற்றைப் பொருளியல் ஓதுகிறது; "இதனை ஒழிபியல் எனினும் இழுக்காது" எனும் இளம்பூரணர் உரை இதற்குச் சான்றாகும் மெய்ப்பாட்டியல் அகவாழ்விற்கே உரியது.

"நோயும் இன்பமும் இருவகை நிலையிற்

காமங் கண்ணிய மரபிடை தெரிய,

எட்டன் பகுதியும் விளங்க, ஒட்டிய

உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்

.....

ஒன்றிடத்து இருவர்க்கும் உரியபாற் கிளவி"

(தொல்-பொருள்-பொருளியல்-2)

எனும் நூற்பா இதற்குச் சான்றாகும். அவ்வியலின் 12 முதல் 27 வரையுள்ள நூற்பாக்கள் அகப் பொருளினையே விதந்தோதலைக் காண லாம். அகத்திற்கோதிய மெய்ப்பாடுகள் புறத்திற்கும் வரலாயின.

உவமையியலும் அகத்திற்கே யுரியதாய்த் திகழ்கிறது; அவ்வியலின் 26 முதல் 31 வரையுள்ள நூற்பாக்கள் அகப்பொருளினையே விதந்தோது கின்றன. இவ்வுவமையும் புறத்திற்கும் வரலாயிற்று.

செய்யுளியலும் அகப்பொருளை ஓதுதற்கே எழுந்தது. அதற்குச் செய்யுளியல் 183 முதல் 198 வரையுள்ள நூற்பாக்களே சான்றுகளாகும். இச் செய்யுளும் புறத்திற்கும் வரலாயிற்று.

மரபியல் தொல்காப்பியம கூறும் இயல்களைப் பெறும் பொருள்களையும் மாற்றருஞ் சிறப்பின் மரபினையும் ஓதுகிறது. அது தனக்கு முன்னின்ற எட்டு ஒத்துக்களுக்கும் பொதுவானதாகும்.

பண்டைக் காலத்துத் தமிழ், பெரும்பாலும் அகவாழ்வினையே விதந்து ஓதிற்று; அதனால் "தமிழ்" எனும் சொல்லும் அகப்பொருளினை உணர்த்தலாயிற்று. "இந்நூல் என் நுதலிற்றோ எனின் தமிழ் நுதலிற்று என்பது" என்பது இறையனார் அகப்பொருள் உரை. ஈண்டு தமிழ் அகப்பொருளினை அகவாழ்வினைச் சுட்டுகிறது. தமிழன் அகவாழ்வினையே ஒரு பொருளாய்க் கருதினான். அதனால், அதனைப் "பொருள்" என்றான்; "தமிழ்" என்றான்.

"அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என வள்ளுவரும் அகவாழ்வினைப் "பொருள்" என்றே சுட்டினார். மறுமைக்குரியது அருள்; இம்மைக்குரியது அன்பு, அகவாழ்வு; "அன்பொடு புணர்ந்த ஐந்திணை" (தொல் – பொருள் – களவு – 1 இளம்பூரணம்) என்பது தொல்காப்பியம். ஐந்திணை – அகவாழ்வு; இந்நிலை பிற மொழிகட்கு இல்லை

அன்பிற்கு, அன்புவாழ்விற்கு ஊறு நேரும்போது அவ்வன்பே வீரமாய் உருவெடுக்கிறது; அன்பின் மறுமலர்ச்சியே வீரமாகும் எனில் அது மிகையன்று. தன்குஞ்சுகளின் மீதுள்ள பேரன்பினால் தன்னினும் வலிய பருந்தொடும் கோழியொன்று போர்தொடுத் தலைக் காண்கிறோம்.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

எனும் திருக்குறள் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. மறம்–வீரம்; வீரம் அன்பிற்கு – அகத்திற்குப் புறமாத லின் அதனையும் அதனால் விளைவனவற்றையும் "புறத்திணையியல்" எனும் ஓர் இயலான் ஓதினார். அகங்கை எனப் புறங்கைப் பெறப்படுதல் போல் அகத்திணை என அப் புறத்திணை பெறப்பட்டது.

தொல்காப்பியப் பொருட்படலம் அகவாழ்விற்கே யுரிய இயலைக் கூறுகிறது என்பது இதுவரை கூறிய வற்றான் பெறப்பட்டது. கணக்குகள் (இலக்கியங்கள்) இன்றி வழக்குகள் (இலக்கணங்கள்) தோன்ற இயலாது. இவ் வழக்கிற்கு அடிப்படையாய கணக்குகள் அனைத்தும் பெரும்பாலும் அக வாழ்வினையே நுதலியிருக்க வேண்டும். இதனால், "பண்டைத் தமிழன் அகவாழ்வினையே பொரு ளாகக் கருதி வாழ்ந்தான்; பிற பொருளினை ஒரு பொருளாய் மதித்தறியான்" என்பது தெரியவரு கிறது இது தமிழுக்கே – தமிழர்க்கே வாய்ந்த ஒரு

தனித் தன்மையாகும். "தமிழ்" என்பது அகவாழ் வினையும் அதனைக் கூறும் மொழியினையும் உணர்த்துதல் வெளிப்படை.

அகப்பொருளினைத் தொல்காப்பியர் மிகப்பொருள் எனச்சுட்டினார். (தொல்–பொருள் – பொருளியல் 23 – இளம்பூரணம்).

"உலகநூல் வழியி னுதலிய பொருளெனும்
அலகில் தீம்பாற் பரவைக் கண்ணெம்
புலனெனுங் கொள்கலன் முகந்த வகை சிறி(து)
உலையா மரபின் உரைக்கற் பாற்று"

என்பது பேராசிரியர் கூற்று. (திருக்கோவையார் – 1, பேராசிரியர்) ஈண்டும் "பொருள்" என்பது அகவாழ்வினைச் சுட்டுதல் காண்க.

எழுத்தான் சொல்லும், சொல்லான் பொருளும் உணரப்படுகின்றன. இம் மூன்றும் ஒன்றனொ டொன்று நெருங்கிய தொடர்புடையன என்பது வெளிப்படை. பொருளினைப்போல் சொல்லினை யும் எழுத்தினையும் ஒவ்வொன்பது இயல்களான் தொல்காப்பியர் ஓதுகிறார்.

தமிழ்ச் சொற்கள் எல்லாம் இயலசை உரியசை எனும் இரண்டன்கண்ணும் அடங்கி நிற்கும். நேரசை, நிரையசை என இயலசை இரு வகைப்படும். நேர்பசை, நிரைபசை என உரியசை இரு வகைப்படும். எழுத்துக்களான் நோக்கின் தமிழ்ச்சொற்கள் நான்கெழுத்துக்களுக்குமேற்படா. நிரைபசை மட்டும் மூன்றெழுத்துக்களானும் நான்கெழுத்துக்களானும் நிற்கவல்லது. 'முருகு' – மூவெழுத்து; 'பருந்து' நான்கெழுத்து. நான்கெழுத் துச்சொல் பெரும்பாலும் குற்றுகர ஈற்றான் முடியும்.

இயலசை இரண்டும் உகரத்தொடு சேர்ந்து வரின் அவை உரியசைகளாகும்.

நேர்பு, நிரைபு.

இந்நால்வகை அசைகளுள், நேர், ஓர் அலகினையும், நிரை, ஈரலகினையும் நேர்பு, மூவலகினையும் நிரைபு, நான்கலகினையும் பெறும். (தொல் – பொருள் – 313 – இளம்பூரணம்).

நேர், ஓரலகாயின், நேர்பு, ஈரலகாவதன்றி, மூவலகாவது எவ்வாறு? நிரை, ஈரலகாயின் நிரைபு மூவலகாவதன்றி நான்கலகாவது எவ்வாறு? எனும் வினாக்கள் எழலாம்.

'நேர்' என்பதன்கண்ணுள்ள ஏகாரம் உகரத்தொடு சேராது. தனித்து நிற்குங்கால் ஓரலகும், உகரத்தொடு சேருங்கால் ஈரலகும் பெறவல்லது.

"ஏகாரம்" நெடிலாகலின் அஃது இரண்டு மாத்திரை பெறவல்லது; செய்யுளின்கண் ஒரு மாத்திரையாயும் நிற்கவல்லது. அதனால், தனித்து நிற்குங்கால் ஓரலகாயும் உகரத்தொடு சேருங்கால் ஈரலகாயும் ஒலிக்கிறது.

"ஐகாரமும் " இரண்டு மாத்திரையும் ஒரு மாத்திரையும் பெறவல்லது.

"ஈற்றுநின் றிசைக்கும் ஏயென் இறுதி
கூற்றுவயின் ஓரளபு ஆகலும் உரித்தே"

(தொல் – சொல்– 286)

"ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான"

(தொல் – எழுத்து – 57)

என்பார் தொல்காப்பியர்.

நேர், நேர்பு எனவும், நிரை, நிரைபு எனவும் ஒலித்து அவற்றின் அலகுகளைக் காணலாம்.

ஐகாரம்ஔகாரங்களை முறையே, அகர, யகரத் திலும் (அய்) அகர வகரத்திலும் (அவ்) அடக்கிப் பன்னிருயிர்களைப் பத்துயிராய்க் குறைக்கக் கருது பவர் இந்நிலையினைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தல் தமிழிற்கு நல்லது.

ஒரெழுத்தானாய மொழியினை ஒரெழுத்து ஒருமொழி எனவும், ஈரெழுத்துகளானாய மொழி யினை ஈரெழுத்து ஒருமொழி எனவும், இரண் டனுக்கு மேற்பட்ட (மூன்று, நான்கு) எழுத்துகளா னாய மொழியினைத் தொடர்மொழி எனவும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். (தொல் – எழுத்து – 45). நெட்டெழுத்து ஏழனையும் ஒரெழுத்து ஒருமொழி எனவும் (தொல் – எழுத்து – 43) நெடில் தொடரை ஈரெழுத்து ஒருமொழி எனவும் (தொல் –

எழுத்து – 407,413,418), பிறவற்றைத் தொடர்மொழி எனவும் (தொல் – எழுத்து – 407,410,412,414,415), பல, சில என்பனவற்றைத் தொடரல்மொழி எனவும் தொல்காப்பியர் சுட்டுதல் கருதத் தக்கது. இதனான், ஒன்று, இரண்டு, பல என்பது தமிழ் வழக்கே எனத் தெரிய வருகிறது. இரண்டனுக்கு மேற்படின் அது பலவாகும். இரண்டாயின் அது சிலவாகும். "சிலபல" என்பதொரு வழக்குத் தமிழ்க்கண் உண்டு. உம்மைத் தொகையைச் சுட்டுங்காலும் தொல்காப்பியர் இருபெயர், பல்பெயர் எனக் குறிப்பிடுகிறார்.

குற்றெழுத்து ஐந்தும் பொருள் உணர்த்தி மொழியாய் வருவதில்லை. 'து' 'நொ' இரண்டனையும் குற்றெழுத்துகளானாய ஒரெழுத்து ஒருமொழிகள் என உரையாசிரியர்கள் சுட்டுவது ஏற்புடைத் தன்று. 'நோ' என்பதன் விகாரமே'நொ' ஆகும். ('நோநொந்து' – திருக்குறள் – 157); 'துயீ' என்பதன் விகாரமே 'து' ஆகும் (திருக்குறள் – 12) 'துய்ப்பு', 'துப்பு' என மருவியதுணர்க. 'துய்ப்பார்க் குத் துப்பாய துய்ப்பாக்கி' என்பது மருவித் 'துப்பார்க் குத் துப்பாய துப்பாக்கி' என்று ஆயிற்று (குறள்) (தேவாரம் 4 - 69 - 8 - குறிப்புரை)

தமிழ்க்கண் உள்ள எண்ணுப்பெயர்களுள் ஏழ், ஆயிரம், ஒழிந்தன, குற்றுகர ஈற்றன. அவையெல்லாம் நான்கெழுத்துகளுள் அடங்குவன தொண்ணூறு, தொள்ளாயிரம் ஈரெண் புணர்ப்பின.

பெயர், வினை, இடை, உரி, எனும் நால்வகைத் தமிழ்ச்சொற்களும் நான்கசைகளுள்ளும், நான் கெழுத்துகளும் அடங்கி நிற்கின்றன. திசைச் சொல், வடசொல் போன்றவை அவ்வெல்லைகளைக் கடந்து நிற்றலுண்டு.

ஆந்தை (ஆதன் + தந்தை), பூந்தை (பூதன் + தந்தை) போன்ற இருபெயர்ப் புணர்ப்புச் சொற்களும் நான்கெழுத்துகளுள் அடங்கிநிற்றலைக் காணலாம்.

கா, ஓ (ஒப்பு, ஊர், இழை, ஓ (ஒப்பு), புகழ், பழி, பெறு, இழ, காதலி, வெகுள், செறு, உவ, கல், அறு, குறை, தொகு, பிரி, நிறு, அள, எண், ஆக்கு, சார், செல், கன்று, நோக்கு, அஞ்சு, சிதை ஆகியவை தொல்காப்பியர் காட்டும் செயப்படு பொருள் குன்றா முதனிலைகள் (தொல் – சொல் – 72).

நட, வா, கூ, வே, பொருந், திரும், செல், வாழ், கேள், அஃகு முதலாயவை செயப்படு பொருள் குன்றிய முதனிலைகள் (நன்னூல் – 137).

வண்ணம், வடிவு, அளவு, சுவை, தண்மை, வெம்மை, அஞ்சு (அச்சம்) நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை, மென்மை, கடுமை, முதுமை, இளமை, சிறத்தல் (சிற), இழித்தல் (இழி) புதுமை, பழமை, ஆக்கம், (ஆ), இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல் (தீர்), பன்மை, சின்மை, பற்று (பற்றுவிடுதல்), ஆகியன ஐந்தாம் வேற்றுமைப் பொருள்களுக்குரி யன. (தொல் – சொல் – 78) இவை எல்லாம் நான் கசைகளுள்ளும் நான்கெழுத்துகளுள்ளும் அடங்கி நிற்றலைக் காணலாம்.

ஏனைய இடைச்சொற்களும், உரிச்சொற்களும் நான்கெழுத்துகளுள் அடங்கி நிற்கும். இடையியலின் கண் 'மற்றையது' (தொல் – சொல் – 264) எனும் சொல் இடம் பெற்றுள்ளது. அது, மற்று எனும் சொல்லடியாய் உருவாகித் தனி நிலை பெற்றதாகும்.

உயிரியலின் கண் அலமரல், தெருமரல், (தொல் – சொல் – உரி – 147), கெடவரல் (தொல் – சொல் – உரி – 23) முரஞ்ஞல் (தொல் – சொல் – உரி – 37) முதலாய சொற்கள் முறையே அலமா, தெருமா, கெடவா, முரஞ்சு எனும் முதனிலைகளின் கண் அடங்கும்; 'உட்கார்ந்தான்' எனும் பேச்சு வழக்குச் சொல் "உட்கா" எனும் மூவெழுத்துகளுள் அடங்கும்.

'இலம்பாடு', என்பது இருசொற்புணர்ப்பு (தொல் – எழுத்து – 317) ஒட்டகம் தமிழ்நாட்டு விலங்கன்று: என்றாலும், அச்சொல் தமிழ்ச்சொல்லாகும். அதன் அகத்தின் கண் நீர்ப்பை ஒன்று ஒட்டியிருத்தலின் அஃது அப்பெயரினைப் பெற்றது. அந்தணர் என்பது ஒருகட்டுச்சொல்; அம் தண் அர் எனப் பிரிந்து பொருள் தரவல்லது. ஆசிரியர் என்பதும் அத்தகையதே (ஆசு+இரியர் – குற்றத்தினின்றும் நீங்கிக் குற்றத்தை நீக்குபவர்.)

இலக்கியம், இலக்கணம் இரண்டும் நான்கெழுத் தெனும் வரையரையை மீறியுள்ளனவேயெனின், அவை தமிழ்ச்சொற்கள் அல்ல; வட சொற்கள். லக்ஷியம், (இலட்சியம்), லக்ஷணம் (இலட்சணம்) எனும் சமஸ்கிருத சொற்களின் தற்பவங்களாகும். அவற்றைத் தமிழ் எனக்கருதிச் சிலர் வலிந்து தரும் விளக்கங்கள் ஏற்புடையனவல்ல;

"பெண்ணவன் காண் ஆணவன் காண்
பெரியோர்க் கென்றும்

பெரியவன்காண் அரியவன்காண் அயனா
னான்காண்

எண்ணவன்காண் எழுத்தவன்காண் இன்பக்
கேள்வி [2]" (தேவாரம் -6-48-7)

(2.இலக்கிய இலக்கணம் அவன்)

"மூன்று கண்ணுடை யாயடி யேன்கண்

கொள்வதே[3] கணக் குவழக் காகில்

ஊன்று கோலெனக் காவதொன் றருளாய்

ஒற்றி யூரெனு மூருறை வானே" (தேவாரம் -
7-54-4)

(3.நீ கற்ற இலக்கிய இலக்கணமாகில்)

"கண்ணே கருத்தே என்எண்ணே எழுத்தே

கதிக்கான மோன வடிவே" (தாயுமானவர்)

வழக்கினைக்கூறும் பகுதியினை நூல் என்றும், கணக்கினைக்கூறும் பகுதியினைத் தொடர்நிலைச் செய்யுள் என்றும் கூறுதல் பண்டைய தமிழ் மரபு.

"அவற்றுள்,

நூலெனப் படுவது நுவலுங் காலை,
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே"

என்பது தொல்காப்பியம் (தொல்–பொருள்–செய்யுள்-468-இளம்)

அதற்குரிய செய்யுள், நூற்பாவாகும். நூல் + பா = நூற்பா; நூற்பா நிற்க வேண்டிய எட்டு இடங்களையும் 'சூத்திரம்' எனும் வட சொல் பிடித்துக் கொண்டது. சான்றாய்

"ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்" எனவும்,

"நூற்பா தானே" (தொல்–பொருள்–செய்யுள்–471–இளம்) என்பது

"சூத்திரம் தானே" எனவும் நிற்றலைக் காணலாம்.

"பொது மொழி கிளந்த படலத் தானும்" என்றே தொல்காப்பிம் கூற "அதிகாரம்" எனும் சொல் எவ்வாறு நுழைந்து அதிகரித்து வருகிறது? "அதிகார முறையே" (தொல்–பொருள்–செய்யுள்–656–இளம்) என்பது உத்தி வகைகளுள் ஒன்றாய் இடம்பெற்றுள்ளது. அது 'வடசொல்' என்பது சங்கர நமச்சிவாயர் உரையால் தெளிவாகும், (நன்னூல் –எழுத்தியல் முன்னுரை–சிவஞான முனிவர் விளக்கம்.)

ஒரு சிலர் தமிழுக்கு வடமொழியைத் தாயாக்க முற்படுகின்றனர்; தமிழிலிருந்து பல மொழிகள் தோன்றியதுண்டு; ஆனால், தமிழ் எம் மொழியி லிருந்தும் தோன்றவில்லை. அது தனித்துத் தோன்றித் தனித்து இயங்கிவருகிறது; தனித்தன்மை யுடையது; அதனை வடமொழியோடு ஒப்பிடுவதே ஏற்புடைத்தன்று.

மேற்கண்ட தமிழுக்கேயுரிய இயல்புகள் வடமொழிக்கு இல்லை. இங்குள்ள நங்கை, பாவைபோலத் திகழ்வாள்; அன்னம் போல நடை பயில்வாள், இரதியைப்போலத் திகழாள்; அரம்பையைப் போல நடவாள்; அவர்கள் இருவருமே கற்பனைப் படைப்பினர்; 'தமிழ்நம்பிக்கு உவமையே இல்லை' எனலாம். அவன் ஒரு காளை; ஓர் அரிமா; அவன் நடை பீடுடையது; பெருமித மிக்கது; அவன் மன்மதனல்லன்; இந்திரனல்லன்; சிவன் அவனை எரிக்கவில்லை; ஆயிரம் கண்களும் அவனுக்கில்லை; மன்மதனும், இந்திரனும் கற்பனைப் படைப்பினர். வடமொழி நூல்களிலும் காவியங்களிலும் வரும் உவமைகள் எல்லாம் கற்பனைப் படைப்பே எனலாம். தமிழன் காட்டும் உவமைகள் உள்பொருள்கள்; இயற்கையோடு இயைவன. பெரும்பாலும் அவன் கவிதை "தன்மை நவிற்சி" அணிகளையே பெற்றிருக்கும்; அதனொடு உவமை அணியினையும் பெற்றுவரும். தொல் காப்பியமும் உவமை அணிக்கே இயல் கூறியிருப்பது உன்னத்தக்கது; "திரு" கற்பனைப் படைப்பல்லவா? எனச் சிலர் வினவலாம். "திரு" என்பது அழகி னையே உணர்த்தும்; "திரு வென்பது கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கமென்றது அழகு" என்பது திருக்கோவையார் பேராசிரியம். இலட்சுமி எனும் பெயரால் "திரு" "திருமகள்" ஆயிற்று.

இவர் ஓர் இனமானத் தமிழ்ச் சிங்கம்!



பரணிக்கோர் சயங்கொண்டார் பாடிப் போற்றும்
படைத்தலைவன் தொண்டமான் மரபில்
தோன்றித்
தரணிக்கே வழிகாட்டும் தலைமை சான்றோய் !
தமிழ்மொழியைத் தேசியமாய்த் தழைக்கச் செய்தாய்
உரமிக்க நெஞ்சுடனே உழைத்தும் உண்ண
ஒருவேளைச் சோற்றுக்கே வழியில் லாமல்
மரமிக்க தோட்டத்தில் மாடாய்த் தேய்ந்தோர்
மனிதர்களாய் வாழ்வதற்கு மண்ணில் வந்தாய் !

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலனுக் காகத்
தனிச்சங்கம் தோற்றுவித்துத் துன்பச் சேற்றில்
அமிழாமல் அவர்வாழத் தமது வாழ்வை
அர்ப்பணித்த திரு.வி.க. நீவிர் தாமோ ?
அமுதான பெண்வாழ்வில் நஞ்சை யூட்டி
அடிமைகளாய் நினைத்தோர்க்குப் பாடம் காட்டும்
இனமானத் தமிழ்ச்சிங்கம் பெரியார் நீரே!
எளிமைக்கும் நேர்மைக்கும் இதயம் நீரே!

வெள்ளையரின் கைப்பிடிக்குள் சிக்கிக் கொண்டு
வேதனைகள் பலகோடி அனுபவித்து
பள்ளமதில் வீழ்ந்திருந்த பார தத்தின்
பழஞ்சிறப்பை நிலைநிறுத்தத் தமையே தந்த
நல்லவர்தாம் காந்தியண்ணல் ; அவரைப் போல
நலிவுற்ற தொழிலாளர் உரிமைக் காகச்
சொல்லரிய சாதனைகள் படைத்த நீவிர்
தொண்டுளத்தால் பகைவரையும் பணிய வைத்தீர்!

வாடுகின்ற பயிர்கண்ட போதும் வாடும்
வள்ளலாரின் பண்புகளை உம்மில் கண்டோம்!
தேடரிய பதவிவந்து உம்மைத் தேடும்!
தெளிவான அரசியலால் பெருமை கூடும்!
நாடரிய சொல்வன்மை வழக்கில் வெல்லும்!
நன்றிதனைத் தொழிலாளர் உளங்கள் சொல்லும்!
கோடியிலே நீரொருவர் ! உலகின் எந்தக்
கோடியிலும் வலம்வருக ; வாழ்க, என்றும் !

புலவர் **ப.சத்தியபாமா**

இவரும் ஒரு நேரு



உடலுழைப்பால் சேமித்த செல்வம் கூட
ஒருநாளில் நமைவிட்டு ஓடிப்போகும்!
மடல்விட்டுப் பூத்தபூவும் ஒருநா ளைக்குள்
மணமிழந்து மதிப்பின்றிப் போகும்! இந்த
உடல்விட்டு நம்முயிரும் என்றோ ஓர்நாள்
உலகத்தை விட்டுவிட்டுப் பறந்து போகும்!
கடல்விட்டுச் சென்றாலும், சென்றிடாமல்
கருத்துக்குள் நிலைப்பதெது? புகழே யாகும்!

நற்றமிழை இலங்கையிலே நடக்கவிட்டு
நடத்தையிலே காந்தியைப்போல் நடையைப் போட்டு
பெற்றெடுத்த நாட்டிற்கும் மொழிக்கும் நல்ல
பெருமைகளைத் திரட்டியநற் பெரியார் யாராம்?
குற்றமற்ற நிர்வாகக் கலையில் தேர்ந்த
குணக்குன்றாம் தொண்டமான் செம்மல் அன்றோ?
பற்றெதுவும் சாதமதப் பேதம் தன்னில்
பதிக்காத முற்போக்குக் கொண்டல் அன்றோ?

அகவைஓர் ஏழாக இருக்கும் போது,
ஆர்வமுடன் எழில்இலங்கை பயணமானார்!
தகுதியினால், திறமையினால், இலங்கை மண்ணில
தலைவர்களின் தலைவரெனும் உயர்வைப்
பெற்றார்!
விகுதியைப்போல் இறுதியிலே நின்றி டாமல்
வித்தகத்தால் முதலிடத்தை எதிலும் பெற்றார்!
தொகுதிமக்கள் அறியாத தொண்ட ரல்லர்!
தொல்லுலகில் இவருமொரு நேரு என்பேன்.

எதிரிகளை வீழ்த்துகின்ற தானைச் செம்மல்!
ஏற்றமிகு கருணாகரத் தொண்டமானின்
புதுத்தோன்றல் ! பழம்புகழைக் காக்கும் வீரர்!
பொன்மனத்தைத் தன்மனமாய்க் கொண்ட
மேலோன்!
நிதம்பொய்யின் மூட்டைகளை அவிழ்ப்போர் வாழும்
நெறியற்ற அரசியலில், இவரோ இங்கோர்
விதிவிலக்கு! விதித்தவிதிப் படிந டந்து,
வெற்றிகளைக் குவிக்கின்ற மதியின் தூதர்!

விக்கலுக்குக் குளிர்நீரை அருந்தல் போன்று
விரிகடல்சூழ் இலங்கைவாழ் நம்கு லத்தின்
மக்களுக்குத் தொண்டுசெய்யும் மகேசன் வாழ்க!
மகத்துவத்தின் மறுபதிப்பு மனிதர் வாழ்க!
சிக்கலுக்கு வழிதேடித் தொழிலா ளர்தம்
செழிப்புக்கு வகைசெய்த சிங்கம் வாழ்க!
எக்காலத் தலைமுறையும் பின்பற் றற்கோர்
ஏந்தல்இவர் என்தமிழ் போல் என்றும் வாழ்க!

திருவான்மியூர் டி.எஸ்.பாலு

தலைமைக்குப் பெருமை சேர்க்கும் தலைவர்!



ஏழுவய தில்இலங்கை சென்றார், இன்று
எண்பதாண்டில் முத்துவிழாக் காணு கின்றார்!
சோழன்கு லோத்துங்கன் படைத்த லைவன்
தொண்டமான் குடிமரபில் வந்து தித்த
வேழம்நிகர் தோற்றத்தார்! இலங்கை மண்ணில்
வெற்றிநடை போட்டுவரும் தமிழி னத்தார்!
ஆழிசூழ் தென்னிலங்கை அமைச்ச ராக
அருந்தொண்டே ஆற்றிவரும் ஆற்றல் மிக்கார்!

மலையகம் வாழ் தமிழர்தம் உரிமைக் காக
வாழ்நாளை அர்ப்பணிக்கும் தியாகச் செம்மல்!
தலைமைக்குப் பெருமைசேர்க்கும் தலைவர்! மக்கள்
தலைவரெனப் புகழ்மணக்கும் மனித நேயர்!
தொலைநோக்குப் பார்வையுடன் தொழிலாளர்தம்
துயர்துடைக்கும் தொண்டதனால் மக்கள் நெஞ்சில்
நிலைத்திருக்கும் பேறுபெற்ற நேர்மை யாளர்!
நீள்புவியில் பேர்நிலைக்க நீடு வாழ்க!
-கவிஞர் நெ.அ. பூபதி

கவிஞர் நெ.அ.பூபதி



தமிழ் நெஞ்சமாம் எழில் மஞ்சினில் நடம் புரிபவன்

அண்டம் யாவிலும் மண்டி டுந்தமிழ்
அன்னை யின்திரு வாள்பவன்,
அண்டை நாடுஇ லங்கை யின்புகழ்
அமைச்ச னாந்தமிழ்த் தொண்டமான்
கொண்ட சீர்த்தமிழ்க் கொள்கை யின்வழி
குறுகி டாதுந டப்பவன்,
கொஞ்சி டுந்தமிழ் நெஞ்ச மாம் எழில் மஞ்சினில்
நடம் புரிபவன்,
பண்டு தொட்டுவ ழங்கி டுந்தமிழ்ப் பாரி யின் உடன்
பிறப்பினன்
பாசமோடுயர் நேச மேவளர் பாரினில் வலம்
வருபவன்,
கண்டனன்திரு ஆயி ரம்பிறை
கவினுறுந்தமிழ் வாழ்வினால்,
கள்ள மில்தமிழ் உள்ள மாம் இவன் கருது
தொண்டினைப் பாடுவோம்!

மக்கள் தொண்டும மகேசன் தொண்டென மருவி
வாழ்தமிழ் மன்னவன்,
மாநி லம்புகழ் இலங்கை மாநகர் மக்களுக்கமிழ்
தன்னவன்,
தக்க வர்மகிழ் இலங்கை தேசியத் தலைவனாய்த்
திகழ் தென்னவன்
தரணி மெச்சிடும் அரசு வானிலே தலைமை
பெற்றதோர் ஞானியாய்,
ஒக்க வேஉயர் திறமை பெற்றசீர் ஒப்பி. லாநிரு
வாகியாய்,
உலகம் போற்றிடும் உன்ன தத்தொழி லாளர்
கள்விழை துணைவனாய்த்
தொக்க வே உயர் இராச தந்திரத் திறமை பெற்றநற்
றன்மையால்
தகைமை சான்றமா மனித ராந்தமிழ்த் தொண்டை
மான்புகழ் வாழ்கவே!

தலைசி றந்தபேர் அரசு கட்டிலில் தரணி மெச்சிடும்
அமைச்சனாய்
துணிவு நேர்மையும் தூய்மை வாய்மையும் தொடர்ந்தி
டுந்தள கர்த்தனாய்
இலங்கை இந்திய மக்கள் வாழ்வெனும் எழிற்க
டல்தவழ் கப்பலாய்,
இரவொ டும்பகல் எந்த நேரமும் எழில்க லங்கரை
விளக்கமாய்
துலங்கி டும்இன மதமொ டும்மொழி தோற்று
பதமில் தொண்டனாய்
தொழில்பு ரிந்துமே வாழுமக்களை வாழ வைத்திடுந்
தெய்வமாய்,
நலங்கள் மேவிடு நற்ற மிழ்ப்பணி நத்தி யேவளர்
நேசனாய்
நின்ற சொல்லனாய் நீடு செயலனாய் நிலைத்த
தொண்டமான் வாழ்கவே!

புலவர் **நு.ர.ஆறுமுகன்**

கொள்கையுரம் கொண்டுயர்ந்த இமயக் குன்றம்



என்நினைவில் தமிழனங்கே உயர்ந்து வாழ்வோன்!
ஏற்றத்தை இனமெய்த ஏணி யானோன் !
கன்னல்தான் இனிக்குமென்ற கருத்தை வெல்ல
கரும்பாகி நிற்பதனால் இனித்தி ருப்போன் !
சன்னல்தான் ஒளிகூட்டும்! தென்றல் சேர்க்கும்
சரித்திரத்துத் தொண்டமானோ அவற்றை
வென்றோன் !

என்னதான்நீர் எண்பதிலே அடிவைத் தாலும்
என்றுமுன்றன் உழைப்பையன்றோ எதிர்பார்க்
கின்றார் !

இலங்கையிலே தொழிலாளர் தோழன் ஆனாய் !
இருட்டினிலே உழன்றவனை வெளிச்சம்
சேர்த்தாய் !

கலங்குகின்ற மக்கள்தம் கண்ணீர் வெள்ளம்
காட்டாறாய்ப் பெருக்குவோர்க்கோ கூற்றாய்
நின்றாய் !

இலங்கியநல் அமைச்சரெனும் பதவி யெல்லாம்
இனிப்பாக நினைத்ததில்லை உன்றன் வாழ்வில்!
வலம்வருவாய் ! மக்களோடு மக்க ளானாய் !
வாழ்வதனைப் பிரிப்பதுவோ முயலின் கொம்பே!

அமைச்சரானால் ஆணவத்தை அணைத்த தில்லை!
அரும்பணிகள் ஆற்றுதலை அணைத்து வென்றாய்!
இமைமூடித் திறப்பதற்குள் இன்னல் என்றால்
இடித்துரைக்க விரைந்தோடி வந்து நிற்பாய் !
சுமையாக நினையாத தூய நெஞ்சன் !
சூழ்ச்சிக்கே இரையாகா நேர்மை யாளன் !
இமையென்றால் கண்காக்கும் ! நீயோ கண்கள்
இமைக்காமல் தமிழினத்தைக் காக்கும்
நல்லோன்!

ஏழையர்தம் இதயநாடி ! இன்பத் தென்றல் !
ஏங்கிநிற்கும் தமிழனுக்கோ பாதை போட்டாய் !
கோழையுளம் நீயென்றும் கொண்ட தில்லை !
கொள்கையுரம் கொண்டுயர்ந்த இமயக் குன்றம்!
பேழையைப்போல், இலங்கைவாழ் தமிழர்
நெஞ்சம்
பதித்திருக்கும் பண்பாளன் ! அறிவின் செல்வன்!!
வாழையைப்போல் இதழ்விரித்துச் சிரித்தி ருப்பாய்!!
வளங்கொடுத்தே என்றென்றும் இனித்தி ருப்பாய்!!

இருளையின்றும் இலங்கையிலே விலக்கி நிற்க,
இந்தியத்தாய்த் தமிழரெல்லாம் வாழ்த்து கின்றார்!
அருளைநீர் பொழிவதனால் உயர்ந்தீர் வாழ்வில்!
ஆற்றலென்ன குறைவுடைத்தா ! அகிலம் போற்றும்!
தருக்கூட்ட நிழல்போல நின்றி லங்கித்
தமிழ்மக்கள் காக்கின்றாய்! போற்று கின்றார்!
தெருக்கூட்டும் தொழிலாளி தூய்மை சேர்ப்பான் !
தொண்டமான்நீர் தமிழனுக்கோ பெருமை
சேர்த்தீர் !

எழுத்தாலும், பேச்சாலும், செயல்க ளாலும்
எண்ணரிய இலக்குகளை வீழ்த்தி யின்று
பழுத்தபெரும் வித்தகனாய் விளங்கு கின்றீர் !
பாரில்நல் ஆற்றலராய் ஒளிரு கின்றீர் !
இழுப்பாரின் கைப்பாவை ஆகி டாமல்,
இன்றுவரை தனித்துயர்ந்து வாகை ஏற்றீர் !
எழுந்தென்றும் இனம்வாழக் குரல்கொ டுத்தே
என்பதுபோல் நின்றென்றும் நீடு வாழி !

புலவர் அரங்க நாராயணசாமி

வாழ்க்கை விளக்காய் இருப்போன்



மலர்தலை யுலகில் மாண்புடன் விளங்கும்
நற்றமிழ் நாட்டின் நற்குடித் தோன்றல்!
'தொண்டமான்' என்னும் பெயருக் கேற்பத்
தொண்டால் உயர்ந்த தூய தலைவன்!

இலங்கையில் தமிழைத் தேசிய மாக்கியோன்!
இலங்கைத் தமிழரின் இனிய நண்பன்!
இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்
வாழ்க்கை விளங்க விளக்கா யிருப்போன்!
பெண்கள் முன்னேறப் பெரும்பாடு பட்டோன்!

பெண்மை போற்றும் பெருங்குணச் சீலன்!
வேதனை வாழ்வில் எதிர்நீச்ச லடித்துச்
சோதனை மிக்கும் சாதனை படைத்தோன்!
தரணி போற்றும் அரசியல் ஞானத்தால்
வரலாறு படைத்த வரலாற்று நாயகன்!

பாராள் மன்ற உறுப்பினராகிச்
சீரார் அமைச்சர் நிலையும் பெற்றோன்!

தெள்ளு தமிழ்தேர் வள்ளுவ உளத்தன்!
உள்ளுவ தெல்லாம் உயர்வே உள்ளி
ஊக்கங் கொண்டு ஆக்கங் கருதி
மடியை மடித்து இடுக்கண் வீழ்த்தி
ஆள்வினை யாலே ஊழையும் வென்று
செயற்கரிய செய்த சீர்மிகு பெரியோன்!
மனமாசில்லா மாணிக்கத் தலைவன்!
சினமே கொள்ளாச் சீரிய குணத்தன்!

காந்தியம் தன்னைக் கனவிலும் மறவாது
சாந்தியோடு சமாதானம் காண முயன்றோன்!
இனிய குணத்தன் ஈகை வல்லான்!
மனித நேயமார் மக்கள் தலைவன்!
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்!

முத்துவிழா காணும் மூத்த தலைவன்!
வைரவிழா கண்டு வாழ்க வையத்தே!

சிங்கப்பூர் இலக்கியச் சீரார் குழுவினர்
மலர்மா மணியாம் செழியனார் மூலம்
வெளியிடும் தொண்டமான் முத்து விழாமலர்
ஒளிர்க முத்தின் ஒளியாய் நின்றே!

புலவர் ஆ.வே.இராமசாமி





தும்பைப்பூ வெண்பாவில் தொண்டமான்

1

ஈழத் தமிழரொடு தோட்டத் தொழிலரெலாம்
வாழத்தன் வாழ்வை வகுத்தளிக்கும் --யாழொத்த
தொண்டர்மான் தொண்டமான் என்றுலகம் போற்றவளர்
தண்டமிழ்மான் வாழ்க தழைத்து.

-பாவலரேறு ச.பாலசுந்தரனார்- தஞ்சை

2

குமாரவேல் பிள்ளை குலக்கொழுந்து பண்பில்
இமயம்! எழுஞாயி றேபோல்-நமராவர்
எண்பது காணுதிரு தொண்டமான் நூறுதாண்டி
திண்மையொடு வாழ்க செழித்து.

-கவியோகி பேகன், சென்னை-24

3

முத்துவிழா நாயகனாம் மூதறிஞன் தொண்டமான்
வித்தகனை வாழ்த்தி வணங்கிடுவோம்-உத்தமனே!
பல்லாண்டு வாழ்க! பலவளமும் பெற்றிடுக!
எல்லாரும் போற்ற இனிது.

-புலவர் தணிகை உலகநாதன் கொளத்தூர் சென்னை 99

4

கண்டமான் பற்பல! கன்னித் தமிழ்மானாம்
தொண்டமான் போல்மானும் தோன்றிடுமோ?–உண்டமான்
எல்லாம் கவரிமான் என்றாமோ? கல்விமான்
நல்லார் புகழ்வாழ்க நன்கு.

முனைவர் புலவர் ஆலந்தூர் கோ.மோகன ரங்கன்

5

தண்டமிழ்போல் தென்றல்போல் தண்கதிர்போல் வானம்போல்
மண்டலத்தில் வற்றாத மாகடல்போல் –தொண்டமான்
பல்லாண்டு வாழ்க! பலநலமும் சூழ்கவே!
நல்லார்கள் போற்ற நயந்து.

–முனைவர் அரு.கோபாலன் சென்னை 94.

6

அண்டையயல் நாட்டில் அருந்தமிழர் தோல்விகேட்டு
விண்டு வெடித்த வெறுநெஞ்சே! –தொண்டமானைக்
காணுகிற வெற்றிக் களிப்பில் உயிர்பறந்து
போனாலும் போகட்டும் போ.

–புலவர் கரு.செல்லமுத்து,புதுக்கோட்டை

7

வான்மழையின் தண்ணளியாம் ஈழத்துத் தோட்டத்தில்
தேனிழைக்கும் தொண்டிலுயர் வன்டெனவே –தொண்டமான்
மன்றல் கமழ்குமரிக் கண்டத்து வண்டமிழ்போல்
நின்றுபுகழ் ஓங்குக நீடு.

–புலவர் த.ஆறுமுகன் புரசைபாக்கம், சென்னை 84.

8

தூய தமிழுணர்வால் தொண்டுகளால் செந்தமிழர்
தாயெனவே வாழ்கின்ற தன்மையினால் –தொண்டமான்
ஈழத் தமிழ்மண்ணில் ஈடில் தலைவரானார்
தாழா துயர்ந்தார்காண் நீ.

புலவர் அனு.வெண்ணிலாஅம்பத்தூர் சென்னை 53.

9

வண்டமிழர் வாழ்வுயர வாழ்வினை ஈந்தவர்
தொண்டமான் பேர்கொண்ட தூயவர்–தொண்டினால்
மக்கள்தம் நெஞ்சில் மாண்புறத் தங்கியே
எக்காலும் வாழ்வார் இனிது.

கவிஞர் நெ.அ.பூபதி சைதை, சென்னை 15.

(10)

தரணி புகழும் தலைவன், அறிஞன்,
பரணி படைத்தபோர் வீரன்-முரணிலாத்
தொண்டுடையோன், நல்ல துணிவுடையோன் மெய்க்கீர்த்தித்
தொண்டமான் வாழ்க தழைத்து.

புலவர் பி.சி.கணேசன், கலைஞர் கருணாநிதி நகர்சென்னை 78

(11)

தோட்டத் தொழிலாளர் துன்பம் துடைத்தமகன்
பாட்டாளி மக்களுளப் பங்காளி! -ஏட்டில்
இளஞ்செழியன் வார்க்கும் இனியமலர்த் தேனாய்
வளஞ்சேர்க்க வந்த வனப்பு.

புலவர் அருணா பொன்னுசாமி, கரூர் 2,

(2)

ஏழாம் அகவையில் ஈழம் அடைந்தங்கே
பாழாம் தமிழன் எனப்பதைத்து-வீழா
அடிப்படை ஆங்கமைத்தே ஆற்றும் பணிக்குத்
துடித்தெழுந்தோன் தொண்டமான் காண்.

புலவர் அரங்க.நாராயணசாமி துரையூர்,திருச்சி மாவட்டம்.

(13)

தொழிலாளர் வாழ்ந்திடவே தொண்டு புரிந்து
பழிநாணும் நற்குணத்தைப் போற்றி-எழிற்றமிழர்
நல்வாழ்வைப் பேணி நலம்பெறவே காவலனாய்ப்
பல்லாண்டு வாழ்க பரந்து.

-கவிஞர் கருவூர் -கோ.செல்வம்

(14)

முத்துவிழாக் காண்கின்ற மோகனனே! ஈழத்தின்
சொத்தான தோட்டத் தொழிலாளர் -வித்தகனே!
இத்தரையில் நீயாற்றும் தொண்டுக்கு ஈடுண்டோ?
புத்தரைப்போல் வாழிபுக ழோடு.

-புலவர் ப.சக்தியபாமா எம்.ஏ.,பிஎட். கருவூர்

(15)

தொண்டமான் முத்து சுழலும் விளையாட்டாய்க்
கொண்ட குடியுரிமை கொண்டாடும் -மண்டலந்தான்
வாராதோ என்று வாயூறும் மக்களுக்குத்
தீராதோ தேம்பல் சிறிது.

-முனைவர் செங்கைப்பொதுவன், பழவந்தாங்கல், சென்னை

16

ாண்ணற் கருந்திறலோன் ஏந்தல்நம் தொண்டமான்
நுண்ணியோன் நல்லறிஞன், வன்தொண்டன்-மண்ணில்
வலங்கொண்ட வெண்ணிலவு, வையக்கோன், வாழ்க
நலங்கொண்ட நாயகனாய்த் தான்

திருவான்மியூர் டி.எஸ்.பாலு சென்னை.

17

ஏழாம் வயதினிலே ஈழத்தை நண்ணியவர்
வேழமாய்த் தொண்டாற்றும் வித்தகர்-தாழாத்
தொழிலாளர் போற்றுகின்ற தொண்டமான் தூயர்
எழிற்றமிழ்போல் வாழ்க இனிது.

புலவர் தமிழ்ப்பித்தன் எம்.ஏ., மதுரை

18

காந்தியைத்தென் னாப்பிரிக்கா கண்டதைப்போல் நல்லிலங்கை
ஏந்தியதே சித்தம்மை ஈன்றவனைக்-காந்தியெனக்
கண்டித் தொழிலாளர் கண்ட முதல்தலைவன்
தொண்டமான் வாழ்க தொடர்ந்து.

புலவர் துரை. தில்லான், திண்டுக்கல்

19

இலங்கைத் தமிழரின் இன்னல்கள் நீங்க
கலங்கா துழைக்கும் குணத்தோய்-உலகினில்
சீரான வாழ்வினிலே என்பதாண்டு கண்டநீ
நூறாண்டு வாழ்க இனிது.

புலவர் ஆ.வே.இராமசாமி வைரிசெட்டிப்பாளையம்

20

அன்பின் இருப்பாய் அறிவுக் களஞ்சியமாய்
இன்பின் பிறப்பாய் எழிலுருவாய்-இன்னலிலாத்
தொண்டு புரிகின்ற தூயரவர்! தொண்டமான்
தொண்டு வளர்க தொடர்ந்து.

புலவர் பெருந்தகை சீ.ஈ.எஸ்.பெருமாள் காஞ்சிபுரம்

(21)

கருணா கரத்தொண்ட மான்வழியில் தோன்றிக்
கருணையொடு மக்கள் தொண் டாற்றும் – கரணியத்தால்
பேர்மிகுந்த பட்டமாம் தொண்டமான் என்னும் பேர்
பாரடா பாரடா பார்.

பேராசிரியர் முனைவர் இரா.மணியன் மந்தவெளி, சென்னை 28.

(22)

தேயிலைத் தோட்டத்துத் தென்றலினைத் தொண்டுக்கோர்
வாயிலாய் வாய்த்தசீர் மன்னவனை–நோயிலனாய்
என்பதான் டான இளைஞனைத் தொண்டமானை
வண்ணமழை என்றேநீ வாழ்த்து

–கவிஞர் மன்னர் மன்னன், புதுவை.

(23)

மக்கள் தலைவராம் தொண்டமான் மாண்பெல்லாம்
ஒக்க உரைத்தல் எளிதாமோ? – தக்கவிதம்
சீக்கல் அறுத்துச் சிறக்கத் தொழிலாளர்
பக்கம் புரக்கும் படை.

–ஓவியப் பாவலர் மு.வலவன், சென்னை.

(24)

கடல்சூழ் இலங்கை கவின்பெறச் செய்த
தடந்தோள் தமிழர் அடையும் –இடர்நீக்க
எண்பதிலும் காந்தியாய் ஏறுநடை போடுகின்ற
தொண்டமானின் தொண்டுதான் தொண்டு.

புலவர்.நா.இளங்கோ, எம்.ஏ,எம்.எட் தஞ்சை 6.

(25)

கண்கண்ட தெய்வம் எனப்போற்றும் நற்றலைவன்
பண்கண்ட செய்தொழி லாளர்தம் –புண்ணியன்
தொண்டமான் என்றென்றே பண்டும் வருநாளும்
ஒண்புகழே செப்பும்இப் பார்.

பெரும்புலவர் இர.திருஞானசம்பந்தர், சென்னை 88.

(26)

தொண்டுமான் ஆகச் சுடர்செள மியமூர்த்தி
தொண்டமான்! போற்றிப் புகழ்தொழிலர்–தொண்டர்மான்
"எண்டிசையும் வாழி!" யெனக் கொண்டாடல் காண்மினோ!
கொண்டிசைக்க வந்த நிலா

கவிஞர் முருகு வண்ணன், பெரம்பூர், சென்னை 11,

27

இலங்கைத் தொழிலாளர் இன்னல் உறாமல்
கலங்கரை யாகியே காப்பர் –அலங்கார
முத்துவிழாக் காணும் முதிர்ந்த தலைவரை
இத்தரையில் போற்றுவோம் ஏற்று.

–விஞ்ஞர் உதயை மு.வீரையன், சென்னை 5,

28

மாட்சிக் குரியர், நற் காட்சிக் கினியரே!
ஆட்சி அமைச்சர்; அமுதனையார்–மீட்சி
தமிழர் அடையத் தனிப்போர் புரிந்தார்
நிமிர்ந்தநடை வேழம் இவர்.

–புலவர் கரந்தை கணேசன், சென்னை.

29

விண்ணைச் சுருட்டி விரலிடுக்கில் வைத்தவராய்
மண்ணில் அரசியலில் மார்தட்டும் –புண்ணியர்முன்
கண்ணியராய் வாழ்ந்துகாட்டும் காவிய நாயகனாம்
தொண்டமானே தூயர் உணர்

–புலவர் பா.வீரமணி பி.லிட்,. சென்னை

30

உண்மை உழைப்பிற்கும் ஓயாத தொண்டிற்கும்
எண்ணி உரைக்க எவருண்டு? –மண்மீதில்
அண்டித் துயர்துடைக்க அண்ணல் நெறியாளர்
தொண்டமான் அன்றியார் சொல்.

சு.இலம்போதரன், சென்னை

31

நீள்புகழும் குன்றா நிறையுழைப்பும் வேண்டுங்கால்
ஆள்வலிவும் அன்பின் அரவணைப்பும்–தாள்பணியாச்
சீர்மைக் குணனும் சிறக்கவுள தொண்டமான்
பேர்வாழப் போற்றிப் புகல்,

பெரியார் பெரும்பாவலர் கருவூர் பாரி, கரூர்

32

முத்துவிழாக் காணுகின்ற முத்தமிழ்ப் பேரறிஞர்
தத்துகடல் ஈழத் தமிழ்த்தலைவர்–உத்தமர்
தொண்டால் உயர்ந்தே தொழிலாளர் காங்கிரசைக்
கண்டவர் தொண்டமான் காண்.

பேராசிரியர் டாக்டர் கரு.நாகராசன், செங்கற்பட்டு.

33

இன்தமிழர் வாழ்வுயர இம்மியுமே சோம்பலின்றிப்
பன்னாளாய்ப் பாடுபட்ட பண்பாள!–நன்மொழியாம்
செந்தமிழே யாகச் செழிப்போடு பல்லாண்டு
நிந்தையின்றி வாழி நிலத்து.

–புலவர் தி.குலோத்துங்கன் எம்.ஏ சென்னை 48.

34

வான்பொய்க்கும் வையகத்தில் வஞ்சியர்கள் காதலும்
தான்பொய்க்கும் ; ஆனால் தமிழ்த்தொண்ட–மான் போன்றோர்
பொய்யா திருப்பதனால் அன்றோ புவியிங்கே
உய்யுமா றாயிற் றுரை.

–கவிஞர் வீ.கே.கஸ்தூரிநாதன் குழிபிறை, புதுக்கோட்டை மாவட்டம்

35

அறநிதியம் கண்ட அழகராம், நல்ல
மறவர்குலத் தென்றல்,மா மேதை!–திறமுடையார்
செய்தக்க செய்து சிறப்புற்றார், ஒன்றேனும்
செய்தக்க அல்ல செயார்.

–கவிஞர் இரவி பாரதி, சென்னை 93.

36

சோழர் தளபதி தொண்டைமான் தோன்றலாய்
வாழும் தலைவரைநாம் வாழ்த்துகிறோம்– வேழமன்னார்
நாளும் தமிழர் நலம்காத்தார்! அன்னாரின்
ஆளுமைக் கேது நிகர்?

கவிஞர் எழிற்பித்தன், சென்னை 5.

(37)

சிங்களத் தீவினுக்கோர் பாலமவர்; செந்தமிழர்
வெங்கொடுமைச் சாக்காட்டை வீழ்த்துபவர்–அங்கே
பதவிகளில் தூயரவர், பாரதத்தாய் பிள்ளை
மதிசிறந்த மாமனிதர் காண்.

புலவர் சண்முகம், சென்னை

(38)

உலகத் தமிழர் உயர்வுக் குழைப்பார்
கலகம் தடுக்கின்ற காந்தி–திலகம்
தொழிலாளர்க் காவார் துறைகற்ற ஞானி!
வழிகாட்டும் வைய விளக்கு

–கவிஞர் காந்திதாசன், சென்னை.

(39)

மூனாப் புதூரார் முரசு முழங்குகின்ற
தானைத் தலைவர், தமிழர்க்குத் –தேனாவார்
தேயிலை தேசத்தார் தேடரிய நேசத்தார்
கோயிலை ஒத்த குணம்.

–புலவர் இராம.காந்தி, ஜெயங்கொண்டம்

(40)

போர்க்குணம் கொண்ட புலிநிகர் தொண்டமான்
யார்க்கும் நலம்புரியும் நன்னீரார்–தீர்க்காத
சிக்கல் அறுக்கும் சிறந்த மதியுடையார்
குக்கல் குரைப்பென் செயும்?

–புலவர் இராமலிங்கம், நெல்லை.

(41)

செல்லும்நாள் எல்லாம் சினவா துபசரிப்பார்
நல்லார் இவர்க்கிணையாய் நான்காணேன்–பொல்லார்
நடுநடுங்கும் சீலர் நமனுக்கும் அஞ்சார்
கொடியர்க்கு என்றுமிவர் கூற்று.

–புலவர் பொன்னுசாமி, சென்னை.

(42)

மக்கள் தலைவர் மதித்திடும் தொண்டராம்
தக்க அறிவினர் தன்னுழைப்பே-பக்கபலம்
பண்புநெறி கொண்டவர் பார்புகழ நின்றவர்
தொண்டமான் தொண்டன்றோ தொண்டு.

-புலவர் பூவேந்தன், சென்னை

(43)

இலங்கையில் தோட்டமெல்லாம் ஏற்றத்தைக் காட்டிக்
குலுங்குவதைக் காண்பார் குழைவார்-நலங்கொழிக்கும்
பண்டை கருணாகரன் பான்மையில் மேன்மையுறும்
தொண்டமான் செய்துவரும் தொண்டு.

-மலேசியக் கவிஞர் ஐ.உலகநாதன்

(44)

தொண்டிற் பழுத்தபழம் தொண்டமான் நல்லமைச்சர்
கொண்டதமிழ்க் கொள்கைநெறி கூவியே-மண்டுலகில்
பண்டிலங்கை மக்களொடு பாரதத்தின் சீர்பரவி
எண்டிசையும் கொட்டு முரசு.

-புலவர் நு.ர.ஆறுமுகன், சென்னை.

(45)

இன்சொலர் காட்சிக் கெளியன் குறைவிலா
அன்பராம் தொண்டமான் வாழ்கவே-என்றும்
இலங்கைத் தரணியே ஏத்தும் தலைவா!
நலம்பெற்றே வாழ்க நெடிது.

-கே.பாமரன்

(46)

கருணா கரத்தொண்ட மான்குடித் தோன்றல்
கருணை மிகுஒழுக்கக் குன்றே-திருவாய்ப்
பெருமா நிலத்தின் நிழலே பரப்பித்
திருவாகை சூடினாய் நீ!

-கா.திலகன்

47

தோட்டத் தொழில்காக்கும் தொண்டமான் என்றுமே
நாட்டின் நலம்தேடும் நல்லவர்-தீட்டுகின்ற
திட்டமெலாம் ஈழத் தமிழர் நலம் காக்கும்
மட்டிலா முத்துவிழா வாழ்த்து

-புலவர் மு.வெள்ளைச்சாமி எம்.ஏ.,பி.எட். சென்னை

48

மன்னுதமிழ் தொண்டமான் மாஈழ மந்திரியாய்
என்றும் இனிதாக வாழ்ந்திருக்க-எண்பதே
இன்றவரை நீயணுகி ஏற்றமெலாம் ஈந்திடுதல்
நன்றுனக் கென்றுரைத்தேன் நான்.

-புலவர் இரா.கண்ணையன் எம்.ஏ.பி.எட். சென்னை

49

நல்ல அமைச்சராய் நற்றொண்டு செய்துவரும்
வல்லதொரு தோட்டத் தொழிலாளர்-செல்வமே!
என்பதை எட்டிப் பிடித்தஎம் தொண்டமான்
தண்டமிழ்போல் வாழ்க தழைத்து

– புலவர் ந.பன்னீர் செல்வம் எம்,ஏ

50

தொண்டமான் மக்கள் துயர்நீக்கும் தூயவராய்
கண்டார் கரங்குவிக்கும் கண்ணியராய்-பண்டை நாள்
சோழ அரசனாய்ச் சுந்தரனாய் வாழுகின்றார்
ஈழத் தமிழகத்தில் பார்.

-பேராசிரியர் கணபதி எம்.ஏ., சென்னை.

51

ஆற்றல் மறவர்நல் அஞ்சாத சிங்கமாம்
ஏற்றம் தொழிலாளர் ஏந்தி மகிழ்-மாற்றங்கள்
தோட்டப் புறம்இலங்கை தோற்றுவித்த தொண்டமான்
பாட்டாலே வாழ்த்தும் பயன்.

பொருங்கவிக்கோ. டாக்டர் வா.மு.சேதுராமன், சென்னை

52

வித்து முளைத்துவிளை வெற்றிக் கனிகளைப்போல்
ஒத்துரிமை கண்ட உயர்தலைவன்-எத்திக்கும்
தண்டமிழர் வாழத் தகுதிச் செயல்முடிக்கும்
தொண்டமான் அன்புச் சுடர்

கவிஞர் வா.மு.சே.ஆண்டவர் . சென்னை.

53

உலகை வலம்வந்த வான்பறவை, மக்கள்
திலகம்! திலகரைப்போல் வீரர்-குலக்குரிசில்!
போராடி வெற்றி புரியினராய் வாழ்கின்ற
ஏறுநடைச் செம்மல் இவர்.

புலவர் ஆ.திருஞானசம்பந்தன். திருச்சி.

54

கோதை கரம்பிடித்த கோமகன், நற்குடும்பப்
பாதைப் பயணத்தில் வெற்றி கண்டோன் -சூதைப்
புறம்கண்ட தீரன், புகழ் கொண்ட தங்கம்!
அறம்கண்ட மேலோன் இவன்.

-புலவர் மு.பாண்டியன். முகவை.

55

ஆன்ற குடிப்பிறப்பு, ஆழ்ந்த குணச் சிறப்பு!
சான்றாய்த் திகழ்கின்ற சந்தனப்பூ-தோன்றிய சீர்த்
தொண்டமான் பேர்சொன்னால் தொல்லுலகம் கொண்டாடும்
வண்டமிழாய் வாழ்க சிறந்து.

-புலவர் ச.கோபால். கம்பம்

56

மூனாப் புதூரீன்ற முல்லை மலர்மகன்
தேனார் தமிழர்க்குத் தேரானான்-மானாய்
மரியாதை காக்கின்ற மாண்புமிகு கொண்டல்
அரிதாய்க் கிடைத்தான் நமக்கு.

-புலவர் செக.செல்வரங்கராசு, சைதை, சென்னை.

57

குமாரவேல் பெற்ற குமரா! மயிலின்
குமரன் அருள்சேர் குணாளா!-அமரர்
அமுதம் கிடைப்பினும் அன்பருடன் உண்ணும்
தமிழ்ப்பண்பின் தண்சோலை நீ!

-புலவர் இரா.தங்கராசு, பெருவளப்பூர்

58

தொழிலாளர் பட்ட துயரமெல்லாம் உன்னால்
ஒழியாமல் யாரால் ஒழியும்?-பழிசொல்வோர்
என்றும் இருப்பர், இதயம் பொறாதிருப்பர்
ஒன்றும் புரியார் அவர்.

-புலவர் பெ.இளங்கோ, திருச்சி

59

வாதாட வல்லார், வளையாத போர்க்குணத்தார்
சூதாடிக் கூட்டத்தைத் தோற்கடிப்பார்-சாதனையில்
வெல்லாத தில்லை, விடிவிளக்கு! தொண்டமான்
மல்லாண்ட திண்தோளர் காண்.

-புலவர் மரியதாசு, உறையூர்.

60

திருக்குறள்போல் சின்ன திருவுருவம், ஆடிப்
பெருக்கைப்போல் உள்ளம் பெரியர்-கருக்கிருட்டை
மாற்றும் சுடர்நிலவு, மக்கள் பெருந்தலைவர்
போற்றும் புகழ்த்தொண்ட மான்.

-கவிஞர் இ.விஜயசோழன் சென்னை

61

உலகத் தமிழர் உவக்கும் தலைவர்
திலகம் வகிக்கும் திருவார்-கலகமற்ற
ஈழம் படைக்க இடையறாது தொண்டாற்றும்
சோழர் குலத்து விளக்கு.

ஓவியர். கோ.கவிக்குமார், சென்னை

(62)

பட்டம் பதவி பகட்டு விரும்பாத
திட்ட அறிஞர்; திறலுடையார்-சட்டம்
படிக்காத மேதை; பலகற்ற ஞானி!
நடிக்காத பண்பாளர் காண்.

கவிஞர் கே.வி.சுப்பிரமணியம், பூந்தமல்லி

(63)

நூறாண்டும் வாழ்க, நுவலுபதி னாறென்னும்
பேறாண்டும் வாழ்க, பெருமையுடன்-பாராண்டும்
சீராண்டும் மிக்க சிறப்பாண்டும் வாழ்கவே!
யாராண்டும் வாழ்க இனிது.

கவிஞர் புத்தூரான், புதுப்பட்டி, மதுரை.

(64)

பல்லோர்க்கும் வாழ்வருளும் பண்பாளர் தொண்டமான்
நல்லமுத முத்துவிழா கண்டுவந்தார்-தெள்ளமுதே!
வல்லதமிழ் வாயுடையார் எல்லாரும் வாழ்த்துரைத்தார்
பல்லாண்டு வாழ்க பொலிந்து

புலவர் செ.வரதராசன், கள்ளக்குறிச்சி.

(65)

பாடுபுகழ்ப் பாரி! படர்முல்லை வாசம், நற்
பீடுகெழு தோட்டத்துப் பெம்மானாம்-ஏடுபுகழ்
தென்னாட்டுத் தீரர்! திகழ்மறவர் தோன்றலாம்
பன்னாட்டுக் கீர்த்திபெற்றார் பார்.

புலவர் செங்குட்டுவன், பூவாளூர்.

(66)

அரும்பி மலராத அவ்வயதில் ஈழம்
விரும்பி நடந்திட்ட வீரர்-திரும்பித்தான்
தாய்நாடு வந்தே தடுமாறிப் போகாமல்
போயங் கிருந்த புயல்.

-கவிஞர் மணிமொழியன், சென்னை

67

காடு மணக்கின்ற கற்பூரச் சொல்லரசு
நாடு மதிக்கின்ற நல்லரசு-தேடரிய
நீதி நிலையம்; நிறைமாந்தர் வள்ளலாரின்
சோதியே அன்னார் சுகம்.

-கோ.அரங்கநாதன், சமயபுரம்.

68

உறவுக்குக் கையும் உரிமைக்குப் போரும்
தருகின்ற கொள்கைத் தனலாம்-வருகின்ற
போரினிலே வெற்றியினைப் பூப்பதற்கு வைப்பவராம்
பாரினிலே தொண்டமான்போல் யார்?

புலவர் காமராசன், கூடலூர்.

69

கோதை மணாளன் குடும்ப விளக்கெரியப்
பாதை வகுத்த படிப்பாளி-மாதரெலாம்
மேலேற ஏணி நிறுத்தியவர்; தொண்டமான்
காலம் கொடுத்த கனி.

-கவிஞர் மு.க.மா.முத்தமிழ்ச் செல்வன், மலேசியா

70

காணி கொடுத்தநல் கங்காணி! முன்னேற
ஏணி கொடுத்த இறைவனடா-வீணர்
கொடுக்கை நறுக்கியவர்; கொள்கை மனிதர்!
துடுக்கை இவரிடத்தில் பார்.

புலவர். மு.முருகையன், கோலாலம்பூர்.

71

ஆசிரியர் வாழ்வுக் கதிகாரி; கல்வியினால்
தேசம் சிறக்கச்செய் தீங்கரும்பு-ஏசுவைப்போல்
தீமை பொறுக்கும் திறனாளர்; ஆயினும் ஓர்
ஆமையென எண்ணிடா தீர்.

கவிஞர் ஆ.திருவாசகன், சென்னை

72

மாயிரு ஞாலம் மறக்க முடியாத
கோயில் அனையார் குலமுடையார்–ஞாயிறுபோல்
வீழாத கீர்த்தியும் மூர்த்தியுமாய் வாழ்கின்றார்
ஈழத்துத் தென்றல் இவர்.

இ.வி.மணிமுடிச்சோழன், பம்பாய்.

73

ஏழைத் தொழிலாளர் ஏற்றம் பெறுவதற்கே
தாழ் திறக்கும் நல்லார்; தயாளர் – சூழ் இருளை
மாய்க்கும் மதியுடையார் மார்க்கம் உரைத்திடுவார்
யார்க்கும் இனியார் இவர்.

–புலவர் சௌந்தரராசன், மன்னார்குடி.

74

கறுப்பான ரோஜா; கருமம் மறவார்
பொறுப்பான மக்கள் தலைவர்–வெறுப்பான
காரியம் ஆற்றார்; கடமை நிறைவேற்றும்
நேரியர்; நீதிமான் காண்.

–புலவர் பரிமேலழகர், திருக்காட்டுப்பள்ளி.

75

துன்பம் வருங்கால் துவளாரே! துன்பம்போய்
இன்பம் வருங்கால் எழுந்தாடார்–மன்பதையில்
வாழும் நெறியறிந்து வாழ்பவர் தொண்டமான்
சூழும் இருள்விலகிப் போம்.

–கவிஞர் அமலன், பெரம்பலூர்.

76

வன்முறை வேண்டா வழிகாட்டி! எப்போதும்
தன்முறை தவறாத் தலைவரேறு! –நன்முறை
வேண்டித் தவமிருக்கும் வீரர் குலத்தோன்றல்
தூண்டிக் கெடுக்கா தவர்.

–புலவர் செ.பாலகிருட்டிணன், திருவில்லிபுத்தூர்.

77

தேயிலைத் தோட்டத்தில் தேம்பலைப் போக்கியவர்
வாயிலார்க் கெல்லாம் வரமளித்த-கோயிலானார்
நாயினும் கீழாய் நலிந்த தமிழர்க்குத்
தாயினும் தாயான தாய்.

கவிஞர் நாஞ்சில் நெடுமாறன், நாகர்கோவில்.

78

நேரு கொடுத்த நிகரற்ற காங்கிரசை
வேரூன்ற வைத்த விழுமியார் -நீரூற்றி
ஆலமரமாய் அதைத்தழைக்க வைத்திட்டார்
ஞாலமே போற்றும் செயல்.

புலவர் அய்யாவு, ஆம்பல், தஞ்சை

79

மதுரை மருக்கொழுந்து, மக்கள் தலைவர்
அதிரா மனத்தர், அழகர்-முதிர்சோலை!
தெற்குப் பொதியமலைத் தென்றல் இவரைப்போல்
நற்குடியின் நாயகரை நாடு.

-புலவர் அரங்க நெடுமாறன், புதுக்கோட்டை.

80

தொண்டமான் , துள்ளுமான் குட்டியாய் ஓடிப்போய்க்
கண்டார் இலங்கையினைக் கண்ணிரண்டால் பண்டைப்
புகழை நிலைநாட்டப் பூத்தபொது வாழ்வில்
புகுந்தார் படைத்தார் புகழ்.

-கவிஞரேறு அமலதாசன், சிங்கப்பூர்.

81

தோட்டத் தொழிலாளர் துன்பச் சுமைதாங்கி
ஏட்டில் அடங்கா இமயப்பேர் – நாட்டினார்!
தொண்டமான் தொண்டால் தொடர்வெற்றி கண்டிடுவார்
உண்டோ இவர்போல் பிறர்.

– கவிமாமணி அ.மறைமலையான்

மலையகத்தோர் வழிகாட்டும் தீபம் "மருதம்"



★★★★★★
★★★★★
★★★★
★★★
★★
★

சிங்களத்தில் தமிழர்களின்
தலைவன் நீயே!
செந்தமிழர் உரிமைக்குக்
குரலும் நீயே!
வங்கத்தின் கடல்தாண்டி
உனது கீர்த்தி
வலம்வந்து உலகெங்கும்
பரவு தையா!
சிங்கையிலே வாழுமுஸ்லிம்
தமிழர் கூடிச்
சாதிமதம் பாராது
விழா எ டுக்க,
மங்காஉன் தொண்டன்றோ
காரணம்! நீ
மலையகத்தோர் வழி காட்டும்
தீப மன்றோ?

அங்கமெலாம் புல்லரித்துப்
போனோம், உன்னை
அயல்நாட்டார் அழைத்தேற்ற
நினைத்த செய்தி,
எங்களது காதுகளைத்
தொட்ட தும்யாம்
எல்லாரும் விருதுபெற்ற
வீர ரானோம்!
பொங்கியது எமதுள்ளம்
பூரிப் பாலே!
புகழ்மணக்கப் புவியினிலே
பிறந்த பூமான்!
எங்கெங்குச் சென்றாலும்
இடையு றின்றி
இணையில்லாத் திருநாமம்
நிலைத்தே நிற்கும்!

இணையில்லாத் திருநாமம் நிலைத்தே நிற்கும்

★
★★
★★★
★★★★
★★★★★
★★★★★★



தலைவர் தொண்டமான்
தமிழும் சுவையும் போல் வாழ்க என்று
மனமார வாழ்த்துகிறோம்
நம்பிக்கை!!
திண்மை!!
இத்தனைக்கும் ஏற்ற இடம்

நாணயம்!
உண்மை!

நேர்மை!!!
நன்மை!!!

நித்திய கல்யாணி நகை மாளிகை



40, செட்டியார் தெரு
கொழும்பு – 11, சிறீலங்கா.
தொலைபேசி : 421617



நிறைந்த கவர்ச்சிக்கும்
குறைந்த விலைக்கும்
சிறந்த வேலைப்பாட்டுக்கும்
புகழ்பெற்ற நகைக்கடை
நித்திய கல்யாணி நகை மாளிகை

தொண்டுள்ளம் நிறைந்த தொண்டமான் வாழ்க!

மானமிகு மறவர்கள்
மருதுபாண்டியர் வாழ்ந்த
சிவகெங்கைச் சீமையின்
சிற்றூராம் "புதூரில்"
பெற்றோர் புரிந்த
நற்றவப் பயனாய்
உற்றார் உறவினர்
ஊரே போற்ற
முத்தாய்த் தோன்றி
முகிழ்த்து வந்தவர்!
சொத்தாய் வந்து
சுகத்தைத் தந்தவர்!
"மண்டை பிளந்தாலும்
மந்திரத்தைச் சொல்லுவேன்"
என்றே சூளுரைத்த
இராமானுஜர் போற்றிய
'திருக்கோட்டி யூருக்குத்"
தென்கிழக்குப் பகுதியில்
"மூனா புதூரில்"
தேனாய்த் திளைத்தவர்!
தகுதி வாய்ந்த
தலைவர்கள் யாரும்-எங்கள்
பகுதியில் இல்லையெனப்
படிந்திருந்த கவலையை,
துருவ நட்சத்திரமாய்
தோன்றி ஒளிவீசித்
துடைத்து எறிந்தவர்-சாதனை
படைத்து வளர்ந்தவர்!
இலங்கை நாட்டை
இனிதே உயர்த்தி
எழிலுறச் செய்து
ஏற்றம் தருகிற
தேயிலைத் தோட்டம்
இவரது "இதயம்"!
தோட்டத் தொழிலாளர்
இவரது கண்கள்!
அனைவர்க்கும் இவரே
அன்புத் தலைவர்!
அணைத்துக் காக்கும்
பண்புத் தலைவர்!
எத்தனையோ தலைவர்கள்
இத்தரையில் இருப்பினும்
இவரே
முத்து விழாக் காணுகிற
முத்தான தலைவர்!
தொண்டுள்ளம் நிறைந்த
தூயவர் ஆனதால்
தொண்டமான் எனும் பேர்
சொந்தமாய் ஆனதோ...?
களம்பல கண்ட
கருணாகரத் தொண்டைமானின்
வழிவழி வந்ததால்
வந்ததா இப்பெயர்?
வேகம் காட்டும்
அரசியல் உலகில்
விவேகம் காட்டும்
விற்பன்னர் இவரே!
சீதையை மணந்த
இராமனைப் போலே
கோதை யைமணந்த
கோமான் இவரே!
ஆர்ப்பாட்டம் பரபரப்பு
அணுவளவும் இல்லை!
பார்போற்றிப் புகழுகிற
பண்புகளே எல்லை!
கார்வண்ணத் தோற்றம்
கதராடை நெஞ்சம்
பேர் சொல்லும் வாழ்க்கை
பெருமைமிகு மனிதர்!
அமைதியாய்த் தோன்றி
அமைதியாய்ச் செயல்பட்டு
அமைதியாய் வாழுகிற
அடக்கமான மந்திரி!
பிறந்த பூமிக்குப்
பெருமையினைச் சேர்த்தவர்!
சிறந்த தலைவராகச்
சீராக வளர்ந்தவர்!
உண்பதில் இவருக்கு
ஒழுங்குமுறை உண்டு!
எண்பது வயதென
எவருமே சொல்லார்!
எந்த ஊர் சென்றாலும்
ஏற்றங்கள் பெற்றாலும
சொந்தஊர் மறக்காத
தொண்டமான் வாழ்க!
முத்துவிழாக் காணுகிற
முத்தான மனிதர்
இத்தரையில் சாதனைகள்
இன்னும் பல கண்டு
எத்திக்கும் போற்றி
என்றைக்கும் புகழ்பாட
தித்திக்கும் தமிழாலே
திருமுருகன் அருளாலே
வருங்காலம் முழுமைக்கும்
வளமாக வாழ்க!
ஒருநூறு ஆண்டுகள்
உவகையுடன் வாழ்க!

கவிஞர் இரவி பாரதி எம்.ஏ

மாத்தமிழ்த்தொண்டு

சிலரொன்று சேர்ந்தா லன்றி
சேர்ந்தொன்றாய் முயன்றா லன்றி,
மலரொன்று தருதல் என்னும்
மாபாடு சிறப்ப தில்லை!
பலரொன்று சேர்ந்து வாழ்த்தும்
பணியிது என்று சொல்வேன்!
மலரொன்று தருத லைநான்
மாத்தமிழ்த் தொண்டு என்பேன்.

துதிபாடல் அன்று, மக்கள்
தொண்டாற்றும் தலைவர் மீது
துதிபாடல் குற்றம் அன்று!
தொண்டமான் தொண்டு போற்றல்
துதியன்று, முறையே யாகும்!
தொண்டுசெய் அனைவ ருக்கும்
விதியாகும்! வல்லோர், நல்லோர்
விளைதற்கோர் தூண்ட லாகும்!

நான்தரும் மலர்ஒவ் வொன்றும்
நலம்தரும், தமிழ்வ ளர்க்கும்!
வான்தரும் மழையை ஒக்கும்,
வளம்தரும் வயல்நி கர்க்கும்!
தேன்தரும் சுவையை வெல்லும்!
தென்றலும் அதன்முன் தோற்கும்!
ஊன் உயிர் எல்லாம் தந்தேன்
ஒளிதரும் மலரைக் காணீர்!

காவியம் இதனை உங்கள்
கரத்தினில் தருவ தற்கே
ஓவியம் தந்தோர், அச்சில்
ஒவ்வொன்றாய் ஆக்கித் தந்தோர்,
கூவுமோர் குயிலாய் வந்தோர்,
குன்றென உதவி நின்றோர்
யாவர்க்கும் என் உள் ளத்தில்
என்றைக்கும் நன்றி சொல்வேன்

தலைப்பினில் தமிழைப் பாரீர்!
தமிழினில் இதயம் சேரீர்!
தலைவரின் பெயரால் தோன்றும்
தாளிது எனினும், உள்ளே
விலைமதிப் பில்லா எண்ண
வரிசைகள் விளங்கக் காணீர்!
உழைப்பினில் என்னைக் காணீர்!
உண்மையில் பொன்னைக் காண்பீர்!

ஆயுளை நூ றெனக்கு வேண்டும்!
ஆயுள்நூ றிருக்கும் மட்டும்
நோயுள்வீ ழாமை வேண்டும்!
நூறாண்டும் நலமே வேண்டும்!
ஆயுளை முடிக்கு முன்னர்
ஆயிரம் மலர்க ளைநான்
தாயகம் காண வைத்துத்
தமிழைநான் வளர்க்க வேண்டும்!

-மலர் ஆசிரியர் இளஞ்செழியன்

With Best Wishes from

HR

HOTEL Renuka

&

R

Renuka City Hotel

328, Galle Road, Colombo 3,
Sri Lanka.
Telex: 22082 or 22291 X Point CE Att. Hotel Renuka
Telephone: 573598-9, 573600-2
Cables: RENUKA, Colombo
Fax: 574137


தமிழர் எடுக்கின்றார்
மலைமீது விழா !
தலைவர் வருகின்றார்
யானைமீது உலா !